தஞ்சை ஸரஸ்வதிமஹால் வெளியீடு—நெ. 4

# சரபேந்திர
# வைத்ய முறைகள்

TNSDA
07509

ரோக சிகித்ஸை)

TESTED RECIPES OF RAJA SERFOJI
FOR
ALL DISEASES OF EYES

1959

தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு—4

# சரபேந்திரர் வைத்ய முறைகள்

## (நயன ரோக சிகிச்சை)

பதிப்பாசிரியர்கள் :

(சென்னை இந்திய வைத்தியக் கல்லூரியில் இந்தியக் கண் வைத்தியப் பேராசிரியராக இருந்த, தஞ்சை ஆயுர்வேத கண் வைத்ய நிபுணர்)

**ஸ்ரீ T. S. அம்ருதலிங்கம் பிள்ளை**

&

**Dr. S. வெங்கட்டராஜன், L. I. M. (Regd.)**

ஆயுர்வேத பண்டிதர், ஸரஸ்வதி மஹால்

தஞ்சை ஸரஸ்வதி மஹால் நிர்வாகக் கமிட்டியினருக்காகக் கௌரவ காரியதரிசி

**ஸ்ரீ S. கோபாலன், B. A., B. L.,**

அவர்களால் வெளியிடப்பட்டது

பதிப்பகம் :

**தொன் போஸ்கோ அச்சகம், தஞ்சை.**

1959

| | | |
|---|---|---|
| இதன் விலை :— | சாதா பயிண்டு | ரூ. 3—0—0 |
| | கலிக்கோ பயிண்டு | ரூ. 3—8—0 |

— இரண்டாம் பதிப்பு —


980

... அகழ் தொல் பொருள் ஆய்வுத் துறை நூலகம்-சென்னை

எண். 7509

தேதி.........

7 OCT 1974

**Tanjore Saraswathi Mahal Series No. 4**

# Sarabendrar Vaidya Muraigal

**( Nayana Roga Chikitsai )**

## Introduction

This volume is the third of the medical publications in the Saraswathi Mahal Series. The previous two volumes issued by us dealt with Stomach Ailments (Sarabendra Gunma Roga Chikitsai,) and Maternity and Child Treatment (Garbhini Balaroga Chikitsai). This volume contains prescriptions for the Diseases of the Eye. Our Library contains fifteen more volumes to be published in the series and they relate to the following subjects :—

1. Ear, Nose, Throat, and Head Diseases.
2. Lung Diseases.
3. Diabetes.
4. Rheumatism, Paralysis, Lumbago etc.
5. Diseases resulting from fever.
6. Treatment for fever.
7. Anaemia.
8. Piles.
9. Leprosy.
10. Venereal Diseases.
11. Itches, Boils, Ulcers etc.
12. Purgatives and Treatment for Diarrhoea.
13. Wounds, Injuries, Cancers etc.
14. Delirium.
15. Treatment for Poisons.

Some of these volumes are now in the press and others are under preparation.

These medical works are part of the great legacy bequeathed to our country by Maharaja Serfoji, who reigned in Tanjore from 1798 to 1832, and who is justly famous as a Scholar-king. The Saraswathi

Mahal Library in Tanjore, a veritable ocean of manuscripts and printed works in many languages, and on a wide variety of subjects, collected and preserved by him with great care, is a lasting tribute to Serfoji's many-sided intellect and encyclopaedic knowledge. But the scholarship of Serfoji was not merely bookish. It assumed various practical forms. One of the far-reaching consequences of his endless curiosity and research was the establishment of an institution in Tanjore called the Dhanvantari Mahal. In it, he had assembled distinguished physicians who laboured together, pooled their knowledge and recorded their research in the shape of invaluable prescriptions. They carried on research under his patronage by a comparative study of cures in various systems of medicine and recorded the result of their collaboration in the prescriptions now available in these eighteen volumes.

Raja Serfoji was not contented with setting down the prescriptions as such. His ambition was to render the prescriptions capable of being easily memorised, according to the practice of his times. Consequently he had these prescriptions composed in easy Tamil verses on palm leaves, each volume containing a collection of tested prescriptions for individual and allied diseases.

The present volume is called in Tamil "SARABENDRA NAYANA ROGA CHIKITSAI" or "SERFOJI'S TREATMENT FOR EYE-DISEASES." This work was edited with the help of the veteran Eye Doctor, Sri T. S. Amirdalingam Pillai who was for some time Professor of Ophthalmology in the Government College of Indian Medicine.

It may be stated that all these prescriptions have been in use ever since the days of Serfoji. In fact they are called "அனுபோக வைத்திய முறைகள்" (Recipes tested by experience). Even today, in many quarters in Tanjore, these prescriptions are used, and members of the Royal family still possess many of the medicines prepared in the Dhanvantari Mahal by a special process called KATTU (கட்டு) by which the potency of the medicine has been conserved for a long period of years. These special medicines in the shape of pills still bear the original seals indicative of the names of the medicines.

In the work on hand, we have given the verses of each recipe as we find them in the original and also an analysis of the ingredients to enable practitioners to follow them easily. We have also appended two lists of eye-diseases with their symptoms, one according to sage Agastyar's classification in Tamil and the other according to Ayurvedic works in Sanskrit.

The text of this and other Tamil manuscripts, especially in this series, abounds in grammatical and syntaxical errors. The more obvious of them, we have ventured to correct. But we have preferred not to interfere in other cases, lest we should unwittingly err by presuming to correct the text for the sake of grammar.

We take pleasure in stating that the two previous volumes on Stomach ailments and Maternity and Children's Treatment, have been found to be of great benefit to practitioners and the public alike. We have received numerous communications informing us that some of these prescriptions were tried and found to be very efficacious. Some of these opinions we

have extracted and printed at the back of the cover. We have no doubt that this volume will be found to be of equally great value.

Before closing, we must express our gratitude to the Government of Madras for the timely financial assistance given to us to publish the rare works in the Saraswathi Mahal; to Sri O. P. Ramasami Reddiar, who as Premier of Madras showed his keen awareness of the immense value of our Library, and the urgent need to rescue it from extinction, by acting quickly and placing necessary funds at our disposal to carry on our work; to Sardar Sri A. Vedaratnam Pillai, M. L. A. and Sri T. K. Srinivasa Iyer, who have always indentified themselves with this institution and spared no pains to draw the attention of the Government to the valuable treasures of our Library; to Sri T. V. Satakopachariar, Advocate and Public Prosecutor, Tanjore and President of the Special Committee, of the Saraswathi Mahal; and to the members of the committee, namely, Sri R. Rangaswami Iyengar, Advocate, Tanjore, Sri P. D. Joshi, President, Madras Branch of the Brihan Maharashtra Mandal, and Srimanth Ry. Pratapasimha Raja Saheb, Prince and Life Member of the Administrative Committee of the Saraswathi Mahal Library, for their keen interest in and understanding of our needs and difficulties and, above all, to our Premier Hon'ble Sri P. S. Kumaraswami Raja, and our Education Minister Hon'ble Sri K. Madhava Menon for their continued interest in this great institution.

Tanjore<br>30—3—50

S. GOPALAN,<br>*Honorary, Secretary,*<br>*T. M. S. S. M. Library Committee.*

# நூன்முகம்

சரபேந்திரர் வைத்திய முறைகளில் மூன்ருவது வெளியிடாகிய இந்நூலில் தஞ்சை சரஸ்வதி மஹால் வைத்தியச் சுவடி நெ. 48-ல் உள்ள நயன ரோக சிகிச்சை முறைகள் அடங்கியிருக்கின்றன. இதே முறைகளைப் பற்றிப் குறிப்புகள் அடங்கிய சுவடி நெ. 81-ம் இப்பதிப்பிற்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. இம்முறைகள் தஞ்சை சரபோஜி மகாராஜாவினல் நிருவப்பட்ட தன்வந்திரி மஹால் என்ற வைத்திய ஆராய்ச்சி நிலையத்தில், அதற்கென்று ஏற்படுத்தப்பட்ட வைத்திய சாலையில் பரீக்ஷித்துக் கைகண்டதெனத் தேர்ந்தெடுக்கப்பட்டவை.

சரபோஜி மன்னர் நம் நாட்டுக் கலை, விஞ்ஞானங்களிலும், மேல் நாட்டுக் கலை, விஞ்ஞானங்களிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவர். அவைகளைத் தானும் தன் நாட்டாரும் அறிந்து பயன் பெருவதற்காகவே தன்காலத்தையும், பொருளையுச் செலவழித்தவர். நம் நாட்டுக் கலைப் பொக்கிஷங்களையும், கலைஞரையும், மேல் நாட்டுக் கலை நூல்களையும், கலை வல்லுநரையும் தேடிச் சேர்த்து இரண்டு கலை நூல்களிலும் உள்ள உண்மையைப் பரீக்ஷித்தவர். அவரால் சேர்த்து வைக்கப்பட்ட ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், கிரேக்க பாஷை, லத்தீன், டேனிஷ், டச்சு, பாஷைகளிலுள்ள சுமார் 7,000 அச்சுப் புத்தகங்களும், படங்களும், நம் நாட்டில் பல விடங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தமிழ், தெலுங்கு, மஹாராஷ்டிர, ஸம்ஸ்கிருத பாஷைகளிலுள்ள கையெழுத்துப் பிரதிகளும், இன்னும் சரஸ்வதி மஹால் நூல் நிலயத்தில் காப்பாற்றப்பட்டு வருகின்றன.

அன்னர் நம் நாட்டு வைத்திய முறைகளை அதற்கென்று ஏற்படுத்தப்பட்ட வைத்தியசாலையில், மேல் நாட்டு வைத்தியர்களையும் வைத்துக்கொண்டு பரீக்ஷித்துக் கைகண்டவைகளை மட்டும் தொகுத்து சுமார் 2,000 முறைகளைத் தெரிந்தெடுத்தார். அவைகளை வியாதிகளுக்கேற்ப 18 தொகுதிகளாகப்

பிரித்துத் தனது ஆஸ்தானத் தமிழ்ப் பண்டிதர்களைக் கொண்டு செய்யுளாகச் செய்வித்தார்.

அப்பதினெட்டுத் தொகுதிகளும் பின்வருமாறு:—

(1) குன்மரோகம் (வயிற்றுவலி) (2) கர்ப்பிணி பாலரோகம், (3) நயன ரோகம், (4) சிரோரோகங்கள், அதாவது காது, மூக்கு, தலை, பல், நாக்கு, தொண்டை இவற்றின் ரோகங்கள், (5) சுவாச ஆசயத்தைப் பற்றிய ரோகங்கள், (6) நீரிழிவு, (7) வாதரோகம், (8) ஜ்வரம், (9) ஜ்வரத்தினால் பிற்காலத்தில் ஏற்படும் ரோகங்கள், (10) பாண்டுரோகம், (11) மூல ரோகம், (12) குஷ்டம், (13) சேர்க்கையினாலேற்படும் ரோகங்கள், (14) சொறி, சிறங்கு, கரப்பான் முதலியவை, (15) சன்னி, (16) விஷ வைத்தியம், (17) பேதி மருந்துகளும், வயிற்றுப் போக்கை நிறுத்த மருந்துகளும், (18) விரணம், பிளவை, புற்று முதலியன.

இவற்றுள் குன்மரோக சிகிச்சை முறைகளும், கர்ப்பிணி பாலரோக சிகிச்சை முறைகளும் சரஸ்வதி மஹால் வெளியீடுகள் நெ. 2, 3, ஆக பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. மற்ற முறைகளில் சில அச்சிடப்பட்டும், வேறு சில பதிப்பிற்குத் தயாரிக்கப்பட்டும் வருகின்றன.

இதுவரையில் பதிப்பிக்கப்பட்ட சரபேந்திர வைத்திய முறைகளின் வெளியீடுகளில் கண்ட முறைகளை உபயோகித்து, ஆச்சரியமான குணங்கள் ஏற்பட்டதாக சில வைத்தியர்கள் நமக்கு எழுதியிருக்கிறார்கள். அவற்றில் சில பகுதிகளை இப் புத்தகத்தின் பின் புறத்தில் அச்சிட்டிருக்கிறோம்.

இவ் வெளியீட்டில், முறைகளடங்கிய பாடல்களும், அவற்றை எளிதில் உணர்வதற்கான உரையும் எளிய நடையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பாடல்களில் அடங்கிய ஏடுகளில் எழுத்துப் பிழைகளும், இலக்கணப் பிழைகளும் மலிந்து கிடக்கின்றன. அவற்றில் நிச்சயமாகத் திருத்தக் கூடியவை திருத்தப்பட்டிருக்கின்றன. சந்தேகமான இடங்கள் திருத்தாமல் விடப்பட்டிருக்கின்றன.

இம்முறைகளைச் சரியாக உரையெழுதுவதற்கு உதவிய சென்னை வைத்தியக் கல்லூரியில் ஆயுர்வேதக் கண் வைத்தியப் பேராசிரியராக இருந்த தஞ்சை ஸ்ரீ அமிர்தலிங்கம் பிள்ளை அவர்கட்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். இவ்வெளியீடு களைப் பிரசுரம் செய்வதற்கு சென்னை அரசாங்கத்தார் வேண்டிய பண உதவியைச் செய்ய, முதலில் ஏற்பாடு செய்த மாஜி சென்னை பிரதமர் ஓமந்தூர் ஸ்ரீ இராமஸ்வாமி ரெட்டியார் அவர்கட்கும், இந்நூல் நிலயத்தில் எப்போதும் அக்கரை கொண்டு, இதிலுள்ள நூல்களைப் பாதுகாத்துப் பிரசுரிக்கும் விஷயத்தில் ஈடுபட்டிருக்கும், மதராஸ் சட்டசபை அங்கத்தினர் ஸர்தார் ஏ. வேதரெத்தினம் பிள்ளை அவர்கட்கும், தஞ்சை காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி ஸ்ரீ T. K. ஸ்ரீநிவாச அய்யர் அவர்கட்கும், இதற்காக வேண்டிய பொருளுதவியைத் தொடர்ந்து செய்துவரும் நமது சென்னை பிரதமர் ஸ்ரீ குமாரசாமி ராஜா அவர்கட்கும், கனம் கல்வி மந்திரி ஸ்ரீ மாதவ மேனன் அவர்கட்கும், இந்நூல் நிலயத்தை விருத்தி செய்வதற்கான யோசனைகளைச் சொல்லுமாறு நியமிக்கப்பட்ட கமிட்டி அக்கிராசனர், தஞ்சை பப்ளிக் பிராஸிக்யூட்டர் ஸ்ரீ T. V. சடகோபாச்சாரி அவர்கட்கும், அந்தக் கமிட்டி இதர மெம்பர்களாகிய சென்னை ப்ருஹன் மகாராஷ்டிர மண்டல காரியதரிசி ஸ்ரீ P. D. ஜோஷி அவர்கட்கும், தஞ்சை ஜூனியர் ப்ரின்ஸ் ஸ்ரீமான் ராஜஸ்ரீ ப்ரதாபஸிம்ம ராஜாசாகேப் அவர்கட்கும் நாங்கள் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

இதிலுள்ள முறைகளைக் கையாளும் வைத்தியர்களும் மற்றவர்களும் அவற்றின் குணாகுணங்களை எங்களுக்குத் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

ஸரஸ்வதிமஹால்
தஞ்சாவூர்
31—3—50

**S. கோபாலன்**
கௌரவ காரியதரிசி

# சரபேந்திரர் நயன வைத்திய முறைகளின் பொருளடக்க அட்டவணை

(அநேக இடங்களில் மருந்தின் பெயர்கள் முறைகளில் காணப்படாததால் அவைகளுக்குப் பொருந்தும் பெயர்களை இட்டு அவைகளுக்குப் பிறைக்குறி (Brackets) இடப்பட்டிருக்கின்றன).


| மருந்து முறைகள் | | பக்கம் |
|---|---|---|
| 1. நயன ரோகத்திற்குத் தைல வகைகள் | | 1 to 56 |
| அம்ருதாமலக தைலம் | | 1 |
| அம்ருத லவங்க தைலம் | ... | 2 |
| அம்ருத கலை எண்ணெய் | ... | 8 |
| அஸனுவம்ருத வில்வாதி தைலம் | ... | 4 |
| ஆமலகத்தைலம் | ... | 9 |
| ஆமலகத்தைலம் (நயன வாயுவுக்கு) | ... | 10 |
| குமரித்தைலம் | ... | 13 |
| குமரித்தைலம் வேறு | ... | 16 |
| குமரித்தைலம் ,, | ... | 17 |
| குமரித்தைலம் ,, | ... | 19 |
| கையாந்தகரை எண்ணெய் | ... | 20 |
| சாரடைத்தைலம் (நயன காசத்திற்கு) | ... | 11 |
| ஶ்ரீதேவிச் செங்கழுநீர் தைலம் | ... | 12 |
| பிருங்காமலகதைலம் | ... | 21 |
| பிருங்காமலகதைலம் வேறு | ... | 22 |
| பிருங்காமலகதைலம் ,, | ... | 24 |
| பிருங்காமலகதைலம் ,, | ... | 25 |
| பிருங்காமலகதைலம் ,, | ... | 28 |
| பிருங்காமலகதைலம் ,, | ... | 29 |
| பிருங்காமலகதைலம் (நேத்திர வாயுவுக்கு) | ... | 30 |
| பிருங்காமலகதைலம் வேறு | ... | 31 |
| பிருங்காமலகதைலம் ,, | ... | 32 |
| பிருங்காமலகதைலம் ,, | ... | 33 |
| பிருங்காமலகதைலம் ,, | ... | 34 |

| | | | |
|---|---|---|---|
| | (பொன்னுங்காணி) தைலம் (வாயுவுக்கு) | ... | 42 |
| | நிர்குண்டித் தைலம் | ... | 35 |
| | நிர்குண்டித் தைலம் வேறு | ... | 36 |
| | நிர்குண்டித் தைலம் ,, | ... | 39 |
| | நிர்குண்டித் தைலம் ,, | ... | 41 |
| | (நீர் முள்ளி) தைலம் (நயன ரோகத்திற்கு) | ... | 44 |
| | மணித்தக்காளி தைலம் (தூமத்ருஷ்டிக்கு) | ... | 50 |
| | மஹாநிர்குண்டித் தைலம் | ... | 37 |
| | மாவலிங்க எண்ணெய் | ... | 45 |
| | மிளகு எண்ணெய் | ... | 46 |
| | மிளகு எண்ணெய் வேறு | ... | 48 |
| | முருக்கந்தைலம் (பித்தகாசத்திற்கு) | ... | 43 |
| | முருங்கைவிதைத் தைலம் வெள்ளெழுத்திற்கு | ... | 49 |
| | வேங்கைத்தைலம் | ... | 6 |
| | வேங்கைத்தைலம் (5 வித காசங்களுக்கும்) | ... | 7 |
| 2. | நேத்திர ரோகங்களுக்கு "நெய்" வகைகள் | | 50 to 52 |
| | ஏரல் நெய் | ... | 51 |
| | ஏனுதி நெய் | ... | 50 |
| 3. | நேத்திர வியாதிக்குக் 'குழம்பு' வகைகள் | | 52 to 78 |
| | அஞ்சனம் (நீலகாசம் பித்தகாசாதிக்கு) | ... | 71 |
| | அஞ்சனம் வேறு | ... | 70 |
| | இரத்தினுதிக் குழம்பு | ... | 64 |
| | இளநீர்க் குழம்பு (காசத்திற்கு) | ... | 52 |
| | இளநீர்க் குழம்பு வேறு | ... | 54 |
| | இளநீர்க் குழம்பு ,, | ... | 55 |
| | இளநீர்க் குழம்பு ,, | ... | 56 |
| | இளநீர்க் குழம்பு ,, | ... | 57 |
| | இளநீர்க் குழம்பு ,, | ... | 60 |
| | இளநீர்க் குழம்பு ,, | ... | 61 |
| | இளநீர்க் குழம்பு ,, | ... | 62 |
| | உரைமருந்து (வெள்ளெழுத்திற்கு) | ... | 72 |
| | (கடுக்காய்க்) குழப்பு | ... | 65 |
| | (கடுக்காய்க்) குழப்பு வேறு | ... | 69 |
| | (கருவேலங்) குழம்பு (பிரிசல் நோய்க்கு) | ... | 70 |
| | களிம்பு (இழி கண்ணுக்கு) | ... | 72 |
| | களிம்பு (இழி கண்ணுக்கு) | ... | 78 |

களிம்பு (நயனப் பூவிற்கு) ... 77
சந்திரோதயக் குழம்பு ... 63
(சாறணை)க் குழம்பு ... 68
(தாம்பூலாதி)க் குழம்பு ... 74
தேன் குழம்பு (உள்ளுக்கு) ... 69
(பழு பாகல்] களிம்பு (படலத்திற்கு) ... 76
(பச்சைக் கர்ப்பூரக்) களிம்பு (புழு விழ) ... 76
(புங்கங்) குழம்பு ... 67
(பூனைகக்) களிம்பு (நீல காசத்திற்கு) ... 77
(பேரண்ட) குழம்பு (பூவிற்கு) ... 68
(மடல் துத்த)க் குழம்பு ... 65

**4.** நயன ரோகத்திற்கு உருண்டைகளும் மாத்திரைகளும் 78 to 138

(அரிதகீபீஜ) உருண்டை ... 97
(அஸ்திரஜத) மாத்திரை (நயன வியாதிக்கு) ... 83
(ஆமலகீ) மாத்திரை (வெள்ளெழுத்திற்கு) ... 136
(இரத்னாதி) மாத்திரை (பொது மருந்து) ... 86
இரத்னாதி உருண்டை வேறு நயன ரோகத்திற்கு ... 102
இரத்னாதி மாத்திரை வேறு ... 104
இரத்னாதி மாத்திரை „ ... 105
இரத்னாதி மாத்திரை „ ... 106
(ஈரல்) உருண்டை (உள்ளுக்கு) நயன வியாதி அந்திமாலைக்கு ... 132
(எரண்ட மூலாதி) மாத்திரை ... 85
(கலிக்க) மாத்திரை ... 122
கப்புக் கலிக்கம் (நயன ரோகத்திற்கு) ... 121
கருடாஞ்சனம் (நயன ரோகத்திற்கு) ... 109
கனகாதி மாத்திரை (நயன வியாதி 96-க்கும்) ... 107
கர்ப்பூராதி மாத்திரை (நயன வியாதிக்கு) ... 109
(காக்கண) உருண்டை (பூ படலத்திற்கு) ... 100
(கொட்டைப்பாசி) மாத்திரை (பூவிற்கு) ... 99
சந்திரோதய உருண்டை (நயன வியாதிக்கு) ... 114
சந்தனாதி உருண்டை வேறு ... 111
சந்தனாதி உருண்டை „ ... 111
சந்தனாதி உருண்டை „ ... 112
(சந்தனாதி) மாத்திரை ... 96

(சங்காதி) உருண்டை (நயனப்பூவிற்கு) ... 98
சங்காதி உருண்டை (வெள்ளெழுத்திற்கு) ... 135
சந்திரப் பிரபாவதி மாத்திரை (நயன ரோகத்திற்கு) ... 112
சந்திரோதய உருண்டை (நயன ரோகத்திற்கும் மாலைக்கண்ணுக்கும்) ... 113
சந்தனுதி உருண்டை (நயன வியாதிக்கு) ... 110
(சங்காதி) மாத்திரை (நயன ரோகத்திற்கு) ... 78
(சங்காதி) மாத்திரை (காசம், படலம், நத்தைப் படுவனுக்கு) ... 84
(சங்காதி) மாத்திரை (நயனப் பூவிற்கு) ... 99
(சாரணை) மாத்திரை ... 95
(சாரணை) மாத்திரை வேறு (நயனப் புகைச்சலுக்கு) ... 127
(தந்தாதி) மாத்திரை (நயன பற்ப ரோகத்திற்கு) ... 120
(தாம்ராதி) மாத்திரை ... 114
(தாம்ராதி) மாத்திரை ... 116
(திரிகடுகு) மாத்திரை (நயன வியாதி, புகைச்சல் வாயுவுக்கு) ... 128
(திமிராதி) மாத்திரை ... 123
(திமிராதி) மாத்திரை வேறு ... 123
(துத்தாதி) உருண்டை (பூவுக்கு) ... 100
(துத்தாதி) மாத்திரை (நயன ரோகத்திற்கு) ... 81
(துத்தாதி) உருண்டை வேறு ... 91
(துத்தாதி) உருண்டை ,, ... 94
(துத்தாதி) உருண்டை வேறு (வெள்ளெழுத்திற்கு) ... 135
(நந்தியாவட்டை) மாத்திரை ... 98
(படல) மாத்திரை ... 119
படல மாத்திரை வேறு ... 119
(பஸ்பம்) மருந்து ... 93
பச்சை உருண்டை ... 129
பச்சை உருண்டை (வேறு) ... 130
பச்சை மாத்திரை (வேறு) ... 130
பச்சை மாத்திரை (வேறு) ... 131
(பாலை விதை) மாத்திரை (மாலைக்கண்ணுக்கு) ... 132

(பிச்சிப்பூ) மாத்திரை (நயன வியாதி சுக்கில காசத்திற்கு) ... 125
(புளி) மாத்திரை (வெள்ளெழுத்திற்கு) ... 101
(புங்காதி) மாத்திரை ... 86
(பேனாதி) மாத்திரை ... 90
(பேனாதி) மாத்திரை வேறு (நயன ரோகத்திற்கு) ... 80
(பேனாதி) மாத்திரை வேறு (நயனப் படுவனுக்கு) ... 124
(பேரண்ட) மாத்திரை ... 90
(மணித்தக்காளி) மாத்திரை (நயன வாயுவுக்கு) ... 126
(மரிசாதி) மாத்திரை வேறு (நயன ரோகத்திற்கு) ... 82
(மரிசாதி) மாத்திரை வேறு (பூவிற்கு) ... 102
மிரியாதி மாத்திரை ... 133
(முக்தாதி) மாத்திரை (நயன ரோகத்திற்கு) ... 79
(முக்தாதி) உருண்டை ... 96
ரஸாதி குளிகை ... 134
வில்வாதி உருண்டை ... 134
(ஸுருமா) மாத்திரை (நயன சந்திர காசத்திற்கு) ... 125
(ஸ்படிகாதி) மாத்திரை ... 89
ஸ்வர்ண தாம்ராதி உருண்டை ... 117

5. நயன வியாதிக்கு "மை" வகைகள் 137 to 145

(எருக்கம் பஞ்சு) மை (மாலை நயனத்திற்கு) ... 143
(திருகுக்கள்ளி) மை (இழிகண்ணுக்கு) ... 138
(துத்தசித்ரகாதி) மை (அழிகண்ணிற்கு) ... 137
(துத்த லவங்காதி) மை ... 140
(துத்த வெங்கல) மை ... 141
(துத்த சங்காதி) மை ... 142
(துத்தந் துரிசாதி)க் களிம்பு (நயன வாயுவிற்கு) ... 143
பிரிசல மை ... 144
பொன்னாங்காணி மை ... 138
வேம்பு மை ... 144

6. நயன வியாதிக்கு வெண்ணெய் சேர்த்த களிம்பு வகைகள் அதாவது 'மை'' வகைகள் } 145 to 158

(உவர்மண்) களிம்பு (நயன வியாதிக்கு) ... 152

(உரைமருந்துகள்) (பூ நயன வியாதிக்கு) ... 155

(ஊமத்து பூணுகக்களிம்பு) (நயன வியாதிக்கு) ... 148

(குங்கிலிய வெண்ணெய்) ... 149

(கூத்தங் குதம்பை)க் களிம்பு (புழுகடிக்கு) ... 154

(சங்காதி)க் களிம்பு ... 150

(சங்காதி) மாத்திரை ... 153

(சிறு புள்ளடி) மாத்திரை (புகைச்சல், நீர்ப்பாய்ச்சலுக்கு) ... 156

(துரிசு மரிசாதிக்) களிம்பு (பிரிசல் நோய்க்கு)... 145

(துத்தாதி)க் களிம்பு (இழி கண்ணுக்கு) ... 147

(துத்த பூணுக)க் களிம்பு (இழிகண்ணுக்கு) ... 147

(துத்தந் துரிசு) களிம்பு வேறு ... 151

(துத்தந் குரிசு)க் களிம்பு வேறு ... 151

(துத்தாதி)க் களிம்பு (வியாதிப் புண்ணுக்கு) ... 173

(துத்தந் துரிசு) களிம்பு வேறு ... 152

(துத்தம் நிம்பாதி)க் களிம்பு (நயன வியாதி பூ நெரிவுக்கு) ... 157

(நண்டுக்) களிம்பு )நயன வியாதி, 4 வகை சுக்ரனுக்கு) ... 158

(பத்ர மரிசாதிக்) களிம்பு (பிரிசல் நோய்க்கு) ... 146

பால் களிம்பு (நயன வாயுவுக்கு) ... 154

(பெருந்தும்பைக்) களிம்பு ... 149

(முயல் புழுக்கை)க் களிம்பு (புகைச்சலுக்கு) ... 155

(மூக்கரட்டை) களிம்பு (பூவிற்கு) ... 156

7. நயன ரோகங்களுக்குப் புகை மருந்து 158

(திலாதிப்) புகை (நயன ரோகங்களுக்கு) ... 158

8. நயன ரோகங்களுக்குப் பிழிமருந்து வகைகள் 151 to 162

(ஆரை வேர்) பிழிமருந்து (நயன வலிக்கு) ... 161

(எள்ளுக்கழுநீர்) பிழிமருந்து (பூ நெரிவுக்கு) ... 161

(வெள்ளாட்டுப்பால்) பிழிமருந்து ... 158

(வெள்ளாட்டுப்பால்) பிழிமருந்து வேறு ... 159

9. நயன வியாதிக்குப் பொட்டண வகைகள் 162 to 163

(அதிமதுர)ப் பொட்டணம் ... 162

(அலரிவேர்) பொட்டணம் ... 163
(வேப்பம்பட்டை) பொட்டணம் ... 162

10. நயன ரோகத்திற்குப் "பத்து" வகைகள் 163 to 171

(கடுக்காய்)ப் பத்து (நயன வாய்வுக்கு) ... 167
(கடுக்காய்த்தோல்) பத்து (ஒடு நேத்ர வாயுவுக்கு) ... 168
(காசுக்கட்டிப்) பத்து (நயனவலி, சிவப்பு கடுப்புக்கு) ... 169
(கோவைச்சாறு) பத்து (நயன படுவனுக்கு) ... 166
(சமுத்திராப் பச்சைப்) பத்து ... 165
(திருநீரு) பத்து புறவளையம் ... 164
தேத்தாங்கொட்டையாதி பத்து (நேத்திர வாயுவுக்கு) ... 167
நாயுருவிப்பத்து (நயனவலி, சிகப்பு கடுப்புக்கு) ... 169
(நெய்) பத்து (மாலை பூ இவற்றிற்கு) ... 170
மாவு, (ஊமத்தைப்) பத்து ... 163
வாழைப்பழச்சாறு பிழிமருந்து (புழுவிழ) ... 170

11. நயன வியாதிக்குப் பொடி வகைகளும் கற்க வகைகளும் 171 to 176

அஞ்சனப்பொடி ... 173
கடுக்காய் கற்கம் ... 176
கர்ப்பூராதிப்பொடி ... 172
(சாரணைப்) பொடி (நயன புகைச்சலுக்கு) ... 175
(மடல் துத்தாதிப்) பொடி ... 174
வெள்ளைப்பொடி ... 171

12. நயன வியாதிகளுக்கு நஸ்ய மருந்துகள் 177 to 181

அதிமதுர நெய் ... 178
உச்சிப்பத்தும் நஸ்யமும் ... 180
(கடம்பை) நஸ்யம் ... 180
(சுக்காதி) நஸ்யம் (நயன வாயுவிற்கு) ... 177
(திப்பில்யாதி) நஸ்யம் ... 179
(துளசிச்சாறு) நஸ்யம் ... 179
(வேளைவேர்) நஸ்யம் ... 181

13. நயன வியாதிகளுக்கு உள்ளுக்குச் சாப்பிடும் மருந்து 182 to 186

எருமைச்சாணிப்பால் மருந்து (மாலைக் கண்ணுக்கு) ... 182

(கொன்னைக் கொழுந்து) க்ஷாயம் (தலை வலிக்கும், விரேசனத்திற்கும்) ... 182
பச்சிலை பொம்மை மருந்து (நயன ஜோதிக்கு)... 183
பச்சைப்பயறு அடை கஷாயம் (ரஸவாடையினாலேற்பட்ட புகைச்சலுக்கு) ... 185
பெருமருந்து நெய் (குவளை விப்புருதிக்கு) ... 185

14. அனுபந்தம் (பாவப்ரகாசிகா) 186 to 222
அதிதலக்கினி ரஸக்ரியா ... 193
ஆச்யோதன விதி ... 210
இரத்தினாதி மாத்திரை ... 216
இரத்தினாதி மாத்திரை (வேறு) ... 224
உரைமருந்து ... 188
கனக தாம்ராதி மாத்திரை ... 218
கல்பூரக் கிண்ணஞ் செய்முறை ... 196
கொட்டையிலைக் கஷாயம் ... 209
சங்காதி மாத்திரை ... 202
சராஞ்ஜனம் ... 189
சந்திரப்பிரபாவர்த்தி ... 190
சந்திரோதய வடி ... 191
சுநேத்திர மாத்திரை. ... 220
சூராஞ்ஜனம் ... 194
தாம்ராதி மாத்திரை ... 222
திரிபலாதி கிருதம் ... 204
திரிபலாதி கஷாயம் ... 206
திரிபலாதி ஒத்தடம் ... 213
தூதுவேளைச் சூரணம் ... 203
நாரிகேளாஞ்ஜனம் ... 219
நெல்லிக்காய் ரஸாயனம் ... 203
நேத்திர சிகித்ஸை முறை ... 211
பத்துபோடும் முறை ... 214
பத்து வகைகள் ... 215
பிண்டகரண விதியும் அபிஷ்யந்த சிகித்ஸையும் ... 212
பில்வாதி நேத்ர பிந்து ... 209
புஷ்பஹாரி வர்த்தி ... 201
முக்தாதி மஹாஞ்ஜனம் ... 192

| | | |
|---|---|---|
| மை | ... | 188 |
| ரஸக்ரியாஸ்நேஹனி | ... | 200 |
| ரோபணாஞ்ஜனம் | ... | 195 |
| ரோபணவடி | ... | 200 |
| ரோபணி ரஸக்ரியா | ... | 199 |
| லேகனாஞ்ஜனப்பொடி | ... | 194 |
| வாஸாதி கஷாயம் | ... | 207 |
| ஸ்நேதினிவடி | ... | 198 |
| **15.** நயன ரோகங்களின் குறி குணங்கள் | | (1) to (37) |
| அக்கர ரோகம் | ... | (1) |
| அக்கரம் (வேறு) | ... | (23) |
| அடைந்தெழுந்திடுதல் | ... | (13) |
| அதிமந்தம் | ... | (6) |
| அதிமந்தாரம் | ... | (17) |
| அந்திர விரணம் | ... | (35) |
| அந்திர காசம் | ... | (19) |
| அமரம் | ... | (16) |
| அரூபம் | ... | (9) |
| அவிகாய விரணம் | ... | (2) |
| அழற்சி | ... | (12) |
| அழித்திடு பிரிதல் | ... | (24) |
| அழிகண் பிரிதல் | ... | (7) |
| அன்னகோபம் | ... | (5) |
| இமைத்தடிப்பு | ... | (2) |
| இமையோடரதல் | ... | (35) |
| உக்கிர ரோகம் | ... | (1) |
| உடைந்தெழுகாசம் | ... | (2) |
| உயர்ந்து கண் புடைத்தல் | ... | (31) |
| உருவிப் புடைத்தெழுதல் | ... | (15) |
| ஊடையெழுச்சி | ... | (30) |
| ஊறுகாசம் | ... | (5) |
| எரிவிழிமழுங்கல் | ... | (6) |
| எழுச்சி | ... | (14) |
| எழுநாயறு | ... | (20) |
| கண்குரு | ... | (12) |
| கண்ணேவு | ... | (19) |

| | | |
|---|---|---|
| கண்விரணம் | ... | (10) |
| காசமுருக்கி | ... | (21) |
| கும்பிமைத்தடித்தல் | ... | (33) |
| குமரிதன் காசம் | ... | (11) |
| குவளை யெரிதல் | ... | (7) |
| குவளை நெரிதல் | ... | (21) |
| குவளை விப்ருதி | ... | (33) |
| குவளை காசம் | ... | (33) |
| குவளைப் படுவன் | ... | (36) |
| கூசி விழித்தல் | ... | (21) |
| கொடும்புழு வெட்டு | ... | (34) |
| சுக்கிர ரோகம் | ... | (3) |
| சுடர் பல தோற்றல் | ... | (29) |
| சுடரதி மாங்கிஷம் | ... | (30) |
| சுந்திர ரோகம் | ... | (20) |
| சுழல் வண்டெரியல் | ... | (4) |
| சுழல் விழி யெரித்தல் | ... | (22) |
| சுழற்றிடு பில்லம் | ... | (27) |
| செவ்வேர் | ... | (18) |
| சோதி நெரிதல் | ... | (18) |
| சோதி விரணம் | ... | (7) |
| சோர்கண்டுடிப்பு | ... | (26) |
| திமிரம் | ... | (17) |
| தினவு | ... | (3) |
| துத்திடு காசம் | ... | (25) |
| துய்ய கண் குருடு | ... | (3) |
| துன்மாங்கிஷம் | ... | (14) |
| துன்னுகாசம் | ... | (22) |
| துன்னு வெண்புகைச்சல் | ... | (26) |
| நத்தைப் படுவன் | ... | (35) |
| நாக படலம் | ... | (9) |
| நீரெழுகாசம் | ... | (10) |
| நீர்ப்பாய்ச்சல் | ... | (9) |
| நீர்ப்பில்லம் | ... | (32) |
| நீலகாசம் | ... | (11) |
| பக்கப்படுவன் | ... | (23) |
| பஞ்சணிப் படலம் | ... | (16) |

படிகுந்தம் ... (8)
பருமுளை ... (13)
பறவைப்பூ ... (15)
பற்பரோகம் ... (6)
பித்தகாசம் ... (25)
பில்லம் ... (24)
பிறவிக்குருடு ... (25)
புகைச்சல் ... (16)
புத்தியழித்தல் ... (36)
பொங்கிய விதனம் ... (37)
மணி நீலகாசம் ... (8)
மதன மந்தாரம் ... (30)
மதன மந்தாரம் (வேறு) ... (8)
மந்தார காசம் ... (32)
மயிர் புழுவெட்டு ... (28)
மயிர் குத்து ... (12)
மருவுகண் சிகப்பு ... (5)
மாலை காசம் ... (4)
மாலைக்கண் ... (22)
முடமயிர் ... (18)
வருஞ் ஜலரோகம் ... (27)
வளைந்தெழுரோகம் ... (28)
வளைகிகாசம் ... (34)
வாத காசம் ... (11)
வாரெழுகாசம் ... (31)
வாலகாசம் ... (32)
விதன மந்தாரம் ... (28)
வீங்கி விழுத்தல் ... (29)
வெண்ணைக்காடு ... (27)
வெள்ளைப் படலம் ... (10)
வெள்ளெழுத்து ... (14)

16. ஆயுர்வேத முறைப்படி நேத்திர ரோகங்களின் வகையும் குறிகுணங்களும். (38) to (58)

இரெப்பை நோய்கள் ... (38)
நேத்ர ஸந்திகளிலுள்ள நோய்கள் ... (41)
த்ருஷ்டி மண்டல நோய்கள் ... (46)

நேத்ர கோளத்திலேற்படும் நோய்கள் ... (52)
“ஸுச்ருதசம்ஹிதை”ப்படி நேத்ர வியாதிகளின் எண்ணிக்கை ... (57)
கண்ணோய்களின் சிகித்ஸைக்கான சில விதிகள் ... (58)
அக்ஷிபாகாத்யயம் ... (55)
அஞ்சனு ... (39)
அதிமந்தம் ... (53)
அதிமாம்ஸார்மம் ... (45)
அந்யதோவாதம் ... (53)
அம்லவிதக்தம் ... (51)
அம்லோஷிதம் ... (56)
அர்ஜுனம் ... (44)
அர்புதம் ... (41)
அலஜி ... (41)
அலஜி (வேறு) ... (43)
அஜகா ... (45)
இரண்டாம் படலக்கோளாறு ... (46)
உத்க்லிஷ்டவர்த்ம ... (40)
உத்ஸங்கா ... (39)
உபநாகம் ... (42)
உஷ்ண விதக்தம் ... (51)
ஔபஸர்கிக லிங்கநாசம் ... (52)
கபஸ்ராவம் ... (42)
கபதிமிரம் ... (49)
கபாபிஷ்யந்தம் ... (54)
கபாதிமந்தம் ... (54)
கபோதக்லிஷ்டம் ... (39)
கர்தமம் ... (40)
குகூணகம் ... (40)
கும்பீகா ... (38)
க்ருச்ரோன்மீலம் ... (38)
க்ருமிக்ரந்தி ... (43)
சுக்லிகா ... (43)
சுக்லார்மம் ... (43)
சுத்த சுக்ரகம் ... (45)
சுஷ்காக்ஷி பாகம் ... (5)

சோணிதார்மம் ... (44)
ச்யாவவர்த்ம ... (40)
ச்லிஷ்ட வர்த்ம ... (40)
தூம்ர த்ருஷ்டி ... (51)
தோஷாந்த்யம் ... (51)
நகுலாந்த்யம் ... (50)
நான்காம் படலக் கோளாறு ... (47)
நிமேஷா ... (38)
பர்வணி ... (42)
பலாஸக்ரதிதம் ... (43)
பஷ்மசாதம் ... (38)
பக்ஷ்மோபரோதம் ... (41)
பஹலவர்த்ம ... (40)
பாகாத்யயம் ... (46)
பித்ததிமிராதிகள் ... (48)
பித்தோத்கிலிஷ்டம் ... (38)
பித்தாபிஷ்யந்தங்கள் ... (53)
பித்தாதிமந்தம் ... (54)
பிஸவர்த்மம் ... (40)
பிஷ்டகம் ... (44)
பூயாலஸம் ... (43)
பூயாஸ்ராவம் ... (42)
போதகீ ... (39)
ப்ரஸ்தார்யார்மம் ... (44)
முதல்படலக் கோளாறு ... (46)
மூன்றும்படலக் கோளாறு ... (47)
ரக்தார்சஸ் ... (39)
ரக்ததிமிரம் ... (50)
ரக்தாபிஷ்யந்தம் ... (54)
ரக்தாதிமந்தம் ... (54)
ரக்தோத்க்லிஷ்டம் ... (39)
ரக்தஸ்ராவம் ... (42)
லகணன் ... (39)
வாததிமிரம் ... (47)
வாதஹதம் ... (38)
வாதாபிஷ்யந்தம் ... (52)

| | | |
|---|---|---|
| ஜலஸ்ராவம் | ... | (41) |
| ஸம்ஸர்க்கஸந்நிபாததிமிராதிகள் | ... | (50) |
| ஸசோபம் | ... | (55) |
| ஸிகதாவர்த்மம் | ... | (40) |
| ஸிராசுக்ரம் | ... | (46) |
| ஸிராபிடகா | ... | (45) |
| ஸிராஜாலம் | ... | (44) |
| ஸிராஹர்ஷம் | ... | (44) |
| ஸிரோத்பாதம் | ... | 44) |
| ஸ்நாவார்மம் | ... | (45) |
| க்ஷதசுக்ரன் | ... | (45) |
| ஹதாதிமந்தம் | ... | (53) |
| கண்களின் நாடியை அறியும் விதம் | ... | (58) |
| மருந்து போடப்படவேண்டிய கண் | ... | (59) |
| மருந்து தீட்டப்படவேண்டிய காலம் | ... | (59) |
| பத்திய விதி | ... | (60) |
| காரீயக்கோல் | ... | (60) |

# கண்களின் அமைப்பு

கடவுளால் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள பஞ்ச இந்திரியங்களுள் கண்களே முக்கியமானவை. அவைகளின் அமைப்பைச் சற்று ஆராய்வோம்.

## கண்களின் பரிமாணம்

கண்கள் மண்டையோட்டின் முன்புறமுள்ள குழியிலே புதைக்கப்பட்டிருக்கின்றன. இவை உருண்டை வடிவுள்ளவை. ஆரோக்கியமுள்ள வயது வந்தவர்களின் கண்களின் நீளம் இரண்டு 'அங்குலம்' (தற்கால $1\frac{1}{2}''$) அகலம் $\frac{1}{2}$ 'அங்குலம்' ($\frac{3}{8}''$) அதாவது கட்டைவிரற் பருமனாகும், அதன் ஆழம் $1\frac{1}{2}$ 'அங்குலம்' ($1\frac{1}{8}''$).

## வெளியே புலப்படக்கூடிய பாகங்கள்

கண்ணில் வெளியே புலப்படக்கூடிய பாகங்களுக்கு பாஹ்ய மண்டலங்கள் என்று பெயர். இவை 5 வகைப்படும்:—

1. 'பக்ஷ்மமண்டலம்' அதாவது இமை மயிர் வரிசைகள். இவைகள் கண்களுக்குள் வியர்வை, தூசி முதலியவை விழாமற் காப்பாற்றுகின்றன.

2. 'வர்த்மமண்டலம்' அதாவது இரெப்பைகள். கண்களின் மேலிமையும் கீழிமையும் சேர்ந்து 'இரெப்பைகள்' எனப்படும். மேலிமைக்கு 'இமை' என்றும் கீழிமைக்குக் 'குவளை' என்றும் பெயர். இவை அதிக வெளிச்சம், தூசி இவற்றிலிருந்து கண்களைப் பாதுகாக்கின்றன.

3. 'ச்வேத மண்டலம்' அதாவது வெள்ளைவிழி. இது 'கடினை' (Sclera) என்ற சவ்வினாலாகியது.

4. 'க்ருஷ்ண மண்டலம்' அதாவது கருவிழி. இது வெள்விழியில் மூன்றிலொரு பாகமுள்ளது. இது 'ச்ருங்கை'

(Cornea) என்ற வலுவுள்ள சவ்விஞலாகியது. இது மிகவும் உறுதியுள்ளதாகையால் கண்களை அடிபடுதலினின்றும் காப்பாற்றுகிறது. ச்ருங்கையில் இரத்த ஓட்டம் கிடையாது. இது ரஸ தாதுவினுலேயே (Lymph) போஷிக்கப்படுகிறது.

5. 'திருஷ்டி மண்டலம்' அதாவது பாப்பா. இதைச் 'சோதி' என்றும் 'தாரை' என்றும் கூறுவர். கண்களின் பார்வைக்குக் காரணமாகிய 'இயவம்' (Lens) இந்த மண்டலத்தில்தான் இருக்கிறது. மேலும் தேஜோ மயமான ஆலோசக பித்தத்தின் சக்தியே பார்வைக்கு ஆதாரமாகிறது. இம்மண்டலம் கருவிழியில் ஏழிலொரு பங்காகும்.

## பஞ்சபூதச் சேர்க்கை

நயன கோளத்திலுள்ள மாம்ஸ பாகங்கள் ப்ருதிவியின் அம்சங்களாகும். ரத்தமும் அதிலுள்ள பித்தமும் அக்னி அம்சத்திஞல் உண்டாகிறது. வாயுவிஞல் கருவிழியும், அப்புத் தத்வத்தால் வெள்விழியும், ஆகாச பூதச் சேர்க்கையிஞல் கண்ணீர் துவாரங்களும் உண்டாகின்றன.

நேத்திரத்திலுள்ள ஸந்திகள் (சேருமிடங்கள்) இவைகள் ஆறு வகைப்படும்.

1. 'பக்ஷ்ம வர்தம ஸந்தி, இமைமயிர்களும் இமையும் சேருமிடம். அதாவது இமையின் ஓரங்கள்.

2. 'வர்தம சுக்ல ஸந்தி' இரெப்பையும் வெள்விழியும் சேரும் ஸந்திகள். நமக்கு இவை எளிதில் புலப்படாது.

3. 'சுக்லக்ருஷ்ண ஸந்தி' வெள்விழியும் கருவிழியும் சேருமிடம்.

4. 'க்ருஷ்ண த்ருஷ்டி ஸந்தி' கருவிழியும் சோதியும் சேருமிடம்.

5. 'கனீனிகம்' மூக்கின் சமீபத்திலிருக்கும் கடைக்கண்.

6. 'அபாங்கம்' பொட்டுப் பக்கத்திலிருக்கும் கடைக்கண்.

## நேத்திரத்திலுள்ள படலங்கள் (திரைகள்)

இரெப்பைகளில் 2 படலங்களும், நேத்திர கோளத்தில் 4 படலங்களும் உள்ளன. திமிரம், காசம், லிங்கநாசம் முதலிய ரோகங்கள் இப்படலங்களைப்பற்றி உண்டாகின்றன. கண்களிலுள்ள 4 படலங்களில் மேலே உள்ள முதற் படலத்தில் ஜலமும், கண்ணின் பார்வைக்குக் காரணமான ஆலோசக பித்தத்தோடு செல்லும் இரத்தக்குழாய்களும் அமைந்திருக்கின்றன.

இரண்டாவது படலத்தில் பெரும்பாலும் மாம்ஸம் உளது.

மூன்றுவது படலத்தில் பெரும்பாலும் மேதஸ் (கொழுப்பு) உள்ளது.

அதற்குப்பின் இருப்பது நான்காவது படலம். இது எலும்பினுலாகியது.

இந்த ஒவ்வொரு படலமும் கண்ணின் மொத்தப் பருமனில் ஐந்தில் ஒரு பங்காகும்.

இப்படலங்களுள் ஸிரைகள், தமனிகள் (இரத்தக் குழாய்கள் நரம்புகள்), கண்டரங்கள், (தசை நார்கள்) மேதஸ் (கொழுப்பு) காளகம் என்னும் எலும்பு அதற்குப் பின்னுள்ள ச்லேஷ்மா (கபம்) இவைகளில் உண்டாகும் இணைக்கும் சக்தியே கண்ணின் பல பாகங்களைச் சேர்த்து ஒன்றுக்கியுள்ளது.

தமிழ் வைத்திய நூல்களில் சவ்வுப் படலங்கள் என்பதைப்பற்றி அடியில்கண்ட விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது :—

முதல்படலம் 'கடினை' யென்ற சவ்வினுலும் 'ச்ருங்கை' யென்ற சவ்வினுலும் ஆகியது.

இரண்டாவது சவ்வுப்படலம், 'தாணிசம்' "வருணி" 'பரிதிகம்' என்ற சவ்வுகளினுலும்.

த்ராணிசத்தில் நயன கோளங்களைப் போஷிக்கச் செய்யும் இரத்தக் குழாய்கள் வலைபோல் பின்னப்பட்டு நேத்ரகோளம் முழுவதையும் சூழ்கின்றன. இதையே ஆங்கிலத்தில் 'Choroid' என்று கூறுகின்றனர்.

வருணி என்னும் சவ்வின்மேல் கண்ணிற்குப் புலப்படாத 7 வித மண்டலங்கள் (அந்தர் மண்டலங்கள்) சிருஷ்டிக்கப் பட்டிருக்கின்றன. அவையாவன.

1. நிருத்த மண்டலம். இது பாவை அல்லது தாரை யாகும். (Iris)

இது கண்களில்படும் வெளிச்சத்திற்குத் தக்கதாய் விரிந்து சுருங்குந் தன்மையையுடையது.

2. பீத மண்டலம் (மஞ்சள் வட்டம்)

3. சோண மண்டலம் (சிகப்பு வட்டம்.)

4. ஹரித மண்டலம் (பச்சை வட்டம்.)

5. தூம்ர மண்டலம் (புகையாலான வட்டம்.)

6. சோதி மண்டலம் (வெண்மையான வட்டம்.)

7. நிசாசர மண்டலம் (கருமைநிற வட்டம்.) என்பன.

முதல் மண்டலத்தினல் வஸ்துக்களின் பரிமாணம், உருண்டை, சதுரம், முதலிய விவரங்கள் நமக்குத் தெரிகின்றது. பின்பு, ஒவ்வொரு மண்டலங்களும் முறையே மஞ்சள், சிவப்பு, பச்சை, கறுப்பு, வெண்மை முதலிய நிறங்களை உணர்த்துகின்றன. நிசாசர மண்டலத்தின் உதவியால்தான் நாம் இருட்டில் சஞ்சரிக்கமுடிகிறது.

இவ்வித மண்டலங்கள் சேர்ந்த முழு வட்டத்திற்கும் 'பரிதிகம்' (Ciliary body) என்று பெயர்.

தரணிசம் என்னும் சவ்விற்கு அடுத்தாற்போல் கண்ணினுள்ளே இருக்கும் மெல்லிய வெள்ளை சவ்விற்குத் 'தரிசியம்' (Retina) என்று பெயர். கண்களுக்குள் ஊடுருவிச் செல்லும் உருவ ஒளிக்கிரணங்கள் தரிசியத்தின் மேலே விழுவதால் அங்குள்ள நுண்ணிய நரம்புவலைகள் தூண்டப்படுகின்றன. மேலும், பார்வை நரம்புகள் மூளையோடு சம்பந்தப்பட்டிருப்பதால், உருவம் நமக்குப் புலப்படுகிறது.

'இயவம்' என்னும் (Lens) உறுப்பு, ஓர் பளிங்குக்குச் சமானமாக இருந்து, உருவ ஒளிகளைக் கண்களுள் விடுகிறது. இயவத்திற்கு முன் பாகத்தில் ஸ்பகடிம்போன்ற நீர் இருக்கிறது. இதற்கு 'வனம்' (Aqueous Humor) என்று பெயர். இதை வருணி என்ற சவ்வுதான் படலங்களிலிருந்து பிரிக்கிறது. இயவத்திற்குப் பின்புறம் 'படிகம்' (Vitreous Humor) என்ற நீர் கண் கோளம் முழுவதையும் நிரப்புகிறது. இது ஏறக்குறைய கோழிமுட்டையின் வெள்ளைக் கருவைப் போன்ற தடிப்பையுடையது. இயவம் நாளாவட்டத்தில் சுமார் வயது 45 வயதிற்குப்பின் கெட்டியாவதால் ஒளி ஊடுருவ முடியாத நிலைமையை அடைகிறது. இதற்குப் பித்த காசம் (Cataract) என்று பெயர்.

கண்களில் நிணம் நிரம்பியிருப்பதனால் அவை அதிர்ச்சியைத் தாங்குவதுமன்றி விழியையும் நாலா பக்கங்களிலும் சுழற்றவும் முடிகிறது. கண் கோளங்கள் வெளியே விழாதபடி பேசிகளினாலும் முருந்துகளினாலும் (Muscles & Tendons) கட்டப்பட்டிருக்கின்றன.

கடைக்கண் பக்கமாய் "கண்ணீர் கோளங்கள்" (Lachrymal glands) என்ற கண்ணீர் சுரப்பிகள் இருக்கின்றன. அதிலிருந்து கண்ணீர் ஊற்றுஜலம் ஊறுவதுபோல் ஊறி சில நுட்பமான துவாரங்களின் வழியாய் கண்ணிலே

பரவி வருவதால் அவை எப்பொழுதும் பசுமையாகவும் பள் பளப்பாகவும் இருக்க ஏதுவாகிறது. கண்ணில் அழற்சி காணும்போதும், மனதில் சஞ்சலம் உண்டாகும் வேளையிலும் கண்ணீர் “கனீனகத்தின்” பக்கத்திலிருக்கும் இரண்டும் குழாய் கள் (Lachrymal Ducts) வழியாக மூக்கிலே சென்று அளவுக்கு மிஞ்சி ஊறுவதால் மூக்கு வழியாகவும் கடைக்கண் வழியாகவும் கண்ணீர் வழிகின்றது.

கண்களின் பார்வைக்கு வெளிச்சம் அவசியமாகும். ஒளி இல்லையெனில் உருவங்கள் புலப்படாது. ஒளி முக்கியமாகச் சூரியனிடமிருந்து கிடைக்கின்றபடியால் சூரியனைக் கண் களுக்கு அதிஷ்டமான தெய்வமாகக் கொண்டாடுகின்றனர்.

## கண் நோய்கள் வருவதற்கான அறிகுறிகள்

கண்களிலுள்ள இரத்த குழாய்களோடு வரும் தோஷங் கள் மாறுதலடைந்து, கண் உறுப்புகளுக்குள் சென்று மிகக் கடுமையான கண் ரோகங்களை உண்டாக்குகின்றன. அவை யாவன :—

1. கண் கலக்கம்
2. கண் வீக்கம்
3. பீளை சாரல்
4. கனத்தல்
5. அனத்தல்
6. கண்களில் வலி
7. கண்களில் சிவப்பு
8. இமைப்பையில் குத்துவலி

9. இமைகளினடியில் உருத்தல்

10. கண் கூச்சம்

11. பார்வைக் குறைவு முதலியன. இக்குறிகள் ஏதே னும் காண ஆரம்பித்தால் உடனே தகுந்த கிசிச்சை செய்து கொள்ளவேண்டும்.

உ

ஹரி: ஓம் நன்றாக

## காப்பு

மாதுமை பாகர் சொன்ன மாமறை முதலையாய்ந்து
தீதுகள் வாராதென்று திருவுளத்தருளினாலே
ஆதி மாமுனிவர் சொன்ன ஆயுருவேதத்துள்ளே
நாதனார் தெரிந்துரைத்த நயனமாம் விதியிதென்றே.

( அகஸ்தியர் நயனவிதி 500 )

# சரபேந்திரர் வைத்திய முறைகள்

## நயன ரோக சிகிச்சை

### 1. தைலங்கள்

### 1. நயன ரோகத்திற்கு "அம்ருதாமலகத் தைலம்"

அமுதவல்லியும் நெல்லியின் காய்கையான்
முசுமுசுக்கைப் பசுவின்பாலும்
குமரிச்சாறெல்லாம் நல்லெண்ணெ யின்நிறை
கொள்வதிற்பாதி யாயுடன்கூட்டியே
நிமிர்மூன்று நாளும்மெது வாய்க்காய்ச்சி
நீட்டுவாய்பட்டை லவங்கப்பத்திரி
கமழுமேல மிலாமிச்சுவேர் சாதிக்காயும்
சந்தனமும்சாதிப் பத்திரியே. (க)

முந்திரிப்பழம் செஞ்சந்தம் வெட்டிவேர்
மூள்சதகுப்பை மதுரம்செங்கோஷ்டமும்
வந்ததான்றிக்கா யுட்பருப் புமிது
வகைக்கொவ்வொ ருவரா கனெடைதோய
முந்திச் சூரணம் செய்து தைலத்தில்
மூட்டிக் காய்ச்சிப் பதத்திலிறக்கியே
தந்த மிருதாமலத் தைலத்தைத் தலை
முழுகி நசிய முந்தான் செய்யே. (உ)

செய்யும் போதிது நேத்திர ரோகமும்
சிரத்தில் நின்றிடு வாயு வநேகமும்
பையவே சிரபிர மணமுமிது பயந்து
போகுங்குடி யோட்டிடும் பாரிது
மெய்யதாம்சிவ பூசையின் பத்தவம்
வேண்டிஞ ரிவ்வுல கத்தவர்க்கென்று
செய்ய கோலின் வளமை செலுத்திடுந்
தீரனும் சர போசனுத் தாரமே. (ங)

(இதன் பொருள்)

| | |
|---|---|
| மேற் புரணியை நீக்கிச் சுத்தி செய்த சீந்தில் கொடியின் சாறு | 1 படி |

முசுமுசுக்கைச்சாறு 1 படி
நெல்லிக்காய்ச்சாறு 1 படி சோற்றுக்கற்றாழைச்சாறு 1 படி
கையாந்தகரைச்சாறு 1 படி பசுவின் பால் 1 படி

இச்சாறு வகைகளை ஒன்று கூட்டி, அதனுடன் நல்லெண்ணெய் 2 படி சேர்த்து, 3 நாள் அடுப்பிலேற்றி மெதுவாகக் காய்ச்சிக் கல்கத்திற்கு,

| | | |
|---|---|---|
| லவங்கப்பட்டை | ஏலம் | இலாமிச்சுவேர் |
| லவங்கப்பத்திரி | சாதிக்காய் | சந்தனம் |
| சாதிபத்திரி | திராக்ஷை | செஞ்சந்தனம் |
| வெட்டிவேர் | சதகுப்பை | அதிமதுரம் |
| செங்கோஷ்டம் | தான்றிப்பருப்பு | |

இச்சரக்குகளை வகைக்கு ஒவ்வொரு வராகனெடை வீதமெடுத்துப் பால் விட்டு நன்றாக அரைத்து முன் கொதிக்கும் தைலத்தில் குழப்பிப் பதமாகக் காய்ச்சி வடிக்கவும்.

இத்தைலத்தைத் தினந்தோறும் தலை முழுகவும், நசியமிடவும் உபயோகிக்கப் பலவித நேத்ரரோகங்களும், தலையில் நின்றிடும் அநேக வாயுக்களும், தலைச்சுற்றலும் தீரும்.

குறிப்பு:—

அமுதவல்லி = சீந்திற்கொடி

---

## 2. நயன ரோகத்திற்கு "அம்ருதலவங்கத் தைலம்"

நேத்திரநோய் தொண்ணூற்றுறுக்குந்தான்
நெல்லிக்காய் சாறுபடி யாறுவாங்கி
யூத்தியிளநீர் மூன்றுபடி பசுவின்பாலும்
ஊட்டி யெண்ணெய் மூன்றுபடி யுட்கலந்து
மெத்தவில்வ மிலாமிச்சும் பலமீரைந்தாய்
இதையிடித்தெண் படிதண்ணீ ரெட்டொன்றாக்கிச்
சேத்துமுன் னெண்ணெயுடன் விட்டுப் பின்பு
செங்கழுநீர் கோட்டந்திப் பிலியுந்தானே. (௪)

கொத்தமல்லி யதிமதுரம் சிறுநாகப்பூ
குராசானி யோமநாக ரம்கிராம்பு
கத்தூரி மஞ்சள்பேய்ப் புடலுங் கந்தம்
கடுகரோகி ணிவெட்டி வேரும்மாஞ்சில்
சித்தரத்தை மிளகுகால் படியதற்குந்
தேவதாரம் சமுத்திராப் பழமுஞ் சேர்த்து
வெத்திநிறை யொன்றரை வராகனுக
மேலரைத்தே வடியமுதா மிலவங்கமீதே. (ரு)

(இ-ள்)

| | | | |
|---|---|---|---|
| நெல்லிக்காய்ச்சாறு | 6 படி | இளநீர் | 3 படி |
| பசுவின் பால் | 3 படி | நல்லெண்ணெய் | 3 படி |

இவற்றை யொன்று கலந்து,

| | |
|---|---|
| வில்வம் | 10 பலம் |
| விளாமிச்சம் வேர் | 10 பலம் |

இவ்விரண்டையுமிடித்து 8 படி தண்ணீர் விட்டு 1 படி யாகச் சுண்டக்காய்ச்சி முன் சொன்ன சாறு கூட்டிய எண் ணெயுடன் விட்டு,

| | | |
|---|---|---|
| செங்கழுநீர்க் கிழங்கு | கோஷ்டம் | திப்பிலி |
| கொத்தமல்லி | அதிமதுரம் | சிறு நாகப்பூ |
| குராசானி ஓமம் | சுக்கு | கிராம்பு |
| கஸ்தூரி மஞ்சள் | பேய்ப்புடல் | சந்தனத்தூள் |
| கடுகுரோகிணி | வெட்டிவேர் | சடமாஞ்சில் |
| சித்தரத்தை | தேவதாரம் | சமுத்திராப்பழம் |

இவைகள் வகைக்கு $1\frac{1}{2}$ வராகனெடை
மிளகு $\frac{1}{4}$ படி

இச்சரக்குகளை மேற்சொல்லிய கஷாயம் விட்டு அரைத்து எண்ணெயுடன் குழப்பி, அடுப்பின் மீதேற்றிப் பதமாக எரித்து உபயோகித்தால் 96 வகைக் கண் ரோகங்களும் தீரும்.

குறிப்பு:—

சமுத்திராப்பழம்—இதைக் கொந்தளப்பழம் என்றும் அழைக்கின்றனர். இது எலுமிச்சம்பழம் போன்று பெரும்

பாலும் நான்கு பிளவை ரேகையுள்ளதாக இருக்கும். இதன் சுவை கசப்பு. இதை நாசிகா சூரணமாகச் செய்து மூக்கி லுண்டாகும் இரணங்களுக்கு உபயோகிக்கலாம். இச் சரக்குக் கீழ்திசையிலுள்ள தீபாந்திரங்களிலிருந்து கொண்டு வரப்படுகின்றது.

---

## 3. நயன ரோகத்திற்கு "அஸனுவம்ருத வில்வாதித்" தைலம்

வேங்கை வேரும் பேராமுட்டி வேர் வில்வ
வேரும் சீந்திற் கொடிவகை யொன்றுக்குத்
தாங்குநூறு பலமிதைத் துண்டுதுண்
டாயிடிபதி னறுபடி தண்ணீர்
தேங்குபாண் டத்திடு நாலி லொன்றதாய்த்
திரளக் காய்ச்சி யதிலெண்ணெ யோர்படி
வாங்கு வாய்பசு வின்பாலு மப்படி
மாட்டுங் கற்க மருந்தின் வகைகளே. (சு)

அமுக்குரா நாகமுட்டி திரிபலையகில்
கொடிமுந்தி ரிப்பழஞ் சந்தனங்
கமழும் பூலாங் கிழங்கிலவங் கமுங்கறி
மஞ்சள் மரமஞ்சட் சடாமாஞ்சில்
குமரிலவங் கப்பத்திரி யேலந் தக்கோலஞ்
செண்பகமொட்டு மதுரமுந்
தமத ரத்தைநன் னரியும் வெட்டிவேர்
தாளிசபத்திரி வால்மிளகுமே. (எ)

தேவதாரங் கத்தூரி யிலாமிச்சுஞ் சேருந்
தாமரைச் சமூலமுங் குங்குமப்பூவு
மிவ்வகைக்கோர் வராகனெடை பொடியதாய்
நுணிக்கி யெண்ணெயில் போட்டிடும்
ஆவலாய்ப் பத பக்குவந் தன்னிலே
யமைக்கி றக்கியதில் பச்சைக்கற் பூரத்தைத்
தூவத் தூளாய்ப் பொடித்திட்டுத் தாழம்பூச்
சூழும் வாசனைக் கட்டிமு டிகிடேன். (அ)

முழுகஸ ஞவமிருத வில்வாதியென
    மொழித் தைலம் செவிநோய் தலைவலி
விழியினோய்கள் செவிடு செவிச்சூலை
    வேறு முகத்திநோய் வாத கபமெனும்
வழியினால் வரும் பீனிச மாதியாய்
    மாறிப் போய்விடு மேசிவ பூசையில்
வழுவிலா ததவஞ் செல்வஞ்செங் கோல்நெறி
    வளர்த்திடுஞ்சர போசேந்திரன் வாய்மையே. (கூ)

(இ-ள்)

வேங்கைவேர் 100 பலம்
நாகமுட்டி ,,
சீந்தில்கொடி ,,
வில்வவேர் ,,

இவைகளைத் துண்டு துண்டுகளாக நறுக்கி யிடித்து 16 படி தண்ணீர் விட்டு ஒரு பாண்டத்திலிட்டு நாலிலொன்ருய்க் காய்ச்சி வடிகட்டின கஷாயத்தில், சுத்தமான

எள்ளெண்ணெய் 1 படியும்
பசுவின்பால் 1 படியும் வார்த்து, இதனுடன்

| | | |
|---|---|---|
| அமுக்குரா | கடுக்காய் | நெல்லிக்காய் |
| தான்றிக்காய் | அகில் | திராக்ஷை |
| சந்தனத்தூள் | பூலாங்கிழங்கு | கிராம்பு |
| கறிமஞ்சள் | மரமஞ்சள் | சடாமாஞ்சில் |
| இலவங்கப்பத்திரி | ஏலம் | தக்கோலம் |
| செண்பகமொட்டு | அதிமதுரம் | சித்தரத்தை |
| நன்னரிவேர் | வெட்டிவேர் | தாளிசபத்திரி |
| வால்மிளகு | தேவதாரு | கஸ்தூரிமஞ்சள் |
| விளாமிச்சைவேர் | தாமரைக்கிழங்கு | குங்குமப்பூ |

இச்சரக்குகளை வகைக்கு ஒரு வாராகனெடை வீதமெடுத்துக் கஷாயம் விட்டு அரைத்து எண்ணெயிற் குழப்பிப் பக்குவமாக எரித்து இறக்கி, வடிகட்டி, அதில் 1 வராகனெடை பச்சைக் கற்பூரத்தைப் பொடித்துப்போடவும். ஒரு வாயகன்ற சட்டியில் எண்ணெயைவிட்டு மேலே ஒரு வலைத்துணியைக் கட்டி அதன்மீது தாழை மடலைப் பிரித்துக் கத்தரித்துவைத்து,

மேலே மற்ருெரு சட்டியினுல் மூடிவிடவும். இப்படியாகக் காற்றில்லாத அறைக்குள் 3 நாளைக்குக் குறையாமல் வைத்திருந் தெடுத்து ஸ்நானம் செய்துவரச்

செவிநோய், தலைவலி, விழியின் நோய்கள், காது செவிடு, செவிச்சூலை, முகத்திலெழும் நோய்கள், வாத கபத்தினுல் உண்டாகும் பீனிஸம் முதலிய பலவித நோய்கள் தீரும்.

குறிப்பு :—

அஸனம் = வேங்கைமரம்
அம்ருதா = சீந்திற்கொடி

---

## 4. நயன ரோகத்திற்கு "வேங்கைத்தைலம்"

வேங்கை மரவைரத்தின் மேற்ருேல் போக்கி
வில்வமுடன் சிற்ருமுட்டி சீந்தினுலும்
பாங்குடனெவ் வொன்றுக்கே ழரையதாகும்
பலமுப்ப தாயிடித்து மிருதூணி தண்ணீர்
தேங்கவிட்டுப் பதக்காகக் காய்ச்சி வாங்கித்
திகழெண்ணெ யொருநாழி தனிலேசேர்த்து
வாங்குதிரி பலைமதுரம் பாலை வேரும்
மன்சுக்கு மிலவங்கப் பிசினிவ் வைந்தே. (ம)

வகையொன்று முக்கழஞ்சா யரைத்துக் கூட்டி
வரும்பதத்திற் காய்ச்சியிறுத் துத்தலைக்கு வாற்கத்
தொகை மூன்று ரோகத்தால் விளைநோய் தீருஞ்
சொல்நயன ரோகமுதற் சிரசு நோய்க்கும்
பகை வேங்கைத் தைலமிது நேர்த்தி யென்று
பரமசிவ னருள்பெற்றுப் பாலனஞ்செய்
நகராளும் சரபோசி மகராசன் சொல்
நல்ல முறை யிதின்குணத்தை நயந்துகாணே. (கக)

(இ-ள்)

மேல்தோல் போக்கின வேங்கை மரத்தின் வைரம், சிற்ரு முட்டிவேர், சீந்தில்கொடி இவைகள் வகைகொன்று 37½க்கு

பலம் எடுத்து ஒன்றிரண்டாக இடித்து 8 மரக்கால் சுத்த ஜலம் விட்டு இரண்டு மரக்காலாகும்வரை அடுப்பின் மேலேற்றி வற்றக் காய்ச்சவும். இதனுடன், சுத்தமான எள்ளெண்ணெய் 1 படி கூட்டி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், அதிமதுரம், பாலைவேர், சுக்கு, கிராம்பு இச்சரக்குகளை வகையொன்றுக்கு 3 கழஞ்சு (கழஞ்சு = $1\frac{1}{4}$ வராகனெடை) வீதமெடுத்துக் கஷாயம் விட்டரைத்து, எண்ணெயுடன் குழப்பி எரித்துப் பதத்திலிறக்கவும்.

இதனால் தினந்தோறும் தலைமுழுகிவர, வாத, பித்த, கபம் முதலிய மூன்றுவித தோஷங்களினாலுண்டான பலவித ரோகங்களும், கண்ணோய், தலை ரோகங்களும் தீரும்.

---

## 5. நயன வியாதி காசமைந்துக்கும் மருந்து

வசுவாசி யிலைகண்டங் காரிப் பான்
றூதுவளை யுங்கீழ்கா
யிசைநெல்லி தேட்கடையுஞ் சூரியபத்
திரியாறு மிவைச மூலம்
இசங்கினிலை பெரும்புல்லும் வகையொன்றுஞ்
சாறுபடி யிடுநல்லெண்ணெய்
வசமாயோர் படிவிட்டுக் கலந்தபின்
சரக்கூட்டும் வகையுங் கேளே. (கஉ)

அதிவிடயஞ் சீரகஞ்சி றுதேக்குக்
கடுகோம மரேணுகங்கள்
மதிகாயம் விழலரிசி வாய்விளங்க
மீதுமொரு வகை கழஞ்சாய்
இதையரைத்தெண் ணெயிற்சேர்த்திட் டுவடித்
துட்கொளவே யிருவிழிக்குள்
உதியஞ்சு காசவகை யொடுதீரச்
சரபேந்திர னுரைத்தவாறே. (கரு)

(இ-ள்)

வேங்கை இலை, அதன்வேர், கண்டங்கத்திரிவேர், கையான் தகரை, தூதுவேளை, கீழாநெல்லி, தேட்கொடுக்குச் சமூலம்

இம்மருந்துகள் ஆறினையும் (சமூலமாக) எடுத்து, இடித்த சாறு 1 படி, சங்கன் இலை, பெரும்புல், இவைகளையும் தனித் தனியாக இடித்து வகைக்கு 1 படி சாறு எடுத்துக்கொள்ளவும். இதனுடன் சுத்தமான நல்லெண்ணெய் 1 படி விட்டு

| | | |
|---|---|---|
| அதிவிடையம் | நற்சீரகம் | சிறுதேக்கு |
| கடுக்காய்த்தோல் | கடுகு | ஓமம் |
| காட்டு மிளகு | சுக்கு | விழலரிசி |
| வாயுவிடங்கம். | | |

இவைகளை வகைக்கு 1 கழஞ்சு ($1\frac{1}{4}$ வராகனெடை) எடுத்து ஜலம் விட்டரைத்து எண்ணெயுடன் குழப்பிப் பக்குவமாக வடித்து வைத்துகொண்டு உள்ளுக்குச் சாப்பிட்டுக் கண்ணிலும் (ஒருதுளி) விட்டு வர 5 வகைக் காசங்களும் (கண்ரோகம்) தீரும்.

---

## 6. நயன ரோகம் 96க்கும் "அம்ருத கலை யெண்ணெய்"

நேத்திர நோய்தொண் ணூற் ருறுக்குந்தான்
நிகழ்த்துகிறே னம்ருதகலை யெண்ணெய் தன்னை
ஊத்துசிற்ரு மணக்கெண்ணெ யுழக்காவின்நெய்
யுழக்குநல்லெண் ணெயொரு நாழியோடே
சேத்திருநா ழிப்பசும்பா லொக்கவிட்டுச்
செங்கழுநீர் கோட்டமதி மதுரம் நெல்லி
யேத்தகொத்த மல்லிசிற்ரு முட்டிதான்றி
இலாமிச்சு செண்பகப்பூ விருவேலிதானே. (கச)

சீதாசெங் கழுநீர்பொன்னுங் காணிவேருஞ்
சிறுமுத்தக் காசிவையோர் திட்டங்கொண்டு
போதரைத்துக் கரைபதத்தில் வடித்திறக்கிப்
புழுகுசட்டஞ் சந்தனமும் பொடித்துக்கூட்டி
யாதரவாய் தலைமுழுகும் போதுதன்னி
லானபத்தியங் கரப்பானல் லாதவஸ்து
நீதயவாய்க் கூட்டிவரும் பொது கண்ணில்
நிலைக்காது நோய்களெல்லாம் நீங்கிப் போமே. (கரு)

(இ-ள்)

ஊற்றின சித்தாமணக்கெண்ணெய் 1 உழக்கு
பசுவின் நெய் 1 உழக்கு
எள்ளெண்ணெய் 1 நாழி
ஆவின்பால் 2 நாழி

| | | |
|---|---|---|
| செங்கழுநீர் | கோஷ்டம் | அதிமதுரம் |
| நெல்லிக்காய் | கொத்தமல்லி | சிற்றாமுட்டி |
| தானிக்காய் | இலாமிச்சய்வேர் | செண்பகப்பூ |
| வெட்டிவேர் | சீதாசெங்கழுநீர் வேர் | பொன்னாங்காணி வேர் |
| கோரைக்கிழங்கு | | |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ பலமெடுத்துப் பசுவின்பால் விட்டு நன்றாக அரைத்து எண்ணெயுடன் குழப்பி அடுப்பின் மீதேற்றிப் பதம் வரும்வரை எரித்துப்,

புனுகு சட்டம் 1 வராகனெடை
சந்தனத்தூள் ,,

எடுத்துக் கொதிக்கும்போது தைலத்தில் கொடுத்து இறக்கிக் கொள்ளவும்.

இதனால் தினந்தோறும் தலை முழுகிவர 96 கண்ணோய்களும் தீரும்.

பத்தியம்—கரப்பானுக்குக் காரணம் அல்லாத வஸ்துக்களைக் கூட்டவும்.

குறிப்பு :—

**கரப்பான் பதார்த்தங்களாவன**

சோளம், கம்பு, வரகு, காரரிசி, வாழைக்காய், பாகற்காய், கத்தரிக்காய், கெளுத்தி மீன் முதலியன.

## 7. நயன ரோகத்திற்கு "ஆமலகத் தைலம்"

தாகந்தீர் நெல்லிக்காய்ச் சாறு படியிரண்டு
தனிப்பசுவின் பாலும் படிநாலுந் தாக்கிப்
பாகமுடனெள்ளெண்ணெய் படியும் விட்டு
பலமொன்றேயதிமதுரம் பாங்காய்ச் சேர்த்து

வாகமிது தனைப் பதத்தில் வடித்து வாங்கி
மாமுகனைத் தியானித்து வரவே மூழ்கி
வேகமறும் விழிரோகம் பல்லசைவு தீரும்
விளம்பினோ மாமலகத் தைலமீதே. (கசு)

(இ-ள்)

| | |
|---|---|
| நெல்லிக்காய்ச் சாறு | 2 படி |
| பசுவின் பால் | 4 படி |
| நல்லெண்ணெய் | 1 படி |

அதிமதுரம் பலம் ஒன்று; இதை ஆவின் பால் விட்டரைத்துச் சாறுகலந்த எண்ணெயில் குழப்பி, அடுப்பின்மீதேற்றி எரித்துப் பதத்தில் வடித்து, தைல பாத்திரத்திற்குச் சந்தனம், புஷ்பம் சாற்றிக் கணபதியை தியானித்து, சுபதினத்தில் மூழ்கிப் பத்தியமிருந்துவர, உஷ்ண சம்பந்தமான விழிரோகங்கள், பல்லசைவு முதலியவை சில வாரங்களில் தீரும்.

குறிப்பு:—

நீண்ட நாளாக உள்ள குதிகால் பித்த வெடிப்புள்ள ஒரு ஸ்திரீக்கு முற்கூறிய தைலம் வடித்த கடுகை மேலே பூசி வந்ததில், வெடிப்புகள் மூடிவிட்டன. பிறகு 15 வருஷம் வரையில் இந்த வெடிப்பு உண்டாகவில்லை.

## 8. நயன வாய்வுக்குத் "தைலம்"

நெல்லி செம்பைப் பொற்கண்ணிச்சாறுடனேர்
பசும்பால் விளக்கெண்ணெய் நல்லெண்ணெய்
நல்ல நெய்யுஞ் சமங்கூட்டிதிற்சாறு
நாடும் பாதியிட்டுக் காய்ச்சி சீரகம்
மெல்லரைத் திட்டுப் பக்குவத்தி லெரி
மேல்வடித்து முழுகிடும்போது கேள்
வெல்லு நேத்திர வாயு விட்டோடியே
வெளிச்சமாகிடு மேற்குண மேவிதே. (கஎ)

7 OCT 1974
GOVT. OF MADRAS, MAD

(இ-ள்)

| | | |
|---|---|---|
| நெல்லிக்காய்ச்சாறு<br>பொன்னுங்காணிச்சாறு<br>கருஞ்செம்பைசாறு | } | இவைகள் வகைக்கு 1 படி |
| விளக்கெண்ணெய்<br>(ஆமணக்கு)<br>நல்லெண்ணெய் | } | வகைக்கு 2 படி |
| பசுவின் பால் | | 1 படி |

ஜீரகத்தைப் ( 10 பலம் எடுத்துப் ) பால் விட்டரைத்து, ஷைசாறு கூட்டிய எண்ணெயுடன் குழப்பி அடுப்பின்மேல் வைத்துப் பக்குவமாக எரித்து வடித்துத் தலைமுழுகிவர நேத்திரவாயு நீங்குவதோடு கண்களில் பிரகாசமும் உண்டாகும்.

---

# 9. நயன வியாதி காசமைந்துக்குந் தைலம்

## (சாறடைத் தைலம்)

திரிபுரைச்ச மூலங் கையாந்
    தகரை யமுக்குரா சீந்திவட்டுப்
பிரமி தூதுளை சதாவரி மூலம்
    வசுவாசி பேசொன்றுக்கும்
ஒருபலங்கூட்டி யிடியெண் படிநீர்
    கூடவிட்டு மொருபடிக்கிச்
சரிவத்தக் காய்ச்சிவடித் தெண்ணெயிரு
    படிவிட்டுத் தனில்மருந்தே. (கஅ)

மருந்தோமங் கிராம்பிந்து வெள்ளையுள்ளி
    கருஞ்சீர மாநற்சீரங்
திருகடுகற் கடசிங்கி கடுரோ
    கணியுந் திகழொன்றுக்குத்
தருமஞ்சு வராகனெடை யரைத்ததிற்
    கரைத்தெரி தன்பதத்தில்
வருவதைக்கா ணவடித்து நக்கிடவுங்
    காசமைந்தும் வாங்கிப்போமே. (கக)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| வெள்ளைச் சாரணை | சமூலம் | கையாந்தகரை |
| அமுக்குராக்கிழங்கு | சீந்திற்கொடி | பிரமியவழுக்கை |
| தூதுவேளை | தண்ணீர்விட்டான் கிழங்கு | வேங்கைமரப் பட்டை |

இவைகளை வகைக்கு 1 பலமெடுத்து இடித்து 8 படி ஜலம் விட்டு 1 படியாகக் கஷாயம் செய்து வைத்துக்கொண்டு, சுத்தமான எள்ளெண்ணெய் 2 படி கூடவிட்டு,

| | | |
|---|---|---|
| ஓமம் | கிராம்பு | இந்துப்பு |
| வெள்ளைப்பூண்டு | கருஞ்சீரகம் | நற்சீரகம் |
| சுக்கு | திப்பிலி | மிளகு |
| கற்கடச்ருங்கி | கடுகரோகிணி | |

இச்சரக்குகளை வகைக்கு 5 வராகனெடையாக நிறுத்தெடுத்து நன்ருக இடித்துப் பால் விட்டரைத்துக் கஷாயம் சேர்த்த எண்ணெயுடன் குழப்பி, பதத்தில் வடித்தெடுத்து வேளைக்கு ஒரு காசெடை வீதம் நக்கிட, கண் ரோகங்களான ஐந்துவித காசங்களும் தீரும்.

குறிப்பு :—

திரிபுரை—சாறடை.

---

## 10. நயன ரோகத்திற்குச் "சீதேவிச் செங்கழுநீர் தைலம்"

சீதேவி செங்கழு நீரிலை துவைத்த
சலங்குறுணி பசுவின்பாற் குறுணியோடே
யோதுநல் லெண்ணெயொரு நாழிதன்னி
லொக்கவிடு மேலமில வங்கஞ்சந்தம்
வதமிலா மிச்சுமிரு வேலிவேரு
மிடுங்கோட்ட மதுமதிரங் கடுகுரோணி
நாதநன் ஞரிவேர் சிறுநாகப்பூ
நாட்டுசமங் கொண்டரைத்து முழுகுவாயே. (உம்)

(இ-ள்)

| | |
|---|---|
| சீதா செங்கழுநீர்ச்சாறு 1 மரக்கால்<br>பசுவின் பால் 1 மரக்கால்<br>சுத்தமான நல்லெண்ணெய் 1 நாழி | இவைகளைச் சேர்த்து |

| | | |
|---|---|---|
| ஏலக்காய் | இலாமிச்சம்வேர் | அதிமதுரம் |
| கிராம்பு | வெட்டிவேர் | கடுகரோகிணி |
| சந்தனத்தூள் | கோஷ்டம் | நன்னாரிவேர் |
| சிறுநாகப்பூ | | |

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ பலம் எடுத்துப் பால் விட்டரைத்து எண்ணெயில் குழப்பிப் பதமாக எரித்து வைத்துக்கொள்ளவும். இதனால் தினந்தோறும் தலைமுழுகிவரப் பற்பல கண் ரோகங்கள் தீரும்.

குறிப்பு :—(1) சீதேவிச் செங்கழுநீர் என்பதை, செய்ச்சட்டி என்றும் சகதேவி என்றும் கூறுவர். (2) நாழி = 5 சேர்.

---

## 11. நயன ரோகத்திற்குக் "குமரித் தைலம்"

கத்தாழை மடலன் பதிலேகடுக்
காய்த் தூளிட் டிடித்து வைத்துச்
சத்தாயிறக்கிக் கொள் சீந்திற்றண்
டுங்கோவை முசுமுசுக்கை
கைத்தாந் தகரை யிலாமிச்சை
கமழுமிரு வேலியும் சமமாய்
வைத்தேயிடித் திளநீர் குறுணி
வார்த்துப் பிசைந் திருபடி நீரே. (உக)

விட்டு வடித்ததில் நாலுபடி
விடுவாய் பசுவின் பால் தனையும்
கிட்டும் எண்ணெ யிருபடியிற்
கிளந்தொன் றுக்கிப் பச்சிலையும்
வெட்டுச் சந்தம் மூன்று பல
மே நன்னாரித் தக்கோலங்
கட்டுங் கோரைக் கிழங்கு கடு
ரோகிணிசாதிக் காயாமே. (உஉ)

கண்டில் வெண்ணெய் காரகிலும்
கச்சோலம்திரி பலையேலம்
அண்டில வங்க மிலாமிச்சும்
மதுகங் கோட்ட மிருவேலி
தண்டா மரையின் வளையமுடன்
தருசெங் கழுநீ ருக்கிவைகள்
கொண்டோ ரொன்று கழஞ்சி யதாய்
கூட்டி யிளநீ ருகுத்திடுமே. (௨௩)

இட்டு நாலு நாள் மந்தாக்கி
னியிற் காய்ச்சி யஞ்சா நாள்த்
தொட்டு வடுத்துக் கற்பூரத்
தொடுகுங் குமப்பூ தூள் நுணுக்கி
விட்டு வகைக்கோர் வராகனெடை
மேலும் பொடிதூ விக்கலந்தே
எட்டு நாளு நெற் புடத்தி
லிதைவைத் தெடுக்க மிகநன்றே. (௨௪)

தலைக்கிட்டு முழுகும் போது
தள்ளிடு நோய்களைக்கேள்
தலைக்குத்துத் தலைச்சுழற்றல்
தலை நோய்கள் தன்னைத் தாக்கும்
கலைக்குங் கண் சுழற்றி மின்னுங்
கச்சோதம் போலுங்கண்டா
னுலைக்குமுட் கபால சன்னி
யொடு நீக்குங் குமரிதானே. (௨௫)

(இ-ள்)

சோற்றுக்கற்றாழை மடல் 50 எடுத்துக், கடுக்காய்த்தூள் சேர்த்து, சிறு சிறு துண்டுகளாக்கிக் கல்லுரலிலிட்டு நன்றாக இடித்து ஒரு பாத்திரத்தில் வைக்கச் சத்து இறங்கும்.

இந்தச் சத்து 4 படி,

| | |
|---|---|
| சீந்திற்கொடி | கோவை |
| முசுமுசுக்கை | கையாந்தகரை |
| இலாமிச்சம்வேர் | வெட்டிவேர் |

இவைகளை ஒன்று சேர்த்திடித்து அதில் 2 படி இளநீர் விட்டு ஊறவைத்து மறுநாள் பிசைந்து இறுத்த நீர் 2 படி

பசுவின் பால் 4 படி
நல்லெண்ணெய் 2 படி
பச்சிலை 3 பலம்
சந்தனச்சிராய் 3 பலம்

| | | |
|---|---|---|
| நன்னாரி | கோரைக்கிழங்கு | சாதிக்காய் |
| தக்கோலம் | கடுகரோகிணி | கண்டில்வெண்ணெய் |
| அகில்கட்டை | கச்சோலம் | கடுக்காய் |
| நெல்லிக்காய் | தான்றிக்காய் | ஏலம் |
| கிராம்பு | இலாமிச்சம்வேர் | அதிமதுரம் |
| கோஷ்டம் | வெட்டிவேர் | தாமரைவளையம் |
| செங்கழுநீர்க்கிழங்கு | | |

இவைகள் வகைக்கு 1 கழஞ்சு ($1\frac{1}{4}$ வராகனெடை) எடுத்து இளநீர் விட்டரைத்துச் சாறு எண்ணெய் கலவையில் சேர்த்துக் குழப்பிக்கொண்டு நான்கு நாள் மந்தாக்கினியாலெரித்து 5-வது நாள் பதத்தில் வடித்துப்

பச்சைக் கற்பூரம் 1 வராகனெடையும்
குங்குமப்பூ 1 வராகனெடையும்

எடுத்து நன்றாக நுணுக்கி எண்ணெயில் தூவிக்கலந்து 8 நாட்கள் தான்ய புடத்தில் வைத்தெடுக்கவும்.

இதனால் தீரும் வியாதிகள் :—மண்டைக்குத்து, தலைச் சுற்றல், தலைநோய்கள், கண்சுழற்றல், மின்மினியைப்போன்று கண்களிலடிக்கடி மின்னுதல், கபால சன்னி முதலிய பலவகை நோய்களுந் தீரும்.

குறிப்பு :—

இத்தைல பாகத்தில் கூறப்பட்டிருக்கும் 1. கண்டில் வெண்ணெய் என்பது மலையாள தேசத்தில் சாதாரணமாகக் கிடைக்கும். மற்றைய இடங்களில் கிடைத்தலரிது. 2. கச்சோலம்—இது கிச்சிலிக்கிழங்கின் பெயர். ஏலக்காயின் தோல் அல்ல. 3. தாமரைவளையம்—தாமரை இலைகள் குருத்தாக

இருக்கும்போது இலையின் இருபுறங்களும் சுருள் சுருளாக இருக்கும். முற்றியபின்பு இவை விரியும். இங்கு வேண்டியது குருத்தின் சுருளேயாகும்.

---

## 12. நயன ரோகத்திற்குக் "குமரித் தைலம்"

குமரியின் சாறொரு படியும்
கோவின்பாலு மிரண்டுபடி
தமருக்கா மொருபடியெண்ணெய்
தனிலேசாரித் திடுமருந்து
திமரச்செவ்வல் லிக்கொடியேலம்
சிறு நாகப்பூ நன்னாரி
விமலக்கடுக ரோகிணியகிலு
மிலாமிச்சம்வேர் சந்தனமே. (உசு)

கிரந்தி தகரஞ் சாதிக்காய்
கிராம்பு செங்கழுநீர்க்கிழங்கு
மரமஞ்சள் கஸ்தூரிசடா
மாஞ்சிநீலாஞ் சனம்கோட்டம்
திரிபலையும்கோ ரைக்கிழங்கு
சேரதிமதுரம் தக்கோலம்
மரு வெட்டிவேர் தாமரையின்
வளையம்பூலாங் கிழங்காமே. (உஎ)

பச்சைக்கர்ப்பூ ராதிவகைப்
படியேயரைவி ராகனெடை
இச்சித்திவைக ளெல்லாம் சேர்த்து
எண்ணெய் பதமாய் காய்ச்சிவடி
மெச்சித் தலைதான் மூழ்கிவர
மேவாச்சிரநோய் நேத்திரநோய்
கொச்சைப்படுத்தி க்குடிப்போக்கும்
குமரித்தைலக் குணந்தாமே. (உஅ)

(இ-ள்)

(குமரி—சோற்றுக்கற்றாழை)

| | | |
|---|---|---|
| குமரிச்சாறு | 1 படி | இவைகளைச் சேர்த்து |
| பசுவின்பால் | 2 படி | |
| நல்லெண்ணெய் | 1 படி | |

| | | |
|---|---|---|
| செவ்வல்லிக்கொடி | நன்னாரிவேர் | கடுகரோகிணி |
| ஏலக்காய் | அகில்கட்டை | இலாமிச்சம் வேர் |
| சிறுநாகப்பூ | சந்தணச்சிராய் | கிரந்திதகரம் |
| ஜாதிக்காய் | கிராம்பு | செங்கழுநீர்க் கிழங்கு |
| மரமஞ்சள் | கஸ்தூரி மஞ்சள் | சடாமாஞ்சில் |
| நீலாஞ்சனம் | கோஷ்டம் | கடுக்காய் |
| நெல்லிக்காய் | தான்றிக்காய் | கோரைக்கிழங்கு |
| அதிமதுரம் | தக்கோலம் | மரு |
| வெட்டிவேர் | தாமரைவளையம் | பூலாங்கிழங்கு |

இச்சரக்குகளை வகைக்கு 1 வராகனெடை எடுத்துப் பால் விட்டரைத்துச் சாறு கலந்த எண்ணெயில் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பக்குவமானபின் வடிக்கட்டி, அதில் பச்சைக் கர்ப்பூரம், குங்குமப்பூ, இவைகளை நுணிக்கி எண்ணெயில் துழாவிக் கலந்து வைத்துத் தலைமுழுகிவர, தீராத தலைநோய், நேத்திரநோய் இவைகள் குணமாகும்.

---

## 13. "குமரித் தைலம்"

கத்தாழை நீர் நாலுபடி
கழுவுமெண்ணெயொருபடியில்
நத்தாவின்பா லொருபடி நன்
னாரிவேர் கையாந்தகரை
சித்தரத்தை யிலவங்கம்
செவ்வல்லிக்கொடி கச்சூரம்
கத்தூரிமஞ்சள் கடுக்காய்ப்பூ
சாதிக்காயகிலாமே, (உக)

பாலைவேருஞ் சடாமாஞ்சி
பத்திரி நீலோத்பலக்கிழங்கு
மேலுஞ் செங்கழு நீர்க்கிழங்கு
மிருவேலியும்தா மரைவளையம்
கோலக்கடுக ரோகிணிசந்தம்
கோரைக்கிழங்கு தக்கோலம்
மேலும் பச்சைக் கற்பூரம்
வெள்ளிலோத்திரம் குங்குமமே. (௫௰)

ஆதிமதுரம் மரமஞ்ச
ளணிகத்தூரி யிவைவகைக்கி
வீதிவராக னெடையொன்ருய்
மீளப் பொடித்து எண்ணெயிலிட்டே
கோதில் பதத்தில் வடித்திறக்கிக்
கொண்டும் பச்சைக் கற்பூரம்
ஓதும் கத்தூ ரியுமிரண்டும்
உள்ளீட்டிடுவாய் பின்னாலே. (௫௧)

அமரர்க்கரிய சிவபெருமான்
அடி பூசனைசெய் தருள் பெற்ற
சமரத்தலையிலஞ்சாத
சரபோசேந்திரன் தயவாலே
குமரித்தைலமிது முழுக
நசியங் கொள்ள அஸ்திகெட்ட
திமிரக் கண்ணோய் சிரரோகம்
செவியில் வியாதி தீர்ந்திடுமே. (௫௨)

(இ-ள்)

சோற்றுக்கற்றாழைச்சாறு 4 படி
நன்ருகக் கழுவி உலர்த்தியபின் } 1 படி
ஆட்டி எடுத்த எள்ளெண்ணெய் }
பசுவின் பால் 1 படி

இவற்றை ஒன்றுசேர்த்து,

| | | |
|---|---|---|
| நன்னாரி | கையாந்தகரை | சிற்றரத்தை |
| இரும்பு | செவ்வல்லிக்கொடி | பூலாங்கிழங்கு |
| கஸ்தூரிமஞ்சள் | கடுக்காய்ப்பூ | ஜாதிக்காய் |
| அகிற்கட்டை | வெட்பாலை | சடாமாஞ்சில் |
| சாதிப்பத்திரி | நீலோத்பலக்கிழங்கு | செங்கழுநீர்க் கிழங்கு |

வெட்டிவேர் தாமரை இலைச்சுருள் கடுகுரோகிணி
சந்தணம் கோரைக் கிழங்கு தக்கோலம்
வெள்ளிலோத் அதிமதுரம் மரமஞ்சள்
திரப்பட்டை

இவைகளை வகைக்கு 1 வராகனெடை எடுத்து நன்றாகப் பொடிசெய்து வஸ்திரகாயம் செய்து சாறு கலந்த எண்ணெயில் குழப்பி அடுப்பேற்றி எரித்துப் பக்குவமாகியபின்,

கஸ்தூரி பச்சைக்கர்ப்பூரம் குங்குமப்பூ

இச்சரக்குகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து நன்றாக நுணுக்கித் தைலத்தில் சேர்த்துக்கொள்ளவும்.

தீரும் வியாதிகள்: தலைமுழுகி, நஸ்யமாக உபயோகிக்க, திமிரம் என்னும் கண் நோய், சிரரோகம், காதுநோய்கள் முதலியவை தீரும்.

---

## 14. நயன ரோகத்திற்குக் "குமரித் தைலம்"

குமரியின் சாறதுவுங் குருணிகொண்டு
கூறுகரி சாலைதண்ணீர் மிட்டான் சீந்தில்
கமலத்தின் வளையமிது வகையொன் றுக்குக்
காணுநா ணுழிச்சா றதுவுங் கூட்டி
அமலவதி மதுரமில் வங்கமேலம்
அகில் கோட்டங் திப்பிலிசா திக்காய்கிராம்பு
விமலசடா மாஞ்சில்சண் பகப்பூசந்த
மிருவேலி விலாமிச்சு வேருமாமே. (௬௯)

வாசமிகு புழுகுசட்டங் தேவதாரம்
வகையொன் றுக் கிருகழஞ்சாய் வைத்தரைத்து
நேசமுட னெண்ணெயொரு படியிற்கூட்டி
நேர்ப்பதத்தில் வடித்திட்டு முழுகும்போது
கூசழத்தி கண்ணெரிவும் தலைநோக்காடும்
கொள் பித்த முதலான தெல்லாந் தீரும்
ஈசனருள் பெற்றசர போகிராசனி
யம்புமுறை குமரியெனுந் தைலமீதே. (௭௦)

(இ-ள்)

சோற்றுக் கற்றாழைச்சாறு 1 மரக்கால்
கரிசாலைச்சாறு 4 படி
தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு 4 படி
சீந்தில்கொடி (தோல் நீக்கியது) ச்சாறு 4 படி
தாமரைவளையம் (தாமரை இலைச்சுருள்) சாறு 4 படி

| | | |
|---|---|---|
| அதிமதுரம் | கிராம்பு | ஏலக்காய் |
| அகில் | கோஷ்டம் | திப்பிலி |
| ஜாதிக்காய் | லவங்கப்பத்திரி | சடாமாஞ்சில் |
| சண்பகப்பூ | சந்தனத்தூள் | வெட்டிவேர் |
| இலாமிச்சம்வேர் | தேவதாரு | புழுகு சட்டம் |

இவைகளை 2 கழஞ்சு வீதமெடுத்துப் பசுவின்பால் விட்டரைத்து மையானபின் சுத்தமான எள்ளெண்ணெய் 1 படியில் குழப்பிச் சாறுகளையும் சேர்த்து, அடுப்பிலேற்றிப் பதமாக வடித்து இறக்கிக் கொள்ளவும். தினந்தோறும் இதனால் தலை முழுகிவர, கண்கூச்சம், அழற்சி, கண்ணெரிச்சல், தலைவலி, பித்தம் முதலியனவைகள் தீரும்.

---

## 15. நயன ரோகத்திற்குக் "கையாந்தகரை எண்ணெய்"

கையான் சாறு நாழி
காரெள்ளெண்ணெ யைய்யுழக்கு
மெய்யாயிரதி யதிமதூரம்
மேவுஞ்சந்த நன்னாரி
துய்ய வேல மிலவங்கந்
துலங்கு சாத்திர வேதியுடன்
பய்ய வோரொன் றிருகழஞ்சா
யுரைத்துப் பதத்தில் வடித்திடுமே. (௬௫)

வடித்தேலகையாக் தகரையெண்ணெய்
வளமாமிதனை த்தலை வார்க்க
முடியாக்காதில் வருநோய்கள்
மூடுங்கண்ணிற் காசமுதற்
வடிவாய்த்திரு மொழியுண்டாய்ச்
சுகமாங் கருத்திற் சிவன் கருணை
குடியாய்க் கொள்ளுஞ் சரபேந்திரக்
குரிசில் கொடுத்த முறைதானே. (௧௬)

(இ-ள்)

கையாந்தகரைச்சாறு 4 படி
சுத்தமான எள்ளெண்ணெய் 5 உழக்கு

| | | |
|---|---|---|
| அதிமதுரம் | சந்தனத்தூள் | நன்னாரிவேர் |
| ஏலக்காய் | கிராம்பு | சாத்திரவேதி |

இவைகள் வகைக்கு 2 கழஞ்சு விதமெடுத்து, அம்மியி லிட்டு நன்றாக அரைத்து எண்ணெயுடன் குழப்பி, அடுப்பி லேற்றி எரித்துப் பக்குவமாக இறக்கவும். இதனால் தலை முழுகிவரக் காதுநோய்கள், கண்களில் வரும் காசம் முதலிய நோய்களும் தீர்ந்து நல்ல பார்வையுண்டாகும்.

---

# 16. நயன ரோகத்திற்குப் "பிருங்காமலகத் தைலம்"

கையாந்தகரைச் சாறுபடி
கன்றாவின்பால் நாலுபடி
நையுநெல்லிச் சாறுபடி
நல்லெண்ணெயு மொருபடியாய்
ஐயமறுக்கு மதிமதுர
மதனிற்பத்து வராகனெடை
வெய்யச்சித்தா முட்டியெனில்
வேர்த்தோல்வராக னெடைமூன்றே. (௧௭)

மூணுவராக னெடைகோட்ட
மூட்டியரைத்து யதிற்கலந்து
தோணப்பதத்தி லிறக்கிச் சொல்
லும்பேர்பிருங் காமலகம்
பேணிவேழு தலை முழுகில்
பிணிகள் போகும் விதங்கேளீர்
கானச் செவிடு கண் புகைச்சல்
கழலும் பலநோய் கழிந்திடுமே. (௩அ)

(இ-ள்)

| | |
|---|---|
| கையாந்தகரைச்சாறு | 1 படி |
| கன்றையுடைய பசுவின்பால் | 4 படி |
| நெல்லிக்காய்ச்சாறு | 1 படி |
| சுத்தமான எள்ளெண்ணெய் | 1 படி |
| அதிமதுரம் | 10 வராகனெடை |
| சிற்ருமுட்டிவேரின் மேல் தோல் | 3 வராகனெடை |
| கோஷ்டம் | 3 வராகனெடை |

இச் சரக்குகளைப் பசுவின்பால்விட்டரைத்துச் சாறுடன் கலந்த எண்ணெயில் குழப்பி அடுப்பேற்றி எரித்துப் பதத்தில் வடித்துப் பாத்திரத்தில் வைத்துக்கொண்டு தலையில் தடவி வென்னீரில் ஸ்நானம் செய்யவும். ஏழு முழுக்கான பின், கனத்தசெவிடு உஷ்ணத்தினுல் உண்டான கண்புகைச்சல், இன்னும் உஷ்ணரோகங்கள் பலவுந்தீரும்.

---

## 17. பிருங்காமலகத் தைலம்

கரிசாலைச்சா ருேர்படியும்
கனிநெல்லிச்சா ருேர்படியும்
சரிநல்லெண்ணெ யொருபடியும்
தயிர்மேல்தண்ணீர் படிமூன்றில்
விரியும் கோட்ட மிலாமிச்சை
வெட்டிவேர்சந்தன மதிமதுரம்
நெரியும்கடுக ரோகிணியும்
நீலோத்பலம்கோ ரைக்கிழங்கே. (௩௯)

காணிச்சரக்குங் கற்ருழஞ்
சருகு மிவைகள் தயிர்நீரால்
பூணவரைத்து எண்ணெய்தனில்
போட்டுக்கரைத்தே பக்குவமாய்
ஊணிக்காய்ச்சி முழுகக்கா
துள்ளவலியுந் தலைகண்ணே
யாணும்பித்த கபம்வலிப்பு
மடிக்கும்பிருங்கா மலகமிதே. (௬௰)

(இ-ள்)

| | | | |
|---|---|---|---|
| கரிசலாங்கண்ணிச்சாறு | 1 படி | | |
| நெல்லிக்கனிச்சாறு | 1 படி | இவைகளை | |
| எள்ளெண்ணெய் | 1 படி | யொன்றுசேர்த்து | |
| தயிரின் தெளிவுநீர் | 3 படி | | |

| | | |
|---|---|---|
| கோஷ்டம் | இலாமிச்சம்வேர் | வெட்டிவேர் |
| அதிமதுரம் | கடுகரோகிணி | நீலோத்பலம் |
| கோரைக்கிழங்கு | கற்றாழைச்சரகு, | |

இவைகள் வகைக்கு ($\frac{1}{2}$ பலமெடுத்து) தயிரின் நீரினு லரைத்து எண்ணெய்தனிற் கலந்து பக்குவமாகக் காய்ச்சி வடித்து முழுகிவரக் காதுவலி, தலைநோய், கண்ணேய், பித்தம், கபம், வலிப்பு இவைதீரும்.

குறிப்பு:—

1. கரிசாலை என்பதுகையாந்தகரை. பொற்றலைக்கையாந் தகரை என்பது ஒருவகை. இது மஞ்சட்புஷ்பத்தையுடையது. பிருங்காமலக தைலத்திற்குப் பொற்றலைகூடாது. வெள்ளைப் புஷ்பத்தையுடைய கையாந்தகரையை உபயோகித்தல் வேண்டும்.

## 2. தயிரின் தெளிவு நீரை எடுக்கும் வகை

தயிரை ஒரு வெள்ளைத்துணியில் கட்டித் தொங்கவிடவும் அதனடியில் ஒரு பாத்திரத்தை வைத்து அதிலிருந்து வடியும் நீரை எடுத்துக்கொள்ளவும்,

# 18. நயன ரோகத்திற்குப் "பிருங்காமலகத் தைலம்"

நெல்லிக்காய்நீர் பசுவின்பால்
நேருங்கையாந் தகரைச்சாறு
சொல்லோர்வகைக்குச் சேர்நான்காய்
தோய்நல்லெண்ணெய் நாற்சேராந்
தொல்லைநெல்லி முள்ளிகடு
தூயதான்றி வெட்டிவேரும்
வெல்லுந்தேவ தாரமுடற்
விலாமிச்சின்வேர் பணைவேரே. (௪௧)

வேராங்கோரை செம்புளிச்சைக்
காட்டந்தென்னை வேரிவைகள்
சேராமறையெண் படிதண்ணீர்
திரளோர்படியாய்க் காய்ச்சியது
மீராதெண்ணெய் தனிற் கூட்டி
யிடுமேலிருசீ ரகங் கோட்டம்
பேரா மதுரஞ் சடாமாஞ்சில்
பெருசாதிக்காய் கிராம்பாமே. (௪௨)

சுக்கு மிளகு திப்பிலியும்
தூக்கு வராகனெடை நாலா
யொக்க வரைத்துக் கரைபதத்தி
னுடனே வடித்து முழுகும் போ
தெக்குவாத கரப்பான் முத
லெல்லாந்தீரு நேத்திரநோய்
கக்கிப் போகும் முழுகு தினம் கடும்
பத்திய பிருங்கா மலகத்திற்கே. (௪௩)

(இ-ள்)

| | |
|---|---|
| நெல்லிக்காய்ச்சாறு | 4 சேர் |
| பசுவின்பால் | 4 சேர் |
| கரிசாலங்கண்ணிச்சாறு | 4 சேர் |
| சுத்தமான நல்லெண்ணெய் | 4 சேர் |

இவைகளுடன்

| | | |
|---|---|---|
| நெல்லிமுள்ளி | கடுக்காய் | தான்றிக்காய் |
| வெட்டிவேர் | தேவதாரம் | இலாமிச்சைவேர் |
| பனைவேர் | கோரைக்கிழங்கு | செம்புளிச்சை |
| தென்னைவேர் | | |

இக்கடைச் சரக்குகளை வகைக்கு 1 பலமெடுத்து இடித்து 8 படி ஜலம் விட்டு 1 படியாகச் சுண்டக்காய்ச்சி இறுத்த கஷாயம் 4 சேருடன்,

| | | |
|---|---|---|
| சீரகம் | கருஞ்சீரகம் | கோஷ்டம் |
| அதிமதுரம் | சடாமாஞ்சில் | ஜாதிக்காய் |
| கிராம்பு | சுக்கு | மிளகு |
| திப்பிலி. | | |

இவைகளை வகைக்கு 4 வராகனெடை எடுத்து நன்றாக அரைத்துச் சாறுகலந்த எண்ணெயில் குழப்பி, அடுப்பின் மேல் வைத்துப் பதமாக இறக்கி வடித்துக்கொண்டு, தினந்தோறும் தலையில் வைத்து மூழ்கிவர, வாதக்கரப்பான், நேத்திர நோய் இவைகள் தீரும். மூழ்கும் தினத்தில் புளி நீக்கிப் பத்தியமாக இருத்தல் அவசியம்.

---

## 19. நயன ரோகத்திற்குப் "பிருங்காமலகத் தைலம்"

கையந்தகரை நெல்லிக்காய்க்
கானன்னாரி வாசனைப்புல்
எய்தும் பொன்னாங் காணியின் சா
றீது வகைக்கோர் படியாகும்
செய்யக் கோட்ட மதி மதுரம்
சிற்றரத்தை யொருபலமாய்
துய்யசந்த மிலாமிச்சும்
துடிப்பாய் சேரொன் றதுவாங்கே. (சுச)

வாங்கும் கடுக ரோகிணிதான்
மட்டாயிரண்டு வராகனெடை
எங்காதிவைகள் தூளாக்கி
எண்ணெய் தனிலே முன்சாறும்
தேங்கவிட்டுப் பாகமதாய்
திரளும்பொழுது சூரணம் சேர்
பாங்காய் முழுகி நஸ்யமிட
பதங்கண்டிறக்கி வடிப்பாயே. (சரு)

இறக்கித் தைலந் தலைமுழுகி
இடுமே நசிய மிதுநீக்குஞ்
சிரத்தின் வியாதி கண்ரோகந்
தீராப் பித்த காச முதல்
ஒரக்கு நீலக் காசங்க
ளோடுங் காதி னோய்களெல்லாம்
பிரிக்கும்சரபோ சேந்திரனார்
பிறக்கும் பிருங்கா மலகமிதே. (சசு)

(இ-ள்)

| | |
|---|---|
| கையாந்தகரைச்சாறு | ஒருபடி |
| நெல்லிக்காய்ச்சாறு | ,, |
| நன்னாரிக்கிழங்குச்சாறு | ,, |
| வாசனைப்புல்லின்சாறு | ,, |
| பொன்னாங்காணிச்சாறு | ,, |

இவைகளை ஒன்றுகலந்து, அதனுடன்,

| | |
|---|---|
| கோஷ்டம் | 1 பலம் |
| அதிமதுரம் | 1 பலம் |
| சிற்றரத்தை | 1 பலம் |
| சந்தனத்தூள் | 1 சேர் |
| இலாமிச்சம்வேர் | 1 சேர் |
| கடுகரோகிணி | 2 வராகனெடை |

இச்சரக்குகளை இடித்து வஸ்திரகாயம் செய்து, சாறுகளுடன் கூடச்சேர்த்துச் சுத்தமான நல்லெண்ணெய் 1 படியும் சேர்த்துக்கலந்து, அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில்

வடித்து இறக்கவும். இத்தைலத்தைத் தலையில் தேய்த்துக் கொண்டும், மூக்கில் நஸ்யமாக உபயோகித்தும் வந்தால் தலை நோய்கள், கண்ரோகம், தீராதபித்தகாசம் முதல் நீலகாசம் வரையுள்ள நோய்களும் காதுநோய்களும் தீரும்.

குறிப்பு:—

## பித்தகாசம்முதல் நீலகாசம்வரை விபரம்

காசம் என்பது மேகநீரென்றுபொருள்படும். அத்தகைய காசம், கண்களில் 8 வகைகளாக உண்டாகின்றன.

### செய்யுள்

கண்களில் காசமெல்லாம் கருத்துடனுரைக்கக் கேளாம்
பண்பெருவாதகாசம் பயந்தரு பித்தகாசம்
எண் பெரு நீலகாசமிசைந்திடு பாலகாசம்
நண் பகலிருளுமன்ப நயந்தமந்தாரகாசம். (1)

மந்தமேதந்து நாளும் வந்த சிலேட்டுமத்தின்காசம்
அந்தமாம் வலியும் காசம் அமர்ந்திடுமந்திரகாசம்
சிந்துர நுதலினளே செய்திகேள் காசமெட்டும்
வந்த பேதமையாகில் மறைந்திடுங்கண்ணுந்தானே. (2)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| வாதகாசம் | பித்தகாசம் | நீலகாசம் |
| பாலகாசம் | மந்தாரகாசம் | கபகாசம் |
| வலியும்காசம் | அந்திரகாசம் | |

என 8 வகைப்படும். இவற்றுள் வலியும் காசமெனப் படுவதைக் குமரி காசம் என்றும் நயன நூல்கள் கூறுகின்றன.

பித்தகாசம் (Cataract) ஒன்றில், நீர் நன்கு பழுத்தபின் சஸ்திரப் பிரயோகம் செய்ய (Operation) கண் தெளிந்து பார்வையுண்டாகும். பக்குவ காலத்தில் செய்தால் கண்ணாடியும் வேண்டியதில்லை. பார்வையும் குன்றாது.

காச வகையில் வரும் பித்த
காசம் தீர்க்கும் வகை கேளீர்
ஆதி தன்னிலெண்ணெய் தன்னல்
அவிழ்த மதனற்றுன் பலிக்கும்
பாதி சென்றுற் பலியாது
பலியாப் பலிக்கும் சஸ்திரத்தால்
நீதியுடைய பண்டிதர்க்கே
நிற்கும் நில்லா மூடர்க்கே. (க)

ஆகவே, பித்தகாசத்திற்கு ஆரம்பத்தில் உபயோகப்படுகிற பலவித தைலங்களில் இஃது ஒன்றுகும்.

---

## 20. பிருங்காமலகத் தைலம் (வேறு)

கரிப்பான் சாறு நாலுபடி
கபிலைப் பாலு மிரண்டுபடி
எரிப்பா யெண்ணெ யொருபடியில்
யிதமாய்ச் சேர்த்து மரமஞ்சள்
திரமஞ்சிட்டிச் சித்தா முட்டி
மூலந்தனைத்தா மரைக் கிழங்குந்
தரி செங்கோஷ்டந் தாமரைப்பூ
சந்தம் தாம்பூ லிக்கொடியே. (சஎ)

வத்த மருந்தின் வகையொன்றுக்
கிடுவதொன்றும் பலமிட்டே
மூத்த சூரணமா யிடித்து
முன்னெண்ணெயிலே தூவிலெகுப்
பார்த்து பாகம் செய்வடித்து
பாங்காந்தைல முழுகிவர
சேர்த்துத் துரத்தும் கண்ணேயை
சோராதாம் முக ரோகமுமே. (சஅ)

(இ-ள்)

| | |
|---|---|
| கரிசலாங்கண்ணிச்சாறு | 4 படி |
| கருப்பும் வெளுப்பும் கலந்த நிறமுள்ள பசுவின்பால் | 2 படி |
| நல்லெண்ணெய் | 1 படி |

இவை எல்லாவற்றையும் ஒன்று கூட்டி

மரமஞ்சள் மஞ்சிட்டிவேர் தாமரைக்கிழக்கு
செங்கோட்டம் தாமரையிதழ் சந்தனம்
வெற்றிலைக்கொடி

இவைகள் வகைக்கு 1 பலமிட்டுச் சூரணமாக்கி வஸ்திர காயம் செய்து, சாறுகூட்டிய எண்ணெயில் குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பாகமாக வடித்துக்கொள்ளவும். இதனால் தினந்தோறும் தலைமுழுகிவரக் கண்நோய்களும், முகரோகங் களும் தீரும்.

---

## 21. பிருங்காமலகத் தைலம் (வேறு)

கரிசாலைச்சா றொருபடியும்
காய் நெல்லிச்சா றொருபடியும்
பரிபொற்கண்ணிச் சாறுபடி
யொன்றே பசும்பா லிருபடியுஞ்
சொரிநல் லெண்ணெ யொருபடியிற்
றேயும் பலமொன் றதிமதுரம்
தரிகந் தங்கடு ரோகணியும்
தான்றிக் கடுக்காய் நெல்லிமுள்ளே. (சக)

இலாமிச்சம்வேர் சித்தரத்தை
யீந்தோர் வகைக்குக் காற்பலமாய்
துளாவிக் கைவள மாயெரித்துத்
தொவே தைலஞ் சிரநோய்கள்
நிலாதப் பாற்போம் நேத்திர நோய்
நீக்கும் மிருது பாகத்திற்
சலாப நசியங் கரபாகந்
தலைக்காய்ச்சிக்கெனச் சாப்பிடவே. (ருஎ)

(இ-ள்)

| | |
|---|---|
| கரிசாலங்கண்ணிச்சாறு | 1 படி |
| நெல்லிக்காய்ச்சாறு | 1 படி |
| பொன்னுங்கண்ணிச்சாறு | 1 படி |
| பசுவின்பால் | 1 ,, |
| சுத்தமான எள்ளெண்ணெய் | 1 படி |

இவைகள் யாவற்றையுமொன்று கலந்து

அதிமதுரம் 1 பலமும்

| | | |
|---|---|---|
| சந்தனம் | கடுகரோகிணி | தான்றிக்காய் |
| கடுக்காய் | நெல்லிமுள்ளி | இலாமிச்சவேர் |
| சித்தரத்தை | | |

இவைகள்வகைக்கு ¼ பலமுமெடுத்து நன்கு இடித்து வஸ்திரகாயம் செய்து, எண்ணெயுடனே குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் வடித்து, முழுகிவரத் தலைநோய்களும் கண்நோய்களுந் தீரும்.

இத்தைலத்தையே ம்ருதுபாகத்தில் வடித்து நஸ்யமாக (மூக்கில்போட) உபயோகப்படுத்தலாம்.

---

## 22. நேத்திரவாயுவுக்குப் "பிருங்காமலகத் தைலம்"

ஆமணக்கெண்ணெ யரைப்படியு
மந்தளவுக்கா நல்லெண்ணெய்
தாமிக்கையாந் தகரையொடு
தலையாடாதோ டைச்சாறு
மாமிவைக்கோர் படியாகு
மாமலகச்சா றிருபடியும்
நேமித்தெண்ணெய் தனிற்கலந்தே
நினைவாய்ப் பதத்தில் வடிந்திடுமே. (௩௧)

எடுத்தே நாள்மூன் றினுக்கொருக்கா
லெண்ணெய் தேய்த்து முழுகிவர
கடுத்துப் புகைச்சல் கண்தண்ணீர்
காண்டல் புருவம் குத்தலிமை
தடித்துச்சிவக்கும் கண்ணோய்கள்
தன்னை நீக்கிச் சந்திரனொளி
கொடுத்துச் செய்யுங் கண்டுலங்கும்
கொற்ற பிருங்கா மலகமிதே. (ருஉ)

(இ-ள்)

| | |
|---|---|
| சிற்றாமணக்கெண்ணெய் | ½ படி |
| சுத்தமான எள்ளெண்ணெய் | ½ படி |
| கையாந்தகரைச் சாறு | 1 படி |
| ஆடாதோடையிலைச்சாறு | 1 படி |
| நெல்லிக்காய்ச்சாறு | 2 படி |

இவைகளை ஒன்றுகலந்து அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதமாக யிறக்கவும். இத்தைலத்தை, மூன்று நாளைக்கொரு தடவை தலையில் தேய்த்து முழுகிவரக், கண்புகைச்சல், கண்ணீர்ப்பாய்ச்சல், புருவக்குத்து, இமைக்குத்து, கண்தடிப்பு சிவப்பு, கண்ணோய்கள், முதலானவை நீங்கிக் கண்களும் சந்திரனைப்போல் பிரகாசிக்கும்.

---

## 23. நயன ரோகத்திற்குப் "பிருங்காமலகத் தைலம்"

கையான்சாறு மொருகுறுணி
கனிநெல்லிச்சா றொரு குறுணி
மெய்யாவின் பால் நானாழி
மேனல்லெண்ணெய் நானாழி
கொய்யாக்கூட்டி யதிமதுரங்
கோட்டஞ்செண்பகப் பூவேலஞ்
செய்யா விலாமிச் சிருவேலி
சிறுநாகப்பூப் பச்சிலையே. (ருங)

வளர்கச்சோல மிலவங்கம்
 மஞ்சிட்டிவேர் சந்தனமு
மளவோரொன்று நாற்கழஞ்சா
 யரைத்துக்கலந்து பதத்தில்வடித்
துளவாய் முழுக வாதபித்த
 மூளைசேத்துமகா சங்களுடன்
விளைவெள்ளெழுத்துப் புகைந்தெரித்தல்
 விடுக்கும் பிருங்கா மலகமிதே. (௫௪)

(இ-ள்)

| | |
|---|---|
| கையாந்தகரைச்சாறு | 1 மரக்கால் |
| நெல்லிக்காய்ச்சாறு | 1 மரக்கால் |
| பசுவின்பால் | 2 படி |
| சுத்தமான எள்ளெண்ணெய் 2 படி | |

இவைகளை ஒன்றுகலந்து, இதனுடன்

| | | |
|---|---|---|
| அதிமதுரம் | கோஷ்டம் | சண்பகப்பூ |
| ஏலக்காய் | இலாமிச்சம்வேர் | வெட்டிவேர் |
| சிறுநாகப்பூ | பச்சிலை | பூலாங்கிழங்கு |
| கிராம்பு | மஞ்சிட்டிவேர் | சந்தனத்தூள் |

இவைகள் வகைக்கு 4 கழஞ்சு வீதமெடுத்துப் பால் விட்டரைத்து, எண்ணெயில் குழப்பிப் பக்குவமாக எரித்து வடிக்கவும். இதனால் தலைமுழுக, வாத, பித்த, கபகாசங்களுடன், வெள்ளெழுத்து, புகைச்சல், எரிச்சல் முதலிய கண்ணோய்களும் நீங்கும்.

---

## 24. நயன ரோகத்திற்குப் "பிருங்காமலகத் தைலம்"

காயுநெல்லி யின்சாறுங் கரிப்பான்சாறுங்
 கபிலைப்பால் நல்லெண்ணெய் வகைக்கோர் நாழி
தோயுமதி மதுரமொரு பலமுங் கொண்டு
 துவளவரைத் திடுகலந்து துளாவிக் காய்ச்சிப்
பாயுமெழு காம்பதத்தில் வடித்திறக்கிப்
 பாங்காகத் தலைமுழுகி சிகைக்காயிட்டு
சாயும்நேத் திரநோய் சகலமுந்தான்
 றள்ளிடும்பிருங் காமலகத் தைலந்தானே. (௫௫)

(இ-ள்)

| | |
|---|---|
| நெல்லிக்காய்ச்சாறு | 1 நாழி |
| கரிசாலங்கண்ணிச்சாறு | 1 நாழி |
| கபிலைப்பசுவின்பால் | 1 நாழி |
| நல்லெண்ணெய் | 1 நாழி |

இவற்றுடன் அதிமதுரம் 1 பலமெடுத்துப் பால் விட்டரைத்துச் சாறு கலந்த எண்ணெயில் குழப்பிப் பதத்தில், காய்ச்சி வடிக்கவும். தலையில் தேய்த்து ஸ்நானம் செய்து சிகைக்காயினால் தேய்த்துக் குளித்துவரக் கண்ணோய்கள் பலவுந் தீரும்.

குறிப்பு :—கபிலை என்பது கறுப்பும் சிவப்புங்கலந்த பசு.

---

## 25. நயனரோகத்திற்குப் "பிருங்காமலகத் தைலம்"

கையாந்தகரை நெல்லிக்காய்
சீந்திற்றண்டுங் கற்றாழை
பெய்து வகைக்கோர் குறுணிச்சா
றிட்டே பசுவின் பால் குறுணி
கைநெல்லிக்காய் குறுணியுடன்
காட்டு மதுரஞ் செண்பகப்பூ
துய்யகோட்டங் கண்டில் வெண்ணெய்
துடிக்கச் சோலம் பச்சிலையே, (௫௬)

பூதவரிசி தக்கோலப்
பொடிசந் தனமுந் தக்காசு
சீதவிலாமிச் சிருவேலி
சிறுநாகப்பூ நன்னாரி
ஓதுந்தாமரை வளையமுட
னெவ்வோர் வகைக்கோர் பலமாகப்
போத வரைத்துக் கலபதத்திற்
பொன்போல் வடித்துத் தலைமுழுகே. (௫௭)

தலையாம் பிருங்கா மலகமிது
தன்னை முழுகக் கண்ணேயும்
நிலையாப் புகைச்சல் காசமுடன்
நிகழ்தோ ஷங்கள் கண்ணில் வரும்
பலவிக் கினங்க ளிவையெல்லாம்
பறந்து போகுஞ் சிவனருளால்
நலமே பிறக்குஞ் சரபேந்திரன்
தயவா யுரைத்த தைலமிதே. (ரு அ)

(இ-ள்)

| | |
|---|---|
| கையாந்தகரைச்சாறு | நெல்லிக்காய்ச்சாறு |
| சீந்தில்கொடிச்சாறு | சோற்றுக்கற்றாழைச்சாறு |

இவைகள் வகைக்கு 1 மரக்கால்

| | |
|---|---|
| பசுவின் பால் | 1 மரக்கால் |
| எள்ளெண்ணெய் | 1 மரக்கால் |

இதனுடன்,

| | | |
|---|---|---|
| அதிமதுரம் | சண்பகப்பூ | கோஷ்டம் |
| கண்டில்வெண்ணெய் | பச்சிலை | கார்போகரிசி |
| தக்கோலம் | சந்தனத்தூள் | கோரைக்கிழங்கு |
| இலாமிச்சைவேர் | வெட்டிவேர் | சிறுநாகப்பூ |
| நன்னாரி | தாமரைவளையம் | |

இவைகள் வகைக்கு 1 பலமெடுத்துப் பால் விட்டரைத்துச் சாறுகலந்த எண்ணெயுடன் கலந்து, பதத்திலெரித்து வடிக்கவும். இதனால் தலைமுழுக, கண்ணேய், புகைச்சல், காசம், கண்ணில்வரும் தோஷங்கள் பலவுந் தீரும்.

குறிப்பு:—கண்டில் வெண்ணெய் என்பது மலையாள தேசத்திலகப்படும் ஒரு கடைச்சரக்கு.

---

## 26. நயனவியாதிக்கு எண்ணெய்

எள்ளின் எண்ணெயுரு கையாந்தகரைச்
சாறுரி கூட்டியிதிலும் மஞ்சட்
டள்ளடு தோற்சீ வெலுமிச்சம் பழம்
போலள வாந்தூட் டாணுமிட்டு

விள்ளுபுடஞ் சூரியனில் மெழுகு
பதத்தினிற் காய்ச்சி மேல் வடித்துக்
கொள்ளுதலே முழுகுவிழி வாயுவுடன்
சிரநோவுங் குணமாந்தானே. (ருக)

(இ-ள்)

எள்ளெண்ணெய் (சுத்தமானது) $\frac{1}{4}$ படி
கையாந்தகரைச்சாறு $\frac{1}{4}$ படி

இவ்விரண்டையும் ஒன்றாய்ச் சேர்த்து அதனுடன், நன்கு வஸ்திரகாயஞ் செய்த மஞ்சள் பொடியை ஒரு எலுமிச்சம்பழ அளவு அதிலிட்டு 5 அல்லது 6 நாள் சூரிய புடத்தில் வைத்து, பின்பு அடுப்பிலேற்றி மெழுகு பதத்தில் வடித்துக்கொண்டு ஒரு வாரம் சென்றபின் தலைமுழுகிவர நேத்திரவாயுவுடன் சிரநோயும் குணமாகும். ஸ்நானம் செய்த தினம் புளி நீக்கவும்.

---

## 27. நேத்திர வியாதிக்கு "நிர்குண்டித் தைலம்"

நொச்சிச்சா றிருபடிவெள் ளாட்டின்பாலும்
நோக்கெண்ணெ யிரண்டுபடி யொக்கவிட்டு
அச்சேலங் காரகிலுங் கோட்டந்திப்பிலி
யதிமதுரஞ் சதகுப்பை வசம்பரத்தை
மெச்சிவிளங் கமிவைநாற் கழஞ்சியாகு
மீதரைத்தெண் ணெய்வடிநிர் குண்டியென்ப
ருச்சிசெவி நாசிதனில் வார்க்கவெண்ப
துளவாதம் காசபில்லங் கண்ணோய்போமே. (சுல)

(இ-ள்)

நிர் குண்டி என்பது கருநொச்சில்

| | |
|---|---|
| நொச்சிச்சாறு | 2 படி |
| வெள்ளாட்டுப்பால் | 2 படி |
| நல்லெண்ணெய் | 2 படி |

இவைகளைக் கலந்து,

| | | |
|---|---|---|
| அகில்கட்டை | கோட்டம் | திப்பிலி |
| அதிமதுரம் | சதகுப்பை | வசம்பு |
| சிற்றரத்தை | வாயுவிடங்கம் | ஏலக்காய் |

இவைகள் வகைக்கு 4 கழஞ்சு வீதமெடுத்துப் பால் விட்டரைத்து எண்ணெயில் குழப்பிப் பதத்திலிறக்கவும். தலை, காது, மூக்கு இவைகளில் நசியம்பண்ண வாதரோகங்கள் 80ம், காசங்கள், பில்லங்கள் என்கிற கண்ணோய்களும் போகும்.

(1 கழஞ்சு—$1\frac{1}{4}$ வராகனெடை)

---

# 28. நயனரோகத்திற்கு "நிர்குண்டித் தைலம்"

நொச்சிச்சா றிருபடிநல் லெண்ணெய் நாழி
நுரைப்பால்மூன் றுழியுட னெக்க விட்டு
மிச்சை மஞ்சள் மரமஞ்சள் மதுரம் கோஷ்டம்
இந்துப்புத் திரிகடுசெங் கழுநீரேழு
மெச்சிவையொன் றுக்குப்ப லங்காற் கூட்டி
மேற்பொடித் தெண்ணெயிலே கலந்துகொண்டு
வச்செரிசிக் கெனபாகநிர் குண்டியெண்ணெய்
வடிநசியங் கண்ணோய்பீ னிசம்வாராதே. (கூக)

(இ-ள்)

| | |
|---|---|
| நொச்சிச்சாறு | 2 படி |
| நல்லெண்ணெய் | 1 படி |
| நுரையுடன் கூடிய பசுவின்பால் | 3 படி |

இவற்றை ஒன்று கலந்து,

| | | |
|---|---|---|
| மஞ்சள் | மரமஞ்சள் | அதிமதுரம் |
| கோஷ்டம் | சுக்கு | திப்பிலி |
| மிளகு | இந்துப்பு | செங்கழுநீர்க்கிழங்கு |

இவைகளை வகையொன்றுக்குக் கால் பலமெடுத்துப் பால் விட்டரைத்து, எண்ணெயில் குழப்பி அடுப்பின் மீதேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும். இதனல் நஸ்யம் செய்யக் கண்ணேய், பீனிஸம் முதலிய ரோகங்கள் தீரும்.

---

## 29. நயனரோகத்திற்கு "மஹா நிர்குண்டித் தைலம்"

நொச்சி கரிசாலை யிருகுறுணிச் சாறுநுரைப்
பாலும் படியஞ்சோ டெண்ணெயஞ்சில்
வச்சூசிமல்லி மிளகரணை வாழைமட்டை
மருள்வேர் எருக்கம் பழுப்புச்சாறும்
குச்சிமுருங் கிலைதுளசி தழுதாழைவீழும்
கொள்வெண்பூண் டிலையிஞ்சி தென்னம்பாளை
மெச்சிலவங் கப்பத்திரி தும்பராஷ்டம்
மிதிபாக லிலைபணையின் மட்டைச்சாறே. (சுஉ)

பசுமஞ்ச ளிதுவகையொன் றுக்கு நாழி
பாகமுடன் கலந்துசெங்க ழுநீர்கோட்டம்
வசம்பரத்தை யதிமதுரம் தேவதாரம்
வாய்விடங்கம் திரிகடுகு பெருங்காயங்கள்
இசைகிரந்தி தகரமுடன் கடுகிளேடும்
இவைகளொன்று பலமரையாய்ச் சூரணித்து
வசமான தைலத்திற் கலந்தஞ்சாநாள்
வடிபதத்திற் புழுகு சட்டம் பலங்காலாமே. (சுந)

சிறுக வெட்டித் தைலத்திற் போட்டுப்பின்பு
சேருந்தா னியபுடத்தில் வைத்தெடுத்து
நெரியுமஹா நிர்குண்டித் தைலந்தன்னை
நேமமுடன் தலைமுழுக நசியஞ்செய்ய
குறுகியகண் ணேயகலும் பீனிசங்கள்
கூட்டோடும் குடிப்போகும் சகல வாய்வு
முறிந்தோடும் சிவகிருபை தன்னுற்றஞ்சை
முடிமன்னர் சரபேந்திரன் மொழிதப்பாதே. (சுச)

(இ-ள்)

| | |
|---|---|
| கருநொச்சிச்சாறு | 2 மரக்கால் |
| கரிசலாங்கண்ணிச்சாறு | 2 மரக்கால் |
| நுரையுடன் கூடிய ஆவின்பால் | 5 படி |
| சுத்தமான எள்ளெண்ணெய் | 5 படி |

| | | |
|---|---|---|
| ஊசிமல்லிகை | மிளகரணை | வாழைமட்டை |
| மருள்வேர் | எருக்கம்பழுப்பு | முருங்கையிலை |
| துளசி | தாழைவிழுது | வெள்ளைப்பூண்டின் இலை |
| இஞ்சி | தென்னம்பாளை | லவங்கப்பத்திரிக் கஷாயம் |
| பேராத்தைக் கஷாயம் | மிதிபாகலிலை | பனைமட்டை |
| பசுமஞ்சள் | | |

இவைகளின் சாறு தனித்தனியே 1 நாழி விட்டுச் சாறு கூட்டிய எண்ணெயுடன் கலந்து,

| | | |
|---|---|---|
| செங்கழுநீர்க் கிழங்கு | கோஷ்டம் | வசம்பு |
| சித்தரத்தை | அதிமதுரம் | தேவதாரு |
| வாய்விடங்கம் | சுக்கு | மிளகு |
| திப்பிலி | பெருங்காயம் | கிரந்திதகரம் |
| கடுகு | | |

இவைகளை வகைக்கு $\frac{1}{2}$ பலமெடுத்துப் பால் விட்டரைத்துச் சாறு கலந்த எண்ணெயில் குழப்பி, அடுப்பின் மேலேற்றி 5 நாள் வரை எரித்துப் பக்குவத்திலிறக்கவும். இதனுடன் $\frac{1}{4}$ பலம் புனுகு சட்டத்தைச் சிறு சிறு துண்டுகளாக்கித் தைலத்தில் போட்டுத் தான்ய புடமாக வைக்கவும்.

இதற்கு "மஹாநிர்குண்டித் தைலம்" எனப் பெயர். இதைத் தினந்தோறும் சிறிதளவு சிரஸில் வைத்து ஸ்நானம் செய்து நஸ்யமும் செய்துவர, கண்நோய்களும், பீனிசங்களும், சகல வாயுக்களும் தீரும்.

குறிப்பு:—

1. தும்பராஷ்டம்—பேராரத்தை.

2. நேமமுடன்—நியமம் என்பது இங்கு பத்தியத்திற்குப் பெயராகும். கொள்ளவேண்டிய பத்தியமோ வெனில் பொது வாக எல்லா தைல ஸ்நானங்களுக்கும் (எவ்வகைத் தைலமாயி னும்) வைத்திய நூற்களில் கண்டுள்ள செய்யுளை யடியிற் காண்க.

"புலர்த்திய பின்பருந்து போஜனந்தனிற் புளிப்பு
சலத்துரு ததிபால் பாகல் சாகம் மீனிறைச்சி யச்சம்
நிலத்தெழு பிரும்மபத்திரி நித்திரை மடவாரின்னும்
நலத்துறு வகைநீக்கிப்பின் னுளும்பத் தியத்துநில்லே"

இச்செய்யுளில் புளிப்பு என்பது புளி என்ற பதார்த்தம் மாத்திரமன்று. அறுசுவையில் ஒன்ருகிய புளிப்பையே நீக்க வும்.

சாகம் என்பது கீரை வகைகள் எனப் பொருள் படினும் அச்சம் எனும் முறிவுபதார்த்தமாகிய அகத்திக்கீரையை தனிப் படக் கூறியிருப்பதைக் காண்க. சாகம் என்று ஆட்டிற்கும் பெயரானதால், ஆட்டுமாம்ஸத்தையும் விலக்கிவிடவும்.

---

## 30. நயன வியாதிக்குத் தைலம்

நொச்சிலிலை நீர்குறுணிப் பசுவின்பா
    லுங் குறுணி நுண்ணெள் ளெண்ணெய்
நச்ச வொருகுறுணி தான்கூட
    விட்டு மருந்து கேழ் நன்னரிவேர்
நச்சீரகந்துடி கோட்டம் வாயு
    விளங்க மரமஞ்சள் நாகரந்தான்
மெச்சு சிறுநாகப்பூவமுக்கிரா
    வேர்கிராம்பு மிது வசம்பே. (சு௭)

வசம்பிலவங் கப்பட்டை சதகுப்பை
    கருஞ்சீரக மாசாதிக்காய்
பசுந்தாளீ சபத்திரி லவங்கப்பத்
    திரிகாமன் பார் மஞ்சிட்டி

நசையுந்திப் பிலிமூலந் திரிபலா
கத்தூரி நாறு மஞ்சள்
இசை வகைகளொன்றுக்கு மூன்றுகா
சிடைகூட்டி யிதைப்பாலாலே. (சுசு)

வார்த்துரைத்துக் கரைகூட்டி யடுப்பேத்திக்
காய்ச்சுபதம் வருமற்று நாள்
பார்த்தெடுத்து வடித்திட்டுத் தலைக்கிட்டு
முழுகவே பார்வை மந்தம்
நீர்த்தடிப்புங் கண் பிடறி பற்றிழுப்பு
வலியெல்லா நில்லாதோடும்
யார்க்குமிது நசியஞ்செய் திடலாஞ்
சரபேந்திர னருளிதாமே. (சுஎ)

இ-ள்)

| | |
|---|---|
| கருநொச்சிச்சாறு | 1 மரக்கால் |
| பசுவின்பால் | ,, |
| சுத்தமான எள்ளெண்ணெய் | ,, |

இம்மூன்றையுமொன்றாகக் கலந்து வைத்துக்கொண்டு அதில்,

| | | |
|---|---|---|
| நன்னாரிவேர் | நற்சீரகம் | உயர்ந்த கோஷ்டம் |
| வாயுவிடங்கம் | மரமஞ்சள் | சுக்கு |
| சிறுநாகப்பூ | அமுக்குராகிழங்கு | கிராம்பு |
| வசம்பு | லவங்கப்பட்டை | சதகுப்பை |
| கருஞ்சீரகம் | சாதிக்காய் | தாளீசபத்திரி |
| லவங்கப்பத்திரி | அரிசித்திப்பிலி | மஞ்சிஷ்டி |
| திப்பிலிமூலம் | கடுக்காய் | நெல்லிவற்றல் |
| தானிக்காய் | கஸ்தூரிமஞ்சள் | |

இவைகளை வகைக்கு 3 காசெடை நிறுத்துக்கொண்டு, நன்றாகயிடித்துப் பசுவின் பால் விட்டு அரைத்து எண்ணெய், சாறு இவைகளுடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றிப் பதத்தில் வடித்து வைத்துக்கொண்டு, 15 நாள் தான்ய புடத்தில் வைத்திருந்து தலை முழுகிவர. பார்வை மந்தம், நீர்த்தடிப்பு, கண் சிவப்பு, பிடரிவலி, எல்லாம் தீரும். இத்தைலத்தை நஸ்யமும் இடலாம்.

---

# 31. நயன வியாதிக்குத் தைலம்

நொச்சிலின்வேர் துளசிவே ரழிஞ்சில்வே
ரயிற்பட்டை நுவல் சங்கின் வேர்
மெச்சுநஞ் சறப்பரிச்சா னமுக்குராச்
சிறுகிளா வேருந்தானும்
வச்சவகை யொன்றினுக்கு மரைப்படி
நெல்லினிடை வாங்கிதெல்லாம்
நச்சிடித்துத் தூணிதண்ணீர் விடுமட்ட
பாகமுடனலமாய்க்காய்ச்சே. (சுஅ)

காய்ந்திறக்கி வடிக்கொண்டு நொச்சிலின்சா
றிரண்டுபடிக் கவ்வையெண்ணெ
யாய்ந்திரண்டு படிசொல்லுங் கடாயத்துட்
கலந்திட்டு மதின்மருந்து
வாய்விளங்கங் கொத்தமல்லி செண்பகத்தின்
மூகிழேல மதுரங்கோட்டஞ்
சாய்ந்திருசீ ரகங்காமன் சாதிக்காய்
லவங்கப்பட்டை சாகிப்பத்திரி. (சுகூ)

திரிவகைக் கிருவராக னெடையாம்
பசுவினபாற் சேர்த்தரைத்தும்
நிரவியே காயவைத்துப் பதங்கண்டு
வடித்திடிவை நேத்திரவாயு
வரியவலி பிடரியினின் வலியுந்தா
னிவையெல்லா மாறிப்போகுஞ்
சிரமதிலு முழுகிவர நற்றயிலஞ்
சரபேந்திரன் தெளிந்ததாமே. (எய)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| நொச்சிவேர் | துளசிவேர் | அழிஞ்சில்வேர் |
| ஆயில்பட்டை | முட்சங்கின்வேர் | நஞ்சுமுறிச்சான் வேர் |

| | |
|---|---|
| அமுக்கிராக் கிழங்கு } | சிறுகிளாவேர் |

இவைகள் வகையென்றுக்கு ½ படி நெல்லெடை அதர் வது 3 பலம் எடுத்து எல்லாவற்றையும் ஒன்றிரண்டாக இடித்து ஒரு தூணி (4 மரக்கால்) ஜலம் விட்டு நாலிலொன்ருகக் காய்ச்சி வடிக்கட்டி அக்கஷாயத்துடன்,

| | |
|---|---|
| நொச்சிச்சாறு | 2 படி |
| எள்ளெண்ணெய் | 2 படியும் |

விட்டுக் கலந்துகொள்ளவும். பின்பு:

| | | |
|---|---|---|
| வாய்விடங்கம் | கொத்தமல்லிவிதை | சண்பகமொட்டு |
| அதிமதுரம் | உயர்ந்தகோஷ்டம் | நற்சீரகம் |
| அரிசித்திப்பிலி | ஜாதிக்காய் | லவங்கப்பட்டை |
| ஜாதிப்பத்திரி | ஏலக்காய் | கருஞ்சீரகம் |

இவைகளை வகைக்கு 2 வராகனெடையாக எடுத்துக் கொண்டு, இடித்துப் பசுவின் பால்விட்டு நன்ருக அரைத்து, 2 படி பாலுடன் சேர்த்துக் குழப்பி, எண்ணெய் கலந்த கஷாயத்துடன் கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதங் கண்டு இறக்கி 1 வாரம் சென்றபின் தலை முழுகிவர, நேத்திர வாயு, தலை, பிடரி இவற்றிலுண்டாகும் வலி முதலிய நோய்கள் தீரும்.

---

## 32. நயனரோக வாயு, முதலானதற்குத் "தைலம்"

பொன்னுங்காணியின்மூலம் பூஞ்சிறுக்கீரைரச
நன்னாரிவேருடனற் சீரகமிரண்டையு
முன்னதாம் பசுவின் பாலினுலரை மூட்டெண்ணெயுள்
சொன்ன சாறுமாய்க் கலந்(து)தே யெரியுட் காய்ச்சிடே. (எக)

காய்ந்தபின் பதந்தனிலுங் கண்டிறக்கி மூழ்கவே
யாய்ந்திதுவாலை செயலாகுமெண்ணெயுச்சிதம்
வாய்ந்த நேத்திரத்தின் வாயுவும் வார்கண்குத்து பீனசம்,
ஓய்ந்த மண்டைக் குத்திடியு மோடிடும்பா ருண்மையே. (எஉ)

(இ-ள்)

பொன்னுங்காணியைச் சமூலமாக இடித்துப் பிழிந்தச சாறுடன், சிறுக்கீரைச்சாறும் சரிகூட்டி, நன்னரிவேர், சீரகம் இவ்விரண்டையும் பசுவின் பால் விட்டரைத்துப் போதுமான நல்லெண்ணெயுடன் கலந்து, சாறுகளையும் சேர்த்துக் குழப்பி அடுப்பின் மேல் வைத்து, எரித்துப் பதத்திலிறக்கித் தலையில் தேய்த்து ஸ்நானம் செய்துவர நேத்திரவாயு, கண்குத்தல், பீனிசம், மண்டை இடி முதலிய ரோகங்கள் நீங்கும். சிறப்பு:— துவளை செய்யவும் உதவும்.

---

## 33. நயன பித்தகாசத்திற்குத் தைலம்

முருக்கந்தோறிருத்தாளி கருஞ்சீரங்
கோவைவல்லி மொழிகொன்றைத்தோல்
பெருககிண்டஞ் தளிசெங்கத் தாரியின் வேர்ப்
பட்டைகம்பிப் பிசின்வசம்புந்
தருகுள்ளி யிவைசமங் கூட்டியரை
நல்லெண்ணெய் தனிலெரித்தே
இறக்கிவடித் துண்ணக்கி மேற்றுவளை
செய்திடவு மிசைவுகேழே. (எரு)

இசைந்திந்தத் தைலத்தில் விழுதையும்
பாதியெடுத் திவுளிலத்தி
பிசைந்தந்தச் சாற்றினிலுங் கரைத்திட்டுக்
கழுத்தின்கீழ் புறழப்பூசி
பசந்தருவெட் காவேளை மணித்தக்கா
ளிவசம்பும் பார்நறுக்கி
நசைந்ததண் ணீருளிட்டுக் காய்ச்சிவெந்நீர்
குளிப்பாட்ட நலமாந்தானே. (எசு)

(இ-ள்)

கல்யாண முருககம் பட்டை, தாளிக்கொடி, கருஞ்சீரகம், கோவைக்கொடி, சரக்கொன்றைப்பட்டை, இண்டங் கொழுந்து, சங்கதாரிவேர்ப்பட்டை, விளாம்பிசின், வசம்பு,

வெள்ளைப்பூண்டு, இவைகளைச் சமனெடுத்துப் பால் விட்டரைத்துச் சுத்தமான நல்லெண்ணெயில் குழப்பி எரித்துப் பதமாக இறக்கி வடித்து, உள்ளுக்கும் கொடுத்து மேலேயும் துவளையிட 5 வித காச வகைகளும் (நேத்திர ரோகம்) தீரும்.

இதிலுள்ள தைலக்கடுகில் பாதி எடுத்துக்கொண்டு, சரி அளவு குதிரை லத்தியைச்சேர்த்துப் பிசைந்து, துணியிலிட்டுப் பிழிந்து வடிக்கட்டிய சாறுடன் மீதியிருக்கும் பாதிக் கடுகையும் சேர்த்துக் கரைத்து, நேத்திர காசரோகமுள்ள ரோகியின் கழுத்திற்குக் கீழே பூசி, நல்லவேளை, மணத்தக்காளி, வசம்பும், சேர்த்து நறுக்கித் தண்ணீரிலிட்டுக் காய்ச்சிய வெந்நீரில் குளிக்க நலமாகும்,

குறிப்பு:-

(இவுளி-குதிரை)

---

## 34. நயன ரோகத்திற்கு "எண்ணெய்"

உரிநல்லெண்ணெய் தன்னிலு
நீருரைமுள்ளி வேருடன்
அரியசித்தா முட்டிவே
ரதிமதுரங் கோட்டமும்
முரியசந்தன மரைத்தெயுட்
கலங் தெரித் தெண்ணெய்
அரியபிள்ளை நாசிக்கண்ணி
லாடகாளி ருபதே. (எரு)

(இ-ள்)

நல்லெண்ணெய் ½ படியில் நீர்முள்ளிவேர், சிற்றுமுட்டிவேர், அதிமதுரம், உயர்ந்தகோஷ்டம், சந்தனவிழுது, இவைகளை (1 வராகனெடை எடுத்து) நன்ருக அரைத்து, எண்ணெயுடன் குழப்பிப் பக்குவமாய், எரித்து வடித்துப் பிள்ளைகளுக்கு நாசியிலும், கண்களிலும் ஒவ்வொரு துளிவிட 20 நாட்களில் நேத்திர ரோகங்கள் தீரும்.

---

# 35. நயன ரோகத்திற்கு "மாவலிங்க எண்ணெய்"

மாவலிங்கஞ் சமூலமிளகுடன்
வசம்பு வெள்ளுள்ளிப் பூண்டிது
நால்வகைத்தாவுந் தூளாய்நொறுக்
கெண்ணெயிலிடு தங்கமாம்
பதமாவலிங்க எண்ணெயை மேவு
நாழிதொண் ணூறு கழிந்திட
மேல்முழுக்கரப் பிட்டிடு
கண்சொருக் காவதுங்
கண்ணில் வாயுவு பிடரிக்குத்தகலு
மேசிரநோய்தொண் ணூற்றுறுமே. (எசு)

(இ-ள்)

மாவிலங்கை சமூலம், மிளகு, வசம்பு, உள்ளிப்பூண்டு இவைகளைக் கல்லுரலிலிட்டு நன்றாக இடித்து நல்லெண்ணெயில் குழப்பிக்கொண்டு $1\frac{1}{2}$ நாட்கள் வெயிலில் வைத்துப் பொன்னிறங்கண்ட பிறகு இதை உடம்பிலும், தலையிலும் தேய்த்து அரப்பிட்டு வெந்நீரில் ஸ்நானம் செய்யக் கண்சொருகல், கண்வாயு, பிடரிக்குத்து, சிரநோய் 96 முதலிய நோய்கள் தீரும்.

குறிப்பு:—

மாவலிங்கம் என்பது பஞ்சவில்வங்களிலொன்று. பஞ்சவங்களாவன,—

1. வில்வம்—இதில் ஆண், பெண், அலி என்று மூன்று வகையுண்டு. ஆண் வில்வமரத்தின் பட்டையைச் சீவிப் பார்த்தால் வெண்மையாக இருக்கும். பட்டை மஞ்சளா இருந்தால் பெண் வில்வமென்றும் கண்டு கொள்ளவும். இதையன்றி ஆண் வில்வமரத்தின் புஷ்பம் வெண்ணிறமாகவும் பெண் மரத்தின் புஷ்பம் மஞ்சளாகவுமிருக்கும். அலி மரத்தில் முட்கள் இரா. அந்த மரத்தின் புஷ்பம் பூஜைக்கு அர்ஹதையில்லை. வில்வத்திற்குக் "கூவிளம்" என்று பெயர்

2. விளா
3. கிளுவை
4. நொச்சி
5. மாவலிங்கை

இங்கே "மாவலிங்கை எண்ணெய்" பஞ்சவில்வங்களுள் ஒன்ருன ஒரு சரக்கினல் தயார் செய்யப்படுவதால் அது சக்தி வாய்ந்ததே.

---

## 36. நயன ரோகத்திற்கு "மிளகு எண்ணெய்"

(கண் புகைச்சல் முதலானதற்கு)

கடியமிளகு படியரையுங
கனிவெற்றிலேச்சா ருருபடியும்
முடியமுறுக்கி னிலேச்சாறு
மொன்றேபடிநல் லெண்ணயது
படியொன்றரையி லிடுமருந்து
பார்நன்ஞரி வேரோமம்
விடுகச்சோல மிலாமிச்சை
வேர்சாதிக்காய் சந்தனமே. (எஎ)

ஏலமடவிக் கச்சோல
பிலவங்கத்தோ டதிமதுரஞ்
சீலச்சித்தா மட்டியின்வேர்
சேர்பச்சிலேகருஞ் சீரகமு
மேலிவ் வகைக ளோங்கழஞ்சா
மேவவரைத்தெண் ணெயிற்கரைத்துட
பாலிப்பதத்தில் வடிததிறுத்து
பாங்காய்முழுகப் போநோய்கேள். (எஅ)

கண்ணீர்ப்பாய்ச்சல் கண்புகைச்சல்
கண்நோக்காடு தலேநோய்கள்
புண்ணும் பித்த காசமுதல்
புலம்பிக் குலேந்து போங்கண்டீர்.

எண்ணு மூன்று வாதங்க
ளெடுபட்டோடு மென்றூர்க்குங்
கண்ணுஞ் சரபோ சேந்திரனைக்
காண்போர் கலிபோற் கரந்திடுமே. (எக)

இ-ள்)

| | |
|---|---|
| கரிமிளகு | ½ படி |
| வெற்றிலைச்சாறு | 1 படி |
| கல்யாண முருக்கிலைச்சாறு | 1 படி |
| எள்ளெண்ணெய் | 1½ படி |

| | | |
|---|---|---|
| நன்னாரிவேர் | ஓமம் | பூலாங்கிழங்கு |
| இலாமிச்சம்வேர் | சாதிக்காய் | சந்தனம் |
| அடவிக்கச்சோலம் | கிராம்பு | அதிமதுரம் |
| சிற்றமுட்டிவேர் | பச்சிலை | கருஞ்சீரகம் |
| ஏலக்காய் | | |

இவைகளை வகைக்கு 1 கழஞ்சு (1¼ வராகனெடை) வீத மெடுத்துப் பால் விட்டரைத்துக் கரைத்து அடுப்பின் மேல்வைத்து எரித்துப் பதத்தில் வடித்து இறக்கவும்.

**இதன் உபயோகம்.**

பித்தகாசம், மூன்று விதமான வாதரோகங்கள் முதலிய வைகள் எடுபட்டுவிடும்.

குறிப்பு:—

1. இம்மருந்தை மிரியாதி எண்ணெய் என்றும் மரிசாதி எண்ணெய் என்றும் அழைப்பார்.

2. அடவிக்கச்சோலம் என்பது மலையாள மருந்துக் கடையில் கிடைக்கும் சரக்கு.

# 37. கண்ணோய்க்கு மிளகு எண்ணெய்

முசு முசுக்கை தாழை வீழ்முனை
 பொன்கண்ணிச் சிறுகீரை
பசுமை நெல்லிக் காயிளநீர்
 பசுவின்பாலேழுவகைக் கிருசேர்
சமமெடுத்தேயதினூற
 நனைப்பாயஞ்சு பலமுதலா
யிசைப்பத்தாம லரைப்பலமிளகை
 யிட்டோர் சட்டிக் குள்ளீயே. (௮௰)

ஊறப்போட்டு வெய்யிலிலே
 யுலர்த்திக்காய்ந்த பின்முறத்தி
லாரத்தேய்த்துத் தோற்புடைத்து
 மந்தப்படியே யேழுதிறம்
மூறிக்காய்ந்த பின்புடைத்து
 .........மூட்டைக்கட்டி
சேறுக்காநல் லெண்ணெயுள்ளே
 செலுத்தியூறத் தினந்தானே. (௮௧)

தானான தைலமிது வார்த்துத்
 தவறாமற்றான் மூழ்கிவர
வேனா மேக மென்ற தெலா
 மெட்டிப்போகு மில்லாதே
காணா உடலுங் கண்ணெரிவுங்
 கைகாலெரிவுங் கண் புகைச்சல்
நானா விதமாம் நோயடக்கும்
 நலமாம் மிளகின் தைலம் நன்றே. (௮௨)

இ-ள்)

முசுமுசுக்கைச்சாறு
தாழை விழுதின் நுனியிலுள்ள முனைகளின் சாறு
சிறுகீரைச்சாறு
நெல்லிக்காய்ச்சாறு
இளநீர்
பசுவின்பால்
பொன்னாங்காணிச்சாறு
} இவைகளை வகைக்கு 2 சேர் வீதமெடுத்துக் கொண்டு

5½ பலம் மிளகை ஒரு சட்டிக்குள்ளிட்டு முதல் சாற்றி லொரு நாளூரப்போட்டு வெய்யிலில் உலர்த்திக் காய்ந்தபின் முறத்தினுல் தேய்த்துப் புடைத்து மற்ருெரு சாற்றிலூறப் போட்டுக் காய்ந்தபின் தேய்த்துப் புடைத்து, இவ்வாருக ஏழு வகைத் திரவத்திலும் ஏழுதடவை யூறியபின் புடைத்து மூட்டை கட்டி நல்லெண்ணெய் 2 சேரில் ஊறவைத்துக்கொள்ளவும். நன்ருக ஊறியபின் இத்தைலத்தினுல் தலைமுழுகிவர,

மேகநோய்கள், கண்ணெரிச்சல், கைகாலெரிச்சல், கண் புகைச்சல் முதலான பல நோய்கள் தீரும்.

---

# 38. வெள்ளெழுத்திற்கு மருந்து

முருங்கின் வித்திது மிளகு
மோர் வகைக் கிடு நூருய்த்
தருந் தண்ணீரி னுலரைத்
தொரு தாலத்திற்றப் பிப்
பருதிமுன் வைக்கத் தைலமாம்
பார்வை யிலூட்டப்
பரவு வெள்ளெழுத்துடன்
பூவும் படலம் வாங்கிடுமே. (அரு)

(இ-ள்)

| | |
|---|---|
| முருங்கை வித்து | 100 |
| மிளகு | 100 |

இவ்விரண்டையுங் கல்வத்திலிட்டுத் தண்ணீர் வார்த் தரைத்து, ஒரு தாலத்திலப்பி நல்ல வெயிலில் தாலத்தைச் சாய்த்து வைக்கத் தைலமிறங்கும். இதைக் கடுகளவெடுத்துக் கண்ணிலிட வெள்ளெழுத்து, பூ, படலம், இவைகள் தீரும்.

---

## 39. தூமத்ருஷ்டிக்கு "மணித்தக்காளித் தைலம்"

புகைச்சல் மிகுங் கண்ணுக் கோரெண்ணெய் கேளு
போத மழை காலத்தின் மணித்தக்காளி
வகைச்செடி சமூல மெண்ணெய் தனிலே போட்டு
வரும் பதமாய்க் காய்ச்சியே வடித்துக்கொண்டு
தொகையுடனேயொரு மாதமுழுகும் போது
தூமத்ருஷ்டி முதலான தெல்லாந்தீர்ந்து
மிகை கழுகினுடதிருஷ்டி போல் விளங்கி விழி
யொளிரு மணித்தக்காளி யெண்ணெய் தாமே. (அச)

(இ-ள்)

மழைகாலத்தில் மணித்தக்காளிச் செடியைச் சமூலமாகக் கொண்டுவந்து நறுக்கி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சிப் பதமாக வடித்துக்கொண்டுத் தினந்தோறும் தலையில் தேய்த்து முழுகிவர "தூமதிருஷ்டி" 1 மாத காலத்திற்குள் தீரும். திருஷ்டியும் கழுகினுடையதுபோல ஆகும்.

---

# 2. நேத்ர ரோகங்களுக்கு "நெய் வகைகள்"

## 40. நயன ரோகத்திற்கு "ஏனுதி நெய்"

புளியினிலைச் சாறுடன் முருங்கைப்
பூப்பனைமட்டை வில்வ பத்திரி
துளசி முலைப்பால் குளக்கிழிஞ்சி
தோணப்பசுநெய் வகைக் குழக்காய்
தளக்காவிக்கல்லதிமதுரஞ்
சந்தமேல பொன் மெழுகு
முளவாஞ் சமங் கொண்டரை கலந்து
முடனே பதத்தில் வடிப்பதுவே. (அரு)

இறுத்த நெய் பேரேனுதி
யென்னுங் கண்ணின் நெய் நிறுத்தி
விரணசுக்கிரன் விழிமுழுங்கி
நத்தைப் படுவனிழி படலம்
பிரிசல் காசம் வெள்ளெழுத்துப்
பேராப்புகைச்சற் பாலாடை
காவாக் காசஞ்சதை வளர்த்தி
காணு தோடுங் கண்டாயே. (அசு)

(இ-ள்)

புளியிலைச்சாறு

பனமட்டைச்சாறு

முருங்கைப்பூச்சாறு

வில்வ இலைச்சாறு

துளசிச்சாறு

குளத்திலிருந்து எடுக்கப் படும் கும்பிடுக் கிழிஞ் சியை எடுத்துப் பிளர்ந்து உள்ளிருக்கும் ஜலம்.

இவைகள் தனித்தனி 1 உழக்கு எடுத்து வடிக்கட்டி, அத னுடன் பசுவின் நெய் 1 உழக்கும், முலைப்பாலொருழக்கும் சேர்த்துக்கொள்ளவும்.

காவிக்கல், அதிமதுரம், சந்தனச்சாந்து, ஏலம், பொன் மெழுகு இவைகளை வகைக்கு 1 வராகனெடை எடுத்தரைத் துச் சாறுடன் கலந்து, காய்ச்சிப் பதத்திலிறக்கி வைத்துக் கொள்ளவும்.

இந்த நெய்க்குப் பெயர் "ஏனுதி நெய்" இதைத் தினந் தோறும் ஒரு துளி வீதம் கண்ணிலிட விரணசுக்ரன், விழிமு ழுங்கி, நத்தைப்படுவன், இழிபடலம், பிரிசல், காசம், வெள் ளெழுத்து, கண் புகைச்சல், பாலாடை, சதை வளர்த்தி முதலிய ரோகங்கள் தீரும்.

---

## 41. நயன ரோகத்திற்கு 'ஏரல் நெய்'

நித்தியாப் பனைமட்டையிள னீருந்
தும்பைப்பூவின் நீர்
நந்தியாவட்டத்தின் பூ நீர்
நற்கறட்டான் பூவின்னீர்

உந்திய கிழிஞ்சிச்சாறு மொவ்
வோரொன் றுழக்குமாய்
சந்தனமுமான் கொம்பரைத்
தாவினெய் யுழக்குள்ளே. (அஎ)

கலந்திடு முன் சாறு மிட்டுக்
கை வளத்துட னெரி
யிலங்கவே பதத்தினி லிறக்கி
யே வடித்த நெய்
துலங்க நேத்திரத்தி லொரு
துளி காசதனை நேர்
சலங்கடருமிரண சுக்கிரன்
தன் கண்ணோவுந் தள்ளுமே. (அஅ)

(இ-ள்)

| | |
|---|---|
| பனைமட்டைச்சாறு<br>தும்பைப்பூச்சாறு<br>நந்தியாவட்டைப்புஷ்பச்சாறு<br>வெள்ளைக்காக்கணத்தின் பூச்சாறு,<br>மூடு கிழிஞ்சியின் நீர் | இவைகள் வகைக்கு 1 உழக்கு |

இழைத்த சந்தனம், இழைத்த மான்கொம்பு இவ்விரண்டையும் ஒரு உழக்கு பசு நெய்யில் சேர்த்து, முன் சொன்ன சாறுவகைகளோடு சேர்த்து, அடுப்பிலிட்டுக்காய்ச்சிப் பதத்திலிறக்கி வடித்த நெய்யை நேத்திரத்தில் ஒரு துளி வீதம் விட, காசநீர் போன்ற பற்பல நீர்ரோகங்கள் தீரும். இரண சுக்கிரனும், கண்ணோவுந் தீரும்.

---

# 3. நேத்ர வியாதிக்குக் குழம்பு வகைகள்

## 42. நயன ரோகத்திற்கும் காசமுதலானதற்கும் "இளநீர்க் குழம்பு"

கையாந்தகரை நெல்லிக்காய்
கமல வளையம் காணிபுடல்
துய்ய புளி சீதேவி யிவை
துலங்கச்சாறு படியொன்று

நெய்யார் சந்தச் சீவலொடு
நெல்லி தான்றி கடு தேற்று
வுய்யும் வெட்டிவேரிலாமிச்சு
சேர்க்கச் சம மெட்டொன்றுக்கே. (அகூ)

எடுத்துச்சாறுடன்றான் கலந்து
மிளநீர் மடல்நீர் சரிக்கூட்டித்
தொடுத்துக் காய்ச்சிக் குழம்பானற்
றுத்தம் பீத ரோகணியு
மடுத்த சீனக் காரமுட
னரிய துரிசு மொரு கழஞ்சு
பொடித்துக் குழம்புதனி நவிலும்
பொடியை மெல்லத்தூவி யிடேன். (கூல)

தூவிப்பரணி தனிலடைத்துச்
சொன்னேன் விழியி லெழுதி வரக்
கோபித் தெழுந்த காசமுடன்
குமுறும் புகைச் சலுட் டணமுங்
காவிற் பிணைக்கண் மடமானே!
கண்ணிலனேக தோஷ மறும்
பாவித்திதனைச் செய்யென்று
பகர்ந்தார் முறை சரபேந்திரனே. (கூக)

(இ-ள்)

கையாந்தகரைச்சாறு நெல்லிக்காய்ச்சாறு
தாமரைவளையச்சாறு சீதாசெங்கழுநீர்ச்சாறு
பேய்புடல் கஷாயம்.

இவைகள் வகைக்கு 1 படி எடுத்து, இவைகளுடன்.

சந்தனத்தூள் நெல்லிக்காய் தான்றிக்காய்
கடுக்காய் தேற்றுங்கொட்டை வெட்டிவேர்
விளாமிச்சைவேர்

இவைகளை வகைக்கு 1 பலம் எடுத்து, 8 படி ஜலம் விட்டு எட்டிலொன்றாக வற்றக்காய்ச்சிய கஷாயம் 1 படி

இளநீரின் மட்டைச்சாறு— 1 படி

இவை எல்லாவற்றையும் ஒன்று கலந்து நன்ருக வடிக் கட்டி, அடுப்பிலேற்றிக் குழம்பாகும் வரை காய்ச்சி வடித்து.

துத்தம் பீதரோகிணி, சீனக்காரம்
துரிசு

இவைகளை 1 கழஞ்சு பொடித்து, வஸ்திரகாயம் செய்து குழம்பிலிட்டு, ஒன்ருகக்கலக்கிப் பீங்கான் சிமிழில் வைத்துக் கொள்ளவும். இக்குழம்பை, ஒரு பயறளவு ஒருசெப்புக் கோலிலெடுத்து விழியில் தீட்டக், கண்களிலேற்படும் காசம். புகைச்சல், உஷ்ணம், இன்னும் பலவித தோஷங்களும் தீரும்.

---

## 43. நயன ரோகத்திற்கு "இளநீர் குழம்பு"

இளநீரினற் படியிலிட்
 டன்பது குமிழம் பழத்தைத்
தளரப் பிசைந்து வடிகட்டி
 தன்னைக் காய்ச்சிக் குழம்பாக்கிக்
களித் துற்றந் துரிசஞ்சனக்
 கற் கடுக ரோகணியுட
னுள கற்பூரஞ் சிவந்த கடல்
 நுரையோர் நாழிக் குழம்புக்கே. (௬௨)

கூட்டுங் கழஞ்சி யோரொன்று
 கொடு சூரணித்துக் குழம்பிலிட்டு
நாட்டுஞ் சேர்வை யீதிளநீர்
 நல்ல குழம்பைப் பரணியிலே
யூட்டி வைத்துக் கண்ணிலிட
 வோடுங் காசம் படலமுடன்
காட்டுப் பில்லம் பதும நோய்
 காணுமுட மயிரது போமே. (௬௩)

(இ-ள்)

இளநீர்—4 படி யெடுத்து அதில் 50 குமிழம் பழங்களை ஊரப்போட்டுப் பிசைந்து வடிக்கட்டி, இறுத்த தெளிவை அடுப்பில் வைத்துக் குழம்பாகக் காய்ச்சி,

துத்தம், துரிசு, அஞ்சனக்கல்,
கடுகரோகிணி, பச்சைக்கர்ப்பூரம் கடல்நுரை,

இவற்றை வகைக்கு ஒரு கழஞ்செடுத்துச் சூரணித்து. வடிக்கட்டிக் குழம்பிலிட்டுக் கலக்கிப், பரணியில் போட்டு வைத்துப், பயறளவு கோலிலெடுத்துக் கண்ணிலிடக் காசம், படலம், பில்லம், பதுமநோய், முடமயிர் முதலிய நோய்கள் தீரும்.

குறிப்பு :—

இளநீரைப் பறித்தவுடன் முதல் நாள் ராத்திரி முழுதும் தண்ணீரிலூறப்போட்டு, மறுநாள் வெட்டி ஜலத்தை எடுத்துக்கொள்ளவும்.

பதுமநோய். இது பில்ல வகையிலொன்று. கண் மேலிமையைப் புரட்டிப் பார்க்கச் சதை வளர்ந்திருக்கும்.

முடமயிர். இதில் கண் இமையின் மயிர்க்காம்புகள் உட்புறமாக வளைந்து மேலிமையிலும் கீழ் குவளையிலும் வளர்ந்திருக்கும். இது மாதந்தோறும் உதிர்ந்து முளைப்பதுண்டு.

இதற்குச் சிகிச்சையாவது: மேலிமை, கீழ்குவளை இவைகளில் மெல்லியதாக கண் கத்தியினால் நீவி ரோமங்களை நீக்கி விட்டு ஆற்றிவிடத் தீர்க்கமாய் நீங்கும்.

---

## 44. நயன ரோகத்திற்கு "இளநீர் குளம்பு"

நாழியிளநீர் தனிலூற
நறுக்கிச் சீவிப் பேய்க் கரும்பை
நாழி வில்லை தனியிட்டோர்
நாளு மூறிக்காய்ச்சி வடி
கேழிக் குழம்பிற் கடு ரோணி
கிளையும் பீத ரோகிணியு
மாழிய்யரோ கிணிதுற்ற
மாகுந் துரிசஞ் சனக்கல்லே. (௪௪)

கடலி னுரையு மிராஞ்சமுங்
காணு நாழிக் குழம்புக்கு
விடவோ ரொன்று கழஞ்சாக
விடித்துச்சூரணித் திச்சேர்வை
படவே சிமிழிலடையிதன்பேர்
பகரு மிளநீர் குழம்பென்பார்
தொடவே கண்ணினோய்களெல்லாந்
தொலைந்தோடிப் போஞ் சொல்லாதே. (௩ரு)

(இ-ள்)

இளநீரொருபடி யெடுத்து, அதில் பேய்க் கரும்பைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டிப்போட்டு, ஒருநாளூறவைத்து, அடுப்பின்மேலேற்றிக் குழம்பாகக் காய்ச்சி, வடித்தெடுத்துக் கொண்டு அதனுடன்.

| | | |
|---|---|---|
| கடுகரோகிணி | பீதரோகிணி | துத்தம் |
| துரிசு | அஞ்சனக்கல் | கடல்நுரை |

இவைகளை வகைக்கு ஒரு கழஞ்செடுத்துக் கல்லுரலி லிட்டிடித்து வஸ்திரகாயம் செய்து, குழம்பில் போட்டுவிடவும். ஒரு வாரம் சென்றபின் அக்குழம்பைக் துணியில் வடிக்கட்டிச் சிமிழிலடைத்து வைத்துக்கொள்ளவும்.

இக்குழம்பை ஒரு உளுத்தம்பருப்பளவு ஒரு செப்புக் கோலில் தொட்டுக் கண்ணில் தீட்ட, நயன ரோகங்கள் தீரும்.

---

## 45. நயன ரோகத்திற்கு "இளநீர் குழம்பு"

தென்னங் குறும்பை யிரண்டிடித்துத்
தெளியுநீரை வடித்திரண்டு
சொன்ன விளநீர் வெட்டியநீர்
தோயக்கலந்து சிறுகீரை
முன்னோரிலைத் தாமரை வேரு
மொவ்வோர் களஞ்சிப் பிரமாண
மன்னதரைத்துக் குழம்பாக்கி
யடைகண் ணுட்டண மகன்றிடுமே. (௩௬)

(இ-ள்)

தென்னங்குரும்பை இரண்டு, எடுத்து நன்ருக இடித்துச் சாறுபிழிந்து, ஒரு காற்றில்லாத இடத்தில், வைத்துத் தெளிவை எடுத்துக்கொண்டு, இதனுடன் மேலுமிரண்டு இளநீரையு முடைத்து ஊற்றிக்கலந்து

சிறுகீரைவேர் ஓரிலைத்தாமரைவேர்

இவ்விரண்டையும் ஒரு கழஞ்சுப் பிரமாணமெடுத்து, அரைத்து, மேற் சொன்ன இளநீரில் குழப்பி, அடுப்பின் மேலிட்டுக்குழம்பாகும் வரை யெரித்து, வடிக்கட்டி வைத்துக் கொண்டு, கண்ணில் தீட்டக் கண்ணோய்கள் தீரும்.

---

## 46. நயன ரோகத்திற்கு 'இளநீர்க் குழம்பு'

இருபதிளனி யின்சலத்தை
இறுத்தோர்சட்டி தனிலூற்றி
யிரு வேலியின் வேர் பொற்கண்ணி
யிலாமிச்சைவே ரிலவங்கம்
தருமுத்தக்கா சதிமதுரஞ்
சாத்திரவேதி சிறுகீரை
மருசெங்கழுநீர் மூலந்தா
மரையின் வளையங் கோட்டமுமே. (கஎ)

ஏலம்புங்கின் வேர்கிராம்போ
ரிலைத்தாமரைமுந் திரிப்பழமும்
மூலமிவைக ளோரொன்று
மூன்றுகளஞ்சாய்த் தூளிடித்துக்
கோலு முன்னிள நீர்தனிலே
கூடப் போட்டுக் காய்ச்சி வற்றி
நாலு நாழி யாயிறக்கி
நலமாய்ப் பிசைந்து வடிக்கொள்ளே. (கஅ)

கொண்ட பின்னுந் தேனுழி
கூடவிட்டுச் சிறு குழம்பாய்ச்
சுண்டிக் கம்பிப் பக்குவத்தோ
டிறக்கிக் கலசத் துள்ளிட்டே
கண்டிந்துப் புத்துருசு பச்சைக்
கர்ப்பூரந்துத் தங்களிடை
ரெண்டு பலமார்க் கப்பொடித்தே
நேரோர் கலத்திலிதை வாரே. (கூகூ)

வார்த்து மற்ருேர் கலத்தாலே
மத்தித் தைந்து நாழிகைதான்
சேத்துச் செம்புப் பாத்திர த்துட்
சீனப் பீங்கான் தனிலாதல்
போத்தி யடைத்துக் கண்ணிவிடப்
போகும் வியாதி தனைக்கேளீர்
மூத்த பித்த காச வரள்
காச முடமயி ரதுபோமே. (ளா)

நீலகாசம் வெள்ளெழுத்து
நிமையிற் புழுவெட் டிழிகண்ணுங்
கோல நயனச் சூலே பில்லங்
குமரிகாசம் கண்வாத
மேலு மேக வரிவைமுதற்
விரணச் சுக்கிர னிவைதீரும்
மேலுமிளநீர்க் குழம்புலர்ந் தால்
விட்டுத் தேனுற் கிளறிடுமே. (ளக)

(இ-ள்)

இருபது இளநீர் கொண்டுவந்து வெட்டி, அவைகளின் நீரை யொரு சட்டியிலூற்றி, அதனுடன்

| | | |
|---|---|---|
| வெட்டிவேர் | பொன்னுங்காணி | இலாமிச்சைவேர் |
| கிராம்பு | கோரைக்கிழங்கு | அதிமதுரம் |
| சாத்திரவேதி | சிறுகீரை | செங்கழுநீர்க்கிழங்கு |
| தாமரையிலேச்சுருள் | கோஷ்டம் | ஏலக்காய் |
| புங்கம்வேர் | ஓரிதழ்த்தாமரை | முந்திரிப்பழம் |

இவைகளைத் தனித்தனி 3 கழஞ்சு ($3\frac{3}{4}$ வராகனெடை) எடுத்துத் தூளாக இடித்து இளநீர்தனிலே போட்டு 4 படியாகும்வரை எரித்துப் பின்பு அதை நன்ருகப் பிசைந்து துணியால் வடிக்கட்டிக்கொள்ளவும். இதனுடன் 1 படி தேன் விட்டு, மறுபடியும் அடுப்பின் மேலேற்றிக் கம்பிப்பிசின் பாகம் வரும் வரை எரித்துக் கலசத்துள்ளிட்டு

| | | |
|---|---|---|
| இந்துப்பு | துரிசு | பச்சைக்கர்ப்பூரம் |
| துத்தம் | | |

இவை வகைக்கு 2 பலமெடுத்துப் பொடித்து, நுண்ணிய தூளாக்கிக் கலசத்தில் போட்டுக் குழம்புடனே குழப்பி வைத்துக்கொள்ளவும்.

அப்பால், இதை 2, அல்லது 3 நாள் கழித்து வடிக்கட்டிச் செம்புப்பாத்திரத்திலாவது, பீங்கானிலாவது அடைத்து வைத்துக்கொள்ளவும். அதில் ஒரு உளுத்தம் பருப்பளவு ஒரு கோலிலெடுத்துக் கண்ணில் தீட்ட

| | | |
|---|---|---|
| பித்தகாசம், | வரள்காசம், | முடமயிர் |
| நீலகாசம், | வெள்ளெழுத்து, | புழுவெட்டு |
| இழிகண், | நேத்ரசூலை, | பில்லம் |
| குமரிகாசம், | கண்வாதம், | மேகவரி |
| விரணசுக்கிரன் | | |

இவை நீங்கும், நாளாக ஆக இக்குழம்பு சுண்டிக் காய்ந்து வந்தால், போதுமான சுயத்தேனை விட்டுக் கிளறி வைத்துக்கொள்ளவும்.

குறிப்பு:—

குமரிகாசம் என்பது வலியின் காசம். இதன் விவரத்தை முன்னே காண்க.

## 47. நயன ரோகத்திற்கு 'இளநீர்க் குழம்பு'

பதக்கிளநீர் தனையொரு சட்டிக்குள்
பாய்ச்செலுமிச்ச வேர்முத்தக்கா
சதிமதுரங் கூட்டிரு வேலியின் வேரி
லவங்கஞ் செங்கழுநீர்க் கிழங்கேலமுங்
கதி பொற்கண்ணி சிறுகீரைச் சங்கம் வேர்
கமலத்தின் வளையஞ் சாத்திரவேதியுந்
துதிக்கு மோரிதழ்த் தாமரை கோட்டமுஞ்
சொல்லிரு கழஞ்சா யிடி தூளுமே. (௬௨)

இட்டுக் காய்ச்சிது நான்கு படியதா
யிறக்கி யாற்றிப் பிசைந்து பிழிவடிக்
கட்டிக்கொண்டு பின்றே ஞழிவிட்டிடு
காய்ந்தபின் துரும்பிட் டதிற்றெருத்தியே
ஒட்டிய பதங்கண்டு கலசத்தி லூற்று
மிந்துப்பும் பச்சைக் கர்ப்பூரமும்
அட்டுத்துத்தம் வராகனெடை ரெண்டும்
மாட்டச்செய்பொடி போட்டோர் கலத்திலிடேன்.
(௬௩)

பின்னுமோர் கலசத் தாலிதைத் தேய்த்திடு
பீங்கான் செம்பெனும் பாத்திரத் துள்ளடை
இன்னக் கண்ணி விடப்பித்த காசமு
மிழிகண் பில்லம் முடமயிருட்டண
மின்னீல காசங் கண்வாதச் சூலையும்
வெள்ளெழுத் துப்புழு மேற்றடிப்புட
னென்னி ரணமே காவில்லி சுக்கிர
னெகிள நீர்க்குழம் புலர்ந்தாற்றேனே. (௬௪)

(இ-ள்)

இளநீர் இரண்டு மரக்காலெடுத்து ஒரு சட்டியிலூற்றி,

| | | |
|---|---|---|
| எலுமிச்சைவேர் | கோரைக்கிழங்கு | அதிமதுரம் |
| வெட்டிவேர் | செங்கழுநீர்க்கிழங்கு | ஏலக்காய் |
| பொன்னுங்காணி | சிறு கீரை | சங்கம்வேர் |
| தாமரையிலைச்சுருள் | சாத்திரவேதி | ஓரிதழ்த்தாமரை |
| கோஷ்டம். | | |

இவைகள் வகைக்கு 2 கழஞ்சு எடுத்துக் கல்லுரலிலிட் டிடித்து, இளநீரில் சேர்த்து அடுப்பின்மேல் வைத்து 4 படியாகச் சுண்டக்காய்ச்சவும். பின்பு சக்கைகளைப் பிசைந்து வடிக்கட்டிக்கொண்டு, அதில் தேன் 1 நாழிவிட்டு அடுப்பின் மேல் வைத்து, நன்கு காய்ந்து வரும்போது, ஒரு துரும்பை குழம்பிலிட அது ஒட்டிக்கொண்டால், அது சரியான பதமாகும். அப்போது அதை ஒரு கலசத்திலிட்டு

| | | |
|---|---|---|
| இந்துப்பு<br>பச்சைக்கர்ப்பூரம்<br>துத்தம் | } | இவைகளை<br>2 வராகனெடை |

வீதமெடுத்து நன்ருகப் பொடித்துக் குழம்பில் போட்டுக் கிளறி வைத்துக் கொள்ளவும். நான்கு தினங்கள் சென்றபின், இதைத் துணியில் வடிக்கட்டிச் செம்புச் சிமிழிலோ அல்லது பீங்கானிலோ பத்திரப்படுத்தவும்.

இதில் ஒரு பயறளவெடுத்துக் கண்ணிலிட

| | | |
|---|---|---|
| பித்தகாசம் | இழிகண் | பில்லம் |
| முடமயிர் | உஷ்ணம் | நீலகாசம் |
| கண்வாதம் | சூலை | வெள்ளெழுத்து |
| இமைத்தடிப்பு | இரணம் | வல்லிசுக்கிரன் |

முதலிய ரோகங்கள் தீரும்.

குறிப்பு:—

இம்முறை 46-வது முறையில் சிறு மாறுதலுள்ளது.

# 48. நயன ரோகத்திற்கு "இளநீர்க் குழம்பு"

நாலிள நீரோர் சட்டியிலூற்றிப் பொன்னங்
காணிச்சிறு கீரைவேர் கோம்பையு
நூலி னெய்ய நொறுக்கூற வைத்தித
நுண்சீலை வடிக்கோட டுப்பேத்தியே
யாலையின் கருப்புக் கட்டிச்சாறுபோ
லானபக்குவந் தன்னி லிறக்கிடு
மேலிப் பச்சைக் கர்ப்பூரஞ் சாரித்திட்டு
விழிப்பிணிக் கிளநீர் மைச்சிமிழிடேன் (ரு)

(இ-ள்)

நான்கு இளநீரை வெட்டி அதன் ஜலத்தை ஓர் சட்டியி லூற்றிப் பொன்னாங்காணி, சிறுகீரைவேர், நான்கு தென்னங் குறும்பை இம்மூன்று சரக்குவகைகளையும் நொறுங்க இடித்து, ஷை இளநீர் ஜலத்தை விட்டுறவைத்து, மறுநாள் துணியினால் வடிக்கட்டி, அடுப்பின் மேலேற்றிக் கருப்புக்கட்டி யைச்சேர்த்துச் (பனை வெல்லம்) சாறுபோல் வரும்வரை காய்ச்சி, இறக்கி வைத்துக்கொண்டு, பச்சைக்கர்ப்பூரத்தை நுணுக்கிப் பொடியாக்கிக், குழம்போடு சேர்த்து வைத்துக் கொள்ளவும்.

கண்களில் பிரயோகஞ் செய்யும்போது இக்குழம்பைச் சிறுக எடுத்துத் துணியில் வடிக்கட்டி வைத்துக்கொண்டு பிரயோகிக்கவும்.

குறிப்பு:— சரக்குகளை நான்குபல நிறையாகவும் கருப்புக் கட்டியை 5 பலமாகவு மெடுத்துக்கொள்க.

## 49. நயன ரோகத்திற்கு 'இளநீர்க் குழம்பு'

இளநீர் தன்னில் மதுரந் திரிபலை
விடுமரமஞ்சளுஞ் சமமா யரைகள
களெனக் கொதித்து வடித்துத் தேன்கலந்
திந்துப் பும்கர்ப் பூரத் தூளிட்டுக்
கிளரிடு மிளநீர்க் குழம்பாமிதைக்
கெட்டியோர் சிமிழுக் குள்ளடைத்திடு
தளரு நேத்திர ரோகங்கள் யாவையுந்
தானேடுமிதுகைக் கண்டதாமே. (௪௬)

(இ-ள்)

ஒரு படி இளநீர் ஜலத்தில்,

அதிமதுரம் கடுக்காய்
தான்றிக்காய் நெல்லிக்காய்
மரமஞ்சள்.

இவைகள் வகைக்கு 1 பலமெடுத்து இடித்து 3 நாளூறவைத்து நாலாம்நாளடுப்பேற்றிக் கால் படி யாகச் சுண்டும்படி எரித்து, வடிக்கட்டித் தேன் ஒரு வராக னெடை அதிலிட்டு இந்துப்பு, பச்சைக்கற்பூரம் இரண்டை

யும் வகைக்கு 1 வராகனெடை எடுத்து நன்றாக நுணுக்கிக் குழம்புடனிட்டுப் பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும்.

குழம்பை உபயோகிக்கும் தருணத்தில் வடிகட்டிக் கொண்டு சிறுகச் சிறுக எடுத்து உபயோகிக்கவும்.

---

## 50. நயன ரோகத்திற்குச் " சந்திரோதயக் குழம்பு "

கர்ப்பூர முத்தக்காசு பலகரை
கடுக்காய் தான்றி நெல்லிமுள்ளி
துத்தமு மற்புத மஞ்சளேலம் மனோசிலை
யதிமதுரம் வெங்காரம் வெள்ளிலோத்ரம்
விற்பவளஞ் சுவர்ண மரகத மின்னுஞ்
சங்கு முத்தாமையி னோடுடன்
நற்பீத ரோகிணியுங் கடலினுரை நாட்டி
யெல்லாஞ்சரி யிவை கூட்டிடேன். (௭௭)

கூட்டிப் புங்கின் விரைச்சாறு மாதுளைக்
குள் விரைச்சாறு கொண்டுநன் றாகவே
யாட்டித் தேனிட்டிளக்கிடு கண்ணிலே
யடைந்த நத்தைப் படுவனுங் காசங்க
ளெட்டு மாலைக்கண் சூடு வளத்தியு
முளைப்படல மனேகமுந் தீர்ந்திடும்
காட்டிலாடுஞ் சந்திரோதயச் சேகரன்
கருணையாற்சர பேந்திரன் முறையிதே. (௭௮)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| பச்சைக்கர்ப்பூரம் | கோரைக்கிழங்கு | சோழி |
| கடுக்காய் | தான்றிக்காய் | நெல்லிமுள்ளி |
| துத்தம் | மஞ்சள் | ஏலக்காய் |
| மனோசிலை | அதிமதுரம் | பொரித்த |
| வெள்ளிலோத்திரம் | | எண்ணெய் |
| அதாவது | | வெங்காரம் |
| விளாம்பட்டை | | |

| | | |
|---|---|---|
| கடல் நுரை | நற்பவழம் | தங்கரேக் |
| மரகதம் | சங்கு | முத்து |
| ஆமையோடு | பீதரோகிணி | |

இவைகள் தனித்தனிச் சரி எடை எடுத்துப் புங்கம்விதைச் சாறு, மாதுளம்பழ விதைச்சாறு இவ்விரண்டிஞலும் நன்ருக அரைத்து, வடிகட்டித் தேன்விட்டு இளக்கிக் கண்ணிலிட

நத்தைப்படுவன், 8 வித கண்காசங்கள், மாலைக்கண் சூடுவளத்தி, முளைப்படலம் முதலான ரோகங்கள் தீரும்.

---

## 51. நயன ரோகத்திற்கு "இரத்னுதிக் குழம்பு"

முத்தமும் பவழமண்டையோடு முற்புழுகுடனறு
துத்தமுநாய்ப் பல்லும் பச்சைக்கர்ப் பூரங் துருசியு
மித்த கோழி நெஞ்செலும்பும் வெள்ளைக்காக்க ணத்துடன்
மெத்துஞ்சிறுக் கீரைபொன்னுங் காணிதேற்ரு வித்துமே.
(ாக)

வெள்ளைச்சாறணையிந்நாலு மரவேர்வகை பனைமட
லுள்ளசாறு மெலிமிச்சங் நீரோர் பணவெடை
யுள்ள தெல்லா நல்லெண்ணெய் வார்த்தொன்ரு யரைத்துச்
[சிமிழ்க்
குள்ளடை குழம்பைக் கண்ணிற் கொளப் பூ நோயைக்
[கொல்லுமே. (ாகம)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| துளையிடாதமுத்து | பவளம் | வெந்த மண்டையோடு |
| புனுகு | துத்தம் | நாய்ப்பல் |
| பச்சைக்கல்பூரம் | துருசு | சேவலின் நெஞ்செலும்பு |
| வெள்ளைக்காக் கணம்வேர் | சிறுக்கீரை வேர் | பொன்னங்காணி வேர் |
| சீவிய தேத்தாங்கொட்டை வேர் | | |

இச்சரக்குகளைச் சரி எடை எடுத்துக் கல்வத்திலிட்டுப் பனைமட்டைச்சாறு, எலிமிச்சம்பழச்சாறு, இவைகள்

வகைக்கு ஒரு பணவெடையாக விட்டு, வேண்டிய அளவு நல்லெண்ணெய் வார்த்து நன்றாக அரைத்துச் சிமிழில் பத்திரப்படுத்தவும். ஒரு வாரம் சென்றபின் சிறு பயறள வெடுத்துக் கண்ணிலிட "பூ" மாறும்.

---

## 52. நயன ரோகத்திற்குக் 'குழம்பு'

மடல்துத்தஞ் சவுக்காரந்துரிசிது
வகையோரொன்று பணவெடைவாங்கியே
உடன்சற்றே வெதுப்புநற் றண்ணீரிட்டே
யுறுக்குழம்பாய் சிமிழிலடைத்துவை
படலங் காசந் தண்ணீர் குற்றல் மாலைக்கண்
பருத்தியும்நீல காசம்பூப்பட்டது
விடப்புகைச்சலும் வெள்ளெழுத் துள்ளதும்
விட்டோடிப்போகு மெய்முறைகாணிதே. (௫௰௧)

(இ-ள்)

மடல்துத்தம், சவர்க்காரம், துரிசி, இவைகள் வகைக்கு 3½ குன்றிமணி எடை (பணவெடை) எடுத்து, ஒரு சட்டியில் போட்டு, சற்று வெதுப்பி, சுத்த ஜலம் விட்டுக் குழம்பாகக் காய்ச்சிச் சிமிழிலடைத்து வைத்துக்கொண்டு, பயறளவு கண்ணிலிட,

படலம், கண்காசம், கண்ணீர் குற்றல், மாலைக்கண், பருத்தி, நீலகாசம், பூவிழுதல், புகைச்சல், வெள்ளெழுத்து முதலிய ரோகங்கள் தீரும்.

---

## 53. நயன வியாதிக்குக் 'குழம்பு'

கடுக்காய்தூ ளுகரத்தூட் டுஞ்சுக்குங்
குங்கிலியங் காந்தமுஞ் சேர்த்
திடு வருதூட் செய்தாலத் தின்புறத்திற்
கூட்டியுமெள் ளெண்ணெய் விட்டுப்

படுசெம்பி னலரைத்துக் குழம்பாக்கிச்
சிமிழிட்டுப் பார்வைதன்னிற்
கடுகிடநோய் பலதீருங் கதிரொளிபோற்
கண்ணொளியுங் காணுந்தானே. (௬௰௨)

(இ-ள்)

கடுக்காய்த்தூள் நாகரவண்டுத்தூள்
சுக்கு கருங்குங்கிலியம்
துரிசு
காந்தத்தூள்

இவைகளைச் சமமெடை எடுத்துக் கல்வத்திலிட்டுத் தூள் செய்துகொண்டு வெண்கலத் தாலத்தின் பின்புறத்தில் சுத்த மான எள்ளெண்ணெய்விட்டுச் செம்பினலரைத்துக் குழம் பாக்கிச் சிமிழிலடக்கஞ்செய்து 2 மாதம் சென்றபின்பு, ஒரு கோலில் கடுகளவெடுத்துக் கண்ணிலிடப் பற்பல கண்ரோகங் கள் தீருவதுடன் கண்களும் சூரியனைப்போலப் பிரகாசிக்கும்.

குறிப்பு:— நாகாவண்டுத்தூள் — பாம்புப் புத்துக்களில் கிடைக்கும் வண்டுகளின் உடம்பிலுள்ள தோல்.

## 54. நயன ரோகத்திற்குத் "தேன் குழம்பு"

(உள்ளுக்கு)

புண்ணுக்குச் சுட்டெடுத்த பொடிசங்கின்
பொடி கடுக்காய்ப் பொடியானைக்கற் பொடி
எண்ணிவைகள் சமமிடித்துப் பொடியிதிற்
கருப்புட்டியும் பிரண்டை நாக்கு
திண்ண துண்டு வளையமுங் கூட்டியே
நேகரைத்திது தேனுடனீட்டுவாய்
பண்ணு நாற்பது நாள்கொடு பத்தியம்
பருப்பவரைவிளக் கெண்ணெயாகுமே. (௬௰௩)

(இ-ள்)

எள்ளுப்புண்ணாக்கைச் சுட்டெடுத்த பொடி, சங்கு, பற்பம், கடுக்காய்த்தூள், ஆனைக்கல்லின் பொடி இவை களைச் சமமாக இடித்துப் பொடியாக்கி வஸ்திரகாயம் செய்து

வைத்துக்கொண்டு, பனைவெல்லம், பிரண்டையின் நடுத் துண்டுகள் (கணுக்களை நீக்கவும்), தாமரையிலைச்சுருள், இவைகளையுமொன்றுகூட்டி நேகவரைத்துத் தேன்விட்டுப் பிசைந்து லவத்துக்கொண்டு 40 நாளைக்கு உள்ளுக்குக் கொடுத்துப் பத்தியம் வைக்கவும். நயன ரோகங்கள் பலவும் தீரும்.

பத்தியம்:— பருப்பு, அவரைக்காய், விளக்கெண்ணெய் கூட்டவும்.

---

## 55. கண் ரோகத்திற்குக் 'குழம்பு'

மூத்த புங்கின் பட்டை நீறும்
ஊருதேனு மேசமன்
சேர்த்துப்பச்சைக் கர்ப்பூராதி
சேர் மூன்று பணவெடை
யேத்தகளிம் பேருங்கலத்
திட்டுமிற்று மோர்கலந்
தேய்த்துச்சிக்கெ னும்பதத்தில்
சேர்வையாய்வ ழித்தெடேன். (௱௰௪)

வழித்துமேல்வ ளையிற்குப்பி
தன்னில்வைத்துக் கொண்டிதை
விழிக்கொருப யற்றளவாய்
மீட்டுங்காசம் பில்லமும்
இழித்திமிரம் விரணம் பூவி
லெறிநீர்ப்பாய்ச்சற் படலங்கள்
அழித்தசுக்கி ரப்படல
மநேகநோய்க டருமே. (௱௰௫)

(இ-ள்)

முற்றிய புங்கமரப்பட்டையைக் கொண்டுவந்து, கல்லுரலி லிட்டு இடித்துச் சாறுபிழிந்து (½ சேர்) சமனளவு தேன்விட்டு, பச்சைக்கர்ப்பூரம் மூன்று பணவெடை எடுத்து, அது நன்றாக

அரைபடும்வரை அரைத்துப் பிறகு அதை ஒரு செப்புக் கல்வத்திலிட்டுச் செப்புக்குழவியால் பச்சை நிறமாகும் வரை அரைத்து, ஒரு சீசாவில் வைத்துக்கொண்டு, 6 மாதஞ் சென்றபின் அதில் ஒரு பயறளவு கோலிலெடுத்துக் கண்ணிலிட,

காசம், பில்லம், திமிரம், இரணம், பூ, எரிநீர்பாய்ச்சல் படலம், சுக்கிலப்படலம் முதலிய பல நோய்கள் தீரும்.

---

## 56. நயன வியாதி, பூவிற்கு மருந்து

மதுர மண்டையோரி தட்டாமரை துத்தங்
குதிரைப்பல்லும் வெட்புலா வேர்ப்பட்டையுங் கொண்டு
விதுபுளித்த தேன் வார்த்தரைத் திடுங்கலப் புரத்தி
லிதனைச் சாரித்து விழிக்கிட வேகும் பூவிடமே. (௱௰௬)

(இ-ள்)

அதிமதுரம் வெந்தமண்டையோடு ஓரிதழ்தாமரைவேர் துத்தம் குதிரைப்பல் வெட்புலாவேர்பட்டை

இவற்றைச் சமமெடையெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்துப் பின்பு, புளித்த தேன் வார்த்தரைத்துத் துணியில் நன்றாக வடிக்கட்டி வைத்துக்கொண்டு நெல்லெடை கண்ணிலிடப் பூ தீரும்.

---

## 57. நயன வியாதிக்கு மருந்து

இந்துதுத்தஞ் சுக்குவெள்ளைச் சாரணைவேர்
சமமாக விவைபொடித்து
முந்துபசுந் தேனதனா லரைபச்சைக்
கர்ப்பூர மொக்கச் சேர்த்து
மந்தமுறு கண்வலிக்கு நீரடி பில்
லந்தனக்கு மாற்றாகும்
இந்துலகிற் குபகார மனுநீதிச்
சரபேந்திர னியம்பிதாமே. (௱௰௭)

(இ-ள்)

இந்துப்பு துத்தம் சுக்கு
வெள்ளைச்சாறணைவேர்

இந்நான்கையும் சமமெடுத்து நன்ருக இடித்துப் பொடித்துத் துணியில் வடிக்கட்டி மறுபடியும், தேன் விட்டரைத்து, அதனுடன் பச்சைக்கர்ப்பூரம் சேர்த்து மறுபடியும் துணியில் வடிக்கட்டிச் சிமிழில் வைத்துக்கொண்டு, மந்தப் பார்வையுடைய கண்ரோகங்களுக்கும், நீர்வடிதல், பில்லம், முதலான நேத்திர நோய்களுக்கும், 1 மாதம் சென்றபின் கடுகளவு கண்களிலிடக் குணம் தரும் நல்ல மருந்தாகும்.

குறிப்பு:—
சரக்குகள், பச்சைக்கர்ப்பூரம் முதலியவைகளை வகைக்கு 1 வராகனெடை எடுத்துக் கொள்க.

---

## 58. நயன வியாதிக்கு மருந்து

அரிதகித்தூட் பணிலத்தூட் புண்ணாக்குச்
சுட்டபொடி யானைக்கல்லின்
உரியதூ ளிதுசமமா மிப்பொடியை
வடிக்கட்டி யுற்றதேனில்
விரியவே குழைத்துப்பின் கண்ணிலிடப்
படல வீக்கங் கண்ணிற்
பிரிசநீர்முட் டல்சிவப்ப மாங்க
டிமிர முதற் பெயர்ந்து போமே.

(இ-ள்) (௱௰அ)

கடுக்காய்தூள் புண்ணாக்குச்சுட்டபொடி (எள்)
ஊதுசங்கின் தூள் ஆனைக்கல்லின் தூள்

இவற்றைச் சமமாய்ப் பொடித்து வஸ்திரகாயம் செய்து தேனினல் நன்கு அரைத்து 1 மாதம் சென்றபின் கடுகளவெடுத்துக் கண்களிலிட,

படலம், வலி, வீக்கம், கண் பிரிசல், நீர்முட்டல், கண் சிவப்பு, திமிரம்.

முதலிய நோய்கள் தீரும்.

குறிப்பு:—

1. பணிலம்-சங்கு
2. 54 ெந. மருந்தாகிய "தேன்குழம்பையும்" கவனிக்கவும்.

---

## 59. நயன வியாதிக்கு "அஞ்ஜனம்"

எண்ணுமர மஞ்சளுமி
ராஞ்சனத்தி ரண்டொன்றில்
உண்ணுமுலைப் பாலினு லுரைத்துக்
கண்ணிலூட்டவே
நண்ணிமை யெரிச்சலுடன்
நயனத் தரிப்பும் விட்டுக்
கண்ணொளி துலங்குஞ் சிவ
கருணை தன்னாற் காணுமே. (சாயகூ)

(இ-ள்)

மரமஞ்சளையாவது அல்லது ரஸாஞ்சனத்தையாவது முலைப்பாலினுலுரைத்துக் கண்களிலூட்ட இமையெரிச்சல், நயனத்தினரிப்பு, நீங்குவதோடு கண்ணொளியும் துலங்கும்.

---

## 60. பிரிசல் நோய்க்கு மருந்து

கருவையிலை துவைத்துரிநீர்
காணவிட் டுப்பிசைந்தே
பிரிய வடிகளிய லகு
பெருங் கடுக்காய் கூட்டி
யரை கலந்து காய்ச்சக்
குழம்பாகும் புழுகுகூட்டிப்
பிரிசற் கண்ணிலிடச்
சரபப் பெருமான் மையிதாமே. (சஉய)

(இ-ள்)

கருவேலங் கொழுந்தைத் துவைத்து ½ படி தண்ணீர் விட்டுப் பிசைந்து, அதனுடன்
கடுக்காய்த்தூள், களிப்பாக்கு

இவ்விரண்டையும் (1 வராகனெடை) கூட்டி நன்ருக இரண்டு நாளூரவைத்துப் பிழிந்து வடிக்கட்டி நன்ருக அலம்பிய ஒரு புதுச்சட்டியிலிட்டு, அனலில் வைத்துக் காய்ச்சக் குழம்பு பதமாகும். நன்கு ஆறியபின், புனுகு ஒரு குன்றி எடை கூட்டிக் குப்பியிலடைத்து வைத்துக்கொண்டு எள்ளெடை கண்ணிலிடப் பிரிசல் நோய் தீரும்.

---

## 61. நயன வியாதி, பித்த, நீலகாசத்திற்கு 'அஞ்ஜனம்'

கழுதை நாய் நரி கரித்தந்தங்
கலைக் கொம்புங் குதிரை
முழுதுப் பல்லுடன் முரி
துத்தந் துரிசதி மதுரந்
தழுவிலவங் கஞ்சாதிக்
காயேலமுஞ்சமமாய்ப்
பழுவெலுமிச் சம்பழரச
மிளநீரோலரைத்தே. (௱௨௧)

அரைத்துப் பின் பச்சையான
கர்ப் பூரமுங் கூட்டி
விரைத்துலர்த்திப்பின்
மெல்லியரிள முலைப்பாலி
லுரைத்துக் கண்ணிமையுற்
றிடவிடுமிதுக்கேகு
நிரைத்திடாப் பித்த காசங்
கண்ணீல காசமுமே. (௱௨௨)

(இ-ள்)

| | |
|---|---|
| கழுதைப்பல் | நாய்ப்பல் |
| நரிப்பல் | யானைத்தந்தம் |
| கலைமான் கொம்பு | குதிரைப்பல் |
| துத்தம் | துரிசு |
| அதிமதுரம் | கிராம்பு |
| சாதிக்காய் | ஏலக்காய் |

இவைகளைச் சமமாகயெடுத்துக், கல்லுரலிலிட்டிடித்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு, இளநீர் இவற்றை ஒவ்வொன்ருய் விட்டு அரைத்துப், பச்சைக்கர்ப்பூரம் கூட்டிப் பின்னுமரைத்துக் காயவைத்துக் குழம்பாக்கி, 3 வருடம் சென்றபின், முலைப்பாலிலிழைத்துக் கடுகளவு கண்ணிலிட நீங்காத பித்தகாசம், நீலகாசம், முதலிய பலவித நயன ரோகங்கள் தீரும்.

---

## 62. வெள்ளெழுத்துக்கு

குமிழம் வித்தினை கோதையர் கொங்கைப் பாலதனல்
விமலா யாரைத்திடுங் கண்ணில் வெள்ளெழுத் தேகுங்
கமழும் பூமகிழின் விதைப் பருப்பினைக் கன்னித்
தமது கொங்கைப் பாறனிடத் தள்ளும் வெள்ளெழுத்தே. (௱௨௩)

(இ-ள்)

1. குமிழம் விதையைப் பிள்ளைப் பாலிலிழைத்துச் சிறு பயறளவு கண்ணிலிட்டுவர வெள்ளெழுத்துத் தீரும்.

2. மகிழம் விதையை உடைத்து உள்ளிருக்கும் பருப்பைப் பிள்ளைப்பாலிலரைத்துக் கடுகளவு கண்ணிலிட வெள்ளெழுத்துத் தீரும்.

---

## 63. இழிகண்ணுக்குக் களிம்பு

சாணப்பா லெருக்கம்பாலுஞ் சீலையிற்று
ணிறையப்புகட்டி நிழலிலே
பூணக்காய்ந் தெடுத்துக் குறிஞ்சாவிலைப்புகைச்
சாற்றிலுந்தோய்த் துலர்த்தியதை
வேணவரப்பசுநெய்யி லுந்தோய்த் துடன்விளக்கிற்
பற்றமைவைத் தெடுத்துப் பின்னைத்
தோணுந்துத்தந் துரிசுசமன் கொண்டுதா
ளிட்டுப்பசு வெண்ணெயுந் தொக்கவே. (௱௨௪)

கூட்டியோர் கலத்தாலிழைப்பாயிது
கூறுமைக்களிம் பாகுமன்னுள் விட்டு
மாட்டு மற்ற நாள் பொடி கண்ணுளே
வந்திழிச்சக் கண்ணும் பிரிசக்கணு
மோட்டிடு மாறிநல்லகண் ணாகுமென்று
உலகினிற் பிணியான விருணீக்கச்
சேட்டிளம் பருதியென்று தளஞ்செய்
செங்கோலாற் சரபோசிதன் றிறமையே. (௱உ௫)

(இ-ள்)

சாணிப்பால், எருக்கம்பால், இவ்விரண்டையுமொன்ருகச், சேர்த்துக் கெட்டியான பதத்திலிருக்கும்போது அதை யொரு துணியில் நன்ருகவூட்டி நிழலிலே காயவைத்துக்கொள் ளவும். பின்பு, குரிஞ்சானிலையை யரைத்துப் பிழிந்த சாற்றில் முன்னே சொன்ன துணியை மறுபடியும் தேய்த்துக் காயவைத்துக்கொள்ளவும். இதை ஒரு திரியாகத் திரித்துப் பசுவின் நெய்யில் நனைத்து, ஒரு அகலில் நெய்யை வார்த்து அதில் மேலே சொல்லி இருக்கும் திரியைப் போட்டு அடுப்புக்கூட்டி, மத்தியில் அவ்விளக்கை வைத்து, அடுப்பின் மேல் ஒரு புதுச்சட்டியை அலம்பித் துடைத்துக் காயவைத்து, அதைக் கவிழ்த்துவைத்து விளக்கை எற்றவும். எரிந்து முடிந்த வுடன் சட்டியின் அூறில் பற்றியிருக்கும் மை (கரி) யைச் சுரண்டி யெடுத்துக்கொண்டு, அதனுடன்

பொரித்த துத்தம்—1 குன்றியெடை
சுட்ட துரிசு — ,,

இவ்விரண்டையுஞ் சேர்த்துக் கல்வத்திலிட்டு (செம்பு) வேண்டிய அளவு பசுவெண்ணெய் கூட்டியரைத்துச் சிமிழில் பத்திரப் படுத்துக. செப்புச்சிமிழி நலம். ஒருவாரஞ்சென்று கடுகளவு இந்த மையை எடுத்துக் கண்களிலிட இழிக்கண், பிரிசல்கண், முதலியவை மாறிப் பார்வை தெளிவு பெறும்.

---

## 64. நயன வியாதிக்கு மருந்து

கிறுத்தரை வராகனெடை
நேர் துரிசு துத்த
மரைத்தவளக் குங்கிலிய
மாகுஞ் சீனிக்காரம்
உரைத்தகத் தூரிமஞ்சள்
ஓங்கிவைகள் கொண்டே
விரித்தவிள வெற்றிலையின்
வேம்பின் நெய்யும் பூசே. (௱௨௬)

பூசிச்சுடர் மூக்கினிதைப்
பூணும்படி வாட்டிப்
போசனத்தின் தாளமதிற்
புறத்தூரிற் போட்டே
காசிச்செம்பி னாலிதனைக்
காண்கரிப்பான் சாறும்
வீசிக்குழி மீட்டான் நீர்
விட்டரைக்க மேலே. (௱௨௭)

வெற்றிலைக்காம் பதனிலெண்ணெய்
மேல் தடவி வாட்டி
யற்றைப்பிழிந் தரையதின்பி
னாகும்படி கேளு
துத்தந்துரி சுப்பொடிகள்
தூவிப்பொன்னாங் காணீ
யுத்தநிம லிப்பழச்சா
றாட்டியரைப் பாயே. (௱௨௮)

பாயும்பசு வெண்ணெயிலும்
பாங்காயரைச் சேர்வை
நீயுமிதைச் சிமிளி தனி
லேயடைத்துப் பார்வை
நோயும்புகை பூகுருடு
நோகுஞ் சுக்கிரஞ்சூலை
வாயுப்புழுப் பீளையுத்த
வகைக்கெல்லாம் மாட்டேன். (௱௨௯)

மாட்டிரு கடுகளவு
வாங்கிநய னத்தில்
மூட்ட மூன்று நாளைக்கொரு
முழுக்குவிளக் கெண்ணெய்
போட்டுத்தலை முழுகு போ
குங்கண்ணோ யெல்லாம்
நாட்டுச் செங்கோல் சரபோசி
ராசன் முறை தானே. (௯௬)

(இ-ள்)

பொரித்த துரிசு வெள்ளைக்குங்கிலியம்
துத்தம் சீனக்காரம்
கஸ்தூரி மஞ்சள்

இவைகளை வகைக்கு ½ வராகனெடை யெடுத்துக் கொண்டு, ஒரு இளம் வெற்றிலையின்மேல் வேப்பெண்ணெயைப்பூசி, சற்று நெருப்பில் வாட்டி, சாப்பிடும் வெங்கலத் தட்டைக் கவிழ்த்து அதன் பின்புறத்தில் வெற்றிலையுடன் மற்ற சரக்குகளையும் வைத்துக் காசிச்செம்பைக்கொண்டு கையாந்தகரைச் சாறும், நத்தைச்சூரி இலையின் சாறும் சேர்த்து அரைத்து வைத்துக்கொள்ளவும்.

வெற்றிலைக் காம்புகளின்மேல் வேப்பெண்ணெயைத் தடவி வாட்டி அவைகளைப்பிழிந்த சாற்றினாலரைக்கவும். பின்பு, துத்தம், துருசு, அவைகளை முன்போலக்கூட்டி, அம் மருந்தைத் திரும்பவும் பொன்னாங்காணிச்சாறு விட்டரைத்து, இரண்டாம் தடவையாக எலுமிச்சம்பழச்சாறு விட்டு மறுபடியுமரைத்தபின், மருந்துகளுக்குத் தக்க அளவு பசுவெண்ணெய் கூடச்சேர்த்துக் கல்வத்திலரைத்துச் சிமிழில் அடைத்து வைத்துக்கொள்ளவும். இதை ஒரு வாரம் சென்றபின் இரு கடுகளவெடுத்து ஒவ்வொரு கண்ணிலுமிடப் பார்வை சம்மந்தமான நோய்களும், பூ, கண்குருடு, வலிதரும் சுக்கிரப்படுவன், சூலைவாயு, புழுவெட்டு, பீளைசாரல், இந்நோயெல்லாந் தீரும்.

மூன்று நாளைக்கொருமுறை ஆமணக்கெண்ணெய் தேய்த்து முழுகவும்.

குறிப்பு:—

காசிச்செம்பு = செப்புப்பாத்திரம்

## 65. நயனப் படலத்திற்கு மருந்து

பழு பாகலிலேச் சாற்றிற் பகர் துரிசுக்கட்டி
முழுகவிட்டு யிந்தப்படி மூன்றுநாளைக் கொருக்கா
லொழுகவிட்டுச் சுவறியபின் னெளிரவியில் வைத்தே
வழுவுடைய கண்ணுக்கிடும் வகைகளது கேளே. (௬௧)

வைத்திதை யெடுத்தரிசி மட்டாய் வெண்ணெய் வைத்தே
மத்தித்திரு கண்ணிலிட வளர்படலங் காச
மித்தனையுந் தீரும்படி யின்னமொன்ற டப்பம்
வித்தைமுலைப் பாலுரைத்து விழிக்கிடப்பூப் போமே. (௬௨)

(இ-ள்)

(1) வேண்டுமளவு பழு பாகலிலேச்சாறு பிழிந்துகொண்டு, அதில் துரிசுக்கட்டியை முழுக்கும்படி போடவும். இந்தப்படி 3நாளைக்கொருதடவை புதுப்புதுச் சாற்றைவிட்டு நன்ருகச், சுவறியபின் வெயிலில் வைத்து உலர்த்தியெடுத்துக்கொண்டு ஒரு அரிசியளவு வெண்ணெயில் கட்டியைச் சிறுக இழைத்து நன்ருக மத்தித்துக் கடுகளவு கண்ணிலிட, படலம், காசம், முதலானவை தீரும்.

(2) இன்னெரு மருந்து:—

அடப்பம் விதையை முலைப்பாலிலிழைத்துக் கண்ணிலிட பூ தீரும்.

குறிப்பு:—

அடப்பம் என்பது சடப்பமரம்

---

## 66. நயன வியாதிக்குப் புழுவிழ மருந்து

புனிதமாங்கர்ப்பூரத்தைப்
பொடி செய்து பசுவின் வெண்ணெய்
தனிலிதைக் குழைத்துத் தாலப்
புறந்தனிலிட்டோர்தாலங்
கனிதரத் தேய்த்து மையாய்க்
கண்டொரு சிமிழில் வைத்துந்
தனைவிழிப் புழுவெட்டுக்குந்
தானிடுஞ் சாகுந்தானே. (௬௩)

(இ-ள்)

வேண்டுமளவு பச்சைகர்ப்பூரத்தைப் பொடிசெய்து பசுவின் வெண்ணெயிலரைத்து மையாக்கி ஒரு செப்புச்சிமிழிலடைத்து வைத்துக்கொண்டு, கடுகளவு கண்ணிற்குள்ளிட்டு இமையோரங்களிலும் மெல்லியதாய்த் தடவிவரப் புழு இறந்து ரோகம் தீரும்.

---

## 67. நீலகாசத்திற்கு மருந்து

*நீலகாசத்தைப்போக்கிட நிகழ்துவன் பசுவின்*
*பாலிற் பூநாகமிட் டதுபதத்தில் வெந்துலர்த்தி*
*ஏலமுங் கிளிஞ்சிலு மிணக்கிடும்பசுவெண்ணெ*
*யாலரைத்தொரு சிமிழினிலடைத்ததை விழிக்கிடேன்.* (௱௯௪)

(இ-ள்)

பசுவின்பாலில், பூ நாகத்தை (நாங்கூழ்ப்பூச்சி) இட்டுப் பதமாய் வேகவைத்து வெயிலில் வைத்து உலர்ந்த பின் ஏலக்காய், கிழிஞ்சில் இவையிரண்டையும் பொடிசெய்து, பூ நாகத்துடன் சேர்த்துப் பசுவெண்ணெயுட னெல்லாவற்றையுமரைத்துச் சிமிழிலடைத்து வைத்துக்கொண்டு, கடுகளவு கண்களிலிட நீலகாசம் நீங்கும்.

---

## 68. நயனப் பூவுக்கு மருந்து

*உத்தமேனிச் சாறேடு துளி நெல்லிடை துருசுத்*
*துத்தமவ் விடையது பொரித்தொரு கலத்துறில்*
*வைத்து மேற் பசுவெண்ணெயால் மத்தித்தோர் சிமிழி*
*லுத்தரைத்திரு கண்ணிலிட வோடும் வெள்ளெழுத்தே.* (௱௯௫)

(இ-ள்)

துருசு—நெல்லெடை
துத்தம்— ”

இவ்விரண்டையும் பொரித்துக் கலத்துறில் வைத்து, குப்பைமேனிச்சாறு அதன் மேலொருதுளிவிட்டு அதனுடன் பசுவெண்ணெய் (நெல்லிக்காயளவு) சிறிது கூட்டிச் செப்பு

பாத்திரத்தாலரைத்து, ஒரு சிமிழில் வைத்துக்கொண்டு கடுகளவு கண்களிலிட வெள்ளெழுத்து நீங்கும்,

---

## 69. நயன வியாதி, இழிகண் மருந்து

மண்ணெடுத்துப் பொடிசெய்து முக்கடுகின்
பொடி கூட்டி மையிடச்சாத்தி
வெண்ணெயிட்டுக் கலப்புரத் தப்பியதை
மற்றுமொரு மென்கலத்தால்
நண்ணுபுறத் தாலுமிழைத் துடனெடுத்துச்
சிமிழிலடை நல்லமையைக்
கண்ணிலிடப் புழு வெட்டு மிழிகண்ணும்
தீருமிதைக் கருதிச் செய்யே. (௬௰௯)

(இ-ள்)

செம்மண்ணைக்கொண்டு வந்து நன்றாக வஸ்திரகாயம் செய்து, அதனுடன் சுக்கு, மிளகு, திப்பிலிப் பொடியையும் (சமனெடை) சேர்த்து வறுத்து நன்றாகக்கருக்கி, அத்துடன் பசு வெண்ணெய் சிறிது கூட்டிக் கலப்புறத்தில் வைத்து, மற்றுமொரு பாத்திரத்தால் களிம்புண்டாகும்படி யரைத்துச் சிமிழிலடைத்து வைத்துக்கொண்டு, கண்களின் மேலிமையினோரத்திலிம்மையைத் தடவிவரப் புழுவெட்டும், இழிகண்ணும் தீரும்.

---

# 4. நயன ரோகங்களுக்கு உருண்டைகளும் மாத்திரைகளும்

## 70. நயன ரோகத்திற்கு உருண்டை

சங்குதுத்த மூங்கடல் நுரையோரிதட் டாமரை
மங்குசிறுப் பூளை சிறு கீரைமற்ற புள்ளடி
பொங்கதி மதுரம்பொன்னாங் காணியைந்து வேர் வகை
தங்கழஞ்சு வொவ்வோரொன்று தான்புழுகோர் பணமிட.
(௭௰)

7 OCT 1974

இட்டெலுமிச் சம்பழா சத்தினால ரைத்திதைத்
தட்டந்தன்னி லிட்டுமற்றோர் தட்டந்தன்னற் சாரித்தே
கட்டவே குளிகைநிழற் காய்ந்தெடுத்துக் கன்னியர்
வட்டமுலைப் பாலிலிட்டு மாட்டு நேத்திர நோய்க்கெலாம்
(௬௩௮)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| பொரித்த சங்கு | கடல்நுரை | ஓரிதழ்த்தாமரைவேர் |
| ,, துத்தம் | அதிமதுரம் | சிறுபூளைவேர் |
| சிறுகீரைவேர் | சிறுபுள்ளடிவேர் | பொன்னாங்காணிவேர் |

இம்மருந்துகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்துக்கொள்ளவும். இவைகளையிடித்து வஸ்திரகாயஞ் செய்த பின் இத்தூளைக்கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறுவிட்டு நன்றாக அரைத்து, புனுகு 1 வராகனெடையும் சேர்த்துமறுபடியுமரைத்துக் குளிகைகளாகச் செய்துகொண்டு, நிழலில் காயவைத்தெடுத்து வேண்டும்போது முலைப்பால் விட்டிழைத்துக் கடுகளவு கண்ணிலிட, நேத்திர நோய்களெல்லாம் மாறும்.

---

## 71. நயன ரோகத்திற்கு "மாத்திரை"

முத்தீரைந்து பவழமைந்து
மோதுவெள்ளி பொன்னுடன்
மெத்தயப் பொடித்திராப்
பொடியும்வெண்க லப்பொடி
தத்தம்வகைக் கோர்பண
வெடையதாகு மேமயிற்
றுத்தமரைக் காற்பண
வெடைசொல்திப்ப லிரெண்டே (௬௩௯)

காந்தமரைக் காசுமிந்தக்
கண்மருந்து பத்தையும்
போந்தை மட்டைச்சாற்றினா
லரைத்துருண்டை போட்டிடு

காந்தைமூலைப் பாலிலுரைக்
கண்ணிலிடப் படலமும்
போந்தவிழி நோயுமிழி
கண்புகைச்சற் போக்குமே (௯௪௰)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| துளையிடாதமுத்து | 10 | பணவெடை |
| பவழம் | 5 | பணவெடை |
| வெள்ளி | 1 | பணவெடை |
| பொன் | 1 | பணவெடை |
| அயப்பொடி | 1 | ,, |
| திராப்பொடி | 1 | ,, |
| வெங்கலப்பொடி | 1 | ,, |
| பொரித்ததுருசு | ¼ | ,, |
| அரிசித்திப்பிலி | 2 | ,, |
| காந்தம் | ½ | காசெடை |

இப்பத்துவகை மருந்துச் சரக்குகளையும் இளம் பனை மட்டைச் சாற்றினாலரைத்து மாத்திரையாகத் திரட்டி நிழலி லுலர்த்தி வைத்துக்கொண்டு 6 மாதங்கள் கழித்துப் பிள்ளைப் பாலிலிழைத்துக் கண்ணிலிடப் படலம், விழிநோய்கள், இழி கண், புகைச்சல் முதலியநோய்கள் தீரும்.

---

## 72. நயனரோகத்திற்கு 'மாத்திரை'

கடலினுரை சோகிசங்கு
காரமிளகு தேத்தான்வித்
திடையதுசம னிதைப்
பேயின் கருப்பஞ் சாற்றினா
லுடனரைத்து ருண்டை செய்
துலர்த்திமுலைப் பாலிலே
இடநயன ரோகத்திருபதாண்டில்
நேரும் பூவும் மாறுமே (௯௪௨)

(இ-ள்)

| | |
|---|---|
| கடல்நுரை | சோழி (சுட்டது) |
| சங்கு (சுட்டது) | மிளகு |
| தேற்ருன் வித்து (சீவியது) | |

இவைகளைச்சமமாக எடுத்துப் பேய்க்கருப்பஞ் சாற்றினு லரைத்து மாத்திரையாகத்திரட்டி, நிழலிலுலர்த்தி முலைப் பாலிலிழைத்துக் கண்ணிலிட 20 வருடங்கள் சென்ற பூவும் மாறும்.

---

## 73. நயன ரோகத்திற்கு 'மாத்திரை'

ஏற்ற துத்தஞ் சங்குஞ் சோகி யிந்துப்புந்திரிபலை
தேற்ருன்வித்து தாம்பிரப் பொடி த்ரிகடுகுடன்
சாற்றரப்பொடி யிராஞ்சன மஞேசிலையுடன்
ஆற்றப் பச்சைக் கற்பூராதி நல்லபடிக் காரமே. (௱௪௨)

வசம்பிரத மஞ்சனக்கல் மதுரமுங் கோரோசனை
கிசங்கடல் நுரைகாரீயம் நேகுந்தலை யோட்டுட
னிசை வெங்கார மோர் வகைக்கோர் கரசெடை
[புங்கின்பட்டை
ரசங் கொண்டரை மூன்று நாள் நறுநிழலிலுலர்த்திடேன். (௱௪௩)

கண் வியாதி யின்னதென்று கண்டனுபா னங்களில்
உண் முலைப்பால் நந்தியாவட்டைப் பூவிலைநீர் தேனுடன்
பண்கையாந்த கரைப்பனை மட்டைசாற ணையிலைத்
தண்ணீராலு ரைத்திடக்கண் சாறுநோய்க டீருமே. (௱௪௪)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| துத்தம் | சங்கு (சுட்டது) | சோழி (சுட்டது |
| இந்துப்பு | கடுக்காய்த் தோல் | நெல்லிவற்றல் |
| தான்றிக்காய்த்தோல் | தேத்தான் விரை | தாம்பிரப்பொடி |
| சுக்கு | மிளகு | திப்பிலி |
| அரப்பொடி | ரஸாஞ்ஜனம் | மஞேசிலை |
| பச்சைக் கற்பூரம் | படிக்காரம் | வசம்பு |
| ரஸம் | அஞ்ஜனக்கல் | அதிமதுரம் |
| கோரோசனை | கடல்நுரை | காரீயம் |
| வெந்தமண்டையோடு | வெங்காரம் | |

இச்சரக்குகளில், சுத்தி செய்ய வேண்டியவற்றைச் சுத்தி செய்து, பொரிக்க வேண்டியவைகளைப் பொரித்து வகைக்கு ஒரு காசெடையெடுத்துக் கல்வத்திலிட்டுப், புங்கம்பட்டைச் சாற்றினல் மூன்று நாள் நன்ருக அரைத்து, மாத்திரை யாகத்திரட்டிக் கொள்ளவும். இவைகளை நிழலிலுலர்த்திக் கொண்டு

| | |
|---|---|
| முலைப்பால் | நந்தியாவட்டைப் புஷ்பச்சாறு |
| தேன் | கையாந்தகரைச் சாறு |
| சாறணைச்சாறு | பனைமட்டைச் சாறு |

இவைகளில் நோய்க்குத்தக்க ஏதேனுமொரு சாற்றில் மாத்திரையை இழைத்துக் கண்களிலிடப் பலவித கண் நோய்கள் தீரும்.

---

## 74. நயன ரோகத்திற்கு "மாத்திரை"

மிளகு சுக்கு தான்றியின்
விதை கடுக்காய் நெல்லியும்
பளகுபீத ரோகிணி
பசுக் கழுதைப் பல்லுட
னிளகு பொன் மெழுகதி
மதுரஞ்சங்கி வைசம
னளவுமுலைப் பாலைவிட்
டரைத்துருண்டை யாய்ச் செய்தே, (௯௪௫)

உலர்த்தியனு பானத்தி
லுரைத்திட நயனத்திற்
பலத்திமிர மூட்டணங்கள்
படலமுடன் காசங்கள்
அலுத்த பில்ல நோய்களெல்லா
மகலுமென்ருர் தஞ்சையின்
நிலைத்தசெங் கோலின்நெறி
நிறுத்தஞ்சர பேந்திரனே. (௯௪௬)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| மிளகு | சுக்கு | தான்றிப்பருப்பு |
| கடுக்காய்த்தோல் | நெல்லித்தோல் | பீதரோகிணி |
| பசுவின் பல் | கழுதைப்பல் | பொன்மெழுகு |
| அதிமதுரம் | சங்கு (சுட்டது) | |

இவைகளைச் சமனளவெடுத்துக் கல்வத்திலிட்டு முலைப் பால்விட்டு நன்றாகவரைத்து மாத்திரையாகத் திரட்டிக்கொள் ளவும். இதை நிழலில் உலர்த்திக்கொண்டு, தகுந்த அனுபா னத்திலுரைத்துக் கண்களிலிடத்

| | |
|---|---|
| திமிரம் | உஷ்ண ரோகங்கள் |
| படலம் | காசம் |
| பில்ல நோய்கள் | |

முதலியவைகளெல்லாம் தீரும். ஒரு ஆண்டு சென்ற பின் இம்மாத்திரையை உபயோகப்படுத்தவும்.

---

## 75. நயன வியாதிக்கு 'மருந்து'

வனத்துரை கருத்துடல் வராக மருப்பொரும்
புனத்துரையுமாமையுரம் பூணெலும்புங் கோழி
தனுத்த நெஞ்செலும்பும் வெள்ளிதானுஞ் சமபாகஞ்
கனத்த கழித் தேனிலுரை காணுங்கண்ணில்நோய்க்கே. (௱௪௭)

(இ-ள்)

காட்டுப்பன்றியின் சிங்கப்பல், ஆமையின் மார்பெலும்பு, சேவற்கோழியின் நெஞ்செலும்பு, வெள்ளிப்பொடி இவை களைச் சமபாகமெடுத்து, நந்தியாவட்டைப் புஷ்பச்சாற்றினு லரைத்து மாத்திரையாகத் திரட்டி, நிழலிலுலர்த்தி 6 மாதஞ் சென்ற பின் தேனிலிழைத்துக் கண்ணிலிடப் பலவித நேத்திர நோய்களுந் தீரும்.

---

# 76. நயனத்தில் காசம், படலம், நத்தைப் படுவனுக்கு மருந்து

சங்கத்தை சம்பீரநீர்
தன்னை விட்டுரைத்துக்கொள்ள
வெங்காரங் கடுக்காய் துத்தம்
வெள்ளிலோத் திரமிந்துப்பும்
பொங்கு திப்பிலியும் வேலை
நுரைபோரு மருந்தையெல்லாம்
பங்குடன் சமமாய்க் கொண்டு
பகரொரு மருந்திற் பாதி. (௱௪௮)

சங்குரைத் ததுவுங்கூட்டித்
தருமுருங் கிலைச்சாற்றாலே
பங்கிடா யரைத்துருண்டை
பண்ணியே நிழலுலர்த்தி
நங்கையர் முலைப்பாலாலே
நயனத்தி லெழுதக்காசம்
பங்கமாம் படலநத்தைப்
படுவனும் பறக்குந்தானே. (௱௪௯)

(இ-ள்)

ஊதுசங்கை எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து வைத்துக்கொண்டு, அதனுடன்

| | |
|---|---|
| பொரித்த வெங்காரம் | கடுக்காய்த்தோல் |
| துத்தம் | வெள்ளிலோத்திரம் |
| இந்துப்பு | அரிசித்திப்பிலி |
| கடல்நுரை | |

இம்மருந்துகளையெல்லாம் சமமாக நிறுத்துக்கொண்டு, மொத்த நிறைக்குப் பாதி சங்கின் விழுதைச் சேர்த்து, முருங்கைச் சாற்றினாலரைத்து உருண்டை பண்ணி, நிழலிலுலர்த்தித் தாய்ப்பாலிலிழைத்துக் கண்களில் கடுகளவு தீட்டக் காசம், படலம், நத்தைப்படுவன், முதலிய ரோகங்கள் தீரும்.

குறிப்பு:—

1. வெள்ளிலோத்திரம் என்ற மருந்துக்கு பதில் விளாம் பட்டையை எடுத்துக் கொள்க.

2. இம்மருந்தை ஒரு வருடஞ் சென்றபின் உபயோகிக்கவும்.

3. சங்கின் விழுது 1 பலமானல் மற்றக் கடைச்சரக்குகளை ஏறக்குறைய 1 தோலா நிறுத்தெடுத்துக் கொள்ளவும்.

---

## 77. நயன வியாதிக்கு மாத்திரை

காட்டுக் கொட்டைவேர் மிளகு திப்பிலி
கண்டசுக்குங் காட்டாமணக்
கூட்டும் பாலிட்டுக் கொண்டரைத் துடன்
குளிகையாட்டி முலைப்பாலிலு
மூட்டுஞ் செம்பீரச் சாற்றிஞலிடு
மூடுஞ்சன்னிக்கும் வாய்வுக்கு
மோட்டுங் தலைவலி விடமுங்காய்ச்சலு
மோங்கிடாமலிது வாங்குமே. (ஈடுல்)

(இ-ள்)

கொட்டைமுத்துச்செடியின்வேர் மிளகு
திப்பிலி சுக்கு

இவற்றைச் சமமாக எடுத்துக்கொண்டு காட்டாமணக்குப் பால்விட்டு நன்ருகவரைத்து, மாத்திரையாகத் திரட்டி வைத்துக்கொண்டு 1 மாதஞ் சென்றபின், சமயோசிதமாய் முலைப் பாலிலாவது அல்லது எலுமிச்சம்பழச்சாற்றிலாவது இழைத்துக் கண்ணிலிடச் சன்னி, வாயு, தலைவலி, விஷங்கள், ஜ்வரம் முதலியவைகள் தீரும்.

---

## 78. நயன வியாதிக்கு மாத்திரை

புங்கம் வித்தோடு பீதரோகிணி
புதிய துத்த மனோசிலை
சங்கஞ் சுக்கொடு மிளகு திப்பிலரி
தாரமோடதிமதுரமு
மங்கரைப்பது நந்திப்பத்திரி
தேனிலாவதி துண்டைசேர்
கங்குல் பற்றிய விழியிலெழுதிடக்
காசமே படலநாசமே. (௱௫௧)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| புங்கம்வித்து | பீதரோகிணி | துத்தம் |
| மனோசிலை | ஊதுசங்கு | சுக்கு |
| மிளகு | திப்பிலி | அரிதாரம் |
| அதிமதுரம் | | |

இச்சரக்குகளையிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு கல்வத்திலிட்டு, நந்தியாவர்த்திப் புஷ்பச் சாற்றினாலரைத்து மாத்திரையாகத்திரட்டி வைத்துக்கொண்டு 6 மாதங்கள் சென்றபின், தேனிலிழைத்து இருள் பற்றிய கண்களில் தீட்டக் காசமும், படலமும் தீரும்.

---

## 79. நயன வியாதிகளுக்குப் பொது மருந்து

சௌவீராஞ்சனந் துரிசுகந்தகஞ்
சந்திரகாந்தமிரசாஞ்சனங்
கவ்வு துத்தமுடன் சங்கு சந்தனங்
காவிக்கற் படிகங்கடல் நுரை
தவ்வியிந்துப்பும் புட்பவஞ்சனந்
திப்பிலி ச்ரோதாஞ்சனம்
நவ்வி சாதிக்காய் துத்தநாக மஞ்
சள்ரசமனோசிலை தாரமே. (௧௫௨)

ஈயமுள்ளி மரமஞ்சள் வெட்டிவேர்
ரத்னாதி வகையொன்பதுந்
தூயதி மதுரம் புளியவேர் விரைத்
தோலும்புளிவசம்பரசிலைத்
தீய பன்றிபசு வெருமையாடு கலை
சிந்தூரத்தின் கொம்புமாம்
நேய வெள்ளி பொன் செம்பிரும்புட
னெய்தமூலவெள்ளி லோத்திரமே. (௱௫௬)

வெள்ளைக் காக்கணம் பொன்னாங்காணியும்
வெட்பூலாவரட் பூலாவேர்
வெள்ளைச் சாரணை மூக்கரட்டையும்
வெங்கலச் சதாவுஞ்சிறு
புள்ளடிச்சிறுக் கீரையுப்புடன்
புங்குங்குமப் பூநெல்லி
முள்ளி கோட்டநற் பாலைகானக்கொள்
முதியார் கூந்தல் வேர் வகைகளே. (௱௫௪)

பீத ரோகிணி முருங்கை வித்துடன்
பேர்கழற்கொடி யினுள் விரை
மாதர் கொங்கைப்பாற் காடியோனீர்வார்
நெய் வெண்ணெய் தயிர் மோருடன்
சீதமாமெலுமிச் சநீரதுஞ்
சிறுகல்லூரி புரசம்பட்டை
ஓது நற்பாலைப் பட்டைசர்க்கரை
யோடுமிதுகளின் னாலுமே, (௱௫௫)

அஞ்சனம் பற்ப நசியங் கண்டுழ
மானபூச்சுட னாத்தடம்
மிஞ்சு நற்பொடி புகைகளுக்கிது
மேன்மையான வகை தேடியே
வஞ்ச நோயகலு மாறுகண்ணுக்கா
மருந்து சேர்வையிது வத்தனன்
தஞ்சையம்பதி தன்னையாளுஞ் சர
போசி ராசன் முறைதானிதே. (௱௫௬)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சௌவீராஞ்சனம் | துரிசு | கெந்தகம் |
| சந்திரகாந்தக்கல் | ரஸாஞ்சனம் | துத்தம் |
| ஊது சங்கு | இழைத்த சந்தனம் | காவிக்கல் |
| ஸ்படிகம் | கடல் நுரை | இந்துப்பு |
| புஷ்பாஞ்சனம் | ஜாதிக்காய் | துத்தநாகம் |
| மஞ்சள் | ரஸம் | மனோசிலை |
| அரிதாரம் | முள்ளி | மரமஞ்சள் |
| வெட்டிவேர் | நவரத்னங்கள் | அதிமதுரம் |
| புளியமரத்தின் வேர் | புளியங்கொட்டைத் தோல் } | பழம் புளி |
| வசம்பு | அரசிலை | பன்றிக்கொம்பு |
| பசுவின் கொம்பு | எருமைக்கொம்பு | ஆட்டுக்கொம்பு |
| யானைத்தந்தம் | வெள்ளி | பொன் |
| செம்புப் பொடி | இரும்புத்தூள் | நெய்தல் வேர் |
| வெள்ளிலோத்திரம் | வெள்ளைக்கரக்கணம் வேர் | பொன்னாங்காணி வேர் |
| வெட்பூலாவேர் | வரட்பூலாவேர் | வெள்ளைச்சாரணை வேர் |
| மூக்கரட்டைவேர் | வெங்கலத்தூள் | சிறுபுள்ளடிவேர் |
| சிறுக்கீரைவேர் | சோத்துப்பு | புங்கம் விதை |
| குங்குமப்பூ | நெல்லிவற்றல் | கோஷ்டம் |
| நல்லபாலைவேர் | முதியார்கூந்தல்வேர் | காட்டுக்கொள்ளு |
| பீதரோகிணி | முருங்கைவிதை | கழல்கொடிப்பருப்பு |
| திப்பிலி | ச்ரோதாஞ்சனம் | |

இவைகளைச் சம எடை யெடுத்துக் கொண்டு நன்றாக இடித்துக் கல்வத்திலிட்டு,

| | |
|---|---|
| முலைப்பால் | அன்னக்காடி நீர் |
| நெய் | வெண்ணெய் |
| தயிரின் தெளிவு | |

இவைகளினாலும்,

எலுமிச்சம்பழச்சாறு, பாலைமரப்பட்டைச்சாறு

இவைகளினாலும் முறையே (1 ஜாமம்) அரைத்துச் சர்க்கரை கூட்டி, மாத்திரையாகவும், பொடியாகவும் செய்து வைத்துக்கொண்டு அஞ்சனமிட்டாலும், நஸ்யஞ்செய்தாலும், கண்டூஷம் (வாய்க் கொப்பளித்தாலும்) மேலே பத்தாகப் போட்டாலும், ஒத்தடமாக இட்டாலும், பொடியைப் புகைத்தாலும் பற்பல மகாகொடிய கண்ணோய்களெல்லாந் தீரும்.

குறிப்பு:—

1. ஸிந்தூரம்—யானை

2. நவரத்னங்களாவன:—கோமேதகம், நீலம், பவழம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம் வைரம்.

---

# 80. நயன வியாதிக்கு மாத்திரை

வெள்ளைக் கல்லுங் கர்ப்பூரம் பலகரை
மிளகுந் திப்பிலியிந்துப்பும்
வெள்ளிலோத்திரஞ் சுக்கரப்பொடி
வேலைநுரை மரமஞ்சளு
முள்ள துத்தஞ் சமபாக மிட்டரைத்
தோக்கு மாதளை தேன் நெய்யால்
கொள்ளு மாத்திரை செய்துலர்த்தியே
குவளைக்கிடு நோயைக் கொல்லுமே. (௱௬௬)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| ஸ்படிகக்கல் | பச்சைக்கர்ப்பூரம் | சோழி |
| மிளகு | திப்பிலி | இந்துப்பு |
| வெள்ளிலோத்திரம் | சுக்கு | அரப்பொடி |
| கடல்நுரை | மரமஞ்சள் | துத்தம் |

இவைகளைச் சமமெடுத்திடித்துப் புளிப்பு மாதுளம்பழச் சாறு, தேன், பசுவின்நெய் இவற்றாலரைத்து மாத்திரையாகத்

திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு 3 மாதங்கள் சென்றபின், தாய்ப்பாலிலிழைத்துக் கண்களிலிடக் குவளையி லுண்டாகும் நோய்கள் தீரும்.

---

# 81. நயன வியாதிக்கு மாத்திரை

கடலினுரை திப்பிலி வெள்ளைக்கல்
விந்து மரமஞ்சள் கர்ப்பூரந்தான்
பொடியாந்துத்தஞ் சுக்குப் பலகரை
வெள்ளிலோத்திரமும் புகல்மருந்து
மிடு சமமாதளம் பழச்சா றுவின்நெய்
தேன்முறையா யிட்டரைத்துப்
படிபுகழ் மாத்திரையுருட்டிக்கவிக்க
மிடவிழிநோய்கள் பறக்குந்தானே. (ாருஎ)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| கடல்நுரை | திப்பிலி | ஸ்படிகக்கல் |
| இந்துப்பு | மரமஞ்சள் | பச்சைக்கர்ப்பூரம் |
| துத்தம் | சுக்கு | சோழி |
| வெள்ளிலோத்திரம் | | |

இவைகளைச் சமமாக நிறுத்தெடுத்துக்கொண்டு நன்றாக இடித்துப் புளிப்புமாதளம்பழச்சாறு, பசுவின்நெய், தேன் இவைகளை ஒன்றன்பின்னொன்றாக விட்டு அரைத்து மாத்திரை களாக உருட்டி நிழலிலுலர்த்தியபின், பிள்ளைப்பாலிலிழைத் துக் கண்ணிலிட விழிநோய்கள் பலவுந்தீரும். மாத்திரையை 6 மாதஞ்சென்று உபயோகிக்கவும்.

---

# 82. நயனவியாதிக்கு உருண்டை

தலைமண்டை யோடுசுண்ணக் கற்சிறுபூ
ளையதின்வேர் சாறெின்றுக்குப்
பலமொன்றுந் துரிசைந்து பல மூன்று
துத்தமிடும் பலம் பொற்காணி

நிலமூல மோர்கழஞ்சி யிதுவெல்லாஞ்
சம்பீர நீரிட்டாட்
டெலிப்புழுக்கை நிகராமிக்குளிகை
தானுருட்டி யெடுப்பாதமே. (௱௫௮)

எடுத்துப்பின் புலர்த்திவைத்து நயனநோய்
வகைதேறி யிதனைமூட்டப்
படுநாவற் பட்டைரச மாதர்முலைப்
பாலிலிடப் பார்வை மந்தம்
அடுத்தகண் ணோயினுக்கு மூன்றுதின
நாவலின்தோல் தனைநறுக்கி
விடுத்திடவே சீராகு மிம்முறையைச்
சரபேந்திரன் விதித்ததாமே. (௱௫௯)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| வெந்த தலைமண்டையோடு | } இவை வகைக்கு | 1 பலம் |
| சிறுபூளைவேரின்சாறு | | |
| சுண்ணாம்புக்கல் | | |
| துரிசு (சுத்திசெய்தது) | | 5 பலம் |
| துத்தம் ,, | | 3 பலம் |
| பொன்னாங்காணிவேர் | | $1\frac{1}{4}$ வராகனெடை |

இவைகளைக் கல்வத்திலிட்டு, எலிமிச்சம்பழச்சாறு வேண்டிய அளவு கூட்டிநன்றாக அரைத்து, எலிப்புழுக்கையளவாக மாத்திரைகளையுருட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு நயன நோய் வகை தெரிந்து, நாகைப்பட்டைச்சாறு அல்லது முலைப் பாலிவற்றிலிழைத்துக் கண்ணிலிடப் பார்வை மந்தம் தீரும். கண்நோய்களுக்கு 3 நாள், நாகமரப்பட்டையை நறுக்கி இடித்த சாற்றிலிம்மருந்தை இழைத்துக் கண்ணிலிடவும்.

---

## 83. நயன வியாதிக்கு உருண்டை

துத்தநாகமுந்தாமிர மிரும்பு வெண்கலத்துள்
வைத்த நற்பவளமுமிது வகைக்கொரு கழஞ்சாய்
முத்துக் காற் கழஞ்சிரதமும் பணவெடை முதலாந்
துத்த முந்துரிசரைக் கழஞ்சிட்டிடத்துவக்கே. (௱௬௰)

எலிமிச்சம்பழச்சாறிட்டு மூத்தினமூறிக்
கலந்து மூன்று நாளூறிடக்கரிசாலைச்சாற்றி
லலந்து நாட்பத்து மூறிட மரிதகி ரசத்தில்
பலம் பதினேருதினமுநீர் பூலாவிட்டரையேன். (௱௬௧)

அரைத்துருட்டிய குளிகையையறு நிழலுலர்த்தி
யுரைத்திடு முலைப்பாலினிலூட்டக் கண்ணேய் போந்
தரைப் புளியிலைச் சாற்றிடத் துர்தசைபரியுங்
குரைக்கு மீருள்ளிச்சாற்றிடக் குந்தம் பூப்போமால். (௱௬௨)

மிகுந்த மந்தாரகாசத்திற்கிடுவது வெற்றிலைரசத்தா
லகத்திச் சாறினலறுத்திடு மிரணசுக்கிரன்
மகத்து நோய்க் கெலாமாத்திரையிது குணமாகுஞ்
சகத்துளோர் பிணிக்கு தவினன் சரபபூபதியே. (௱௬௩)

(இ-ள்)

| | |
|---|---|
| துத்தநாகத்தூள் | தாமிரத்தூள் |
| இரும்புத்தூள் | வெங்கலத்தூள் |
| நற்பவழம் | |

இவைகள் வகைக்கு ஒரு கழஞ்சு

| | |
|---|---|
| துளையிடாதமுத்து | $\frac{1}{2}$ கழஞ்சு |
| ரசம் | 1 பணவெடை |
| துத்தம் | $\frac{1}{2}$ கழஞ்சு |
| துரிசு | $\frac{1}{2}$ கழஞ்சு |

இவைகளைத்தூள் செய்து, ஒரு பாத்திரத்திலிட்டு, எலிமிச்சம்பழச்சாறு விட்டு 3 நாளூறும்படி வைத்து, பிறகு கையாந்தகரைச் சாற்றில் 3 நாளூறவைத்து, 10 நாளைக்கு நிழலி லுலர்த்தவும். கடுக்காய்த்தூள் 1 பலமெடுத்துக் கஷாயஞ் செய்து அதில் 11 நாளைக்கு ஷ சரக்குகளை ஊறவைத்திருக்க வும். அப்பால், சரக்குகளைக் கல்வத்திலிட்டு நீர்ப்பூலாவின் சாற்றினல் அவசரமில்லாமலரைத்து மாத்திரையாகத்திரட்டி நிழலிலுலர்த்திக்கொள்ளவும். இம்மருந்தை 2 வருடங்கள் சென்றபின் முலைப்பாலிலிழைத்துக் கண்களிலிடக் குந்தம், பூ இவைகள் தீரும். வெற்றிலைச்சாற்றிலிழைத்துப்போட மந் தாரகாசந் தீரும். அகத்தியிலைச்சாற்றிலிட இரணசுக்கிரன் கரைந்து போகும்.

கண்களிலேற்படும் பெருநோயெல்லாம் இம்மாத்திரையி னுபயோகத்தினல் தீரும்.

---

## 84. நயன வியாதிக்கு 'மருந்து'

ஆட்டாங்கோரையின் குருத்தும்
பொன்னுங்காணி வேரும்
வாட்டமிலாச் சிறு கீரைவேர்
மற்றிதைத் தண்ணீர்
போட்டரைத் துத்தம் பொடித்
தெலிமிச்சை நீரதனு
லாட்டிமண் குகைக்குள்ளிதை
வைத்தவ்வாயடையேன். (௯௪)

குகை தனக்கு மேற்சாணத்தைக்
கொண்டுடன் மூடி
முகையுங் காட்டெரு முட்டைப் போர்
நடுவினில் வைத்துப்
புகையத் தீயிட்டுப் புடமிட்டுப்
பாகமா யெடுத்துச்
சிகையதாய்ப் பொடி செய்தொரு
சிமிழினிலடையே. (௯௫)

அடைத்துக்கொள் பொடியானதை
யணுவிடுங் கண்ணிற்
றுடைத்துப் போட்டிடு மோமத்தைத்
தூபமுங் காட்டிப்
படைத்து நோய்க் கெல்லாம் பந்தயங்
கூறியும் பாரு
குடைத்தனிச் செங்கோல் கொற்றவேற்
சரபங் கூறு முறையே. (௯௬)

(இ-ள்)

ஆட்டாங்கோரையின் குருத்து
பொன்னுங்காணி வேர்
சிறுகீரை வேர்

இம்மூன்றையுஞ் சமமெடுத்துத் தண்ணீர் விட்டரைத்து, அம்மொத்தையுடன், பொரித்த துத்தத்தைப் பொடித்துத் தூவி எலிமிச்சம்பழச்சாற்றினல் நேகவரைத்து, உருட்டிக் காயவைத்து, இதை ஒரு மண் குகைக்குள்ளே வைத்து ஓடு கொண்டு மூடிவிடவும். பின்பு பசுஞ்சாணத்தினலிதைக் கவசித்துக் காயவைக்கவும். காய்ந்த பின்பு காட்டெரு முட்டையை யடுக்கியதன் நடுவில் குகையை வைத்து மேலும் எரு முட்டையடுக்கித் தீயிட்டுப் புடம்போடவும். ஆறியபின் குகைக்குள்ளிருக்கும் மருந்தைக் கல்வத்திலிட்டு, நன்ருகப் பொடித்தொரு துணியில் வஸ்திர காயம்செய்துகொள்ளவும். ஒரு மாதஞ் சென்றபின் கண் வியாதி எல்லாவற்றிற்கும் இம்மருந்தில் அணுவளவெடுத்துக் கண்ணிலிட்டுப் பின்பு, நெருப்பில் ஓமத்தையிட்டு அதனின்றெழும்பும் புகையைக் கண்களில் படும்படி பிடிக்கவும். பந்தயம்போட்டு மருந்தை உபயோகப்படுத்தலாம்.

---

## 85. நயன வியாதிக்கு உருண்டை

துருசுயஞ்ஜனக்கல் சங்குத்துத்தமுங் கடலின்
நுரையுமனேசிலே நுவல் வெள்ளேச்சாறணேவேரு
மிரசந்தான்றியுங் கடுநெல்லியிவை சமபாக
முருகெலுமிச்சம்பழ ரசமிட்டரைத்துருட்டே. (௱சுஎ)

உருட்டி மாத்திரைதனே நிழலிலுலர்த்திடும் பின்னேத்
திருட்டி தன்னி பூத்தேய்ந்திடப் பசுநெய்யிற்றேய்ப்பா
யிருட்டி நீரடிப்பிரிசலுக்கிடு மஞ்சட்சாற்றில்
மருட்டி நோய்க்கெலுமிச்சை நீர் வாற்றரைக்கலிக்கம். (௱சுஅ)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| துரிசு | அஞ்சனக்கல் | ஊதுசங்கு |
| துத்தம் | கடல்நுரை | மனேசிலே |
| வெள்ளேச்சாறணேவேர் | ரஸம் | தான்றிக்காய்த் தோல் } |
| கடுக்காய்த்தோல் | நெல்லிவற்றல் | |

இவைகளைச்சமமாக எடுத்துக் கல்லுரலிலிட்டு, நன்ருக இடித்துக் கல்வத்திலிட்டு, எலிமிச்சம்பழச்சாறுவிட்டு நன்ருக அரைத்து, மாத்திரையாகத்திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு 6 மாதங்கழித்து; கண் பூவிற்குப் பசுநெய்யி லிழைத்துக் கண்களிலிடவும், நீர் பிரிசலுக்குப் பசுமஞ்சள் சாற்றிலிடத்தீரும். பார்வை மயக்கம், பார்வைநோய் இவை களுக்கு எலிமிச்சம்பழச்சாற்றிலிழைத்துப் போடவும்.

---

## 86. நயன வியாதிக்கு மருந்து

வெள்ளைச்சாறணைவேர் பசும்பாலில் வெந்தெடுத்துக்
கொள்ளெலுமிச்சநீர் குத்தியரை குளிகையதா
யுள்ளதை மாலைக்கண் ணுக்கு மஞ்சளுண்ணீராற்
தெள்ளி நீரிழி கண் ணுக்குத் தேனிலிட்டிடுமே. (௱௬௬)

கண்ணரிப்புக்குக் கரிசாலைச் சாற்றினிற் கலந்தே
பண்ணிடு நீலகாசமும் படலத்திற்கவுரித்
தண்ணீராலிடத்தசை துர்மாங்கிடந்தனக்கே
கண்ணொலி மிச்சங்கனிரசத் தாலிடுங்கலிக்கம். (௱௬௭)

(இ-ள்)

வெள்ளைச்சாரணைவேரைப் பசுவின் பாலில் வேகவைத் தெடுத்துச் சுத்த ஜலத்திலலம்பிவிட்டு நன்ருயுலர்த்தி, உரலி லிட்டிடித்து வஸ்திரகாயஞ்செய்து, கல்வத்திலிட்டு, எலிமிச்சம் பழச்சாறுவிட்டு நன்ருக அரைத்து மாத்திரைகளாகத் திரட்டி வைத்துக் கொள்ளவும். இதை ஒரு மாதஞ்சென்றபின் உபயோகிக்கவும்.

மாலைக்கண்ணுக்கு, மஞ்சளை அரைத்துத் தண்ணீரில் கலக்கி வடிக்கட்டின ஜலத்தில் ஒரு சொட்டுவைத்து மாத் திரையை இழைத்தொருகோலில் பயறளவெடுத்துக் கண்ணி லிட்டுவரத் தீரும்.

இழிகண்ணுக்குத் தேனில் பிரயோகிக்கவும். கண் அரிப் புக்குக் கரிசலாங்கண்ணிச் சாற்றினிலிடவும். நீலகாசத்திற்

கும், படலத்திற்கும், அவுரி இலைச்சாற்றிலிடவும், தசை வளர்ச்சிக்கு எலிமிச்சம்பழரசத்திலிடவும்.

## 87. நயன வியாதி மாத்திரை

சந்தங்காவி கொம்பரக்குடன் சாதிப்பூ மூகிழும்
இந்த நால் வகை மருந்தையு மிடுஞ் சமபாகங்
தந்திடு நல்ல தண்ணீர் விட்டரைத் துண்டையுலர்த்திப்
பந்த மாமுலைப்பாலுரைத்திடக் கண்பூப் பறியும். (௱எக)

(இ-ள்)

இழைத்த சந்தனம், பூங்காவி, கொம்பரக்கு, சாதிமொட்டு இந்நால்வகை மருந்துகளையுஞ் சமபாகமாக எடுத்துத் தண்ணீர் வார்த்தரைத்து, மாத்திரையாகத் திரட்டி, நிழலிலுலர்த்தி ஒரு மாதஞ்சென்றபின் முலைப்பாலிலிழைத்துக் கண்ணிலிடக் கண்களிலுள்ள 'பூ' தீரும்.

## 88. நயன வியாதிக்கு உருண்டை

சுடர்முத்த மிருபணவெடை துகிற்பணவெடை நான்
கிடத் துரிசொரு வராகனுயிடை நிறுத்திட்டு
மடத் துத்தமிரு வராகனுமிடை கொண்ட மருந்தை
நடத்தக்கேள் செம்பு ரசத்தை விட்டரைத்தொருநாளே. (௱எஉ)

மற்றநாட் கரிசாலை நீர் வாற்றரைத்தெடுத்துச்
சுற்ற மங்கையர் சுவர்கத்தின் பாலிட்டுமரைப்பாய்
இற்றை யுண்டை செய்துலர்த்திடுமிதுக்கிடுவது முற்
சொற்றை பாலிட்டாற்றுலைந்திடுந் திமிர வெண்கடுப்பே. (௱எ௩)

செய்யினலிடும் பூவுக்கு நீர் வடிந்திடிற்றேன்
மையரைத்திடு தினவினுக் கவுரி நீர் நற்சிறு பருப்பு
வைய்ய மாத்திரமாட்டி மணிவிழி துலங்கு
மெய்ய திம்முறை விளம்பினன் சரப வேந்தனுமே. (௱எ௪)

(இ-ள்)

| | |
|---|---|
| துளையிடாத ஆணிமுத்து | 2 பணவெடை |
| வஸ்திரக்கருக்கு (சாம்பல்) | 4 பணவெடை |
| துருசு | 1 வராகனெடை |
| மடல்துத்தம் | 2 வராகனெடை |

இவைகளைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு ஒரு நாளரைத்து, அதற்கு மறுநாள் கையாந்தகரைச் சாறு விட்டரைத்து. மூன்றாந்தினம் பிள்ளைப்பால் விட்டரைத்து மாத்திரையாகத்திரட்டி, நிழலிலுலர்த்திவைத்துக் கொண்டு ஒரு வருடஞ் சென்றபின், முலைப்பாலிலிழைத்துக் கண்களிலிட,

வெண்கடுப்பும், திமிரமுந்தீரும். நெய்யிலிழைத்து உபயோகிக்கக் கண்களிலுள்ள பூவும், தேனிலிழைத்துப்போட நீர் வடிதலும், அவுரிச்சாற்றிலிடத் தினவும் தீரும். அளவு—பயறளவெடுத்து உபயோகிக்கவும். இதர பற்பல நோய்களும் தீர்ந்து, கண்கள் பிரகாசிக்கும்.

---

## 89. நயன வியாதிக்குருண்டை

கடுக்காயுட் பருப்பதுவுங் கழஞ்சு மூன்றாகு
மிடு மிளகு முக்கழஞ்சுமா மெலுமிச்சைச் சாற்றால்
அடுத்தரைத்திடு கயிறு செய்ததை யுலர்த்தியபின்
படுவன் காசமும் பற்பநோய்க் கிடுமுலைப்பாலே. (௱௯௫)

(இ-ள்)

| | |
|---|---|
| கடுக்காய்ப்பருப்பு | 3 கழஞ்சு |
| மிளகு | 3 கழஞ்சு |

இவ்விரண்டையும் கல்வத்திலிட்டெலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து, மாத்திரையாகத் திரட்டிவைத்துக்கொண்டு 1 மாதஞ் சென்றபின், இதை முலைப்பாலிலிழைத்துக் கடுகளவு கண்ணிலிடப் படுவன், காசம், பற்பநோய் முதலிய பல ரோகங்கள் தீரும்.

---

# 90. நயனப் பூவுக்கு " உருண்டை "

சங்கொரு பணங்கடுக்காய் தன்பருப்பு முப்பணம்
வெங்காரமுங்காற் பணவெடை யிந்துப்பொரு பணம்
பங்கத் தேற்றும் வித்தொரு பணமும் பச்சைப்பூரமுந்
தங்கொரு பணவெடையாய்த் தானிறுத்தரைத்திடேன்.
(௩௭௬)

அரைப்பது மூங்கிலிலைச் சாற்றாலு நேகவுண்டை செய்து
உரைப்பது நிழலிலுலர்த்தியுண் முலைப்பாலாகுத
லரைப்பு மாதுளம்பூச்சாற்றில் மத்தித்திடு கண்ணுளே
கரைப்படல வெள்ளெழுத்துங் காட்டவோடுங் காணுமே.
(௩௭௭)

(இ-ள்)

| | |
|---|---|
| ஊதுசங்கு | 1 பணவெடை |
| கடுக்காய்கொட்டையிலிருக்கும் பருப்பு | 3 பணவெடை |
| பொரித்த வெங்காரம் | ¼ பணவெடை |
| இந்துப்பு | 1 பணவெடை |
| மெல்லியதாய்ச் சீவிய தேற்றாங்கொட்டை | 1 பணவெடை |

இவைகளை நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு, மூங்கிலிலையோடுச் சிறிது ஜலம் சேர்த்து, இடித்துப் பிழிந்த சாற்றினால் ஷை சரக்குகளை நன்றாக அரைத்து, மாத்திரையாகத் திரட்டிக் கொள்ளவும். இதை நிழலிலுலர்த்திக்கொண்டுத் தாய்ப்பாலிலோ, அல்லது மாதுளம்பூச்சாற்றிலோ இழைத்துக் கண்களிலிடப் படலம், வெள்ளெழுத்து முதலிய ரோகங்கள் தீரும்.

---

# 91. நயனப் பூவுக்கு மருந்து

நந்தியாவர்த்தத்தின் மூலம் நற்கருவேல் மூலமு,
மந்த வெள்ளைச் சாரணைவே ராவின்பாலி லேயவி
வந்துகாய வைத்தெடுத்து மாதர்முலைப் பாலிலே
சந்துபோ லிழைத்துக்கண்ணிற் றானிடப்பூ மாறுமே. (௩௭௮)

(இ-ள்)

நந்தியாவர்த்தியின் வேர் நல் கருவேலின் வேர்

மலைச்சாரலிலிருந்து எடுத்துவந்த வெள்ளைச்சாரணை வேர் }

இம்மூன்றையும் சமமாக நிறுத்தெடுத்து, ஜலத்தை விட்டுப் பெருக்கிய பசுவின் பாலிலிவைகளைப் போட்டு நன்ருக அடுப்பின்மேல் வைத்து வேகவைத்துச் சலம் விட்டுக் கழுவித் துடைத்து, உரலிலிட்டிடித்துத் தூளாக்கிக் கொள்ளவும், இதைக் கல்வத்திலிட்டு முலைப்பாலினுல் நன்ருக அரைத்து, மாத்திரையாகத்திரட்டி, நிழலிலுலர்த்திக் கொள்ளவும். ஒரு வாரஞ் சென்றபின் இம்மாத்திரைகளைத் தாய்ப்பாலி லிழைத்துக் கண்களில் போட்டுக்கொண்டுவரப் "பூ" மாறும்.

---

## 92. நயனத்தில் 'பூவுக்கு' மருந்து

கொட்டைப்பாசி தன்னிலையுங் கூட்டுதுத்தந்துருசும்
விட்டசிறுநீரிஞ லரைத்துருட்டி மேலன்னீர்
தொட்டுரைத்திட நயனத் தோன் ருேராண்டின்பூவிடு
விட்டவேப்பம் பட்டைதேனி லிடப்புதுப் பூயேகுமே. (௫௭௬)

(இ-ள்)

கொட்டைப்பாசியிலை, துத்தம், துரிசு, இவற்றை உலக மறியாப்பிள்ளையின் சிறு நீரினுலரைத்து உருட்டி, நிழலிலு லர்த்திக்கொண்டு ஒரு வாரஞ் சென்றபின், அச்சிறு நீரிலே யிழைத்துக் கண்களிலிட, ஓராண்டிற்குட்பட்ட 'பூ' தீரும். புதிதாயேற்பட்ட பூவானுல் வேப்பம்பட்டைச் சாற்றிலோ அல்லது தேனிலோ இழைத்து கண்களிலிடத்தீரும்.

---

## 93. நயனப் பூவுக்கு

சங்கிலாவது வெண்சோகிதனிலாவது பசு
வுங்கு பாலினுலரைத்துருட்டியேயுலர்த்திதைத்
தங்கு வெண்ணெயாலுரைத்ததை நயனந்தானிடப்
பொங்கிய படலங்கண்ணிற் பூவுடனே போக்குமே. (௫௮௰)

(இ-ள்)

ஊதுசங்கு அல்லது சோகியைப் பசுவின்பாலினுலரைத்து, மாத்திரையாகச்செய்து உலர்த்திக்கொள்ளவும். சில நாள்

சென்றபின், சிறிது வெண்ணெயைக் கல்வத்தில் வைத்து, அதி லம்மாத்திரையை யிழைத்துக் கண்ணிலிடப் படலம், பூ, முதலிய ரோகங்கள் தீரும்.

---

## 94. நயன வியாதிக்குப் பூ, படலத்திற்கு உருண்டை

தவளநிறக்காக்கணம்வேர் தண்டான்வேரும்
புவனத்திப்பிலியும் பச்சைப் பூரமிதை நாலுங்
கவனச்சமபாகங்கொண்டு கரும்பனைச்சாறிட்டுந்
துவளவரைத்துருட்டிக் கண் பூ தோயப் படலந்தனக்கே. (௱அக)

(இ-ள்)

| | |
|---|---|
| வெள்ளைக்காக்கணவேர் | தண்டானவேர் |
| அரிசித்திப்பிலி | பச்சைக்கற்பூரம் |

இந்நான்கையுஞ் சமமாக நிறுத்தெடுத்துப், பனைமட்டைச் சாற்றினால் ஒரு வாரம் நன்றாக அரைத்து, உருட்டிக்கொள்ள வும். இதை ஒரு மாதஞ் சென்றபின் முலைப்பாலிலிழைத்துக் கடுகளவு கண்ணிலிடப் பூ, படலம், முதலிய நேத்திர ரோகங் கள் தீரும்.

குறிப்பு:—

தண்டானவேர் என்பது என்னவென்று தெரியவில்லை.

---

## 95. நயன வியாதி பூவுக்கு உருண்டை

துரிசு வெள்ளிசங்கு மடல்துத்தஞ் செம்புசுக்குங்
கரிமிளகு திப்பிலியுங் காணுஞ் சீனிக்காரந்
தருகும் பீதரோகிணியுஞ் சாயதிமதுரம்
வருமிதெல்லாஞ் சரிகூட்டி மருமுருங்கைப்பூவே. (௱அஉ)

சாறு நந்தியாவட்டைப்பூச்சாறு சமங்கூட்டி
யூற வரைத்துருட்டி நிழலுலர்த்தி வைத்துக்கொண்டே
தேறும் பனைமடனீருந் தெரிவை முலைப்பாலுஞ்
சாறு நந்தி முருங்கைமலர் தோயத்திழைப்பூ விடுமே. (௲அரு)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| துரிசு | வெள்ளிப்பொடி | சங்குத்தூள் |
| மடல்துத்தம் | செம்புப்பொடி | சுக்கு |
| மிளகு | திப்பிலி | சீனக்காரம் |
| பீதரோகிணி | அதிமதுரம் | |

இவைகளைச்சமமாக எடுத்து, முருங்கைப்பூச்சாறு, நந்தியாவட்டைப் பூச்சாறு இவ்விரண்டையுஞ் சமங்கூட்டியதனுல் நன்ருகவரைத்து மாத்திரைகளாகத் திரட்டி வைத்துக்கொள்ளவும். இம்மருந்தை ஓராண்டு சென்றபின், பனைமட்டைச் சாறு, முலைப்பால், நந்தியர்வர்த்திப்பூச்சாறு, முறுங்கைப்பூச்சாறு இவற்றிலேதேனுமொன்றில் மாத்திரையையிழைத்துக் கண்களிலிடப் 'பூ' மாறும்.

---

## 96. நயனப்பூ, வெள்ளெழுத்திற்கு மருந்து

உம்பழம் புளியுப்பிலுங்காடி நீர் வார்த்துச்
செம்புக் கிண்ணியிலூற வைத்திடுங் கலப்புறத்தில்
கொம்பெலுமிச்சம் பழரசங் கொண்டரைத்துருட்டி
வெம்பு நோய்க்கிட்டுப் பூவும் வெள்ளெழுத்தை விலக்கேன்.
(௲அச)

(இ-ள்)

பழம்புளி, உப்பு, இவ்விரண்டையும் காடிஜலம் விட்டுச் செப்புக் கிண்ணியிலூறவைத்திருந்து 15 நாட்கள் சென்றபின், கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு நேகவரைத்து மாத்திரைகளாகத் திரட்டி, நிழலிலுலர்த்திக் கொள்ளவும். ஒரு மாதஞ் சென்றபின், முலைப்பாலிலிழைத்து அரிசியளவு கண்ணிலிடப் பூவும் வெள்ளெழுத்துந் தீரும்.

## 97. நயனப் பூவுக்கு மாத்திரை

கரிமிளகதிமதுரஞ்சங்கது படிக்கார
கரியின்றூரமுஞ் சயிந்தவமாமனேசிலையுஞ்
சரியதாய்க்கொண்டு தண்ணீர் விட்டரைத்துருட்டியுலர்த்தி
அரிவை தன் முலைப்பாலதாலிடக்கண் பூ வகலுமே. (௲அரு)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| மிளகு | அதிமதுரம் | ஊதுசங்கு |
| படிக்காரம் | தாளகம் | இந்துப்பு |
| மனேசிலை | | |

இவைகளைச் சரியெடையாய் நிறுத்தெடுத்துக் கல்வத்தி லிட்டுத் தண்ணீர் விட்டரைத்து, மாத்திரையாகத் திரட்டி நிழலிலுலர்த்திக்கொண்டு 6 மாதஞ் சென்றபின் முலைப்பாலி லிழைத்துக் கண்களிலிடப் 'பூ' தீரும்.

---

## 98. நயன ரோகத்திற்கு 'ரத்னாதி உருண்டை'

பீதரோகிணியும் துத்தமபின் வராகனெடை யொன்று
வீதமாம் வசம்புங் காவியஞ்சனக்கல் சந்தனஞ்
சீதமரமஞ்சளும் வெள்ளிலோத்திர முந்திரிகையு
மீதேழு வகைக்கிரு வராகனெடையாகுமே. (௲அசு)

தாமரைப் பருப்பதிமதுரந் தாம்பிரப்பொடி
நாமச் சீனக்காரஞ் சங்கு நற்சயிந்த லவணமு
மாமருந்தி தாறுமோர் வகைக்குமூவ ராகனுங்
காமநெல்லி மிளகுசுக்கு கடுக்காய்தான்றிக் காயுமே. (௲அஎ)

புங்கின் வித்து ஜோதிஸதி விதையுமெட்டு வகையிது
நன்குடன் வராகனெடை நாலுமொக்கவே யெலாம்
புங்கின்சாற்றி லுமரைத்து ருண்டைபோலேத்தியே
நன்ஜலத்தி னுலுரைத்தி டுநயனந் தன்னிலே. (௲அஅ)

காசங்கண் விரணமொடு கொள்தசை வளர்ச்சியும்
வீசுங்கண் சிவப்பும்மாலைக் கண்ணு மற்றும் வியாதிகள்
பேசிலோடும் நீங்குமிந்தப் பேருலகத்தோர்க்கெல்லா
மீசனருள் பெற்ற சரபோசனுத்தரவிதே. (௱அக)

(இ-ள்)

பீதரோகிணி
துத்தம்
அபின்
} இவை வகைக்கு 1 வராகனெடை

வசம்பு
காவிக்கல்
அஞ்சனக்கல்
இழைத்த சந்தனம்
மஞ்சள்
விளாம்பட்டை
முந்திரிப்பழம்
} இவை வகைக்கு 2 வராகனெடை

தாமரைக் கொட்டையை யுடைத்த [பருப்பு
அதிமதுரம்
தாமிரப் பொடி
சீனக்காரம்
சங்கு
இந்துப்பு
} இவை வகைக்கு 3 வராகனெடை

நெல்லிவற்றல்
மிளகு
சுக்கு
கடுக்காய்த்தோல்
தான்றிக்காய்த்தோல்
புங்கம் வித்து
வாலுளுவையரிசி
திப்பிலி
} இச்சரக்குகள் வகைக்கு 4 வராகனெடையும் சேர்த்து

எல்லாவற்றையுங் கலந்து, நன்றாயிடித்துக் கல்வத்திலிட்டுப் புங்க இலைச் சாற்றினாலரைத்து, மாத்திரையாகத் திரட்டி நிழலிலுலர்த்திக்கொண்டு, ஒரு மாதஞ் சென்றபின் சுத்த ஜலத்திலிழைத்துக் கண்ணிலிடக் காச வகைகள், கூசுங் கண், கண்விரணம், தசைவளர்ச்சி, கண்சிவப்பு, மாலைக்கண் முதலிய பலவித வியாதிகள் நீங்கும்.

# 99. நயன ரோகத்திற்கு 'ரத்னாதி மாத்திரை'

நவமணி யேழுலோகங்கொடுவெண் பூங்கானும்
குவ நரிவிழிபல் யானைக்கொடுபல் பசுவின் பல்லுக்
கவையடர் மேதிப்பல்லுங்கமடத்திேனாடும் பன்றி
நவை யுருக்கொடு நன்னீர் முதலைப்பல் லொட்டைப்பல்லே. (௱௬௰)

கலையின் கொம்பு ருத்ராக்ஷங் கானைப்பல் கழுதைப் பல்லு
நலமுறு பீதரோகிணி நறியதுத்தந்துருசுங்
குலவிய சந்தந்தாரங் கோட்டங்கோ ரோசனை யிந்துப்பு
யிலகிய சீனக்காரமினித்திரிகடுகு கொள்ளே. (௱௬௧)

திரிபலை தேற்றாங் கொட்டை சிரத்தொ
டோரிதழ் மூலமுருவது சமனாய்க் கலந்து நீயரைக்குஞ்சாறு
யிரு மெலுமிச்சஞ் சாற்றிலேழு நாளரைத்து மைப்போல்
மருபடி கோழிமுட்டை வாற்றிதை யரைத்துக்கொள்ளே. (௱௬௨)

கொண்டதோர் மருந்தை நன்றாய் குறுகி நீண்டிடாத வண்ண
மூண்டைசெய் திருமருங்குஞ் சுழிவிட வுருட்டி நன்றாய்
மண்டல நிழலுலர்த்தி வளர்க்கையர்ன் பொன்னாங்காணீ
யொண்டொடி முலைப்பாற்றேனி வைதனி லுரைத்துப்போடே. (௱௬௩)

(இ-ள்)

| | |
|---|---|
| நவரெத்னங்கள் | எழுவகை உலோகங்கள் |
| வெள்ளைப்பீங்கான் | நரிப்பல் |
| யானைத்தந்தம் | யானைப்பல் |
| பசுவின்பல் | எருமைப்பல் |
| நாட்டு ஆமையோடு | பன்றிப்பல் |
| நல்லசலத்திலுள்ள முதலைப்பல் | ஒட்டகைப்பல் |
| கலைமான்கொம்பு | ருத்ராக்ஷம் |
| கானைமாட்டுப்பல் | கழுதைப்பல் |
| பீதரோகிணி | துத்தம் |
| துருசு | சந்தனம் |
| அரிதாரம் | கோஷ்டம் |
| கோரோசனை | இந்துப்பு |
| சீனக்காரம் | சுக்கு |
| மிளகு | திப்பிலி |
| கடுக்காய்த் தோல் | நெல்லிவற்றல் |
| தான்றிக்காய்த்தோல் | தேற்றாங்கொட்டை |
| ஓரிதழ்த்தாமரைச் சமூலம் | |

இவைகளைச் சமமெடையெடுத்துக் கல்வத்திலிட்டிடித்து, எலுமிச்சம்பழச்சாற்றினால் 7 நாட்கள் மைப்போலரைத்து பின்னர் கோழிமுட்டையின் வெள்ளைக்கருவைவிட்டரைக்கவும். மெழுகு பதமானபோது, இரு முனையிலும் சுழியில்லாமல் மாத்திரையாகத் திரட்டி ஒரு மண்டலம் நிழலிலுலர்த்தி 12 வருடங்கள் சென்றபின், பொன்னாங்காணிச்சாறு, முலைப்பால், தேன், நெய் இவைகளிலேதேனுமொன்றிலிழைத்துப் போடவும்.

குறிப்பு:—

(1) நவரத்னங்கள்:—வைரம், வைடூரியம், கோமேதகம். மரகதம், பவழம், நீலம், மாணிக்கம், முத்து, புஷ்பராகம்

(2) உலோகங்கள் எழு:—செம்பொன், வெண்பொன் (வெள்ளி) கரும்பொன் (இரும்பு), செம்பு, ஈயம், வெண்கலம், தரா முதலியவைகள். இவைகளை ஆத்தினால் ராவி, மருந்தில் சேர்த்துக்கொள்ளவும்.

---

## 100. நயன ரோகத்திற்கு 'ரத்னாதி மாத்திரை'

மாணிக்கம் பவழம் நீலம் வைரம் புஷ்பராகமு
மாணிமுத்தும் கோமேதகமான வைடூரியம் மரகதம்
பூணும் வெள்ளி படிகஞ் செப்பு பொன்வெள் ளியங்காரியந்
தாணியரி தாரமணி தன்பல்நாயின் றன்பல்லே. (௱கூச)

ஒட்டகங் குதிரை மரை யும்பசுவின் பல்லுடன்
கிட்டு பன்றி மானெருமை கேழ் மரையின் கொம்புமேல்
நட்ட நொச்சில் புங்கம்வித்து நாகர மிளகுட
னிட்டதிப்பி லியுஞ்சங்கு சோழியெல்லாஞ் சமனிடேன். (௱கூரு)

கொள்ளுமேழு நாட்தண்ணீராற் கொண்டரைத்துக் குளிகை [செய்
யுள்ளகண்வி யாதிதெரிந் தோதுசாறுந் தேனுடன்
விள்ளுமுலைப் பாலினுமி ழைத்திடும் மாத்திரை
தள்ளிடும்வி யாதிதொண் ணூற் ருறுநீங்குந் தான்செய்யே. (௱கூசா)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| மாணிக்கம் | பவளம் | நீலம் |
| வைரம் | புஷ்பராகம் | துளையிடாதமுத்து |
| கோமேதகம் | வைடூரியம் | மரகதம் |
| வெள்ளி | ஸ்படிகம் | செம்பு |
| பொன் | வெள்ளீயம் | காரீயம் |
| அரிதாரம் | மனிதன் பல் | நாய்ப்பல் |
| ஒட்டகைப்பல் | குதிரைப்பல் | மான்பல் |
| பசுவின்பல் | பன்றிப்பல் | எருமைப்பல் |
| மான்கொம்பு | நொச்சியிலை | புங்கம்விதை |
| சுக்கு | மிளகு | திப்பிலி |
| சங்கு | சோழி | |

இவைகளைத் தனித்தனி சம எடையாக எடுத்துக்கொண்டு நொறுக்கிக் கல்வத்திலிட்டுத் தண்ணீர்விட்டு ஏழுநாளரைத்து, மாத்திரையாகத் திரட்டிக்கொண்டு, நோய்க்குத் தக்கபடி சமயோஜிதமாய் நோய்க்கேற்ற சாறுகளிலும், தேன், முலைப்பால், இவற்றிலுமிழைத்துக் கண்ணிலிட 96 வித நேத்திர வியாதிகளும் நீங்கும்.

குறிப்பு:—

இம்மருந்தை 12 வருடகாலஞ் சென்றபின்பு உபயோகிக்கவும். இல்லையேல் அனர்த்தமுண்டாகும்.

---

## 101, நயன வியாதிக்கு 'ரத்னாதி மாத்திரை'

முத்து பவளமு மிரும்பு மூடுந் தலையோடும்
பித்தளை கர்ப்பூரஞ்செம்பு பீதரோகிணி தங்கந்
துத்தந்துருசு கடுக்காய்த்தோல் நெல்லிமுள்ளி
யொத்த யோரிதழ்த்தாமரை வேரோடு நீர்மூலாவேர். (௱௬௭)

சாகினி பொற்கண்ணியின்வேர் தானுஞ் சரிகொண்டே
ஈகைரசத்தா லரைத்துமிடு மாத்திரை கட்டித்
தோகை தனப்பாலும்பனை தோன்றுமடல் நீரு
மேகை யுரைத்திட விழிநோய் விலகுந் தொண்ணூற்றாறே.
(௱௬௮)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| முத்து | பவளம் | இரும்புத்தூள் |
| வெந்த மண்டையோடு | பித்தளைத்தூள் | பச்சைக்கர்ப்பூரம் |
| செப்புத்தூள் | பீதரோகிணி | தங்கரேக் |
| துத்தம் | துருசு | கடுக்காய்த்தோல் |
| பொன்னாங்காணி வேர் | ஓரிதழ்த்தாமரை வேர் | நீர்பூலாவின்வேர் |
| நெல்லிவற்றல் | சிறுகீரைவேர் | |

இவைகளைச் சரி எடை யெடுத்துக்கொண்டிடித்துக் கல்வத்திலிட்டுக் கையாந்தகரைச் சாற்றினாலரைத்து, மாத்திரையாகத்திரட்டி நிழலிலுலர்த்தி, 3 வருடஞ் சென்றபின், முலைப்பால், பனைமட்டைச்சாறு, இது ஏதேனுமொன்றி லிழைத்துக் கடுகளவு கண்ணிலிட, 96 வகை நேத்திர ரோகங்களுந் தீரும்.

குறிப்பு:—

சாகினி—சிறுகீரை
ஈகை ரசம் என்பது கையாந்தகரைச் சாறு.

---

## 102. நயன ரோகம் 96-க்கும் 'கனகாதி மாத்திரை'

தங்கந் தலையோடு துத்தந் தாமிரங் கர்ப்பூரமுந்
துங்க வெள்ளி வெண்கலந் துரிசு சாந்தங் கோட்டமும்
பங்கய வளையந் தான்றிப் பருப்புங் கோழி முட்டைத்தோல்
தங்குவெண் குதிரைப் பல்லுஞ் சாவலீரல்க் கல்லுமே. (௧௬௬)

சீனிக்கார நெல்லிமுள்ளி தேற்றான் வித்து மிளகுமே
யானதைச் சமநிறுத்தரைத்ததைக் கரிப்பான் சாற்றினால்
மானத்தின் மூன்றரைத்து மாத்திரை யுலர்த்தியே
தானித்தை யனுபானமாய்த் தையல் முலைப்பாலிலே. (௨௭)

இடவலிதிமிரங் காசமிரணச் சுக்கிரனிமைப்
படல நீலகாசம் வெள்ளெழுத்தும் பார் பீனிச
முடமயிர்த்தினவு நீர் முட்டலும் புகைச்சலும்
தொடர் நயனப்புற்று நோய்கள் தொண்ணூற்ருறும் நீங்குமே.
(உாக)

இவை முதலான நயனந்தன்னிலெழும் வியாதி தெளியுமே
நவையுறுமவ பத்தியமாய் நடக்கொணுது பல
சுவையாங்காரசாரந் தள்ளுஞ் சுகமாம்பத்தியத்துடன்
சேவையாயந்திக் காலையிலும் செய்யதீங்கும் நீங்குமே. (உாஉ)

(இ-ள்)

| | |
|---|---|
| சுருள் தங்கம் | வெந்தமண்டையோடு |
| துத்தம் | தாமிரத்தூள் |
| பச்சைக்கர்ப்பூரம் | வெள்ளித்தூள் |
| வெண்கலத்தூள் | துருசு |
| உயர்ந்த கோஷ்டம் | தாமரை வளையம் |
| தான்றிப்பருப்பு | அடைகாத்து வெடித்த முட்டையோடு |
| வெள்ளைக்குதிரைப்பல் | நெல்லிமுள்ளி |
| சேவல் கோழி ஈரலி லிருக்கும் கல் | பொரித்த சீனக்காரம் |
| சீவிய தேத்தான் வித்து | மிளகு |
| சந்தனத்தூள் | |

இவைகளைச் சமமெடுத்துக் கையாந்தகரைச் சாற்றினல் 3 மாதமரைத்து மாத்திரையாகத் திரட்டி நிழலிலுலர்த்திக் கொள்ளவும். இதை மூன்று வருடஞ் சென்றபின், முலைப் பாலிலிழைத்துக் கண்ணிலிட

| | |
|---|---|
| வலி | திமிரம் |
| காசம் | இரணசுக்கிரன் |
| இமைப்படலம் | நீலகாசம் |
| வெள்ளெழுத்து | பீனிசம் |
| முடமயிர் | தினவு |
| நீர்முட்டல் | புகைச்சல் |
| நயனப்புற்று | |

முதலான 96 வகை நேத்திர நோய்களுந் தீரும்.

இதற்குப் பத்தியம் :—

ஸ்திரீபோகம், காரம், புளிப்பு, கைப்பு முதலியவைகளைத் தள்ளி, சுகமான பத்தியத்துடன் காலை, மாலை, இரண்டு வேளையிலும் இம்மருந்தைக்கண்ணிலிடச் சகல வியாதியுந் தீரும்.

---

## 103. நயன ரோகத்திற்குக் "கருடாஞ்சனம்"

மதுரந்திப்பிலி மிளகு மஞ்சள் வெள்ளிலோத்ரம்
யதி கடுக்காய் தான்றி நெல்லியான மரமஞ்சளு
மிது சமனெடை தண்ணீராலே யரைத்துருட்டியே
கோது கிடத்திமிரங் காசங் கொள்படலந் தீருமே. (உ௱௩)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| அதிமதுரம் | திப்பிலி | மிளகு |
| மஞ்சள் | விளாம்பட்டை | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | மரமஞ்சள் | தான்றிக்காய்த் தோல் |

இவைகளைச் சமனெடை யெடுத்துத் தண்ணீரினால் நன்றாக வரைத்து உருட்டி, மாத்திரையாகத் திரட்டி நிழலிலுலர்த்தி, முலைப்பாலிலிழைத்துச் சிறு பயறளவு கண்ணிலிடத் திமிரம், காசம், படலம் முதலிய கண்ணோய்கள் தீரும்.

---

## 104. நயன வியாதிக்குக் 'கர்ப்பூராதி மாத்திரை'

பலகரை பளிங்கதுவும் பச்சைக் கர்ப்பூர
மலை கடலினுரை காவியஞ்சனக்கற்சங்கு
மலை மிளகு திப்பிலியு மஞ்சட் பீதரோகிணி
நிலவுப்புத் துத்தமிவை நேர் வகையொன்றுக்கே. (உ௱௪)

வராகனெடை கால் நிறுத்து வாருங்கல்வத்திட்டே
பராக நந்திப்பூச்சாறு பத்தவிட்டரைத்து
தராகண்வுருண்டை செய்து தானிடும் பூந்தேனிற்
சராகவிழியாணி குந்தந்தனக்கிடுவதாமே. (உ௱௫)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சோழி | ஸ்படிகக்கல் | பச்சைக்கர்ப்பூரம் |
| கடல் நுரை | பூங்காவி | அஞ்சனக்கல் |
| ஊதுசங்கு | கரி மிளகு | திப்பிலி |
| பீதரோகிணி | இந்துப்பு | துத்தம் |
| மஞ்சள் | | |

இவைகள் வகைக்குக் கால் வராகனெடை யெடுத்துக் கல்வத்திலிட்டு, நந்தியாவர்த்திப் பூச்சாறு விட்டரைத்து, மாத்திரையாகச்செய்து, நிழலிலுலர்த்திக் கொண்டொரு வருடஞ் சென்ற பின்னிதைத் தேனிலிழைத்துக் கண்களிலிட்டுவர நேத்திரத்திலுள்ள ஆணி, குந்தமிவைகள் தீரும்.

---

## 105. நயன வியாதிக்குச் "சந்தனாதி உருண்டை"

பூசுஞ்சாந்தங் காவிக்கல்லும் பொன் மெழுகு மூன்றையும்
பேசும்பிச்சிப்பூவுஞ்சமன் பெண் முலைப்பால் வார்த்தரை
வாசியுண்டைசெய்து வைத்து மாதர் முலைப்பாலினால்
வீசியுரைக் கண்ணில் நோய்க்கு வெச்செனவு மீட்டுமே. (உ௱சு)

### பாடபேதம்

சந்தனமிழைத்து நிழல்தனிலு முலர்த்திடு
கந்தமுங்கழஞ்சிரண்டுங்காவி பொன் மெழுகுடன்
வந்த விச்சிப்பூவிது வகைக்கிரு கழஞ்சியா
யிந்தரைத்துருட்டிக் கண்ணிலூட்டப் பூவையோட்டுமே.

(இ-ள்)

இழைத்த சந்தனம்
பொன் மெழுகு
காவிக்கல்
இம்மூன்றும் வகைக்கு 1 வராகனெடை
விருட்சிப்பூ 3 வராகனெடை

இவற்றைச் சேர்த்து முலைப்பால் வார்த்து, அரைத்து உருண்டைசெய்து, நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு முலைப்பாலிலேயே யிழைத்துக்கண்களிலிடக் கண்ணோய்களனைத்துந் தீரும்.

இரண்டாவது செய்யுளில் கண்டபடி எல்லாச் சரக்கு களையும் வகைக்கு 2 கழஞ்சுவீதம் மெடுத்து மாத்திரையுஞ் செய்து கொள்ளலாம்.

---

## 106. நயன வியாதிக்குச் "சந்தனுதி உருண்டை"

சந்தனஞ் சுண்ணும்புக்கல்லுச் சங்குமேலஞ் சமனெடை
தந்தெலுமிச்சம்பழத்தின் சாறுமோர்க லப்புறம்
பந்தமாயிழைத்துருட்டி பாவைமுலைப்பாலினு
லொந்தமாயு ரைத்திடக்கண் டோய்ந்தநோய்பூத் தொலையுமே.

(உ௱எ)

(இ-ள்)

| | |
|---|---|
| இழைத்த சந்தனம் | சுட்ட சங்கு |
| சுண்ணும்புக்கல்லின் நீறு | ஏலக்காய் |

இவைகளைச் சமயெடை யெடுத்துக்கொண்டு, கல்வத்திலிட் டுப்பொடித்து எலிமிச்சம் பழச்சாறு விட்டு, நன்ருக அரைத்து உருட்டி நிழலிலுலர்த்திக்கொண்டு, ஒரு மாதஞ் சென்றபின் முலைப்பாலிலிழைத்துப் பயறளவு கண்ணிலிடக் கண்ணேய் களும் பூவுந்தீரும்.

---

## 107. நயன வியாதிக்குச் "சந்தனுதி உருண்டை"

சந்தமொருபங்குடன் சைந்தவமிரு பங்கு
முந்து கடுக்காயின் பங்கு மூன்று புரசம்பிசின்
வந்தபங்கு நாலும் புளிமன்னிலை ரசத்தினுல்
தந்தரைத்துருட்டிக் கண்ணில் தானிடப் பூத்தள்ளுமே.

(உ௱அ)

(இ-ள்)

| | |
|---|---|
| இழைத்த சந்தனம் | 1 பங்கு |
| இந்துப்பு | 2 பங்கு |
| கடுக்காய்த்தூள் | 3 பங்கு |
| புரசம் பிசின் | 4 பங்கு |

இவற்றைக் கல்வத்திலிட்டுப் புளியிலைச் சாற்றினல் நன்ருயரைத்துருட்டி, நிழலிலுலர்த்திக்கொண்டு முலைப்பாலிலிழைத்துக் கண்ணிலிடப் 'பூ' தீரும்.

## 108. சந்தனாதி உருண்டை

பச்சைவெட்டுச்சந்தமொரு பலஞ்சிறுக்கி சண்பகப்பூ
வச்சமலடாக்கோரிதழ்த்தாமரை வேர் மூவகை
மிச்சமொரு பாக்களவாய் மேலுமுலைப்பாலினல்
நச்சரைக்கவுரிட நீர் முட்டுட்டணங்காணுமே. (உ௱கூ)

(இ-ள்)

இழைத்த சந்தனம் சண்பகப் பூ
ஓரிதழ்த்தாமரை வேர்

இவைகள் வகைக்கு ஒரு பாக்களவெடுத்து, முலைப்பால் விட்டு நன்ருக அரைத்து உருட்டி, நிழலிலுலர்த்திக்கொண்டு 15 நாட்கள் சென்றபின் முலைப்பாலிலேயேயிழைத்துக் கண்ணிலிட நீர் முட்டல், உஷ்ணம் முதலியன்வை தீரும்.

## 109. நயன ரோகத்திற்குச் "சந்திரப் பிரபாவதி மாத்திரை"

எள்ளின் பூவிலெண்பது மிகுந்திப்பிலியறுபது
மள்ளுஞ்சா திப்பூவின் மொட்டினன்பது மிளகு
விள்ளுபதினறுமிவை தண்ணீர் விட்டரை மாத்திரை
யுள்ளுலர்த்தி நீரிஞ லுரைகண்நோயை யோட்டுமே. (உ௱ய)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| எள்ளின் பூ | 80 | (எண்ணிக்கையில்) |
| திப்பிலி | 60 | ,, |
| சாதி மொட்டு | 50 | ,, |
| மிளகு | 16 | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டு, நசுக்கித் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து மாத்திரையாகத் திரட்டி, நிழலிலுலர்த்தி 2 மாதங்கள் சென்றபின் தண்ணீரிலிழைத்துக் கண்களிலிடக் கண்ணோய்கள் தீரும்.

---

## 110. நயன வியாதிக்கும் மாலைக்கண்ணுக்கும் "சந்திரோதய உருண்டை"

கர்ப்பூர நீலாஞ்சனங்கடுகு ரோகிணி சங்குஞ்
சொற்பலகரை ரஸாஞ்சன மிந்துப்புத் துத்தமு
நற்றிரிகடுமதுர நற்சந்தன முஞ்சமன்
தற்கொம்மட்டி மாதுளைச் சாற்றாலரைகண் மாலைக்கே. (௨௧௧)

(இ-ள்)

| | |
|---|---|
| பச்சைக்கர்ப்பூரம் | நீலாஞ்ஜனம் |
| கடுகுரோகிணி | சங்கு (சுட்டது) |
| சோழி (சுட்டது) | ரஸாஞ்சனம் |
| இந்துப்பு | துத்தம் |
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | அதிமதுரம் |
| இழைத்த சந்தனம் | |

இவற்றைச் சமனெடையெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்துக் கொடிமாதுளைச்சாற்றினாலரைத்து, மாத்திரையாகத் திரட்டிக்கொள்ளவும். இதை நிழலிலுலர்த்திவைத்து 3 மாதம் சென்றபின் முலைப்பாலிலிழைத்து, மாலைக் கண் ரோகத்திற்கு விழியில் ஒருசிறு பயறளவு தீட்டவும்.

---

## 111. நயன வியாதிக்குச் "சந்திரோதய உருண்டை"

இந்துப்பும் துருசுதுத்த மிடுவகைக் கிருபல
முந்திடிகொள் வெள்ளிலோத்ரம் முருங்கைவித்து
[மோரொன்று
தந்தறு கழஞ்செலுமிச் சம்பழ முருங்கிலை
பிந்தரச நாலிருநா ளிட்டரைத் துருட்டிடேன். (உகஉ)

(இ-ள்)

இந்துப்பு துருசு
துத்தம்

இவைகளை வகைக்கு 2 பலமெடுத்து, இதனுடன், வெள்ளி லோத்திரம் (விளாம்பட்டை) முருங்கைவிதை, இவ்விரண்டும் வகைக்கு 6 கழஞ்சு நிறுத்துக் கல்வத்திலிட்டு நொறுக்கி, எலுமிச்சம்பழச்சாறு விட்டு 8 நாட்களரைக்கவும். பின்பு முருங்கையிலையை யிடித்துப் பிழிந்து வடிக்கட்டின சாற்றினல் 8 நாட்களரைக்கவும். இதை மாத்திரையாகத் திரட்டி, நிழலி லுலர்த்திக்கொண்டு 6 மாதம் சென்றபின் முலைப்பாலிலிழைத் துக் கண்களிலிடப் பலவித வியாதிகள் தீரும்.

---

## 112. நயன ரோகத்திற்குத் "தாம்பிராதி மாத்திரை"

தாமிரப்பொடி யீராறு தருவரா கனெடைய
நாம்பொடி வராகனெடை யாறுசுக்கோர் வராகனும்
தேம்புபத்து வராகனெடை திப்பிலி மதுரமுந்
தாம்ப னிரண்டா கும்பீத ரோகிணியாறு வராகனே. (உகங)

கோட்டமிந்துப் புடன்மடற் கூடுதுத்த மூன்றையு
மாட்டொரு வகைக்கைந்து வராகனெடை வைத்தெல்லாங்
கூட்டெலுமிச்சம் பழநீர் கொண்டரைத்துத் தாமிர
நாட்டுப்பாத்திரத் தினுநடுவினிற் றடவிடேன். (உகச)

இட்டுராக் கழித்திதை யெடுத்தெலு மிச்சைரசம்
விட்டரைமுன் பாத்திரத்துள் மேவவே தடவிவைத்
திட்டுயிப்படியா யிருபது தினமிதே செய்து
தொட்டவுண்டை செய்துலர்த்திச் சொல்நயனத் தூட்டிடே. (உகரு)

நேத்திரத்துள் நோய்களெல்லாம் நீங்கிடுமே காசமு
மேத்திரண சுக்கிரனு மேலமாந் திமிரமுஞ்
சாத்திடும் படலம்வாயு சகலநோயுந் தள்ளிடு
மாத்திரை முறையுரைத்த மன்னன்சர பேந்திரனே. (உகசு)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| தாமிரப்பொடி | 12 | வராகனெடை |
| இரும்புப்பொடி | 6 | ,, |
| சுக்கு | 1 | ,, |
| திப்பிலி | 10 | ,, |
| அதிமதுரம் | 12 | ,, |
| பீதரோகிணி | 6 | ,, |
| உயர்ந்த கோஷ்டம் | 5 | ,, |
| பொரித்த இந்துப்பு | 5 | ,, |
| மடல்துத்தம் | 5 | ,, |

இவைகளை நன்ருக இடித்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறுவிட்டு அரைத்துத் தாமிரப்பாத்திரத்தின் நடுவில் வைத்து, இரவு கழிந்தபின் காலையிலம்மருந்தைக் கல்வத்தி லிட்டரைத்து, மறுபடியும் இரவு நேரத்தில், பழய செப்புப் பாத்திரத்தில் வைத்துவிடவும். இவ்வாறு 20 தினங்கள் செய்து மருந்து நன்ருயரைபட்டதா யில்லையா என்று பார்ப் பதற்குக் குன்றிமணியளவு மருந்தை யெடுத்து உள்ளங்கையில் வைத்துக்கொண்டு சிறுக ஜலத்தை யதன்பேரில்விட்டுக் குழைத்துப் பார்த்தால், அடியில் தூள்கள் தங்காமலிருக்க வேண்டும். அவ்வாறு மருந்தை யரைத்து மாத்திரையாகத் திரட்டி நிழலிலுலர்த்திக்கொண்டு, ஒரு வருடம் சென்றபின் முலைப்பாலிலிழைத்துக் கண்களில் தீட்ட, நேத்திர நோய்க ளெல்லாம் நீங்கும். அவையாவன: காசம், இரணசுக்கிரன், திமிரம், படலம், நேத்திரவாயு. முதலியவைகள்.

# 113. நயன ரோகத்திற்குத் "தாம்பிராதீ மாத்திரை"

துருசுதான் பலமிரண்டு தூயசங்கின் பொடிதானென்று
வரிசையாஞ் சீனம்பாதி மகிழ் செம்புப்பொடியுங் காருன்
வரிசையா மதியினுப்பு மொளிபெற வரைக்காற்கூட்டி
பெரிசதாங் கல்வத்திட்டுப் பெலக்கவே பொடியாய்ப்பண்ணே. (உகள)

பண்ணியே செம்புப் பாத்திரம் பாவக மாகநீயு
மொண்ணிய பொடியைவைத்து மொளிர்நிம்பச் சாறுவிட்டு
மண்ணியே மண்டலந்தான் வைத்திதை மூடிநீயுங்
கண்ணிய பின்னெடுத்துக் கல்வத்தி லிதனைப்போடே. (உகஅ)

போட்டிடு மெள்பிரமாணம் போமது வியாதி கேளீர்
வாட்டிடுங் கடுப்புக் குத்தல் வலியதோர் சிவப்புக்காசந்
தீட்டிடும் படலம் புகைச்சல் தினவுகளெரிப்புப் பூவும்
சூட்டொடு பில்லமழலை துளிர்த்திடு மாணி போமே. (உகசு)

போகுமே மாலைக்காசம் பொலிவுறு பித்தகாசம்
சாகுமே வெள்ளெழுத்துந் தணிந்திடும் புழுவெட்டோ
டேகுமே கண்ணிநோய்க ளெல்லாந்தீர்ந் திடுமென்றூர்க்கு
மோகனுஞ் சரபோசேந்திரன் மொழிந்திடு முறைதப்பாதே. (உ௨௰)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| பொரித்த துரிசு | 2 | பலம் |
| ஊதுசங்கின் தூள் | 1 | ,, |
| பொரித்த சீனக்காரம் | $\frac{1}{2}$ | ,, |
| தாமிரப்பொடி | $\frac{1}{4}$ | ,, |
| இந்துப்பு | $\frac{1}{8}$ | ,, |

இவைகளை நன்றாக இடித்துக் கல்வத்திலிட்டுப் பொடி செய்து செப்புப்பாத்திரத்திலிட்டு, எலுமிச்சம்பழச் சாற்றை மருந்துகளுக்குமேலே 4 விரட்கடைச்சாறு நிற்கும் படியாக ஊற்றவும். இதற்கொரு மூடியிட்டுச் சுமார் ஒரு மண்டலஞ் சென்றபின்னிதை யெடுத்துக் கல்வத்திலிட்டரைத்துப் பொடியாக்கிக்கொள்ளவும். இந்தப் பொடியிலொரு எள் பிரமாணமெடுத்துக் கண்களிலிடக்

| | |
|---|---|
| கண் கடுப்பு | குத்தல்வலி |
| கண் சிவப்பு | கண்காசம் |
| படலம் | புகைச்சல் |
| தினவு | எரிப்பு |
| பூ | பில்லம் |
| அழலை | ஆணி |
| மாலைக்காசம் | பித்தகாசம் |
| வெள்ளெழுத்து | புழுவெட்டு |

முதலிய பலவித கண்ணோய்கள் தீரும்.

குறிப்பு:—

இம்மருந்தைத் தூளாகச் செய்யாமல் மாத்திரையாகத் திரட்டி மட்கலயத்திலோ அல்லது மூங்கில் குழாய்க்குள்ளோ வைத்திருந்து 2 வருடங்கள் சென்றபின் முலைப்பாலிலிழைத்துக் கண்களிலிடவும். இந்த முறைப்படி செய்யப்பட்ட மருந்து ஆசிரியரினுபயோகத்திலிருக்கிறது.

---

## 114. நேத்திர ரோகத்திற்கு "ஸ்வர்ணத் தாம்பிராதி உருண்டை"

தங்கமு மிரதமுந் தாமிரம் பளிங்குடன்
சங்குமுத்துப் பச்சைக் கர்ப்பூ ராதிதான்றி நெல்லியு
மங்கடுக்காய் தேற்றாம்வித்ததிமதுரம் துத்தமும்
பங்கமிலதுருசொரு பணவெடை வகைக்கிடேன். (உஉக)

சோகிபீத ரோகிணியிந் துப்புடன் கடல்நுரை
வேகச்சுக்குத் திப்பிலிமி ளகிந்தவ கையெலாம்
பாகஞ்சமன் கொண்டெலுமிச் சம்பழர சத்துடன்
மேகநிற மானவெள்ளை யாட்டின் பாலு மீளவே. (உஉஉ)

நந்திப்பூவன் னீர்கருத்த நங்கைகொங்கைப் பாலுடன்
சந்தக்கொம்மட் டிமாதளந் தம்பழர சமிவை
யைந்துவகை யாலுஞ்சாம மாட்டி நீட்டக் கயிறுசெய்
திந்தியாரி ழலிலுலர்த்தி நேத்திரத்துள் ளூட்டுமே. (உஉ௩)

ஊட்டுதற்கு முன்ரசத்தி லொருவகை கிடைத்ததி
லாட்டியிழைப் பாய்ச்சிறு பயறள வவிழ்தங்
காட்டுமுன்ன மேதிமிரங் காசமாலைப் பூவுடன்
சூட்டிரண சுக்கிரனும் துர்த்தசை வளர்த்தியே. (உஉச)

பற்பரோக மும்படலம் பாரும்தொண் ணூற் றெனு
மற்ற நோயகற்றுஞ்சொர்ணத் தாம்பிராதி உருண்டையை
யுற்பவவு யிர்க்கிடறெ ழித்திடச்செய் தார்த்தஞ்சை
நற்புகழை நாட்டுஞ் சரபோஜி மஹாராஜனே. (உஉ௫)

(இ-ள்)

| | |
|---|---|
| சுருள்த்தங்கம் | வெள்ளிப்பொடி |
| தாமிரப்பொடி | பளிங்குக்கல் |
| துளயிடாத முத்து | பச்சைக்கர்ப்பூரம் |
| தான்றிக்காய்த் தோல் | நெல்லிவற்றல் |
| கடுக்காய்த்தோல் | சீவிய தேற்றுங்கொட்டை |
| அதிமதுரம் | துத்தம் |
| துருசு | பொரித்த சோழி |
| பீதரோகிணி | இந்துப்பு (பொரித்தது) |
| கடல்நுரை | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| ஊதுசங்கு (சுட்டது) | |

இவைகள் வகைக்கு ஒரு பணவெடையெடுத்துக் கல்வத்திலிட்டுத் தூள் செய்துகொண்டு, எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைக்கவும். இதை மறுபடியும் வெள்ளாட்டுப்பால் கூட்டி நன்றாக வரைத்துக்கொள்ளவும். பின்பு நந்தியாவர்த்திப் பூச்சாறு கூட்டியரைக்கவும். பின்னர் கருத்த நிறமுள்ள ஸ்திரீயின் பால்விட்டு நன்றாக அரைக்கவும். கடைசியில், புளிப்பு மாதளம் பழச்சாறு விட்டு அரைக்கவும். ஒவ்வொரு திரவங்களிலும் ஒவ்வொரு ஜாமமரைத்து, நீளமான மாத்திரையாகச் செய்து நிழலிலுலர்த்திக்கொண்டு 2 வருடம் சென்ற பின், முற்கூறிய 5 வகைத் திரவங்களிலேதேனுமொன்றி லிழைத்துச் சிறு பயறளவு கண்களிலிடத், திமிரம், காசம், மாலைகண், பூ, இரணசுக்கிரன், தசை வளர்த்தி, பற்பரோகம், படலம் போன்ற 96 வகை ரோகங்களும் தீரும்.

## 115. நயனப் "படல மாத்திரை"

மதுரந்துத்தமும் வளர்நெல்லி தான்றியுட்பருப்பும்
புதுமிளகிவை பொருஞ் சமபாகமாய்ப் புனலா
லிதையரைத் துண்டையிட் டிடுந்தண்ணீ ராலிழைத்துப்
பதுமக் கண்ணிலிடப் படலங்கள் திமிரமும் பறக்கும். (உஉசு)

(இ-ள்)

| | |
|---|---|
| அதிமதுரம் | துத்தம் |
| நெல்லிப்பருப்பு | தான்றிப்பருப்பு |
| கறி மிளகு | |

இவைகளைச் சமமெடுத்துப் பொடித்துச் சுத்த ஜலம்விட்டு நன்ருகக் கல்வத்திலிட்டரைத்து, மாத்திரையாகத் திரட்டி நிழலி லுலர்த்தி ஒரு மாதம் கழித்துத் தண்ணீரிலிழைத்து நெல்லெடை கண்களிலிடப் படலங்களும், திமிரமும் தீரும்.

---

## 116. நயனப் "படல மாத்திரை"

முருங்கைவித்துடன் கடல்நுரை முட்டையின் மேல்த்தோல்
தருஞ்சைந்தவ லவணஞ் சங்கிவை சமபாகந்
தெரிந்து தண்ணீராலரைத்திட்டு மாத்திரை செய்து
முருங்கைப்பூ ரசமூட்டிட்டுப் படலத்தை முறியேன். (உஉஎ)

(இ-ள்)

| | |
|---|---|
| முருங்கைவித்து | கடல்நுரை |
| அடைவைத்தெடுத்த முட்டையோடு | இந்துப்பு |
| ஊதுசங்கு | |

இவைகளைச் சமனெடை யெடுத்துக் கல்வத்திலிட்டுத் தண்ணீர் வார்த்தரைத்து மாத்திரையாகத் திரட்டி, நிழலி லுலர்த்தி வைத்துக்கொண்டு, 6 மாதம் சென்றபின், முருங்கைப் பூச்சாற்றிலிழைத்துக் கண்களிலிடப் படலம், பூ, இவை தீரும்.

---

# 117. நயனப் பற்பரோகத்திற்கு மருந்து

யானைப்பல் மடல்துத்தஞ் சங்கச்வத்தின் பல்லுஞ்
சீனிக்காரமும் பீதரோகிணியுஞ்சீர் கழஞ்சு
தானுமோரிலைத்தாமரை வேர்தனில்ப் பலமா
யான சாறணை பூளை நாயுருவி விதையதாமே. (உஉஅ)

கரியசாலை பொன் கொடுப்பையுங் காண்சிறுக்கீரை
யுரிய வேரிதைச் சமங்கொண்டு வொன் பழச்சாற்ரு
லரைத்துப் பத்தஞ்சு துட்டெனவது தட்டியுலர்த்தி
வரையுமி முட்டினுள் வைத்திதைப் புடஞ்செய்ய வகைகேளே. (உஉக)

புளியம்பட்டையி னெருப்பிட்டு மதிற்புடம் வைக்கத்
தெளியும் வில்லையைப் பொடிசெய்து சிமிழினிலடைத்து
விளையுமெள்ளது விதமாயிடும் பற்பரோக
முழிகுருடுடன் போக்கிட மூட்டிடு விழிக்கே. (உஈய)

(இ-ள்)

| | |
|---|---|
| யானைப்பல் | மடல்த்துத்தம் |
| ஊதுசங்கு | குதிரைப்பல் |
| சீனக்காரம் | பீதரோகிணி |

இவைகள் வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை

| | |
|---|---|
| ஓரிதழ்த்தாமரைவேர் | வெண்சாறணைவேர் |
| சிறுபூளைவேர் | சிவப்பு நாயுருவி விதை |
| கையாந்தகரைவேர் | பொன்னுங்காணிவேர் |
| சிறுகீரைவேர் | |

இவைகள் வகைக்கு 1 பலம்

இவைகளையொன்றுசேர்த்திடித்துக் கல்வத்திலிட்டெலு மிச்சம் பழச்சாறிட்டு நன்ருகவரைத்து, அவ்விழுதை 10 அல்லது 15 வில்லையாகத்தட்டி வெயிலிலுலர்த்தவும். காய்ந்தபின் 2 மரக்கால் உமிமுட்டிற்குள் வில்லைகளை வைத்துப்புடமிடவும். மறுபடியுமிவைகளையெடுத்து, எலுமிச்சம்பழச் சாறிட்டரைத்து வில்லைகளாகத் தட்டிக் காயவைத்து, ஒரு அகலில் வைத்துச் சீலைமண் செய்து, காய்ந்தபின் புளியம் பிரணி

யினுலுண்டான நெருப்பில் புடமிட்டெடுத்து, ஆறியபின் ஓட்டைத்திறந்து, உள்ளிருக்கும் வில்லைகளைக் கல்வத்தி லிட்டுப் பொடி செய்யவும். பின்பு இதையொரு வெள்ளைத் துணியினுல் வடிக்கட்டிச் சிமிழிலடைத்துக்கொண்டொரு வாரஞ் சென்றபின், எள்ளளவெடுத்துக் கண்களிலிடப் பற்ப ரோகமும், மூழிக்குருடுந் தீரும்.

---

## 118. நயன ரோகத்திற்குக் 'கப்புக் கலிக்கம்'

காட்டுவாகைவேர் வில்வவேர் கான்றுளாய்ப் பூவுந்
தீட்டுங் கிரந்தி தகரமுடன் தேவதாரமுமாங்
கூட்டுந் திப்பிலி மிளகு சுக்குடன் மரமஞ்சள்
நாட்டு மஞ்சளுங் கடுநெல்லி தான்றிகல் மருந்தே. (உ௬௧)

இதையெல்லாஞ் சரியிட்டிடி தூள் வடிக்கட்டி
யதை வெள்ளாட்டு நீரதனிலரைத் துருட்டியக் குளிகை
யுதையங் கண்ணிலிடக் கலிக்கஞ் செய்யுட்கொள் நசிய
மதையுந்தேள்சுரம் பாம்புபேய் மருந்தினீட்டிதற்கே. (உ௬௨)

(இ-ள்)

| | |
|---|---|
| காட்டுவாகை வேர் | வில்வ வேர் |
| காட்டுத் துளசிப் புஷ்பம் | கிரந்தி தகரம் |
| தேவதாரம் | திப்பிலி |
| மிளகு | சுக்கு |
| மரமஞ்சள் | மஞ்சள் |
| கடுக்காய்த்தோல் | நெல்லிவற்றல் |
| தான்றிக்காய்த் தோல் | |

இவைகளெல்லாவற்றையும், சமமெடுத்திடித்து வஸ்திர காயஞ் செய்து கல்வத்திலிட்டு, வெள்ளாட்டு நீர் விட்டு நன்ருக அரைத்து மாத்திரையாகத் திரட்டி, நிழலில் காய வைக்கவும். 6 மாதங்கள் சென்ற பின்னிதை தண்ணீரி விழைத்துக் கண்களிலிடவும். விஷகடிகளுக்குத் தண்ணீரி

விழைத்து உள்ளுக்குக் கொடுக்கலாம். நஸ்யமும் செய்யலாம். ஜ்வரம், தேள், பாம்பு, மருந்ீடு முதலியவைகளுக்கும் உபயோகப்படுத்தலாம்.

குறிப்பு :—

இம்மருந்து அஷ்டாங்க ஹ்ருதயத்தில் விஷ சிகித்ஸை யில் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலிம்மருந்தைச் செம் மறியாட்டு மூத்திரத்திலரைக்க வேண்டுமென்றிருக்கிறது. இது காலரா, அஜீர்ணம் முதலியவைகளையுந் தீர்க்கும். இம் மருந்து இவ்வாசிரியரின் அனுபவத்திலிருக்கிறது.

---

## 119. நயன வியாதிக்குக் "கலிக்க மாத்திரை"

வெள்ளைச்சா றணைவேரும் புங்குடன்
வித்துந்திப் பிலியுங்கடுக்
கொள்ளின்றுலுஞ் சமபாகமாகவே
கூட்டுங் கரிசாலைச் சாற்றிறுற்
தெள்ளிய தாமரைக் கலிக்க மாத்திரை
செய்துலர்த்தி முலைப்பாலிலுந்
தள்ளிடாப்பசு வெண்ணெய் தன்னிலுந்
தாக்கும் புகைப்புளி தள்ளிடேன். (உ௫௫)

(இ-ள்)

| | |
|---|---|
| வெள்ளைச்சாறணை வேர் | புங்கம் வித்து |
| திப்பிலி | கடுக்காய்த்தோல் |

இன்னன்கையுஞ் சமபாகமெடுத்துக் கையாந்தகரைச் சாற்றினல் நன்ருகவரைத்து, மாத்திரையாகத் திரட்டி உலர்த்தி வைத்துக்கொண்டொருமாதஞ் சென்றபின், முலைப் பாலிலாவது அல்லது பசுவின் வெண்ணெயிலாவது இழைத்துக் கண்களிலிடவும்.

பத்தியம் :—

புளி, புகை, தள்ளிவிடவும்.

---

## 120. நயன திமிராதி மாத்திரை

கடுக்காய் மஞ்சளுங்காமனிந்துப்பிவை சரியா
யெடுப்பாய் தண்ணீரிட்டிதையரைத்திடு குளிகையதாய்க்
கடுப்பாம் நேத்திரப்படலங்கண்டிமிரங்கள் கலங்கக்
கொடுப்பாய் கண்ணிற்குட்சம்பீர நீர்க்குழைத்தே. (உ௲௪)

(இ-ள்)

கடுக்காய்த்தோல் மஞ்சள்
பொரித்த இந்துப்பு

இவைகளைச் சரியெடை நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டுத் தண்ணீர் விட்டரைத்து, மாத்திரையாகத் திரட்டியொரு மாதஞ் சென்றபின், இதை எலுமிச்சம் பழச்சாற்றிலுரைத்துக் கண்களிலிட நேத்திரப்படலம், திமிரம், முதலிய நோய்கள் தீரும்.

---

## 121. நயன திமிராதி மாத்திரை

தக்க சௌவீராஞ்சன் வராகனெடையைந்தாகும்
மிக்கதுத்தமவ்வளவிடை வராகன் மூன்றெடையாஞ்
சுக்குமே நெல்லிமுள்ளியுந்தூய சீனிக்காரம்
புக்கும் பச்சைக்கர்ப்பூரமொரு வராகனுயப் போடேன். (உ௲௫)

போட்டிதை நல்ல தண்ணீரைப் பொழிந்தரைத்துருட்டி
வாட்டு நிழலிற் காயவைத்தெடுத்ததை வைத்து
நாட்ட நோய்க்கெல்லா நல்லதண்ணீரினலரைத்து
மீட்டும் போதிரு கண்டிமிரம் விட்டோடுமே. (உ௲௬)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சௌவீராஞ்ஜனம் | 5 | வராகனெடை |
| துத்தம் | 5 | ,, |
| சுக்கு | 3 | ,, |
| நெல்லிமுள்ளி | 3 | ,, |
| சீனக்காரம் | 3 | ,, |
| பச்சைக்கர்ப்பூரம் | 1 | ,, |

இவைகளையெடுத்துத் தூள் செய்து கல்வத்திலிட்டுச் சுத்தஜலம் விட்டு நன்ருகவரைத்து. மாத்திரையாகத்திரட்டி, நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டொரு மாதஞ் சென்றபின், சுத்த ஜலத்திலிழைத்துக் கண்களிலிடக் கண்திமிரங்கள் தீரும்.

---

## 122. நயனப் படுவனுக்கு மருந்து

கடல்நுரை சங்கோரிதழ்க்கமலத்தின் வேரு
மடல்துத்தஞ் சிறுக்கீரைவே ரதிமதுரம் பொற்கண்ணிப்
படரும் புள்ளடி வேர்ச்சிறு பூளை வேர் பகரு
மெடைக் கறிஞ்சொரு பணவெடைப் புழுகிடுமிதற்கே.
(உ௲எ)

எலுமிச்சம்பழச் சாற்றிறைவிதை யெலாமரைத்தோர்
கலந்தனிலிட்டு மற்றொரு கலத்தினுற் றேய்த்தும்
நலங்குளிகை செய் நிழலிலுலர்த்திதை நங்கைமார்கள்
முலையின் பாலினுலிடக் கண் பூப்புண் முதல் விடுமே. (உ௲அ)

(இ-ள்)

| | |
|---|---|
| கடல் நுரை | ஊது சங்கு |
| ஓரிதழ்த் தாமரை வேர் | மடல்த் துத்தம் |
| சிறுக்கீரை வேர் | அதிமதுரம் |
| பொன்னுங்காணி வேர் | சிறு புள்ளடி வேர் |
| சிறு பூளை வேர் | |

இவைகள் வகைக்கு—1¼ வராகனெடை, யெடுத்திவற்றை யெல்லாவற்றையுமிடித்துக் கல்வத்திலிட்டெலுமிச்சம்பழச் சாறு விட்டு நன்ருயரைத்து, புனுகு 3½ குன்றியும் சேர்த்து மாத்திரையாகத் திரட்டி நிழலிலுலர்த்திவைத்துக்கொண்டு, 6 மாதங்கள் சென்றபின், முலைப்பாலிலிழைத்துக் கண்களிலிடக் கண்ணிலுள்ள பூ, புண் முதலியவை தீரும்.

---

## 123. நயன சந்திரகாசத்திற்கு மருந்து

அஞ்ஜனக்கல் துத்த மிரு பங்கு துருசிடு
மூன்று மளவாயிட்டுக்
கொஞ்ச தண்ணீர் வார்த்தரைத்து வழித்திட்டு
முருட்டுண்டைக் குளிகை கட்டி
யெஞ்சகிழ லுலர்த்திட்டுக் கண்டடிப்புப்
புழு வெட்டு மிரு கண் பூளை
மிஞ்சவிளை சந்திரகா சந்தனக்கு
முலைப்பாலில் விட்டுந் தீரே. (உஙக)

(இ-ள்)

| | |
|---|---|
| அஞ்சனக்கல் | 2 பலம் |
| துருசு (பொரித்தது) | 3 பலம் |
| துத்தம் ,, | 2 பலம் |

இவற்றைக் கல்வத்திலிட்டு, நல்ல தண்ணீர் விட்டு நன்றாக வரைத்து, மாத்திரைகளாகத் திரட்டி, நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டொருமாதஞ் சென்றபின், முலைப்பாலிலிழைத்துக் கண்களிலிடக் கண் தடிப்பு, புழு வெட்டு, கண்களில் பீளை சேருஞ் சந்திரகாசம் முதலியவை தீரும்.

---

## 124. நயனப்பூ வியாதி, சுக்கில காசத்திற்கு மருந்து

பிச்சியலராத முகிழ்த் தேவதாரஞ்
சுண்டிப் பேரிந்துப்பும்
வச்சிடிது நாலையுந் தண்ணீரிலரைக்
குளிகை செய்வாயுலர்த்திக்
கச்சு முலைப்பாலிலுரைக் கண்ணிலிடத்
தசைவிளை காசச் சுக்கில
மெச்சுசிற் ருமணக்கினுள் விதை
சம்பீரப் பழநீர் விட்டிழைத்தே. (உசம)

இளைகண்ணிற் றேனுநெய்யுங் கலந்தூற்றிக்
காய்ச்சிடுநீ ரிட்டுக்கண்ணைத்
தெளிவுறவே கழுவி வெயிற் காற்றுப்
படாமலிரு தீய நோய்கள்

விளையுஞ்சுக் கிலகாச மூன்றுவகைப்
புரிவாகும் விட்டுந் தீருங்
கிளவாழை வர்க்கஞ்சூழ்த் தஞ்சையாள்
சரபேந்திரன் கிளர்ந்ததாமே. (உசக)

(இ-ள்)

1. மலராத பிச்சிமொட்டு தேவதாரு
சுக்கு இந்துப்பு

இன்னான்கையுங் கல்வத்திலிட்டு இடித்துத் தண்ணீர் விட்டரைத்து மாத்திரையாகத்திரட்டி, நிழலிலுலர்த்தியொரு மாதஞ்சென்றபின், முலைப்பாலிலிழைத்துப் பயறளவெடுத்துக் கண்ணிலிடத் தசைவளர்த்தி, காசம், சுக்கிலமிவை தீரும்.

2. சிற்றாமணக்கினுள் விதையையெலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து, மாத்திரையாகத்திரட்டி வைத்துக்கொண்டு, ஈளைக்கண்களுக்கு இம்மாத்திரையை, நெய்யுந் தேனுங்கலந்த கலப்பில் சிறிது இழைத்துப் பயறளவு கண்களிலிடவும். பின்பு கண்களை வெந்நீரினாலலம்பிக் காற்றும், வெய்யிலும் படாம லிருக்கவும். மூன்றுவகைச் சுக்கிலகாசங்களும் தீரும்.

---

## 125. நேத்திர வாயுவுக்கு மருந்து

ஒரு சிரங்கை மணித்தக்கா ளிக்காயொருசிரங்கை
கரி மிளகு நேகவரைக்காணவுண்டை செய்தே
தரு நிழலிலுலர்த்தி நல்ல தண்ணீர் விட்டரைத்தே
யிரு விழி வாயுவுக்கிடுவதுங் கடுக்காய் பத்தே. (உசஉ)

(இ-ள்)

பச்சையான மணித்தக்காளிக்காய் 1 சிரங்கை
மிளகு 1 ,,

இவ்விரண்டையுங் கல்வத்திலிட்டு நன்றாக வரைத்து உருண்டை செய்து, நிழலிலுலர்த்திக்கொள்ளவும், இம்மருந்

தைப் பதினைந்து நாள் சென்றபின், தண்ணீரிலிழைத்துக் கடுகளவு கண்களிலிடவும். சீமைக்கடுக்காயைத் தண்ணீரிலிழைத்து நெற்றியில் பத்துப்போடவும். நேத்திரவாயு தீரும்.

---

## 126. நயனப் புகைச்சலுக்கு மருந்து

வெள்ளைச் சாறணை நந்தியாவர்த்த வேர்ப்பட்டைக்
கொள்ளத்தான் சரியம்மான் பச்சரிசியின் கூர்வேர்
விள்ளத்தேற்று வித்தினை வெதுப்பிது சரியாய்
வெள்ளைக்காரமுமெலுமிச்சு மைந்துவிட்டரையே. (உசரு)

அரைத்துருட்டி உருண்டையை நிழலதிலுலர்த்தி
நுரைத்த காடியி னெலுமிச்சை நுண் முலைப்பாலி
லுரைத்து முப்பொழு தொன்பது பொழுதிடக்காச
மரைப் புகைச்சலுமிழிக் கண்ணும்படல மாற்றிடுமே. (உசச)

முழிகுருடோடு தீர்ந்திடு முழுக்கெண்ணெய்தனிலே
நளி பொன்னுங்கண்ணியிட்டுக் காய்ச்சிதை நடுத்தலையிற்
குளிர் வார்த்தரப்பிட்டு வெந்நீரிற் குளிப்பா
யளி வெங்காரத்தைத் தண்ணீரால் சுத்தியாக்கிதற்கே. (உசஎ)

(இ-ள்)

| | |
|---|---|
| வெள்ளைச்சாறணை வேர் | நந்தியாவர்த்திவேர்ப்பட்டை |
| அம்மான் பச்சரிசி வேர் | வெதுப்பிய தேத்தான்வித்து |
| பொரித்த சீனக்காரம் | |

இச்சரக்குகளைச் சமயெடையெடுத்துக், கல்லுரலிலிட்டிடித்துக் கல்வத்திலிட்டு, எலுமிச்சம்பழச்சாறுவிட்டு நன்றாகவரைத்து, மாத்திரையாகத்திரட்டி நிழலிலுலர்த்திக்கொண்டு, காடியிலாவது, எலுமிச்சம்பழரசத்திலாவது, முலைப்பாலிலாவது, தினமும் மூன்றுதடவை வீதம், 9 வேளைக்குச் சிறுபயறளவெடுத்துக் கண்களிலிடவும், நயனகாசம், மரைப்பு, புகைச்சல், இழிகண், படலம் முதலிய ரோகங்கள் தீரும்.

(2) முழுகண் குருடுநீங்க, நல்லெண்ணெயில் பொன்னுங்காணிச்சாறு சரியளவு விட்டுக் காய்ச்சித் தலையில்

தேய்த்து நன்றாக ஊறிப் பின்பு அரப்பிட்டு (இலுப்பைக்கட்டி) வெந்நீரில் ஸ்நானஞ் செய்யவும்.

குறிப்பு:—

செய்யுளின் கடைசி வரியின் பொருள் புலப்படவில்லை.

---

## 127. நயன வியாதிப் புகைச்சல், வாய்வுக்கு மருந்து

முக்கடுகு மரிதகி மடற்துத்தஞ்
செம்பரத்தூள் மூட்டுஞ்சீனம்
மிக்க பீதரோகிணியும் வகையொன்று
கழஞ்சொன்று விரும்புத்தூளுந்
தொக்கிடு மோரிதழ் மூலமிருவகை
முக்கழஞ்சாய்த் தூக்கி தெல்லாந்
தக்கெலுமிச்சம்பழநீர் விட்டரைத்துங்
குளிகை செய்ததையுந்தானே. (உசகு)

ஆமலக நீரதனிலாறிரண்டு
தினமூறி யுலரவைத்தே
நீமூலைப்பாலிட்டரைத்துப் புகைச்சலு
நேத்திரவாய்வு நீரடிக்கு
மிரத்தப் படலங்கள் மாலைக்கண்
டனக்கிடலாமாற்று நோயைச்
சோம தானருள் பெற்ற தஞ்சைநகரச்
சரபேந்திரன் சொன்னதாமே. (உசஎ)

(இ-ள்)

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கடுக்காய்த்தோல் |
| மடல்துத்தம் | செப்புத்தூள் |
| சீனக்காரம் | பீதரோகிணீ |

இவை வகைக்கு 1 கழஞ்சு ($1\frac{1}{4}$ வராகனெடை)

ஓரிதழ்த்தாமரைவேர் இரும்புத்தூள் இவை வகைக்கு 3 கழஞ்சு.

இவைகளை எடுத்துக்கொண்டு, கல்லுரலிலிட்டிடித்துக் கல்வத்திலிட்டு, எலுமிச்சம்பழச்சாறுவிட்டு நேகவரைத்து, மாத்திரையர்கத் திரட்டிக்கொண்டு, இவைகளை மறுபடியும் நெல்லிக்காய்ச் சாற்றினில் 12 தினங்களூறவைக்கவும். இதைக் கல்வத்திலிட்டு முன்போலரைத்து மாத்திரைசெய்து, நிழலிலுலர்த்திக்கொள்ளவும். ஒரு வருடஞ் சென்றபின், இதை முலைப்பாலிலிழைத்துக் கண்களிலிடப் புகைச்சல், நேத்திர வாயு, நீர்முட்டல், இரத்தப்படலம், மாலைக்கண் முதலிய நேத்திர ரோகங்கள் தீரும்.

---

## 128. நயன வியாதிக்குப் "பச்சையுருண்டை"

ஓரிதழின் மூலந்தலையோடு துத்தஞ் சுண்ணக்கல்
நேரொரு வகைக்கு மூவராகனெடையாய் நிறைப்
பாரெலுமிச்சம்பழச் சாற்ருலு மஞ்சுநாளரை
யீரிறைப் பிரமாணமுண்டையிட முலைப்பாலேற்குமே. (உசஅ)

(இ-ள்)

| | |
|---|---|
| ஓரிதழ்த்தாமரைவேர் | வெந்த மண்டையோடு |
| துத்தம் | சுண்ணாம்பு நீறு |

இவைகளை வகைக்கு 3 வராகனெடையாயெடுத்துக் கல்வத்திலிட்டு, எலுமிச்சம்பழச்சாற்றினல் 5 தினங்களரைத்து, இரு விரற்கடைப் பிரமாணமுருண்டை செய்து, உலர்த்தி 6 மாதம் சென்ற பின் முலைப்பாலிலிழைத்துக் கண்களிலிடத் தக்கதாகும்.

ஈரிறை—இருவிரற்கடை

---

## 129. நயன வியாதிக்குப் 'பச்சையுருண்டை'

துத்தந்தலையோடு சங்குத்தூட்கற்சுண்ணஞ் சுட்டநீறு
உத்தசிறு கீரையோரிதழும் பொன்னாங்காணிவேர்
ஒத்த வகைக்கோர் கழஞ்சொளி யெலுமிச்சம்பழச்
சாத்தினு லாறுநாளுஞ் சாமமூன் றரைத்திடேன். (உசக)

இடுதுருசு முக்கழஞ்சயேற்கவரை கயிறுசெய்
நெடுநிழ லுலர்த்திவைத்து நேகமுலைப் பாலினு
விடுபடலமும் புகைச்ச லேறுங்காச நோயெலாம்
விடுநயனமுந்துலங்கு மெய்ம்முறைசெய்வாயிதே. (உருய)

(இ-ள்)

| | |
|---|---|
| துத்தம் | வெந்தமண்டையோடு |
| சங்குத்தூள் | சுண்ணாம்பு சுட்டநீறு |
| சிறுகீரைவேர் | ஓரிதழ்த்தாமரைவேர் |
| பொன்னாங்காணிவேர் | |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்துக் கல்வத்திலிட்டு, எலுமிச்சம்பழச்சாறு விட்டு, தினமொன்றுக்கு 3 ஜாமம் வீதம், 6 நாளைக்கு அரைத்து அம்மொத்தையுடன் பொரித்த துரிசு $3\frac{3}{4}$ வராகனெடை சேர்த்து மறுபடியும் 6 நாட்களுக்கரைத்து, மாத்திரையாகத் திரட்டி நிழலிலுலர்த்திக்கொள்ளவும், 9 மாதங்கள் கழித்து இதை முலைப்பாலிலிழைத்துக் கண்களிலிடப் படலம், புகைச்சல், ஆரம்பத்திலுள்ள நேத்திர காசநோய் முதலியவைகளெல்லாந் தீர்ந்து கண்களும் பிரகாசிக்கும்.

---

## 130. நயன வியாதிக்குப் 'பச்சையுருண்டை'

துரிசிந்துப்புப் புங்கம்வித்துஞ் சூழ்கரி சாலைசங்கும்
தெரிசமனு மாமெலுமிச்சம் பழச் சாற்றினு
லுரியதா யுருட்டியிதை யுலர்த்திமுலைப்பாலினு
லரியகண்ணி லிடவுந்நோயு மகலும்பூ மாறுமே. (உருக)

(இ-ள்)

| | |
|---|---|
| பொரித்த துருசு | பொரித்த இந்துப்பு |
| புங்கம் வித்து | கையாந்தகரை வேர் |
| சங்குத்தூள் | |

இவற்றைச் சமனெடையாகக் கல்வத்திலிட்டு, எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து, உருட்டி நிழலிலுலர்த்தி ஆறு மாதங்கள் சென்றபின் முலைப்பாலிலிழைத்துக் கண்களிலிடக் கண் வியாதிகளும், பூவுந்தீரும்.

---

## 131. நயன வியாதிக்குப் "பச்சைமாத்திரை"

துருசு வராகனெடை துத்தமந்தெடைக்கேப்
பரிய சங்கு வராகனெடை பன்னிரண்டும் பாச்சே
யிருசாமம் புளியிலைச் சாற்றிட்டும் பழச்சாற்று
லிருசாம மரைத்துருட்டி யிதையும் நிழலுலர்த்தே. (உருஉ)

உலர்த்திப் பனைமடல் நீருண் முலைப்பாலாலு
நிலைத்தநந்தி யாவட்டப் பூநீர்நெருஞ் சிப்பூநீர்
நலத்திதனி லுலிழைத்து நயனத்திலூட்டக்
குலைத்துத்தொண் ணூற்ரூறும்விட்டுக் குடிப்போகு நோயே. (உருங)

(இ-ள்)

| | |
|---|---|
| துருசு (பொரித்தது) | 2 வராகனெடை |
| துத்தம், | 2 வராகனெடை |
| சங்குத்தூள் | 12 வராகனெடை |

இவற்றைக் கல்வத்திலிட்டுப் பொடித்துக் கொண்டு, புளியிலைச் சாறுவிட்டு இரண்டு ஜாமமும், எலுமிச்சம்பழச் சாறு விட்டு இரண்டு ஜாமமுமரைத்து, உருட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு 6 மாதங்கள் சென்றபின்

| | |
|---|---|
| பனை மட்டைச்சாறு | நந்தியாவர்த்திப் பூச்சாறு |
| முலைப்பால் | செப்பு நெருஞ்சிப்புஷ்பச்சாறு |

இதிலேதேனுமொன்றிலிழைத்துக் கண்களில், கடுகளவு தீட்டக் கண் ரோகங்கள் 96-ந் தீரும். ரோகத்திற்குத் தகுந்த சாற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

---

## 132. மாலைக்கண்ணுக்கு மருந்து

பாலைவிரை யிளநீரின் மூன்றுதின
  முரைத்திட்டாற் பறக்குங்கொன்றை
மூலவிரை தன்னையுரைக் கண்ணிலிட
  மாலையும்போ முளைக்குந் தும்பை
ஞால மிசை மேனியிரு வகைவேருஞ்
  சேர்த்தரைப்பாய் நன்னீரால
மேலுருட்டிக் குளிகைசெய் துலர்த்திட்டுங்
  கண்ணிலிடு வெம்மாலைக்கே. (உ௫௪)

(இ-ள்)

(i) பாலை (சாப்பிடும் வகை) ப் பழத்தினுள்ளிருக்கும் விதையை இளநீரிலிழைத்து மூன்று தினங்கள் கண்களிலிட மாலைக்கண் மாறும்.

(ii) சரக்கொன்றை விதையையும் தண்ணீரிலிழைத்து முன்போலக் கண்களிலிட மாலைக்கண் தீரும்.

(iii) தும்பைவேர், குப்பைமேனி வேரிவ்விரண்டையுஞ் சமமாகவிடித்துத் தண்ணீரினாலரைத்து மாத்திரை செய்து, நிழலிலுலர்த்தி 1 மாதஞ் சென்று தண்ணீரிலிழைத்துக் கண்களிலிட மாலை தீரும்.

---

## 133. நயன வியாதி, அந்திமாலைக்குருண்டை

முடக்கொத்தா னிலைவெள்ளாட் டீரல்சுட்டுஞ்
  சேர்த்தரைத்து முறிந்தவோட்டி
லடைதட்டிச் சாப்பிடவுங் கருப்புட்டிக்
  கட்டியொன்று மானவெள்ளைப்

படிவீச மோரிதழின் ருமரையி
லோர்பிடியும் பாரீர் மூன்று
மிடித்துருண்டை மூன்றுதினஞ் சாப்பிட
வந்திமாலை யேகுந்தானே. (உருரு)

(இ-ள்)

(i) வெள்ளாட்டு ஈரலைக் கொண்டுவந்து, அடுப்பிலிட்டுச் சுட்டு, முடக்கொத்தானிலை யுடனேயரைத்து, உடைந்த மண்பானை யோட்டை யடுப்பில் வைத்து அதிலடை செய்து சாப்பிட்டுவர, அந்திமாலை, நீங்கும்.

(ii) கழுவிக் காயவைத்த எள்ளு —வீசம்படி
ஓரிதழ்த்தாமரையிலை 1 பிடி
பனை வெல்லம் —ஒரு கட்டி

இம்மூன்றையு மொன்றுபடவிடித்து, உருண்டை செய்து தினமொன்றுக்கு 3 உருண்டைகள் வீதம் 3 தினங்கள் சாப்பிட, அந்திமாலை தீரும்.

---

## 134. நயன வியாதிக்கு 'மிரியாதி மாத்திரை'

மிளகொரு வராகனெடை
மேலிரண்டாந் திப்பிலி
வளவலம்புரிக்காய் மூன்றுமாம்
வராகனெடை வகை
யளவு புளியினிலைச் சாறதனு
லாட்டி யுண்டை செய்து
உளவிதைக் கண்ணூட்டிட
நோயோடுந்திமிரந் திருமே. (உருசு)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| மிளகு | — 1 | வராகனெடை |
| திப்பிலி | — 2 | ,, |
| வலம்புரிக்காய் | — 3 | ,, |

இவைகளையெடுத்துக் கல்வத்திலிட்டு 6 வராகனெடை புளியிலைச்சாறு விட்டரைத்து, உருண்டை செய்து நிழலிலுலர்த்தவும். இதைத் தண்ணீரிலிழைத்துக் கண்களிலிடக் கண்ணோய்களும், கண் திமிரமுந் தீரும்.

## 135. நயன வியாதிக்கு 'ரஸாதி குளிகை'

இரதமோர் கழஞ்செடை காரீயமோர் கழஞ்சு
தாமிரமும் நாற்கழஞ்சு கூட்டிப் பேசுங்காடியாலரைத்
துரவுண்டை செய்துலர்த்தி யோதுஞ்செம்பு சட்டியில்
கரமுரைத்தி டத்திமிரங் கண்ணீர்ப்பாய்ச்சல் கழலுமே.

(உருஎ)

(இ-ள்)

| | |
|---|---|
| பாதரஸம் | — 1 கழஞ்சு |
| காரீயம் | — 1 ,, |
| தாமிரப்பொடி | — 4 ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டு காடியினாலரைத்து, (4 ஜாமம்) உருண்டை செய்து, நிழலிலுலர்த்திக் கொள்ளவும். ஒரு செப்புத்தகட்டிலொருதுளி முலைப்பாலைவிட்டு, அதிலம்மாத் திரையை யிழைத்துச் சிறு பயறளவு, கண்ணிலிடத் திமிரந் தண்ணீர்ப் பாய்ச்சல் தீரும்.

## 136. நயன வியாதிக்கு "வில்வாதி உருண்டை"

வில்வவேருந் திப்பிலி மிளகு சுக்கு வாகைவேர்
நெல்லி புங்கும் மகிழம்வித்து நேர் கடுக்காய் தான்றிக்காய்
நல் வசம்பு பத்துஞ் சமனாக வெலுமிச்சை ரசத்
தில்லரைத் துருட்டியே யுலர்த்தியுங் கண்ணோய்க்கிடேன்.

(உருஅ)

(இ-ள்)

| | |
|---|---|
| வில்வ வேர் | திப்பிலி |
| மிளகு | சுக்கு |
| வாகை வேர் | நெல்லிமுள்ளி |
| புங்கம்வித்து | மகிழம்வித்து |
| கடுக்காய்த் தோல் | தான்றிக்காய்த்தோல் |
| புராணி நீக்கிய வசம்பு | |

ஆக இப்பதினொன்று சரக்குகளேயுமெலுமிச்சம் பழச் சாறுவிட்டு நன்ருக வரைத்துருட்டி, நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு, 6 மாதங்கள் சென்ற பின்னர் தாய்ப்பாலி லிழைத்துக் கண்களிலிடக் கண்ணேய்கள் தீரும்.

குறிப்பு:—

பாட்டில் 10 சரக்கென்று குறித்திருப்பது பிசகு.

---

## 137. வெள்ளெழுத்திற்கு மருந்து

சங்கு வெள்ளேயுமோரிதழ்த் தாமரையிலேயும்
பங்கு துத்தமும் பலகரை மிளகுடனிவைகள்
நன்கரைத்துருண்டை செய்துலர்த்திடு நல்லநீரால்
பொங்கிழைத்து வெள்ளெழுத்துக் கண்புகைச்ச லுக்கிடுமே.
(உருக)

(இ-ள்)

| | |
|---|---|
| ஊது சங்குத்தூள் | ஓரிதழ்த்தாமரையிலே |
| துத்தம் | பலகரைத்தூள்(பொரித்தது) |
| மிளகு | |

இவைகளேச் சம எடையெடுத்துக் கொண்டுச் சுத்த ஜலத் திலரைத்து 'உருண்டை செய்து' நிழலிலுலர்த்திக்கொண்டு, சுத்த ஜலத்திலிழைத்துக் கண்களிலிட வெள்ளெழுத்தும், கண் புகைச்சலும் தீரும்.

---

## 138. வெள்ளெழுத்திற்கு

ஓரிதழின் வேர் கழஞ்சியும் துத்த மோர் கழஞ்சும்
வீர நெல்லி முள்ளியதரைக் கழஞ்சு காற்கழஞ்சும்
கார்மிள கெலுமிச்சம் நீர் கலந்தரை த்துருட்டிப்
பார் படலம் வெள்ளெழுத்துப் பூப்பழ ரசத்திடப் போமே.
(உசுய)

(இ-ள்)

| | |
|---|---|
| ஓரிதழ்த்தாமரைவேர் | 1 கழஞ்சு |
| துத்தம் (பொரித்தது) | 1 ,, |
| நெல்விமுள்ளி | ½ ,, |
| மிளகு | ¼ ,, |

இவற்றையெலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து மாத்திரையாகத்திரட்டி, நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டெலுமிச்சம் பழச்சாற்றிலிழைத்துக் கடுகளவெடுத்துக் கண்களிலிட வெள்ளெழுத்து, பூ, படலம் முதலிய நோய்கள் தீரும்.

---

## 139. வெள்ளெழுத்திற்கு மருந்து

நெல்லிப் பிஞ்சுடனேறும் வெட்பூலா வேர்ப்பட்
டொல்லி மோரிதட் டாமரை வேருடன் துத்த
மெல்லெலுமிச்சம் நீரதால் விட்டரைத்துருட்டி
வெல்லுங் கண்ணிட்டுப் படலம் வெள்ளெழுத்தையும்
[விலக்கேன். (உசுக)

(இ-ள்)

| | |
|---|---|
| நெல்லிப்பிஞ்சு | வெட்பூலாவேர்ப்பட்டை |
| ஓரிதழ்த்தாமரைவேர் | துத்தம் |

இவற்றைச் சமமாகவெடுத்துக் கல்வத்திலிட்டு, எலுமிச்சம்பழச்சாறுவிட்டு நன்ருகவரைத்து, உருட்டிவைத்துக்கொண்டு, முலைப்பாலிலிழைத்து அரை அரிசி எடை கண்களிலிடப் படலம், வெள்ளெழுத்து முதலிய நோய்கள் தீரும்.

---

# 5. நயன ரோகத்திற்கு "மை" வகைகள்

## 140. அழிகண்ணுக்கு "மை"

அளி (ழி) கண்ணிற்கு மையாவ திதைக்கேளு
மன்றெடு கொடுவேலிவேர் பச்சையாய்க்
களிநறுங் கியசாற்றில் துருசியின்
கட்டியூறிட வெள்ளையா மன்னிறை
யொளிதுத்தங்கூட்டி மெல்லியதாய்ப்
பொடியூட்டி வெள்ளிய
சீலைதனில் வைத்துத்திரிச்செய்து சிற்ருமணக்கெண்
ணெய்திருவிளக்கேத்தி மைப்பற்றவிப்பதே. (உசுஉ)

வைத்தெடுத்தமை சிற்ருமணக்கெண்ணெய்
வார்த்துமேகுழைத் தோர்சிமிழிலடைப்
பித்துக்கொண்டழி கண்ணிக்கிமைத்தடிப்
பெனும்நோய்க்கிடுவா யெட்டுநாளந்தி
வைத்து சந்தியிருநேரம் போடவுமாம்
படலங்கள் காசங்களுக்குமாம்
முத்தமிழுங் கோதே பிரித்தரி
முதல்வனுஞ் சரபேந்திரன் முறைமையே. (உசுங)

(இ-ள்)

கொடிவேலிவேரைப் பச்சையாய் நறுக்கி கைபடாமலிடித்துச் சாறு பிழிந்து, அதிலொரு துருசுக்கட்டியையூறப்போட அது வெண்மையாகும். அதே நிறை துத்தத்தையதனுடன் கூட்டி இவ்விரண்டையும் மெல்லியதாகப்பொடி செய்து, ஒரு வெண்மையான துணியில் வைத்துத்திரி செய்தொரு அகலில் சிற்ருமணக்கெண்ணெய் விட்டு, அத்திரியை வைத்து விளக்கேற்றி, அதன்மேல் ஒரு புதுச்சட்டியைக் கழுவித்துடைத்து அதில்கரியேறும்படி செய்யவும். இத்தூளை சிற்ருமணக்கெண்ணெயுடன் குழைத்து, ஒரு சிமிழிலடைத்துக்கொண்டு, இரு கண்களிலும்

ஒரு கடுகளவு வீதம் காலையிலும், மாலையிலும், 8 நாளைக்கு இட்டு வர இமைதடிப்பு, படலங்கள், கண் காசநோய்கள் முதலியவை தீரும்.

---

## 141. நயன வியாதி "இழி நோய்க்கு மை"

திருகுக்கள்ளிப்பாலை வெள்ளைச் சீலையிலூமூட்டி
யிருதிற முத்திறந் தோய்த்துலர்த்திச் சுட்டே
கரிசெய்திடு வேப்பெண்ணெயில் கலப்புறஞ் செய்திழைத்
திருவிழியிலிட்டிடவுமிழிக்கண்ணிலகுவாமே. (உசுச)

(இ-ள்)

திருகுக்கள்ளிப்பாலை ஒரு வெள்ளைச் சீலையிலிரண்டு மூன்று தடவையூட்டவும். இதை உலர்த்திச் சுட்டுக்கரி செய்துகொண்டு, உண்கலத்தைக் கவிழ்த்து அதிலிக்கரியை வைத்து, வேப்பெண்ணெய் சிறிது விட்டுச் செப்புக்குழலியா லிழைக்கவும். பின்பு, இம் "மை" யையொரு செப்புச்சிமிழி லடைத்துக்கொண்டு, ஒருமாதங்கழித்து, கடுகளவு கண்ணி லிட இழி கண் தீரும்.

---

## 142. நயன ரோகத்திற்கு "மை"

பொன்கண்ணி கரிசலாங்கண்ணி வெற்றிலைப்
 பூவேரண்டத்திலையிது நால்வகை
சொன்னசாறு சமங்கூட்டி வட்டியின் தூறில்
 வாற்றுக் களிம்புள்ள செம்பினுல்
முன்னரைத்து மூலத்தெலுமிச்ச நீர் மோத
 விட்டரைபின்பழச் சாற்றிலே
துன்னவே துரிசைச் சுத்தி செய்திடத்
 துணியிற் சுற்றிப் புடஞ்செய்து கூட்டிடே. (உசுரு)

புடத்துரிசிற் பணவெடை கூட்டியே
 போட்டரைத்தது பொங்குமை யானபின்
னுடுத்த சேலைத்துணியில் நத்தைச் சூரியுள்
 வேரைத்திரிசுத்தி நல்லெண்ணெயி

விடுவிளக்கு வைக்கப் புதுசட்டிக்குள்
ளிட்டிடு நெல்லரிசி தண்ணீருமாய்க்
குடச்சட்டித் தூறிற் பத்திடு மையைமுன்
கூறுஞ் சாற்றின் மையுங்கல கூட்டியே. (உசுசு)

கூட்டுவாய் வெண்ணெயால் மையை மத்தித்துக்
கொண்டுமோர் சிமிழிக்குள்ளடைத்திது
மூட்டு முன்னே சுக்கிரப்படுவனும்
முழிவிழுங்கி வகையதிரண்டிற்கும்
போட்டிடு கண்ணிற்குள்ளிட்டிடு மற்ற நோய்ப்
போக்கிடுங் கண்ணிமைப் பட்டை மேலிடு
வோட்டுங் கண்ணிற் சகல வியாதி போ
யொளிவிடுஞ் சரபேந்திரனுண்மையே. (உசுஎ)

(இ-ள்)

| | |
|---|---|
| பொன்னுங்காணி ஸமூலம் | கரிசாலங்கண்ணிச்சமூலம் |
| வெற்றிலைத் துளிர் | சிற்றாமணக்கிலை |

இந்நான்கையும் தனித்தனியாக இடித்து சாறு பிழிந்து, சாப்பிடும் கலத்தைக் கவிழ்த்து, அதிலூற்றியொரு செப்புக் குழவியினால் களிம்பேறும்படியரைத்து, மறுபடியுமெலுமிச் சம்பழச்சாறு விட்டு மறுபடியுமரைத்துக் கொள்ளவும். ஒரு துரிசிக்கட்டியை (1 வராகனெடை) எலுமிச்சம்பழச்சாற் றிலேசுத்திசெய்து, துணியில் சுற்றிப்புடமிட்டு, அந்த பஸ் பத்தை மேலேசொல்லியிருக்கும் குழம்புடனேகலந்து, மறுபடி யுமரைத்து மையாகச் செய்து கொள்ளவும். இதனுடன் நன் ருகக்காய்ந்த நத்தைச்சூரிவேரை யொருவெள்ளைத் துணியில் சுற்றித் திரியாகச் செய்துகொண்டு, நல்லெண்ணெய்விட்ட அகலில் ஷை திரியையிட்டு விளக்குப் பற்றவைக்கவும். அடுப் பில் புதுச்சட்டியில் நெல்லரிசியும் தண்ணீரும்விட்டு, அதனடி யில் மேற்கூறிய விளக்கைவைத்து, மைப்பற்றவைத்துக்கொள் ளவும். பின்பு, இம்மையைச் சுரண்டி யெடுத்துக்கொண்டு இதனுடன் மேல்சொன்ன கரிசாலங்கண்ணிச்சாறு, துருசுனு லேற்பட்ட மையையும் கூட்டிக்கொண்டு, பசுவெண்ணெய் வேண்டிய அளவு கூட்டிக், கல்வத்திலிட்டு மத்தித்துக்கொள் ளவும். இந்த மையையொருசிமிழில் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டு, 6 மாதங்கள் சென்றபின், கடுகளவு கோலிலெடுத்

துக் கண்களிலிடச் சுக்கிரப்படுவன், முழிவிழுங்கி முதலியவை தீரும். கண்களினிமைப்பட்டை மேலிடச் சகல நேத்திரரோகங் களுந் தீர்ந்து, கண்களும் பிரகாசமடையும்.

---

## 143. நயன வியாதிக்கு "மை"

துத்தங் கிராம்பு ஜாதிக்காய் மதுரமுந்
துருசு மாசிக்கா யுஞ்சமங்கூட்டியே
முத்திய கரிசா லையுகா யிலைமூக்
கிரட்டையெலுமிச்சையின் ரசம்
வைத்த சாறு நல்லெண்ணெயிதுவகை
வராகனன்றுயரைத்துக் கலத்தூறில்
பத்தப் போட்டுப் பசுவெண்ணெ யுங்கூட்டிப்
பழய தாம்பிரச் செம்பாலிழைத்திடேன். (உசுஅ)

இழைத்துப் பின்குழம்பாக்கிச் சிமிழிலிடு
வதற்குத்தீரும் வியாதிநீர்ப் பாய்ச்சலும்
கிளைத்துப்பீளைகண் சாறுதல் பற்பநோய்
கெடும்புகைச்ச லதின்விரணசுக்கிரன்
முளைப்படுவனிதுகளுக்காமென்று முறை
யுரைத்தார் மும் மதிமழையும் பொழி
களிற்று வேந்தனேநீர் தாரை தன்னிரு
கால்படியவைத்த சரபேந்திரனே. (உசுக)

(இ-ள்)

| | |
|---|---|
| துத்தம் | கிராம்பு |
| ஜாதிக்காய் | அதிமதுரம் |
| துருசு | மாசிக்காய் |

இவைகள் சமனெடை (1 வராகனெடை) யெடுத்துக் கொண்டு, இவைகளுடன்

| | |
|---|---|
| கரிசாரங்கண்ணிச்சாறு | உகாயிலைச்சாறு |
| மூக்கிரட்டைச்சாறு | எலுமிச்சையிலைச்சாறு |
| நல்லெண்ணெய் | |

இவைகள் வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து ஒன்று கலந்து செப்புக் கல்வத்திலிட்டரைத்து, மையாகச் செய்து கொண்டு, பசுவெண்ணெயுடனே கூட்டிப் பழயதாம்பிரப்பாத்திரத்தினுலிழைக்கவும். இதனைச் சிமிழிலடைத்துக் கொண்டு கடுகளவு கண்களில் தீட்ட, நீர்ப்பாய்ச்சல், பீளைகண், பற்ப ரோகம், கொடும்புகைச்சல், விரணசுக்கிரன், முளைப்படுவன் முதலியவை தீரும். 6 மாதஞ் சென்று உபயோகிக்கவும்.

---

## 144. நயன ரோகத்திற்கு "மை"

துத்தம் வெண்கலச்சத்துப் பழம்புளி
துய்யதிமதுரமுப்புத்திப்பிலி
வித்தகக் கடுக்காய் களிப்பாக்குடன்
விள்ளெட்டு மருந்தின் வகைக்கோர்களஞ்
சித்தெலுமிச்சைச் சாற்றுலரைத்திடு
சேர்கழற்சி பருத்தி வேம்பு சங்கு
முத்துஞ் சாரணை கையார்தகரையு
முருக்கின்சா றிவ்வகைக் கிப்படியொன்றே. (உஎ0)

தனித்தனி சாற்றெருபடி கொண்டிதிற்
சல்லாச்சேலை கொண்டூட்டியுலர்த்திடு
வினித்த நல்லெண்ணெய் வார்த்து விளக்கிட்
டெரிப்பற்றியமையை முன்சொல்லிய
தனி மருந்தையுங் கூட்டெருமை வெண்ணெய்
தனிற் குழைத்துச் சிமிழிலடைத்திடு
பனித் தானியமாங்காசங் கண்ணோவும்
படலம் பார்வை புகைமறைத்துப்பேகுமே. (உஎக)

(இ-ள்)

| | |
|---|---|
| துத்தம் | வெண்கலத்தூள் |
| பழம்புளி | அதிமதுரம் |
| இந்துப்பு | திப்பிலி |
| கடுக்காய்த்தோல் | களிப்பாக்கு |

இச்சரக்குகளை வகைக்கு 1 கழஞ்சு வீதமெடுத்துக் கல்லுரலில் சேதமாகாமலிடித்துச் சூரணஞ் செய்து, கல்வத்திலிட்டெலுமிச்சம்பழச் சாற்றினாலரைத்தெடுத்து வைத்துக் கொள்ளவும். கழற்சியிலை, பருத்தி, வேம்பு, முட்சங்கிலை சாறணை, கையாந்தகரை, முள்முருக்கு இவைகளின்சாறு வகைக்கு ஒரு படி எடுத்து, ஒரு சல்லாதுணியில் தனித்தனியாகத் தோய்த்து, உலர்த்தித், திரியாக்கி நல்லெண்ணெய் வார்த்து விளக்கிலிட்டு, எரித்து, ஒரு புதுச்சட்டியைக் கவிழ்த்து அதில் பற்றியமையுடனே, முன் சொல்லிய மருந்தையுங்கூட்டி எருமை வெண்ணெய் சிறிது சேர்த்துச் செப்புக் கல்வத்திலிட்டரைத்துச் சிமிழில் பத்திரப்படுத்தவும். இதைக்கடுகளவு கண்களிலிட, ஆணிப்பூ, நேத்திரகாசங்கள், கண்ணோவு, படலம், கண்புகைச்சல், கண்மறைவு முதலியவை தீரும்.

---

## 145. நயன ரோகத்திற்கு "மை"

துத்தமுந் துரிசு பீங்கானோடு சங்குமோரி
தழ்த்தாமரையுஞ் சிறுக்கீரைப் பொன்னாங்காணிவே
ரித்தனையுமே சமமெடுத்தெலுமிச்சம் பழச்
சாற்றினாலரைத்து வில்லைதான் பிடித்துலர்த்திடேன். (உஎஉ)

உலர்த்தி பத்தெருப்புடத்தினூடேயாறியேயதிற்
கலப்பது கற்பூரமும் நுணுக்கிடுகண் ணிமையிலே
நிலைத்த பற்பரோகமு நீர்ப்பாய்ச்சலு நெகிழ்த்திடு
மலர்த்தாமரைக் கண்ணுகுமைப் பெருமை வாய்த்ததே. (உஎ௩)

(இ-ள்)

| | |
|---|---|
| துத்தம் | துருசு |
| பீங்கான் | ஊதுசங்கு |
| பொன்னாங்காணிவேர் | |

இவைகளைச் சமமாகவெடுத்து, எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து வில்லைதட்டி, உலர்த்தி நன்றாகக்காய்ந்த பின் 10 வரளியில் புடமிட்டு, ஆறிய பின்பெடுத்து, இதனுடன்

சிறிது பச்சைக்கர்ப்பூரமெடுத்து, நுணுக்கிச்சேர்த்து வைத்துக் கொண்டு, கண்ணிமையைப் புரட்டிவைத்து, அரையரிசி யெடை கரண்டியாலெடுத்து, வைத்துப் பரவிவிடப் பற்ப ரோகமும், நீர்ப்பாய்ச்சலும் தீரும். மலர்ந்த தாமரையைப் போலக்கண்கள் பிரகாசிக்கும்.

---

## 146. மாலை நயனத்திற்கு "மை"

மாலைக்கண்ணுக் கோர்மை யுரைப்பேன் கேள்
மன்னெருக்கின் காய்ப்பஞ்சை யெடுத்ததில்
மேலைக்கள்ளியின் பாலதையூட்டியே
வெயிலிலுலர்த்தித் தரித்துப் பசுவிநெய்
யாலுமைப் பற்றுவித்து நெய்யாற்குழைத்
தடை சிமிழிலிட மாலை தீருமே
கோலக் கொன்றைப் பழவித்தரைத்துக்
கண்குவளைக்குள்படப் போங்குடிமாலையே. (௨௪௬)

(இ—ள்)

1. எருக்கின் காய்க்குள்ளிருக்கும் பஞ்சையெடுத்து அதில் கள்ளிப்பாலையூட்டி வெயிலில் காயவைத்துத் திரியாக்கிப் பசுநெய்விட்டு விளக்கில் போட்டு, ஒரு புதுச்சட்டியில் "மை" ப் பற்றவைத்துக்கொள்ளவும். இதைப் பசுவின் நெய்யில் குழைத்துச் சிமிழிலடைத்துக் கடுகளவு கண்களிலிட 'மாலை' தீரும்.

2. கொன்றைப்பழ வித்தை ஜலத்திலிழைத்துக் கண் குவளைமேல் பூச மாலைக்கண் தீரும்.

---

## 147. நயன வாய்வுக்கு "மை"

அம்மிமீது துத்தமுந் துருசியுஞ் சமனதாய்த்
தம்மிலே பழுத்தெலுமிச்சம்பழரசத்தினுற்
செம்மியரையாவின் வெண்ணெய்தனையிட்டுஞ் சேர்த்தரை
விம்மியமருளின் மட்டைச்சாறும் விட்டரைத்திடேன். (௨௪௭)

வாட்டியே யெடுத்து வெண்கலத்தில் வார்த்துஞ் செம்பினு
லாட்டி நேர்பட விழுதனதச் சிமிழிலேயடைத்
தூட்டு கண்ணிமைக்குள் மூன்றுநாளுமுப்புமேபுளி
நீட்டும் பூசினி கடுகுநீர் முழுக்கும் மாற்றுமே. (உஎசு)

(இ-ள்)

துத்தம் (பொரித்தது) (பொரித்த) துருசு

இவ்விரண்டையுஞ் சமனெடையையெடுத்திக் கல்வத்திலிட்டெலுமிச்சம்பழரசத்தால் நன்றாக வரைத்துப் பசுவெண்ணெய் கூடச்சேர்த்து, மருளின்மட்டைச்சாறும் விட்டு நன்றாக, அரைக்கவும். பின்பு, இதை வெண்கலப் பாத்திரத்திலிட்டுச் செம்பினுல் நன்றாகவரைத்துத் தாமிரச்சிமிழில் பத்திரப்படுத்தவும். இதைக்கடுகளவு கண்களுக்கு போட்டு வரவும். மூன்று நாளைக்குப் போடவும். நயன வாய்வு தீரும்.

பத்தியம் :—

உப்பு, புளி, பூஷணிக்காய், கடுகு, ஸ்நானஞ் செய்வது முதலியவை கூடாது.

---

# 148. நயன வியாதி, பிரிசலுக்கு "மை"

வெள்ளியச் சேலைதுணியில் வெங்கனலைமூட்டி
யொள்ளிய வெங்கலச் சட்டியற்றதனை மூடித்
தள்ளவுமைப் பற்றிட வெண்கலவாயிலிட்டே
விள்ளும் விளக்கெண்ணெய்ச் செம்பால் மீட்டு மைவிழிக்கே. (உஎஎ)

(இ-ள்)

வெண்மையான துணியையொரு திரிசெய்து கொளுத்தி எரியவிட்டு, நன்றாய்த்துலக்கிய வெண்கலச்சட்டியால் மூடி மைப்பற்றவைத்து, சட்டியையெடுத்து அதிலேரியிருக்கும் மையில் விளக்கெண்ணெய்விட்டுச் செம்பாலரைத்து, அம் 'மை' யைச் சிமிழிலடக்கஞ் செய்து, பிரிசல் ரோகத்திற்குத் தீட்ட அது நிவர்த்தியாகும்.

---

## 149. நயன வியாதி, பிரிசல் வியாதிக்கு

ஒருபிடி வேம்பின் கொழுந்தையூடரை வெண்சேலை
மருவிடவுந்தடவிப்புது மண்ணோட்டிற் பூசித்
தருவதெட்டுக் கடுக்காய்த் தூளதாக்கித்திரியாக்கிப்
பெருகு விளக்கெண்ணெய்த் தீபம்பிடி பிரிசல்மைக்கே. (௨௭௮)

(இ-ள்)

வேப்பங்கொழுந்தொருபிடியெடுத்தரைத்தொரு வெள்ளைத்துணியில் தடவி, எட்டுக்கடுக்காயைத் தூளாக்கி, அதில் ஒரே சீராகத்தூவித் திரியாகச்செய்துகொண்டு நூல் சுற்றிக் கட்டிக்காயவைக்கவும். ஒரு வாயகன்ற புதுச்சட்டிக்குள் வேப்பங்கொழுந்தை யரைத்துத்தடவி அதையும் நன்றாகக் காயவைத்துக்கொள்ளவும். ஒரு அகலில் ஆமணக்கெண்ணெய் விட்டு முற்கூறிய திரியை வைத்துத் தீபமேற்றி, மருந்து பூசிய சட்டியைக் கவிழ்த்து 'மை'ப் பற்றவைத்தெடுத்துக்கொண்டு இதைச் சுரண்டியெடுத்துக்கொண்டு, ஆமணக்கெண்ணெயில் குழைத்துச் சிமிழிலடைத்துக்கொண்டு 'பிரிசல்' ரோகத்திற்குக் கண்களிலிடவும்.

---

# 6. நயன ரோகங்களுக்கேற்ற மை வகைகள் (வெண்ணெய் சேர்ந்தது)

## 150. நயனப் பிரிசல் வியாதிக்கு 'மை'

பிரிசற்கண்ணினிற்காவதோர் மையொன்று
    பேசுந்துத்தந்துருசு பொரித்துக்கொள்
கரிமிளகுப் பொடியுஞ்சமன் கூட்டிக்கலத்
    திலிட்டெலுமிச்சை ரசம் விட்டுப்
பரீக்குமாங் காயளவாய்ப் பசுவெண்ணெய்
    பாய்ச்சிச்செம்பாலிழைத்திம் மையை
யொரு சிமிழிலடைத்து வைத்துக் கண்ணி
    லூட்டத் தீருங்கைகண்டதுரிமையே. (௨௭௯)

(இ-ள்)

துருசு துத்தம்

இவ்விரண்டையும் பொரித்துக்கொண்டு, மிளகுப்பொடியும் சமமாகயெடுத்துக் கூட்டிக் கல்வத்திலிட்டுப் போதுமான எலுமிச்சம்பழச்சாறு கூட்டியரைத்துக்கொண்டு, பசு வெண்ணெயொரு மாங்காயளவு அதனுடன் சேர்த்துச் செம்புப் பாத்திரத்திலிழைத்து 'மையை' யொரு செப்புச்சிமிழில் பத்திரப்படுத்திக் கடுகளவு கண்ணிலூட்டக் கண் பிரிசல் தீரும்.

---

## 151. நயன வியாதிப் பிரிசலுக்கு "மை"

கருவையி னிலையுங்கையாந் தகரையுந் துவைத்தசாறு
மூரியநீர்ச் சுவறமட்டு முடுக்கையைத் தோய்த்துலர்த்திப்
பெரியகள் ளிப்பாலூட்டிப் பின்னுலர்த் திடுவாய்கூனிக்
கருவாடுப் பொடித்துத்தூவிக் கையினற் றிரித்துருட்டேன்.
(உ அ0)

திரியைவேப் பெண்ணெய்வார்த்துத் தீபத்திற் பற்றவைத்தே
யெரியுமை துளசிசுட்ட சாம்பலு மெருமை வெண்ணெய்த்
திரிவெந்த நீருஞ் சீராய்த் துருசுயுஞ் சேரக்கூட்டிப்
பெரியதோர் கலத்துறிட்டுப் பின்னொரு கலத்தாற்றேயேன்.
(உ அக)

தேய்த்திந்தச் சேர்வைமையைச் சிமிழிலே யடைத்துக்கொண்டு
வாய்த்தகண் ணிமைப்புறத்தில் மத்திக்கப் பிரிசல் மாற்று
மேய்த்தபேய்த் தளத்திலாடு மீசனுர் கருணை பெற்ற
செயச்சர போசிராஜன் செப்பிய முறையைப்பாரேன். (உ அஉ)

(இ-ள்)

கருவேலிலையும், கையாந்தகரையிலையும் சேர்த்துத் துவைத்துச் சாறெடுத்துக்கொண்டு ஒரு வெள்ளைத்துணியை அதில் 2 அல்லது 3 தடவை நனைத்துலர்த்திக் கொண்டு காய வைக்கவும். இதை மறுபடியும் கள்ளிப்பாலில் நனைத்து உலர்த்தி வைத்துக்கொண்டு சின்னக்கூனி என்னும் கருவாட்டைப் (இதுஓர் வகை மீன்) பொடித்து, அத்துணியில் தூவி (ஒரே சீராக) த்திரியாகத் திரித்து, ஒரு அகலிலே

போதுமான வேப்பெண்ணெயூற்றி, ஷ திரியை வைத்துத் தீபமேற்றிப் புதுச்சட்டியிலதன் மையைக் கூட்டி, துளசியிலே யைக் காயவைத்துச் சுட்டுச்சாம்பலாக்கி, அதையும் கூட்டிக் கல்வத்திலிட்டு வேருெரு கலத்திஞலெருமை வெண்ணெய், பொரித்த துருசு இவைகளேயுங் கூடக்கூட்டி, நன்ருக அரைக் கவும். இது மையானவுடன் ஒரு சிமிழிலடைத்து வைத்துக் கொண்டு கண்களினிமைப்புறத்திலும் மையைத் தீட்டப் பிரிசல் நோய் தீரும்.

---

## 152. நயன வியாதி, இழிகண்ணுக்கு "மை"

துருசு நெல்லிக் கந்தகமும் துத்தஞ்சீனிக் காரம்
தருகுபீத ரோகிணியுஞ் சரிபாகங் கூட்டி
யெருமை வெண்ணெய்பிட்டரைத்திதைச் சிமிழிலிட்டே
பிரிசலிழி விழிக்குள்ளிடு பெருகு நாளெட்டே. (உஅரு)

(இ-ள்)

| | |
|---|---|
| பொரித்த துரிசு | நெல்லிக்காய்க் கெந்தகம் |
| " துத்தம் | சீஞக்காரம் |
| பீதரோகிணி | |

இவைகளேச் சரி எடையெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்துத் துணியில் வஸ்திரகாயஞ் செய்து, அச்சூரணத்திற்கு மூன்றத் தனே யெருமை வெண்ணெய்ச் சேர்த்தரைத்துச் சிமிழிலடைத் துக் கொள்ளவும். இதிலெள்ளளவு எடுத்துக் கண்களிலிட நீர் பிரிசல்,இழிகண் முதலியவை 8 நாளில் தீரும்.

---

## 153. நயன வியாதி இழிகண்ணுக்கு "மை"

துரிசளவு நாலுஞ் சோதித்துத்த மொன்பதாகு
மருவு குன்றியளவு சிறுவரு புள்ளடியிலேயை
யுருவிவிட்டு வேருங்கொம்பு முலர்த்திப்பொடி செய்தே
தருபசுவின் வெண்ணெயிலுந் தானிணக்கிக் கொள்ளே.
(உஅச)

இணக்கிடும் பூனகமிரண்டிடுவாய் கூடக்
கணித்திளக்கக் காய்ச்சி யொருகடைச் சிமிழில் வைத்தே
பிணித்திழி கண்ணோயைக்கும் பிரிசலுக்கு மிதைப்பேணி
மணிக்கொரு மதிக்கிடும்மை மன்னன் முறையாமே. (உகூ)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| பொரித்த துருசு | — | 4 குன்றி |
| ,, துத்தம் | — | 9 குன்றி |

இவைகளுடன், சிறு புள்ளடியிலையையுருவிவிட்டு, வேரையும், காம்பையுமுலர்த்திக்கொண்டு, யாவையுமொன்று சேர்த்திடித்து, வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இச்சூரணத்துடனே 2 நாங்கூழ்ப் பூச்சியுமிட்டு, பசு வெண்ணெய் சிறுஎலுமிச்சையளவு கூட்டிக்கொண்டு, எல்லாவற்றையுங் கல்வத்திலிட்டு அரைக்கவும். பின்பு, இதை நெய்யாக உருக்கிக்கொண்டு சிமிழில் பத்திரப்படுத்தவும். இதிலொரு கடுகளவெடுத்து, கண்ணோய்களுக்கும், பிரிசல் வியாதிக்குங் கண்களிலிடவும்.

---

## 154. நயன வியாதிக்கு "மை"

செந்தரையிற் பூனகந் தெரிந்தெடுத்தூமத்தை
வந்திடுகாய்க் குள்ளடைத்து மண்பூசிச் சுட்டே
வெந்தெடுத்து மண்ணீக்கி விட்டுப்பொடி செய்து
விந்தைச் சுக்குத் திப்பிலியு மிளகுப்பொடி கூட்டே. (உகசு)

கூட்டெருமை வெண்ணெயுடன் கொள்கலப் புறத்தி
லூட்டியதை மறுகலத்தாலொத்திழைத்துக்கொண்டே
பீட்டு சிமிழுள்ளடைத் திதைவிழியினோய்க்கும்
போட்டிடக் கண்பிரிச லிழிகண்பூவும் போமே. (உகள)

(இ-ள்)

செம்மண் தரையிலுள்ள நாங்கூழ்ப் பூச்சிகளைக் கொண்டுவந்து, ஒரு ஊமத்தங்காய்க்குள்,விதை நீக்கியபின்னரடைத்து, மேலே செம்மண் பூசிக்காய்ந்தவுடன், நன்றாக வேகும்படி சுட்டெரித்துக் கொள்ளவும். பின்பு மண்ணை நீக்கிவிட்டுக்

கிரயைப் பொடி செய்துகொண்டு, அத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி மூன்றையுஞ் சமனகப்பொடித்து, முற்கூறிய பொடிக்கு சமனெடையாகயெடுத்துக் கொண்டு, இரண்டையு மொன்றுசேர்த்து, சாப்பிடும் கலத்தைக் கவிழ்த்து, அதன் மேல் எருமை வெண்ணெயை வைத்துத் தூளையதில் கொட்டிச் செப்புப் பாத்திரத்தைக் கொண்டு, வெண்ணெயும் மருந்துமொத்து வரும்படி, அவசரமன்னியிலரைத்துச் சிமிழில் பத்திரப்படுத்திவைத்துக் கடுகளவு கண்ணிலிடக் கண்பிரிசல், இழிகண், பூ, முதலிய விழி நோய்கள் தீரும்.

---

## 155. கண் ரோகத்திற்கு "மை"

கண்டபெருந் தும்பைதன்னி லையைநேக வேயரைத்து
ருண்டை குன்றி போலளவு ருட்டியேயுலர்த்திவை
மண்டுபசு வெண்ணெய்முன் மருந்துஞ்சம மாய்கிறைக்
கொண்டுமத்தித் தேயிடக் குவளைக்கண்பூ மாறுமே. (உஅஅ)

(இ-ள்)

பெருந்தும்பையிலையை நேகவரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும். நன்ருக வுலர்ந்தபின், இதற்குச் சமனெடைப் பசுவெண்ணெய் சேர்த்தரைத்து வைத்துக்கொண்டு கடுகளவெடுத்துக் கண்களிலிடக் கண் பூ மாறும்.

---

## 156. நயன ரோகத்திற்கு "மை"

கோவின்வெண்ணெய் வெள்ளையான குங்கிலியங் கூட்டியே
தாவியரைத் துக்குளிர்ந்த தண்ணீராற் கழுவியதை
மேவியக லப்புறத்தில்விட்டுச்சங்கி ஞலிழைத்துத்
தோவியச்சி மிழிலடைத்தூட்டுங்கண்ணில் நோய்க்கெலாம்.
(உஅக)

கண்சிவப்புங் கண்கடுப்புங் காணுதோடும் பின்னென்று
பண்குதிரையின்குளம்பை பாரெலுமிச் சம்பழத்
தண்ணீராலுரைத்திடச் சரிகண்ணின் புகைச்சலும்
நண்ணிடுங்காமாலையோகு நயனமுந் துலங்குமே. (உகூ)

(இ-ள்)

பசுவின் வெண்ணெய்
வெள்ளைக்குங்கிலியம்

இவ்விரண்டையுஞ் சேர்த்துக் கல்வத்திலிட்டரைத்துக் குளிர்ந்த தண்ணீர்விட்டுப் பலதடவை கழுவி, வெங்கலப் பாத்திரத்திலிட்டு ஊதுசங்கினல் நன்ருகயிழைத்துச் சிமிழி லடைத்துக்கொண்டு, கடுகளவு கண்ணிலிடக் கண் சிவப்பும், கண் கடுப்பும் தீரும்.

2. குதிரையின் குளம்பைக் கழுவிவிட்டு, எலுமிச்சம் பழச்சாற்றிலூறவைத்து ½ அரிசி எடை உரைத்துக் கண்களி லிடக் கண் புகைச்சல், காமாலை முதலிய ரோகங்கள் தீரும். கண்களும் பிரகாசமடையும்.

---

## 157. நயன வியாதிக்கு 'மை'

பசுவின்பால் பச்சையதாய்க்கடை வெண்ணெய்
தன்னிலிடும் பனிலத் தூளு
மிசையொரு தாலப்புறத் தப்பியதைச்
செம்பு கொண்டுமிழைத்தெடுத்து
நசைமையை யோர்சிமிழி னிலடைத்து
வைவிழிபில்ல நயனத்துள்ளே
கொசுகிடப்போங் கலங்கொம்பைத் தேனிலுரைத்
திடவாணி குருப்பூப்போமே. (உ௬௧)

(இ-ள்)

1. பசுவின்பாலைக் காய்ச்சாமல், பச்சையாய் வைத்துக் கடைந்தெடுத்த வெண்ணெயோடு, ஊதுசங்கின்தூள் (சுட்டது) சமயெடைபோட்டுச் செப்புக் கல்வத்திலிட்டுச் செப்புக் குழவியால் நன்ருகவரைக்கவும். இதையொரு சிமிழில் பத்திரப்படுத்தி, ஒரு மாதஞ் சென்றபின் கடுகளவு கண்களில் தீட்டப் பில்லநோய் தீரும்.

2. மான்கொம்பைத் தேனிலிழைத்துக் கண்களிலிட (அரிசிப்பிரமாணம்)விழிதனிலுண்டான 'பூ' தீரும்.

---

## 158. நயன வியாதிக்கு மருந்து

துத்தங்காற் பலந்துருசு யவ்வளவா
　　யிதனைவறுத் தூட்பொடித்து
மித்துடனே பசுவெண்ணெய் தனைக்கூட்டிக்
　　கலத்தப்பி யதைச்செம்பாலே
வைத்திழைத்த மையதனை வாங்கியொரு
　　சிமிழில்வை மந்தப்பார்வை
சுத்துவிழிப் பிரிசலுட னிழிகண்ணும்
　　புழுவெட்டுந் தொட்டிட்டோட்டேன். (உகஉ)

(இ-ள்)

துத்தம் ¼ பலம்
துருசு ,,

இவற்றைச் சட்டியிலிட்டு வறுத்து, பசு வெண்ணெய் கூட்டிச் செம்புக்கல்வத்திலிட்டுச் செப்புக்குழவியால் நன்றாக வரைத்து வந்த மையையொரு சிமிழில் வைத்துக்கொண்டு, ஒரு மாதங்கழித்துக் கடுகளவு கண்களிலிட மந்தப்பார்வை, சுற்று விழிப்பிரிசல், இழிகண், புழுவெட்டு முதலிய ரோகங்கள் தீரும்.

---

## 159. நயன வியாதிக்கு 'மை'

துத்தமுடந்துரிசுதான் சமங்கையார்
　　தகரைநீர்தொட்டரைத்து
வித்தகலத் தப்பியதைச் செம்பினாற்
　　றேய்த்த பின்பு வெந்நீர் விட்டுஞ்
சத்தரைத்துப் பின்புபசுந் தேனிட்டரைத்து
　　நலமாகச் சமைந்தமையை
வைத்திடுமோர் சிமிழிக்குள் கண்களிலிடப்
　　பலநோயும் வாங்கிப் போமே. (உகங)

(இ-ள்)

துத்தம், துரிசு இவ்விரண்டையுஞ் சமனெடுத்துக்கொண்டு செப்புக்கல்வத்திலிட்டுப் பொடித்துக் கையாந்தகரைச் சாறு

விட்டுச் செப்புக்குழவியினலரைக்கவும். இவ்விரு சரக்கு களும் கரைந்தபின், வெந்நீர் சிறிது விட்டரைத்துப்பிறகு நல்ல தேன் விட்டரைத்து, நன்ருக மருந்து சமைந்தபின்னேர் சிமி ழில் பத்திரப்படுத்தவும். 1 மாதஞ்சென்று, இதைக் கடுகள வெடுத்துக் கண்களிலிடப் பலவித நோய்கள் தீரும்.

---

## 160. நயன வியாதிக்கு 'மை'

உவரிவிளை யுப்பின்மலத் தூடெண்ணெ யுமேகுழை
தவறிலாக்கலப்புறத்திற் ருன்விடுத்துச் செம்பினல்
நவமதா யிழைத்தெடுத்து நற்சிமிழி லேயடை
புவனியுள்ளோர் கண்ணேய்பல போக்கரேத் திரத்திடேன்.
(உகச)

(இ-ள்)

உவர் நிலத்திலிருந்து விளையுமுப்புடன் நல்லெண்ணெ யைச் சேர்த்து, உண்கலத்தில் தேங்கும்படிவிட்டுச் செப் புப்பாத்திரத்தினு லிழைத்துச் செப்புச் சிமிழில் வைத்துக் கொண்டு கண்ணேய்களுக்குக் கடுகளவு கண்களிலிட்டுவரக் குணமாகும்.

---

## 161. நயன வியாதி 96க்கும் "மை"

துருசு திப்பிலி துத்தம்வெண் காக்கணம் வேரு
மிரதம் பொற்கண்ணி வேர்சிறுக் கீரை காரிய
மரிதகி நெல்லிதான் றியுமீதரைக் கழஞ்சாய்
முருங்கிலை ரசமூட்டரை பின்னிதிற்கேளே. (உகஇ)

ஒழுகுதேனுங் கோரோசனையுடன் பச்சைக்கர்ப்பூர
முழுதுங்கூட்டியோர் கலப்புற மூட்டொரு கலத்தால்
கொழுகொரு சிமிழக் கூட்டிடுகுவளை போலிமையி
லெழுதுந்தொண் ணூற் ருறெனும்பிணிவிழிவிட் டேகிடுமே.
(உகசு)

(இ-ள்)

| | |
|---|---|
| பொரித்த துத்தம் | பொரித்த துரிசு |
| திப்பிலி | வெள்ளைக்காக்கணம் வேர் |
| பாதரஸம் | பொன்னுங்காணி வேர் |
| சிறுகீரை வேர் | காரீயத்தூள் |
| கடுக்காய்த்தோல் | நெல்லிவற்றல் |
| தான்றிக்காய்த்தோல் | |

இவை வகைக்கு ½ கழஞ்சு, (அரையேரைக்கால் வராக னெடை) நிறுத்துக் கல்வத்திலிட்டு முருங்கையிலைச் சாறு விட்டுச் சரக்குகள் மடியும் வரையரைத்துப் பின்பு தேன், கோரோசனை, பச்சைக்கர்ப்பூரமிவற்றையத்துடனே கூட்டி மறுபடியுமரைத்து, ஒரு செப்புச்சிமிழிலடைத்து வைத்துக் கொண்டு 6 மாதஞ் சென்றபின் கடுகளவெடுத்துக் கண்களி லிடக் குவளை, இமை, இவற்றிலுண்டாகும் 96 விதமான நோய் களுந் தீரும்.

---

## 162. நயன வியாதிக்கு "மை"

சங்கதி மதுரங்கூட்டித் தானரைத் துருண்டைசெய்து
தங்கிய நிழலுலர்த்தித் தையலார் முலைப்பாலாலும்
பொங்கிய முசுமுசுக்கைப் புளியிலைச் சாற்றினாலும்
பங்கறிந் துரைத்துக்கண்ணிற் பாய்ச்சுநோய் பறக்குந்தானே.
(உகஎ)

(இ-ள்)

ஊது சங்கு, அதிமதுரம் இவ்விரண்டையுஞ் சமனெடையா யெடுத்து, உரலிலிட்டிடித்துத் தூளாக்கிக் கல்வத்திலிட்டு முலைப்பால் விட்டரைத்து, மாத்திரையாகத் திரட்டி நிழலிலுலர்த் தவும். இதையோராண்டு சென்றபின்பு முலைப்பாலிலாவது முசுமுசுக்கைச்சாற்றிலாவது, அல்லது புளியிலைசாற்றிலா வது இழைத்து, அரிசிப்பிரமாணங் கண்ணிலிடப் பல நோய்கள் தீரும்.

---

## 163. வாய்வுக்கு 'மை'

எருமைகறந்திடும் பாலிலெழு நுரையெடுத்தே
பெரியகலத்தூரிலிட்டுப் பின்னுஞ்செம்பால் ரேக
வரையனேக நேரமட்டு மதைச் சிமிழியில் வைத்தே
தெரிவிசிப்பு நீர்ப்பாய்ச்சல் தசைதீர்ந்திடுமுத் தினமே. (உகஅ)

(இ-ள்)

எருமைப்பாலைக்கறந்து, சூடாறுமுன் அதன் நுரையை யெடுத்தொரு கலத்தூரில்லைவத்துக் களிம்பேறுமட்டுமரைத் துச் சிமிழியில் வைத்துக்கொண்டு, கடுகளவு கண்ணிலிட நீர்ப் பாய்ச்சல், சதைவளர்ச்சி, 3 தினங்களில் தீரும்.

---

## 164. புழுக்கடிக்கு 'மை'

கொண்டதொரு சட்டிதனிற் கூத்தங் குதம்பைசா
றுண்ட மட்டும் பூசதில்மை யூறப்பற்ற வைத்தே
மண்டப் பசுவெண்ணெய் தனில்மத்தித் திடுங்கண்ணில்
கண்டதொரு நோயும்புழுக் கடியுந்தீருங் காணே. (உகக)

(இ-ள்)

ஒரு புதுச்சட்டியை நன்முயலம்பித் துடைத்துவிட்டு, அச் சட்டினுட்புறத்தில் கூத்தங் குதம்பைச்சாற்றைப் பூசிக் காயவைத்து, மறுபடியும் ஷை சாற்றைப்பூசிப் பூசிக்கனமாக வறுகிறவரை செய்யவும். ஆமணக்கெண்ணெய் விளக்கேற்றி அதனின்றெழும்பும் புகையை அச்சட்டியில் பிடித்து மைப் பற்றவைத்துக் கொள்ளவும். இம்மையையெடுத்துப் பசுவின் வெண்ணெய்தனில் மத்தித்து, எள்ளளவு கண்களிலிடக் கண்வியாதிகளும், புழுக்கடியுந்தீரும்.

# 165. நயன வியாதிப் புகைச்சல் 'மை'

முய(ச)ற் புழுக்கை சுட்டெடுத்து மூடுங் களிம்புள்ள
பசைக்கலத்தி லிட்டதனைப் பார்ப்பசுவின் நெய்யால்
விசித்தரைத்துக் கண்ணிலிட மேற்புகைச்சற்றீரு
நிசத்திம் முறைசரபேந் திரகிருப மிதுதானே. (கஎ)

(இ-ள்)

காட்டிலிருந்து, பிடித்துவந்த முயலைக் கட்டிவைத்து, அதன் புழுக்கையை யெடுத்துச் சுட்டுச் சாம்பலாக்கிக் களிம்புள்ள செப்புப் பாத்திரத்தில் வைத்துப் பசுவின்நெய், சிறுக விட்டுச் செப்புப்பாத்திரத்தைக் கொண்டரைத்துச் செப்புச் சிமிழிலடைத்து வைக்கவும். ஒரு வாரஞ் சென்றபின்னிதைக் கடுகளவெடுத்துக் கண்களிலிடப் புகைச்சல் தீரும்.

---

# 166. நயன வியாதி, பூ, முதலானதற்கு 'மை'

வெள்ளைநந்தி யாவட்டத் தின்வேரை நெய்யிலிட்டால்
முள்ளாணி பறிக்குந் தென் முழிப்படலம் போக்குந்
விள்ளவுரி யிலைச்சாற்றில்விட முடமயிர்க்குந்
தள்ளலரிப் பாலிழிகண் தனைதொலைக்குந் தானே. (கூஎக)

(இ-ள்)

(i) வெள்ளை நந்தியாவட்டையின் வேரை, நெய்யிலிழைத்துக் கண்களிலிட, ஆணியையுண்டாக்கும் படலரோகத்தைப் போக்கும்.

(ii) முற்கூறிய வேரை, அவுரியிலைச் சாற்றிலிழைத்துக் கண்களிலிட முடமயிர் நீங்கும். இழிகண்ணுந் தீரும்.

(iii) அரளிப்பாலில் முற்கூறிய வேரையிடித்துக் கண்ணிலிட இழிகண் என்றரோகத்தைப் போக்கும்.

---

## 167. நயன வியாதி பூ, முதலியவற்றிற்கு 'மை'

மூக்கறணைச் சாறதினால் மூட்டுஞ் சீனிக்காரம்
தாக்கியரைப் பசுவின் வெண்ணெய் தானிதுகள் மூன்றுந்
தேக்கிடுஞ் சிறுகலத்துட் சேரக்காய்ச்சிக் காய்ச்சி
யாக்கிமுசு முசுக்கைச்சாற் றூலிடப்பூப் போமே. (௩௭௨)

(இ-ள்)

மூக்கரட்டைச்சாற்றில், சீனக்காரம், பசுவெண்ணெய், இவ்விரண்டையுஞ் சேர்த்துப் பாத்திரத்திலிட்டு நன்றாகக் காய்ச்சி வைத்துக்கொண்டு, இந்நெய்யை முசுமுசுக்கைச் சாற்றினாலிடப் 'பூ' தீரும்.

---

## 168. நயன புகைச்சல், நீர்ப்பாய்ச்சலுக்கு 'மை'

சிறுபுள்ளடி நீர்ப்பூலா சீரம்பொன்னாங் காணி
நறுஞ்சிறு கீரையதின் வேர்நாடாதி மதுரம்
பெறுமிவைகள் சரிகூட்டிப் பேர்புளியம் பூநீ
ரூறுகவரைத் துருட்டிநிழ லுலர்த்திவைத்துக் கொள்ளே.
(௩௭௩)

உலர்த்தியது குளிகைதன்னை யுண்முலைப்பால் தன்னில்
கலக்கமிகும் விழிக்கிழைத்துக் கலிக்கஞ்செய்யக் கேளு
சலப்பெருநீர்ப் பாய்ச்சலுடன் தாழாவேதனையும்
வலிக்கண்புகைச் சலுந்தீரு மாத்திரைநற் குணமே. (௩௭௪)

(இ-ள்)

சிறுபுள்ளடி வேர் நீர்ப்பூலா வேர்
பொன்னாங்காணி வேர் சிறுக்கீரை வேர்
அதிமதுரம்

7 OCT 1974

இவைகளைச் சரியெடையெடுத்துக்கொண்டு நன்ருக பிடித்துக் கல்வத்திலிட்டுப் புளியம்பூச்சாறு விட்டரைத்து, மாத்திரையாகத் திரட்டி, நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு, ஒரு வருஷம் சென்றபின், மாத்திரையை முலைப்பாலிலிழைத்துக் கடுகளவு கண்களில் தீட்ட நீர்ப்பாய்ச்சல், தாங்கமுடியாத வேதனை, கண்களில் வலி, கண் புகைச்சல் தீரும்.

---

## 169. நயன வியாதி 'பூ' நெரிவுக்கு 'மை'

துத்தமோர் கழஞ்சுவேம்பின் ருேவின்மேற் பிசின்கழஞ்சு
முத்திடுங் கருவேற்றன்னில் முளைத்தெழும் பிசின்கழஞ்சு
மித்தையும் பழுத்தெலுமிச் சம்பழ (வி) ரசந் தன்னற்
குத்தியே யரைத்துக்கூட்டிக் குவளைப்பூ நெரிவுக்கூட்டே.

(கூ௫)

(இ-ள்)

துத்தம் — ஒரு கழஞ்சு
வேப்பம்பிசின் — ,,
கருவேலம்பிசின் — ,,

இவைகளைப் பொடித்துக் கல்வத்திலிட்டெலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்துக் கடுகளவு கண்ணிலிடப் பூ, நெரிசல் தீரும்.

---

## 170. நயன வியாதி நால்வகைச் சுக்கிரனுக்கும் 'மை'

பதக்குநண்டு துவைத்திடிநீர் பாலுடன் கலந்தே
யதையடுப்பிற் காய்ச்சி தனிலாமோருறைக் குத்தி
யுதையமதிற் கடைந்துவெண்ணெ யோடிடுங் கர்ப்பூர
மிதுவுங்கோ ரோசனைதே னிட்டுலர்த்தோர் கலத்தே. (கூக)

கல்த்திடுபாற் சங்கதனல் களிம்பரைத்தோர் சிமிழில்
வலுத்தடைத்துக் கண்ணிலிட வாண சுக்கிரனுகி
பெலத்திரண சுக்கிரன்வெள்ளைப் பெருகும்சுக்கிர னுலும்
விலக்கிடுங்கண் ணேய்தெளியும் வேந்தன் முறை மெய்யே.

(௩௭௭)

(இ-ள்)

இரண்டு மரக்கால், வயல் நண்டைக்கொண்டுவந்துக் கல்லுரலிலிட்டுப் பூணில்லா உலக்கையினலிடித்துத் துணியி லிட்டுப் பிழிந்த நீரிலே சரியளவு பசுவின் பால் கலந்து, அடுப் பின் மேலேற்றிக் காய்ச்சி பசுவின் மோரைக்குத்தி, இரவு முழுவதுமுறையவிடவும். காலையிலதைக் கடைந்து, வெண் ணையையெடுத்து, இதனேடு, பச்சைக்கற்பூரம், கோரோ சனை, தேன் இம்மூன்றையுங் கல்வத்திலிட்டுப் பாலாடைச் சங்கினல் களிம்புண்டாகும்படியரைத்துக் கொள்ளவும். இதையொரு சிமிழில் பத்திரப்படுத்தி, 3 நாள் சென்றபின் கடுகளவெடுத்துக் கண்களிலிட, வாண சுக்கிரன், விரண சுக்கிரன் முதலான 4 வகைச் சுக்கிர ரோகங்களோடு இன்னும் பலவித கண்ணேய்களுந்தீரும்.

---

# 7. நயன ரோகங்களுக்குப் புகை மருந்து

## 171. நயன ரோகத்திற்குப் 'புகை'

எள்ளுடன் பயறும் வேப்பிலைக்கடுகுங் கூட்டியே
தெள்ளுமென் பொடிகள் செய்து தீயினிற் புகைத்திட
மெள்ளவே கண்ணேய் சிவப்பும் விட்டிடும் சிரத்துநோ
யுள்ள தோடுமென்றிம்முறையோதினர் செய்வாயிதே. (௩௭௮)

(இ-ள்)

எள்ளு, பயறு, வேப்பிலை, கடுகு இவைகளை நன்குபொடி செய்து வைத்துக்கொண்டுச் சிறிதெடுத்து, நெருப்பிலிட்டதனின்றெழும்பும் புகையைப் பிணியாளன் கண்களை நன்கு திறக்கச் செய்து கண்ணிற்குள்ளூட்டக் கண்ணோய், கண் சிவப்பு, சிரநோய்கள் முதலியன தீரும்.

---

# 8. பிழி மருந்து வகைகள்

## 172. நயனரோகத்திற்குப் பிழி மருந்து

வெங்கலத்திலே வெள்ளாட்டின் பால்தனை
விட்டுச் செம்பினாலேகளிம்பாய்த் தேய்த்து
வெண்பஞ்சிலூட்டி நாலாய் வில்லைதட்டி
மேற்புதுச்சட்டிக் குள்ளிதையப்பியே
யுண் புளியின் புருணித் தழலாக்கியுத்த
வெள்ளுமிலந்தைச் சருகிட்டுப்
பண் புகை வெளியிற் பட்டிடாமல் முன்பஞ்
சொட்டுஞ் சட்டியைக் கொண்டு மூடிடேன். (௩௭௧)

மூடிவைத்துப் புகையேறின பின்பு மூடுஞ்
சட்டியெடுத்தந்தப் பஞ்சினுள்
கூடியுள்ள குழம்பை நயனத்திற் கூட்டிடு
மூன்று நாழிகைக்கோர் தரம்
மூடி நாலைந்துதரம் பிழியோங்கிடுஞ்
சாயுங்காலத்திற் நல்லெண்ணெ
யாடிடுங் கண்ணினோயு வெண்ணோக்காடு
மகன்றிடுமிது காணுண்மையானதே. (௩௭௨)

(இ-ள்)

வெங்கலக்கல்வத்தில் வெள்ளாட்டின்பாலைவிட்டுச்செம்புப்பாத்திரத்தினாலரைத்துக் களிம்பாகச் செய்துகொண்டு, அதையொரு பஞ்சிலூட்டி நான்கு வில்லைகளாகத்தட்டியொரு புதுச்சட்டிக்குள்ளொட்டிவிடவும். பின்பு புளியம்

புராணியைச் சேகரித்து நெருப்பாக்கி அதனுடனிலந்தைச் சருகைப்போட்டுக் கொளுத்தி, பஞ்சொட்டிய சட்டியைக் கொண்டு, புகை வெளிப்போகாமல் குப்புறப்பிடிக்கவும். சட்டிக்குள் புகையேறியபின்பு ஷை சட்டியையெடுத்து, அதி லுள்ள பஞ்சையெடுத்துக் கண்களில் பிழியவும். இம்மாதிரி 4 நாழிக்கொருதடவை 4 அல்லது 5 தடவை கண்களில் பிழி யவும். மருந்து போட்டுக்கொண்ட தினம், சாயங்கால வேளை களில் ரோகியை எண்ணெய் தேய்த்துக்கொள்ளச்சொல்லவும். இதனால், நோக்காடு முதலிய கண்ணோய்கள் தீரும், உண்மை யானது.

---

## 173. நயன ரோகத்திற்குப் பிழி மருந்து

வெள்ளையாட்டின் பாலோர்சாணைக் கல்லின்மேலும் விட்டதைத்
தெள்ளியதார் கூடாத செம்பினாலரைத்தெடு
வள்ளநடு வைத்திலந்தை மாறுசுட்ட தழலிலே
யெள்ளெயிட்டு மேற்புகை யெழும்பவட்டில் மூடிடேன். (கூகக)

இந்தவித மும்மடங்கு மெள்ளையிட்டு மேற்புகைத்
தந்தவட்டி லுள்மருந்து தன்னை வாங்கி மீளவு
முந்திப்பாலி னாற்குழப்பி மூத்தபஞ்சி லூட்டிகண்
நொந்த பேர்க்கிதைப் பிழி கண்ணோவுமாந் தீருமே. (கூகஉ)

(இ-ள்)

வெள்வாட்டுப்பாலை யொரு சாணக்கல்லினால் செய்யப் பட்ட கல்வத்தில் விட்டு, ஒரு களிம்பேறிய செப்புப் பாத்திரத்தினாலரைத்து விழுதாக்கி வைத்துக்கொள்ளவும். இலந்தை விறகைக்கொளுத்தி நெருப்புண்டானபின், எள்ளை அதிலிடவும். இதிலிருந்துக் கிளம்பும் புகை வெளியில் போகாத வாறு பாத்திரத்தைக் கவிழ்த்து மூடவும். அப்பாத்திரத்தினடி யில் மேற்சொன்ன விழுதை யப்பிவைத்துப் பின்பு, புகைப்படச் செய்யவேண்டும். இவ்வாறு 3 தடவை எள்ளெயிட்டு வட்டிலினுட்புறத்தில் புகைபிடித்துக்கொண்டு, வட்டிலி லுள்ள மருந்தையெடுத்து வெள்ளாட்டின் பாலில் குழப்பிப் பஞ்சிலூட்டிக் கண் நொந்த பேர்களுக்கிதைக் கண்ணில் பிழி யக் கண்ணோயும்,அமரமுந் தீரும்.

---

## 174. நயன வியாதி, பூ, நெரிவுக்கு

எள்ளூறவைத்தச் சாற்றை யேற்ற சாணைக்கலத்திற்
கொள்ளவே வார்த்துச்செம்பு கொண்டதை யரைத்திறுத்து
மொள்ளிய சேலைதன்னில் விட்டூட்டிக் காட்டெருத்தான்
விள்ளெரிக் கொளுத்தி யெள்ளை மேலிட்டுப் புகைத்திடாயே. (௫௧௩)

புகையதுபடவே சேலைப் புகட்டிடப் பிடித்துக் காய்ச்சி
வகையுடன் வைத்துக் கொண்டுமங்கையர் முலைப்பாறன்னில்
மிகையதைத் தோய்த்துக் கொண்டு மெல்லெனக் கசக்கிக் [கண்ணிற்
றகையவே பிழியும்போது தளரும் பூ நெரிவுந்தானே. (௫௧௪)

(இ-ள்)

சாணைக்கல்லினால் செய்யப்பட்ட கல்வத்தில் எள் 1 பலத்தைத் தண்ணீர் விட்டூறவைத்துச் செம்புப்பாத்திரத்தாலரைத்துக் குழம்பான பின்னிதையொரு வெள்ளைத்துணியிலூட்டி யுலர்த்திவைத்துக்கொண்டு, காட்டெருவைக் (தானுகவே யுலர்ந்தசாணி) கொண்டுவந்து நெருப்புமூட்டி, அதில் சிறிது எள்ளையிட்டுப் புகையும்போது மருந்தூட்டிய துணியைப் புகைபடும்படி பிடித்துக் காய்ச்சி வைத்துக் கொண்டு, துணியினொரு ஓரத்தை முலைப்பாலில் நனைத்துக் கசக்கிக் கண்களில் பிழிந்தால் கண்ணில் பூ, நெரிசல் முதலியவை தீரும்.

---

## 175. நயன வியாதி, வலிக்கு மருந்து

ஆரைவேர் சிறுக்கீரைவேர் சாறணையதனின்
வேரையுமூன்றையும் விளக்குள்ளே சுட்டெடுத்தந்தக்
காரை தன்னையோர் கலப்புறத்தினில் முலைப்பாலால்
சேரத் தேய்த்தொரு சீலையிலூட்டிக் கண்பிழியேன். (௫௧௫)

(இ-ள்)

ஆரைவேர், சிறுகீரைவேர், வெள்ளைச்சாறணைவேரிம் மூன்றையும் விளக்கெண்ணெய் விளக்கில் சுட்டெடுத்து

அவற்றைக் கல்வத்தில்வைத்து, முலைப்பால்விட்டு நன்ருயரைத்து, ஒரு துணியில் நனைத்துக் கண்களில் பிழியக் கண் வலி தீரும்.

# 9. நயன வியாதிக்குப் 'பொட் டண வகைகள்'

## 176. நயன வியாதிக்குப் பொட்டணம்

அதிமதுர நெல்விமுள்ளியான மஞ்சட் டன்னுடன்
பதுமக மிவைகளெல்லாம் பஞ்சதாரைத்தேனுட
னிது கலந்தரைத்துணியிலிட்டுக் கட்டி நயனத்தி
லது படவுமொத்துப் பித்தமதனலான நோயகலுமே. (ருகசு)

(இ-ள்)

| | |
|---|---|
| அதிமதுரம் | நெல்லிவற்றல் |
| மஞ்சள் | பதுமுகம் |
| சர்க்கரை | தேன் |

இம் மருந்து வகைகளைச் சேர்த்தரைத்துத் துணியிலிட்டுப் பொட்டணமாகக்கட்டி, நெருப்பில் காட்டிக்காட்டிக் கண்களிலொத்தவும். பித்தத்தினலேற்பட்ட நோயகலும்.

குறிப்பு:—

பதுமுகம் எனப்பட்ட சரக்கு மலையாள மருந்துக் கடைகளில் கிடைக்கும்.

## 177. நயன வியாதிக்குப் 'பொட்டணம்'

வேம்பின்பட்டை இந்துப்புடன்
மிகக்காடி நல்லெண்ணெய்த்
தேம்பவிட்டிடித்துப் பின்னுஞ்
சேரெண்ணெயுங்காடியு
மேம்பொட்டணங் கட்டிக்கண்ணுள்
விட்டுமொத்திட் டாலுமே
போம்பிணி கபத்தினலும்
பூணுங்குத்தற் போகுமே. (ருகஎ)

(இ-ள்)

வேப்பம்பட்டை, இந்துப்பு, புளித்தகாடி, நல்லெண்ணெய், இவைகளை யொன்றுபட நன்ருக இடித்துப் பின்னு மெண்ணெயுங் காடியும் விட்டுப்பிசைந்து, பொட்டணமாகக் கட்டி ஒரு துளி வீதமிரு கண்களிலும்விட்டு, மேலேயுமொத் தடம் போடக் கபத்தினல் கண்களிலேற்பட்ட பல வியாதி களும், குத்தலுந் திரும்.

---

## 178. நயனப் பிரிசலுக்குப் 'பொட்டணம்'

வடக்குப் பரிந்தலரியின்வேர் வளருமேற்ருேல் சீவி
யிடக்கலிங்க மெல்லியதிலிட்டுப்பிழி பாலா
முடக்கிமையிற் படற்றடவு மூன்றுதின மொற்றிட்
டிடக் கண் சுற்றுப் பிரிசலிது வேகுங்குணமாமே. (ருகஅ)

(இ-ள்)

வடக்கே போகும், அலரியின் வேரையெடுத்து, மேல் தோலைச் சீவிவிட்டு, மெல்லியதாக நறுக்கியிடித்து, மெல்லிய துணியிலிட்டுப்பிழியப் பால் வரும். அதை யெடுத்துக் கண் ணிமையில் தடவவும். பிழிந்த சக்கையைத் துணியில் பொட் டணமாகக்கட்டி, அனலில் வாட்டிக் கண்களின்மேலொற்றட மிடக் கண் சுற்றுப்பிரிசல் திரும்.

---

# 10. நயன ரோகத்திற்குப் பத்து வகைகள்

## 179. நயன ரோகத்திற்குப் பத்து

ஊமத்தையிலைச் சாறுமரிசியினுருக்
கருக்கியுளுந்துமபினியுமா
மித்தையும் முன்சாற்ருலரைத்துடனனவில்
காய்ச்சிக்காய்ச்சிக் கொதிக்க வைத்தே பின்னை

தரமித்தைவிழி ரோகங்களைத் தள்ளத்தான்
கண்ணைச் சுத்தியே பத்துப்பூசவே
வாமத்தேவி தன்பாகத்தன்றன்னருள்
வாய்த்திடுஞ் சரபேந்திரன் வாய்மையே. (௩௧௧)

(இ-ள்)

புழுங்கலரிசியைச் சிறிதள வெடுத்து, அடுப்பின் மேலொரு சட்டியை வைத்து அதிலிட்டு உருமாறும் வரை கருக்கியெடுத்துக் கொண்டு, ஓரளவு வழவழப்பான கல்லில் வைத்ததனுடன் உளுந்துப் பிரமாணம் அபினியுஞ் சேர்த்து, ஊமத்தையிலைச் சாறு விட்டரைத்து ஒரு கரண்டியில் வழித்தெடுத்துக் கொண்டு, கண்களைச் சுற்றிப்பத்தாகப்போட விழி ரோகங் களத்தனையுந் தீரும். கைக்கண்டது.

## 180. நயன ரோகத்திற்குப் 'புறவளையம்'

எருமுட்டைத்திரு நீற்றை வடிகட்டியிதிற்
காடிச் சோறு முலைப்பாலொக்க
வருங்கலப்புறஞ் செய்து வெச்செனவுமாக்கிக்
கண்ணிற் புறவளையும் பூசே
தரும்புளியிலையின் கருக்குமுட்டைச்
சாம்பலும் சோறுமாய்ச்சிறு நீரதா
லரைக்கொதியிட்டு வெச்செனக்
கண்சுற்றியப் புறவளையம் பூசவாமிதே. (௩௧௨)

(இ-ள்)

(1) திரு நீற்றை நன்றாய் வடிகட்டிக் கொண்டதுடன் புளித்த சோறுஞ் சேர்த்து, வெண்கல வட்டியைக் கவிழ்த்துப் பின்புறத்திலிவ்விரண்டையும் வைத்து, ஓர் தாம்பிரப் பாத்திரத்தால், முலைப்பால் விட்டு நன்றாகயிழைத்து கண்களைச் சுற்றிலும் புறவளையமாக இடவும்.

(2) புளியிலையை நன்றாகக் கருக்கிக்கொண்டதுடனே, விபூதியும், சோறும் சேர்த்து முன் சொன்னபடி கலத்தில் சிறுநீர் விட்டரைத்து (உலகமறியாப்பிள்ளையின் சிறுநீர், ஆணுக்குப் பெண்ணின் சிறுநீரும், பெண்ணுக்கு ஆணின் சிறு நீருமெடுத்துக் கொள்ளவும்.) ஒரு கரண்டியிலிட்டுக் கொதிக்க வைத்துக் கண்களைச் சுற்றிலும் புறவளையம் பூசவும்.

குறிப்பு:—

இம்முறை அகஸ்தியர் 500-ல் கூறப்பட்டிருக்கிறது: அதாவது:—

சோற்றுப் பத்தும் திருநீரும்
தோகையனையாள் முலைப்பாலும்
வேற்றுப் புறத்தைத் துடைத்துவிட்டு
வேறுகலத்துப் புறத்திழைத்துக்
காற்றுப் படாமல் வீற்றிருந்து
கண்ணைச்சூழ வரைந்தாக்கால்
தோற்றுப் போகும் கண்ணோவும்
சொன்னார் முனிவர் சொன்னாரே.

இம்மருந்தில் உண்கலத்தைக் (வெண்கலமானபடியால்) கவிழ்த்து, அதன் பின் புறத்தில் சரக்குகளைவைத்து "வேறு கலத்துப் புறத்திழைத்தே" என்று கூறியிருத்தலால் தாம்பிரப் பாத்திரத்தின் பின்புறத்தாலரைப்பது என்று கிரந்த கர்த்தாவின் அபிப்பிராயமாகும். "சிறுநீர தாலரைத்திட்டு" என்று 2-வது முறையில் கூறியிருப்பது மிகச்சரியே. மலைநாடுகளில் பொதுவாய் கண்ணோய் வருமேயானால் ஆணுக்குச் சிறு பெண்ணின் சிறுநீரையும், பெண்ணுக்குச் சிறு ஆண்குழந்தைகளின் நீரைமட்டும் கண்களிலூற்றிக் குணமடைவதைக் காணலாம்.

---

# 181. நயன வியாதிக்குப் பத்து

தொக்கிலி வேரிதகியுமதுர
நொச்சிலின்மூலந்தொக்கக்கூட்டி
மிக்கெலுமிச்சம்பழ நீராலரைத்தும்
பத்திடலாம் விழியைச்சூழ
தக்க வெள்ளைக் காக்கணவேர் சமம்
வெள்ளைச் சாறணைவேர் தனைச்சம்பீர
நக்கினியினீரதனு லரைத்திட்டும்
பூசிடலாம் நயனப்பத்தே. (கூஉக)

(இ-ள்)

(i) சமுத்திராப்பச்சை கடுக்காய்த்தோல்
அதிமதுரம் நொச்சிவேர்

இவற்றைச் சமமெடுத்து நன்ருக இடித்து எலுமிச்சம் பழச் சாற்றிஞலரைத்துக் கண்களைச்சுற்றிப் பற்றிடவும்.

ii வெள்ளைக்காக்கணம்வேர்
வெள்ளைச் சாறணைவேர்

இவ்விரண்டையும் சமமெடுத்து நன்ருக இடித்தெலு மிச்சம் பழச்சாற்றிஞலரைத்து விழியைச் சுற்றிலும் பற்ருக இடவும்.

---

# 182. நயனப் படுவனுக்கு

கோவையினிலை தானரைத்துப் பூசிக்கொண்டு
மேல் தெண்ணெயாமணக்கெண்ணெயும்
பாவைதன் முலைப்பாலுங் குழப்பியே
பஞ்சிலூட்டியிட்டே விடிந்த பொழுது
ஆவையுங் கழுவிப்போடத் தீருமே சாரும்
கண்ணிற் படுவனுக்காமென்றே
பூவையாளைச் செங்கேல் முறைநீதியைப்
பொறுத்திடுஞ் சரபோசனுத்தாரமே. (௫௨௨)

(இ-ள்)

கோவையிலைச் சாற்றைப் படுவன்மீது பூசிவிட்டுக் காய்ந்த பின் மறுபடியும் மறுபடியும் அதன் சாற்றைப் பூசிப்பூசித் தடிப்பாகும்வரை செய்யவும், பின்பு, ஆமணக்கெண்ணெய், முலைப்பால், வெண்ணெய் இம்மூன்றையுஞ் சிறிதளவெடுத்து, நன்ருகக்குழைக்க, அது ஒன்று சேர்ந்து வெண்ணெய் போலாகும். அதைப் பஞ்சிலூட்டி படுவனின்மேல் போட்டிருக்கும் பற்றின் மேலொட்டிக்கொண்டுவர நயனப்படுவன் தீரும்.

குறிப்பு:—

ஒவ்வொருநாளும் புதிதாகத் தயார்செய்து உபயோகிக்கவும்.

## 183. நயன வாய்வுக்குப் பத்து

நேத்திரந்தனிலே வாய்வுக்காம் பத்திது
நேர் கடுக்காய் மிளகுடனேசுக்கு
தேத்தாங் கொட்டையின் நாலு மெலுமிச்சைச்
சலத்தினுலுரைத்தே மிளகும் புளி
யாத்திய முட்டைச்சாம்பற் புழுங்கிடுமரிசியு
மெட்டு மொன்ருய்க் கரண்டிக்குள்
ளூத்தியே கொதிக்கண்டபின் கண்ணின்மே
லொட்டும் பத்தாயிட வாய்வுந் தீருமே. (௧௮௩)

(இ-ள்)

| | |
|---|---|
| கடுக்காய்த்தோல் | சுக்கு |
| மிளகு | தேத்தான்வித்து |

இவற்றை எலுமிச்சம்பழ ரசத்தினலரைத்துக்கொண்டு, அதனுடன்

| | |
|---|---|
| மிளகு | புளி |
| சாம்பல் | புழுங்கலரிசி |

இவைகளையுமொன்றுகூட்டி எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து, போதுமான எலுமிச்சம்பழச் சாறு விட்டுக் கரண்டியிலூற்றிக் காய்ச்சி, கொதிக்குந்தருணத்திலிதை நெருப்பிலிருந்து இறக்கி, இளஞ் சூடாக இருக்கும்போது நெற்றியிலும், கண்களைச்சுற்றிலும் பத்தாகப்போட நேத்திர வாய்வு தீரும். மருந்துவகைகளைச் சமமெடுத்துக்கொள்ளவும்.

---

## 184. நேத்திர வாய்வுக்குப் பத்து

நேத்திரத்தில் வருவாய்வுக்கொரு
நேர்மையாகிய பத்தொன்று கூறுவேன்
தேத்தாங்கொட்டைக் கடுக்காயபின் சுக்குத்
திப்பிலிக் காசுக்கட்டிக் கம்பிப்பிசின்
சாத்து நல்லெலுமிச்சம் பழச்சாறுதன்னை
விட்டரைத்தே பத்துச்சாத்திட
வேத்துந் தஞ்சைச் சரபோஜி ராசன்முன்
னெய்தவர் கலிபோல் கண்டோடுமே. (௧௮௪)

(இ-ள்)

தேத்தாங்கொட்டை கடுக்காய்தோல்
அபின் சுக்கு
திப்பிலி காசுக்கட்டி
கம்பிப்பிசின்

இவற்றை எலுமிச்சம்பழச்சாற்றினுலரைத்துக் கண்களைச்சுற்றிலும் பத்தாகப்போட நேத்திரவாய்வு தீரும்,

குறிப்பு:—

இந்த மருந்துடன் சுத்த ஜலம் ஒருதுளி சேர்த்தாலும் பத்து ஒட்டாது. ஜாக்கிரதையாக அரைக்கவும்,

---

## 185. ஓடு நேத்திரவாய்வுக்குப் பத்து

ஓடு நேத்திர வாய்வுக்கோர் பத்து உரைகடுக்காய்
களிபாக்குந் தான்றிக்காய்
தேடுங்காசுகட்டி தேற்றுங் கொட்டையுஞ்சேர்
எலுமிச்சம்பழச் சாற்றினில்
நீடும் பலாவிரைபோலும் திரட்டிடு
நிழலிலுலர்த்தியபின் படிக்காரமுங்
கூடிரண்டு வராகன் பழச் சாற்றிற்
கொதிக்க வைத்து பூசக் குணங்களே. (கூடு௫)

(இ-ள்)

கடுக்காய்த்தோல் களிப்பாக்கு
தான்றிக்காய்த்தோல் காசுக்கட்டி
தேற்றுங்கொட்டை

இச்சரக்குகளை எலுமிச்சம்பழச்சாற்றினல் நன்ருக அரைத்துப் பலாக்கொட்டைப் பிரமாணமாக உருட்டி வைத்துக்கொள்ளவும். நன்ருக உலர்ந்தவுடன் படிக்காரம் ஒரு வராகனெடை சேர்த்துப் பழச்சாறு விட்டரைத்துக் கொதிக்கவைத்து நெற்றியில் பத்தாகப்போட நயனவாய்வு தீரும்.

குறிப்பு:—இதிலும் ஜலம் சேரக்கூடாது.

---

## 186. நயன வலி, சிவப்பு, கடுப்புக்குப் பத்து

காசுக்கட்டியெருமுட்டைச் சாம்பலுங்
    களியின் பாக்குஞ் சங்குமுலைப் பாலிட்டு
மாசுள்ள கலத்தாலிழை மத்தித்தேவாங்கி
    யோர்கரண்டிக்குள் கொதிப்பித்துக்
கூசிடுங்கண்ணைச் சுற்றியொரு தினங்
    கூடிரெண்டு நாள் மூன்று தினமட்டும்
பூசரிப்புஞ் சிவப்புங் கடுப்புடன் பீளை
    சாரனீர்க்குத்துடன் போக்குமே. (௫௨௬)

(இ-ள்)

| | |
|---|---|
| காசுக்கட்டி | விபூதி |
| களிப்பாக்கு | சங்கு |

இவற்றைக் களிம்பேறிய கலத்தில் வைத்து முலைப்பால் விட்டு வேறொரு பாத்திரத்தைக் கொண்டு அரைத்துக் கரண்டியில் விட்டுக் கொதிக்கவைத்து 3 நாள் கண்களைச் சுற்றிப் பத்துப்போட அரிப்பு, சிவப்பு, பீளை, வலி, நீர்வடிதல் முதலியவை தீரும்.

---

## 187. நயன வலி, சிகப்பு, கடுப்புக்குப் பத்து

நாயுருவியுடன் வட்டத்துத்திவேர் நறுக்கிச்
    சுட்டப்பொடியைத் தயிர்த்தண்ணீர்
தோயவிட்டரையல்லது நல்லெண்ணெய்
    சோரவார்த்தரைத்தே வெதுப்பிப்பத்து
நீயிடு கண்ணைச் சுற்றிலும் போடவே
    நீங்கிடுங்கண் சிவப்புங்கடுப்புக
ளாயகண்வலி யாற்றியிடுங் கைகண்ட
    தாகுமேசா பேந்திரனருளிதே. (௫௨௭)

(இ-ள்)

| | |
|---|---|
| நாயுருவி வேர் | வட்டத்துத்தி வேர் |

இவ்விரண்டையும் நறுக்கி, நெருப்பில் சுட்டு நுணுக்கித் தயிர் தண்ணீர் விட்டாவது அல்லது எள்ளெண்ணெயையாவது சேர்த்தரைத்துக்கொண்டு, சற்று நெருப்பில் வெதுப்பிக்கொண்டு கண்களைச் சுற்றிலும் பத்துப்போடக் கண் சிவப்பு, கடுப்பு, கண்வலி, முதலானவைகளை நீக்கும், இது கைகண்டது.

---

## 188. நயன வியாதி, மாலை, பூ இவைகளுக்கு மருந்து

பசுந்தரு நறும்புதுநெய் பாரெண்ணெயு நாழி
பிசைத்த சிறு கீரைமுள்ளி யோர்பொற்கண்ணிவேரு
முசத்தியுள்ள கோட்டமிதுவூடரைத்தே கூட்டி
வசிச்சிரசி டக்கண் ணூறு மாலை வெளியாமே. (௯௨௮)

(இ–ள்)

பசுவின் புத்துருக்கு நெய்
பசுவின் பால்
சுத்தமான எள்ளெண்ணெய்

இவைகளொரு நாழி

| | |
|---|---|
| சிறு கீரை | முள்ளிக் கீரை |
| பொன்னாங்காணி வேர் | உயர்ந்த கோஷ்டம் |

இவையெல்லாவற்றையும் சேர்த்தரைத்துக் கூட்டிச் சிரசில், அடைமாதிரியாக அப்பிவர மாலைக்கண் தீரும்.

குறிப்பு:—

இதை "தளமிடுதல்" என்று சொல்லுவதும் உண்டு.

---

## 189. நயன வியாதிக்குப் புழு விழ மருந்து

கண்ணின் மேற்பஞ்சையிட்டுக்
கார்பேயன் பழங்கசக்கி
நண்ணிய ரசத்தை யூட்டி
நாள்மல்லாந் திடக்கிடந்தா

நுண்ணவே புழுக்களெல்லா
    லொரு ஜாமங் கழித்தெழும்புங்
குண்ணவே கருவேப்பட்டை
    கொழுஞ்சாற்றைக் கண்மேலூட்டேன். (௩௨௧)

கருவையினிலையரைத்துக்
    கண்புற வளையஞ்சூழ
மருவிடப் பூசும்போது
    மாண்டுபோம் புழுக்களெல்லாம்
விருதிடுங் கர்ணராச
    வேலேந்துஞ் சரபோசேந்திரன்
தருமூல கத்தோர்க்காகச்
    சாற்றிய முறைதப்பாதே. (௩௩௰)

(இ-ள்)

புழுக்கடி வியாதிஸ்தனின் கண்ணிமையின்மேல் பஞ்சை யிட்டுப் பேயன் வாழைப்பழத்தைக் கசக்கி (உமியுடனே) அதிலிருந்து வரும் இரசத்திலொருதுளி கண்ணிமையில் விட்டு, மல்லாந்து படுத்திருக்கச்செய்யவும். இப்போது கண் ணிமையிலுள்ள புழுக்களெல்லாமொரு ஜாமங் கழித்து மேலே கிளம்பும். பிறகு, கருவேலம்பட்டை, அதன் கொழுந்து இரண்டையுமிடித்துச் சாறெடுத்துக் கண்களின்மேலிடவும். அதன்பிறகு கருவேலிலையை யரைத்துக் கண்ணின்மேல் புற வளையமிடப் புழுக்களெல்லாம் மாண்டுபோம்.

---

# 11. நயன வியாதிக்குப் பொடி வகைகளும் கற்க வகைகளும்

## 190. நயன ரோகத்திற்கு "வெள்ளைப்பொடி"

பொன்னுங்காணிச் சிறுகீரை கீழ்நெல்லிப்
    பூண்டின்வே ரிவைமூன்றுஞ் சரிகொண்டு
பின்னுந் துத்தமிதற்குச் சரியிட்டுப்
    பேரெழுமிச்சையின் ரசத்தாலரை

நன்னு வில்லை யடைதட்டி யோர்புட
நலமாய்வைத்தெடுத் தேபொடிசெய்திடு
மின்னும் வெள்ளைப் பொடியோ சிமிழடை
விழிக்கிடுமெள்ளளவொரு வேளைக்கே. (௬௬௧)

(இ—ள்)

பொன்னுங்காணிவேர் கீழாநெல்லிவேர்
சிறுகீரைவேர்

இம்மூன்றுஞ் சமனெடை, துத்தம் மும்மடங்கு ஆகிய இன்னான்கையும் கல்வத்திலிட்டெலுமிச்சம்பழ ரசம் விட்டரைத்து வில்லைகள்தட்டி, நன்ருக உலர்த்தி, ஒரு புடம் வைத்தெடுத்து ஆறியபின் நன்ருகப்பொடித்து, ஒரு சிமிழில் பத்திரப்படுத்திக்கொள்ளவும். இந்த வெள்ளைப்பொடியிலொரு வேளைக்கு ஒரு கண்ணுக்கு எள்ளளவு வீதம் இமையைப் புரட்டி அதில் போடவும்.

---

## 191. நயன வியாதிக்குக் "கர்ப்பூராதிப் பொடி"

துத்தம் பீங்காளுெடு சங்கு துருசு சிறுகீரைவே
ரொத்தபொன்னுங் காணிவேரு மோரிலைத்தா மரையின்வே
ரித்தனையெல் லாஞ்சமமா யிட்டெலுமிச் சம்பழச்
சாத்திரைலை ரைத்துவில்லை தட்டியுமு லர்த்திடேன். (௬௬௨)

வச்செதையெ ருப்புடத்தில் மாட்டியாறிப் பின்னிதிற்
பச்சைக்கற்பூ ராதிகூட்டிப் பண்ணிடும் பொடியதாய்
மெச்சுகற்பூ ராதிப்பொடி மீட்டுநாம் நேத்திரங்
கொச்சமுநீர்ப் பாய்ச்சலுங் குலைந்தோடுங் கைகண்டதே.
(௬௬௩)

(இ—ள்)

துத்தம் பீங்கான்
சங்கு துருசு
சிறுகீரைவேர் பொன்னுங்காணிவேர்
ஓரிலைத்தாமரைவேர்

இவைகளைச் சமமெடுத்துக்கொண்டு, கல்வத்திலிட்டெலு மிச்சம் பழச்சாறு விட்டரைத்து, வில்லைதட்டி யுலர்ந்தபின் னிதை எருப்புடத்திலிட்டு, ஆறியபின்பு, அதனுடன் பச்சைக்கர்ப்பூரம் சிறிது கூட்டித் தூள் செய்துகொண்டு எள்ளுப்பிரமாணம் கண்களிலிட நீர்ப்பாய்ச்சல் தீரும்.

---

## 192. நயன வியாதிப் புண்ணுக்கு 'மை'

துத்தந்தூள் வராகனெடை சொல்லெலுமிச் சைரச
முத்தபசு வெண்ணெயிட் டொருகலத்தோ டொருகலம்
வைத்திழைத்தி தைச்சிமிழில் வார்த்தடைத்து நேத்திரம்
பத்துநோய் சகலபுண்ணும் பறந்திடும்பா ருண்மையே. (௫௯௪)

(இ-ள்)

துத்தத்தின் தூள் 1 வராகனெடை
எலுமிச்சம்பழரசம் ,,
பசுவின்வெண்ணெய் ,,

இவைகளை ஒன்றுசேர்த்துச் சாப்பிடும் கலத்தைக் கவிழ்த்து அதன் பின்புறத்தில் வைத்து, வேறு கலத்தினு லிழைத்துச் சிமிழிலடைத்து வைத்துக்கொண்டு கண்களிலிடக் கண்களிலுண்டாகும் சகல புண்ணும் தீரும்.

---

## 193. நயன ரோகத்திற்கு 'அஞ்ஜனப்பொடி'

துத்தமூவ ராகனெடை தூக்குஞ் சிறுகீரையி
லுத்தொரு பிடியிரண்டு மொக்கவே சம்பீரநீர்க்
குத்தியே யரைத்துவில்லை கொண்டுசில்லு மேற்றுணி
சுத்தியோரெ ருப்புடத்து ளாறியபின் ருெட்டெடேன். (௫௯௫)

எடுத்தொரு பருத்திவித்தி னையாம்பச்சைப் பூரமும்
பொடித்தொரு சிமிழ்தனிற் போட்டுவைத்து நேத்திரந்
தடித்தமையுளேயிடு நிதமாங் காசங் குந்தங்கள்
கடுத்தகண்பு கைச்சல்நத்தைப் படுவனுங் கழலுமே. (௫௯௬)

(இ-ள்)

துத்தம் 3 வராகனெடை
சிறுக்கீரைச்சமூலம் ஒரு பிடி

இவ்விரண்டையு மொன்று சேர்த்து, எலுமிச்சம்பழச் சாறு விட்டரைத்து, வில்லை தட்டி நன்ருகக் காய்ந்தபின் ஒரு ஓட்டில் வைத்துச் சில்லினுல் மூடிச்சீலைமண் செய்து, ஒரு வரளியில் புடம் போட்டெடுத்தாறிய பின், பருத்தி விதை யளவு பச்சைக்கற்பூரஞ் சேர்த்து, நன்ருகப் பொடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு. ஒரு செப்புச் சிமிழில் வைத்துக் கொண்டு. ½ அரிசியெடை வீதம் சிறு கரண்டியி லெடுத்துக் கண்களிலிடக் காசவகை, குந்தவகை, கண் புகைச்சல் வகை, நத்தைப் படுவன் முதலியவை தீரும்.

---

## 194. நயன வியாதிக்குப் பொடி

மடற்றுத்தம் பொடி செய்து சேலைவடிக்
கட்டியதை வைத்துக்கொண்டு
இடநிமையைப் பிதுக்கிச் சிறுகத்தூட்
டுவிடவு மெரிசிவப்புத்
துடனுமாங் கிடமாறு மூன்றுநிட்கஞ்
சங்கமடற் றுத்தந்தானு
முடன்பாதி யவ்விரண்டும் பொடிசெய்து
சேலைவடி யுற்றிடாயே. (௫௫௭)

ஓத்தபின்னு மிம்மருந்தைச் சிமிழிலே
யடைகண்ணி லுறுநோய்கண்டு
நித்தமொரு பொழுதுக்கும் பணவெடை
தூளிடுகண் ணிமைப்பிதுக்கி
மெத்தவுநீர் முட்டுவதுஞ் சிவப்புந்துன்
மாங்கிடமு மெல்லாந்தீரு
முத்தமனு நீதிநெறிச் சரபேந்திர
னிம்முறைய முரைத்ததாமே. (௫௫௮)

(இ-ள்)

(i) சுத்தியான, மடல் துத்தத்தைத் தூளாக்கித் துணியில் வடிக்கட்டிக்கொண்டு, இமையைப் புறட்டிக்கடுகளவு கண்ணிலிட, எரிசிவப்பு, துர்மாம்ஸம் இவை தீரும்.

(ii) ஊதுசங்கு 3 கிட்கம்
மடல் துத்தம் 1½ ,,

இவ்விரண்டையும் பொரித்துப் பொடிசெய்து, துணியில் நன்ருக வடிக்கட்டிச் சிமிழில் வைத்துக்கொண்டு ஒரு வாரஞ் சென்றபின் தினமொருபொழுது வீதம், இமையைப் புறட்டிக் கண்களிலிட நீர்முட்டல், சிவப்பு, துர்மாம்ஸம் முதலியவை தீரும்.

குறிப்பு:—

கிட்கம் = 1வராகனெடை

---

## 195. நயனப் புகைச்சலுக்கு மருந்து

வெள்ளைச்சாரணை வேரினையுலர்த்திக் கோமியத்தி
லுள்ளிட்டூறிடப் போட்டெடுத்ததை நிழலுலர்த்தித்
தெள்ளியப் பொடியாக்கி மோர் சலத்தரைத்துருட்டி
வெள்ளெழுத்துடன் புகைச்சல் பிரிசலுக்கிதை மீட்டேன்
(௫௫௧)

(இ-ள்)

வெள்ளைச்சாறணை வேரை நன்ருக உலர்த்திய பின்னெரு பாத்திரத்தில் பசுமாட்டு மூத்திரத்தை விட்டதிலவ்வேரை மூன்று நாளூறவைத்துப் பின்பு அதையெடுத்து நிழலிலு லர்த்தி யிடித்து, நன்ருகப் பொடி செய்து மோரின் தெளிவு நீர் விட்டரைத்து உருட்டி, ஒரு மாதங் கழித்து இம்மருந்தை மோர் ஜலத்திலிழைத்துப் பயறளவு கண்களிலிட, வெள்ளெழுத்து, புகைச்சல், நீர்ப்பிரிசல் முதலானவை தீரும்.

---

# 196. நயன வியாதிக்குக் கற்கம்

கடுநெல்லி விதைதள்ளி வகையொன்றுங்
கொடுநூறு காயாமித்தைக்
கொடுகாடி யிருநாழி புளியிலைநீர்
வவ்வளவிற் கூட்டியிட்டுப்
படுமாறிலொன்ருகக் காய்ச்சி வடி
பின்கூழாய்ப் பாகமாக்கி
யிடுதுத்தந் துரிசிந்த வகையொன்று
பலமொன்ரு யிதைப்பொடித்தே. (௬௪௰)

சேலைவடிக் கொண்டுமுனஞ் செப்பியகற்
கந்தனிலே சேரத்தூவி
மாலைபுரை தேனுடனே பூரமிட்டுக்
கூட்டியபின் வகைமருந்தை
வேலைதரு சிமிழிளடைத்துக் கண்ணிலிடப்
பலபுண்கள் மேவாதோடுங்
காலைமலர் தூவுசிவ கருணைபெரு
சரபேந்திரன் கணித்ததாமே. (௬௪௧)

(இ-ள்)

| | |
|---|---|
| கொட்டை நீக்கிய கடுக்காய் | 100 |
| விரை நீக்கிய நெல்லிவற்றல் | 100 |

இவைகளையொரு பாத்திரத்திலிட்டு, இரண்டுபடி புளியிலைச்சாறு விட்டு, 1 நாளைக்கு ஊறவைத்து, மறுநாள் அடுப்பிலேற்றி ஆறிலொன்ருக எரித்துக் கூழ் பக்குவமாகயிறக்கி, அரைத்து அதனுடன் துத்தம், துரிசு, பொரித்த இந்துப்பு இவை வகைக்கு ஒரு பலம் பொடித்துப் போட்டு திரும்பவும் சிறிது சூடுகாட்டித் துணியில் வடிகட்டிக் கொள்ளவும். பின்பு, பச்சைக்கற்பூரம், 1 வராகனெடை பொடித்துக் கூட்டித்தேனும் சிறிதளவுவிட்டுக்குழப்பித் திரும்பவும் வடிக் கட்டிக்கொள்ளவும். இதையொரு சிமிழில் பத்திரப்படுத்தி ஒரு மாதஞ் சென்றபின் கடுகளவெடுத்துக் கண்களிலிடப்பற் பலநேத்திர வியாதிகளுந்தீரும்.

# 12. நயன வியாதிகளுக்கு நஸ்ய (மூக்கிலிட்டு உறுஞ்சப்படும்) மருந்துகள்

## 197. நயன வாயுவுக்கு நஸ்யம்

நேத்திர நோய் தனக்கோர் நஸ்யமே
    நிகழ்த்துவேன் சுக்குடன் திப்பிலி மிள
குத்திடுவாய் விளங்கங்குங் குமப்பூவாகு
    மைந்துஞ் சமன் கூட்டி நொச்சிலின்
சாத்திறைலரைத்தே கடலையெனத்
    தானுருட்டி நிழலிலுலர்த்திடு
வேத்தநொச்சி லுரைத்து நஸ்யஞ் செய்
    யேகி நீர் முட்டிடிதலை வாயுவே. (கூசஉ)

### பாடபேதம்

சுக்குடன்வாயு விடங்கமுந்திப்பிலி
    துய்யகோட்டமு நொச்சிற் கொழுந்துடன்
தக்கக்குங்குமப் பூவிது சமந்தன்னை
    நொச்சிக் கடாயத்திறு லரைத்து
ஒக்குடன் கடலையப் பிரமாணமாய்
    தூநிழலிலுலத்திடு வுண்டையை
வைக்குமே லிள வெந்நீர் நசியஞ்
    செய்வாய் நயனத்தின் வாயுவகலுமே.

(இ-ள்)

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | வாயுவிடங்கம் |
| குங்குமப்பூ | |

இவ்வைந்து சரக்குகளையுஞ் சமன்கூட்டிக்கொண்டு நொச்சிச்சாறு விட்டரைத்துக் கடலைப் பிரமாணமுருண்டைசெய் துலர்த்தி வைத்துக்கொண்டு வேண்டும்போது நொச்சிச்சாற்

றிஞரைத்து *நஸ்யஞ்செய்ய நீர்முட்டல், தலைபிடி, வாயு முதலியவை நீங்கும்.

இரண்டாவது செய்யுளில் கண்டபடி வெந்நீரிலிழைத்து நஸ்யஞ்செய்ய நயனவாயு தீரும்.

## 198. நயன ரோகத்திற்குக் குளிகை

பசுவின் னெய்யதரைப்படி தன்னிலும்
பார்மதுரமுஞ் செங்கழுநீர் கோட்டம்
பசியயேலங் கிராம்பு மிளகுடன்
வகை மருந்திரு காசிடை தான் பொடித்
திசைவடிக் கொண்டிதை நெய்யிலிட்டெரித்
திறக்கிடும் பதங்கண்டு குங்குமப்பூ
வசையிலைந்து பணவெடை நெய்யினு
லரைநசியத் தாற்காச மகலுமே. (ரு௪ரு)

(இ-ள்)

| | |
|---|---|
| அதிமதுரம் | செங்கழுநீர்க்கிழங்கு |
| உயர்ந்த கோஷ்டம் | ஏலம் |
| கிராம்பு | மிளகு |

இவைகளை வகைக்கு 2 காசெடை யெடுத்து நன்ருகப் பொடி செய்து, பசுவின் நெய் $\frac{1}{2}$ படியிலிட்டுக் குழப்பி, அடுப் பின்மேலேற்றி யெரித்துப் பதங்கண்டு, குங்குமப்பூ 5 பண வெடை போட்டு வடிகட்டிக்கொண்டு, வேண்டும்போது வெந்நீரின்மேல் வைத்து உருக்கி நஸ்யமிட, நேத்திர காச நோயகலும்.

---

* நஸ்யம்:—நோயாளியைப் படுக்கவைத்து, நீருருத பேப்பரில் நீண்ட தாகப்புனல் செய்யவும். அதனடியில் துவாரம் செய்து இதை அவரது மூக்கில் சொருகி வேண்டிய மருந்தைவிட்டு, மருந்து உள்ளே செல்லும் வரை, நமது வாயினுலூதவும். ரொம்பவும் அவசரமாக ஊதக்கூடாது. நிதானமாக ஊதினுலது உள்ளே சென்று விடும்.

## 199. நயன ரோகத்திற்குக் குளிகை

இளகு நேத்திர நோய்க்கு நஸ்யங்க
　　ளின்று கூறுவந்திப்பிலி சுக்குடன்
மிளகு கிராம்பு மதுரஞ் சண்பகப்பூ
　　மேல வராகனெடை குங்குமப்பூவும்
பளகிரண்டு வராகனெடை நொச்சிற்
　　பயிலுஞ்சாற்றி லரைத்துக் கடலைபோற்
குளிகைசெய்து நிர்குண்டி வெந்நீரினிற்
　　குழைத்திட வலிநீர் முட்டற் குன்றுமே. (௩௪௪)

(இ-ள்)

| | |
|---|---|
| திப்பிலி | சுக்கு |
| மிளகு | கிராம்பு |
| அதிமதுரம் | சண்பகப்பூ |
| ஏலக்காய் | குங்குமப்பூ |

இவைகள் வகைக்கு இரண்டு வராகனெடை யெடுத்துக் கல்வத்திலிட்டு நன்கு இடித்து, நொச்சிச்சாறு கூட்டி யாவற்றையுமொன்றுபட வரைத்துக் கடலைப்பிரமாண முருட்டிக் கொள்ளவும். இதை நொச்சிக் கஷாயத்திலிழைத்து நஸ்யமிடக் கண் வலி, நீர்முட்டல் தீரும்.

---

## 200. நயன ரோகத்திற்கு நஸ்யம்

துளசிச்சாறு பொன்னுங்காணிச்சாறுடன்
　　சூழு நல்லெண்ணெய் சரிவிட்டுப்பின்
மிளகுமஞ்ச ளரைத்துக் கழஞ்சொன்
　　றதனிலிட்டு மெழுகின் பதத்தினிற்
துள்விக்காய்ச்சி யிறக்கி நஸ்யஞ் செய்
　　சூழ் கண்ணோய் வலிநீர் முட்டல் மாற்றுமே
வளமை சேர்த் தஞ்சைச் செங்கோல் மனுநெறி
　　மானவன்சரபேந்திரன் மையிதே. (௩௪௫)

(இ-ள்)

துளசிச்சாறு　　பொன்னுங்காணிச்சாறு
நல்லெண்ணெய்

இம் மூன்றுஞ் சமன் (வகைக்கு ½ சேர்) கூட்டிப்பின்பு, மிளகு, மஞ்சள் இவ்விரண்டையும் ஷ சாறு விட்டரைத்து 2 கழஞ்சளவு விழுதைச் சாறுகலந்த எண்ணெயிலிட்டுக் குழப்பி, அடுப்பின்மேல் வைத்துக் காய்ச்சி, மெழுகுபதமாக யிறக்கிச் சூடாறியபின், நஸ்யமிடக் கண்ணோய், வலி, நீர்முட்டல் முதலானவை மாறும்.

---

## 201. நயன ரோகத்திற்கு 'உச்சிப்பத்தும்' நஸ்யமும்

சதுரக்கள்ளி வெண்பூண்டுஞ் சமமாகத்
தையலார்முலைப் பாலிலரைத்து
மேற்பதியவே விழிசூழத் தடவியே பருத்த
மூக்கில்நஸ்யஞ் செய்பின்னொன்று
விதியடுக்குச் சட்டிச் சமூலமரை விள்ளெ
லுமிச்சங்காயளவே யெண்ணெ
யதிலுநாழியிலிட் டெரித்துச் சியிலப்பி
வைத்தாற் போகுங் கண்ணோவுக்கே. (ருசசு)

(இ-ள்)

சதுரக்கள்ளி வெள்ளைப்பூண்டு

இவ்விரண்டையுஞ் சமமெடுத்து முலைப்பால் விட்டரைத்துக் கண்களைச் சுற்றிலும் புறவளையம் போட்டு, நஸ்யமுஞ் செய்யவும்.

*அடுக்குச்சட்டிப் பூண்டைச் சமூலமாக வரைத்து ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணமெடுத்து, ஒரு நாழி நல்லெண்ணெயில் குழப்பி எரித்து, உச்சியிலப்பி வைத்தாலும் கண்ணோய்கள் தீரும்.

---

## 202. நயன வியாதிக்கு நஸ்யம்

கடம்பின்றோல் கரில் மதுரம் வாய்விளங்க
மிவைநாலுங்கலந்து கூட்டி
யுடன் சம்பீரப் பழநீரிட்டரைத்துங்
குளிகை செய்துலர்த்தி வைத்து

---

*அடுக்குச்சட்டி என்பது என்னவென்று விளங்கவில்லை

மிடவிழி நோயறிந்து நஸ்யஞ் செய்
ரோகமெலாமிலா தோடும்
தடவரையின் குடுமி புகழ் நாட்டுஞ்
சரபேந்திரன் சாற்றும் வாறே. (௱சஎ)

(இ-ள்)

| | |
|---|---|
| கடம்பைமரப்பட்டை | மிளகு |
| அதிமதுரம் | வாயுவிடங்கம் |

இந்நான்கையுஞ் சமமெடுத்துக் கல்வத்திலிட்டு இடித்து, எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்ருயரைத்து, மாத்திரையாகத் திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு நோயையறிந்து தக்க அனுபானத்திலிழைத்துக் கண்களிலிடவும். நஸ்யமும் செய்யவும். ரோகங்களும் தீரும்.

---

## 203. நயன வியாதிக்கு நஸ்யம்

வேளையின் வேர் கரில் கோட்ட
மிம்மூன்றுஞ் சமங்கூட்டி வெந்நீராதற்
சூளுநொச்சி நீரதனு லரைத்துண்டை
செய்நிழலி லுலர்த்தி வைத்து
மேனாவிழித் தனிநோய்கள் வகைகண்டு
நஸ்யஞ்செய் திடலாமென்றும்
வாளைவாற் பாயவயல்சூழ் தஞ்சை
யாள்சரபேந் திரன் வகுத்ததாமே. (௱சஅ)

(இ-ள்)

| | |
|---|---|
| நல்வேளையின்வேர் | மிளகு |
| உயர்ந்தகோஷ்டம் | |

இம் மூன்றையுஞ் சமமாகக் கூட்டி வெந்நீர் விட்டரைத்துக்கொண்டு, மறுபடியும் கருநொச்சிச் சாற்றினுலரைத்து மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு, நோய்க்குத் தகுந்த அனுபானங்களிலிழைத்து நஸ்யமிடக் கண்நோய்கள் தீரும்.

# 13. நயன வியாதிக்கேற்றபடி உள்ளுக்குச் சாப்பிடக்கூடிய மருந்துகள்

## 204. நயனரோகத் தலைவலிக்கும் விரேசனத் திற்கும் (உள்ளுக்கு)

கொன்னைக் கொழுந்துந் திரிபலையுங்
கூட்டிப் பொடிய தாய்ச்செய்து
நண்ணிக் காய்ந்த வெந்நீரில்
நாளுங் காலை மிகப்பருகில்
கண்ணிற் கேடுந் தலைவலியுங்
கனத்த மலமும் பயித்தியமும்
மண்ணுக்கிரண மாய்ப்போக
வயிறுங் கழியுங் கண்டீரே. (௩௪௬)

(இ-ள்)

சரக்கொன்னைக் கொழுந்து (காய்ந்தது)
கடுக்காய்த்தோல்
நெல்லிவற்றல்
தான்றிக்காய்த்தோல்

இவைகளைச் சமமெடுத்திடித்து, 4 மடங்கு ஜலத்திலிட்டுக் காய்ச்சி வடிகட்டிக் காலை வேளையில் சாப்பிடக் கண் ரோகங்களும், தலைவலி, பித்தம் இவைகளும் நீங்கும். மலசுத்தியுமாகும்.

---

## 205. நயன ரோக, மாலைக் கண்ணுக்கு (உள்ளுக்கு)

எருமைப்பால் படிவாங்கித் தயிர்தோய்த்து
எழுந்ததிகால மேயதின் சாணத்தை
யொருதுணியி னிலேந்திப் பிழிந்த
சாறொருபடித் தயிரோடுங் குழப்பியே

மருவியேழுநா ளுள்ளுக்குச் சாப்பிட
மாலைக்கண்ணீங்குஞ் சீராங் கைகண்டது
திருவுஞ் செல்வமுஞ் செங்கோல் வளமையுஞ்
செழித்திடுஞ்சர பேந்திரன் முறையிதே. (௲௰)

(இ-ள்)

எருமைப்பாலொருபடி வாங்கி பிறை குற்றித் தோய்ந்த பின்பு, அதனுடன் அதிகாலையில் துணியிலேந்தி யெடுத்துப் பிழிந்த எருமைச்சாணத்தின் ஜலத்தைத், துணியினால் மறுபடியும் வடிகட்டிக் கொண்டு தயிருடன் கலந்து ஏழு நாட்கள் சாப்பிட மாலைக்கண் தீரும்.

பத்தியம்:— புளி நீக்கவும்.

குறிப்பு:—

பஞ்சகவ்யம் 5ல் இம்முறையில் 2 பாகஞ் சேர்க்கப்பட்ட விசேஷம் காண்க.

---

## 206. நயன ஜோதிக்கு (உள்ளுக்கு)

நொச்சிற்சங் காடா தோடையழிஞ்சில்
நுணாகழற்சி பொடுதலை மேனியுங்
கச்சக்கையாந் தகரை யதின்றளிர்
கரி மிளகும் புழுங்க லரிசியும்
மிச்சங்கூட்டி யரைத்தொரு பாவைசெய்
மேலுமெண்ணெயிற் சுட்டெடு பின்னிதை
யெச்செருக்கிலை கொண்டுடன் மூடியே
யெரியிட்டு வெதுப்பியெடுத்திடேன். (௲௧)

எடுத்த பாவையின் கண் மூக்கு நாக்கிவை
யென்றொருபாதித் தின்று மற்றோர்
பிறர் நடக்கும் பாதையிற் போட்டிடு கண்சோதி
நலமாய்த்தீரும் பிசகில்லை பாரிது
விடத்தேரையும் புழுங்கலரிசியு மிடித்துப்
பிட்டாய்ச்சுட்டு மிதைத் தின்கினு
மடுத்தது மலைதாங்கி யரிசியுமதைத்
தடை தின்கிற் சோதியகலுமே. (௲௨)

(இ-ள்)

| | |
|---|---|
| கருநொச்சியிலை | சங்கன் இலை |
| ஆடாதோடை | அழிஞ்சில் |
| நுணா | கழற்சி |
| பொடுதலை | குப்பைமேனி |
| கையாந்தகரை | |

இவைகளின் கொழுந்து ஒரு பிடி

| | |
|---|---|
| மிளகு | ஒரு பிடி |
| புழுங்கலரிசி | ஒரு பிடி |

இவைகளெல்லாவற்றையும் தண்ணீர் சிறிது விட்டு, ஒரு நாளூறவைத்துக் கல்லுரலிலிட்டரைத்த மாவினால் ஒரே பொம்மை செய்யவும். நல்லெண்ணெயை யடுப்பின் மேல் வைத்துக் கொதிக்கையில் மேல் சொல்லிய பொம்மையைப் போட்டு, கருகாமல் சுட்டெடுக்கவும். பின்பு அப்பொம்மையை ஒரு எருக்கிலையில் சுற்றி மூடி, நெருப்பில் ரொட்டி சுடுவது போல வெதுப்பி யெடுத்துக்கொள்ளவும். இவ்வாறெடுத்த பொம்மையின் தொப்புளை மத்யமாக வைத்து மேலும் கீழுமாக இரண்டு பாகஞ்செய்து, கண் மூக்கு நாக்கு, இவைகளடங்கிய மேல் பாகத்தைத் தின்றுவிட்டு பொம்மையின் கால் பாகமடங்கிய கீழ்பாகத்தை, நடைபாதையில் போட்டு விடவும்.

பிணியாளன் ஜோதி சுத்தமாகும். பிசகு இல்லை.

(2) விடத்தேரியிலையையும், புழுங்கலரிசியும் சேர்த்து இடித்துப் பிட்டாக சமைத்துத் தின்கவும்.

(3) மலைத்தாங்கியிலையும், அரிசியுமரைத்து (அடைசெய்து

தின்கினும் ஜோதி சுத்தமாகும்.

குறிப்பு:—

(1) இம்மூன்று பிரயோகங்களில் எதைச் செய்தாலும் பிணி அகலும்.

(2) மலைதாங்கி என்பது பொன் முசுட்டை.

## 207. ரஸவாடையினுலேற்பட்ட கண்புகைச் சலுக்கு

இரதந்தின்று முழிப்புகை மேவிடி
 வீயும் பச்சைப் பயற்றுமி காற்படி
தருதண்ணீரி லூறியநீ ரதுதன்னிற்
 கால்படிமுசு முசுக்கையிலே
வருரசங்காற் படியுடனே கலமற்றுஞ்
 சர்க்கரைதானு மரைப்பல
முரையக்கூட்டி யேயுள்க் கொடுமூன்று
 நாளும்புளிதவிர் கண்ணொளி யோங்குமே. (௩௫௩)

(இ-ள்)

பச்சைப்பயறு உமி $\frac{1}{4}$ படியைத் தண்ணீரிலொரு நாள் முடிய ஊறப்போட்டு

| | |
|---|---|
| மறுநாளெடுத்து (இறுத்து) நீர் | — $\frac{1}{4}$ படி |
| முசுமுசுக்கையிலைச்சாறு | — $\frac{1}{4}$ படி |
| சர்க்கரை | — $\frac{1}{2}$ பலம் |

இம்மூன்றையுமொன்ருய்க்கூட்டி 3 நாளைக்கு உள்ளுக்குக் கொடுக்கக் கண் ஒளி ஓங்கும்.

பத்தியம்:—

புளியை நீக்கி விடவும்

---

## 208. நயன ரோகத்திற்கும் குவளைவிப்புருதிக்கும்

தலைச்சுருளி பொற்கொன்றை யாவாரைவேர்
 தன் சிறு தேக்குடன் மிளகுள்ளியும்
நிலைக்கருஞ் சீரகந் திப்பிலியுடன்நீள்
 வசம்பிவை யொன்று கழஞ்சியாய்

நிலையிற் றூக்கிப் பொடிசெய் வடிகொண்டு
துய்யநெய் யுழக்கா மணக்கெண் ணெயுள்
கலந்துமுன் பொடிதூவி வடி நக்கு
கண்குவளை விப்பிருதி கலங்குமே. (௩௫௪)

(இ-ள்)

| | |
|---|---|
| தலைச்சுருளிவேர் | பொன்கொன்றைவேர் |
| ஆவாரை வேர் | சிறுதேக்கு |
| மிளகு | உள்ளிப்பருப்பு |
| கருஞ்சீரகம் | திப்பிலி |
| வசப்பு | |

இவை வகைக்கு ஒரு கழஞ்சு ($1\frac{1}{4}$ வராகனெடை) வீத மெடுத்துப்பொடி செய்து

| | |
|---|---|
| பசுவின் நெய் | —உழக்கு |
| ஆமணக்கெண்ணெய் | —உழக்கு |

இவ்விரண்டையுங் கலந்து, முன்சொன்ன பொடியைத் தூவி அடுப்பின் மேலேற்றிக்காய்ச்சி வடித்துத் தினந்தோறும், காலை மாலை சாப்பிட்டுவரக் குவளை விப்ருதி தீரும்.

குறிப்பு:—

தலைச்சுருளி = பெருமருந்து.
பொன்கொன்றை = சரக்கொன்றை.

முற்றிற்று

# அனுபந்தம்

'பாவப்ரகாசம், என்ற வடமொழி ஆயுர் வேத நூலி லுள்ள 'நேத்திர சிகித்ஸை, அத்யாயத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்ட தஞ்சை சரஸ் வதி மஹால் காகிதச் சுவடி நெ. 14673. புத்தகத்திலிருந்து இந்த அனுபந்தம் அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த சுவடியில் தமிழ் செய்யுள்கள், நரகரலிபியில் எழுதப்பட்டிருக்கின்றன. வடமொழியிலுள்ள 'பாவப்ரகாசம்' என்ற நூலிலுள்ள முறைகளுக்கும், இவைகளுக்கும் மாறுபாடுகள் உள்ளன. இம் முறைகள் சரபோஜி மகாராஜாவினுத்தரவினல் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன வென்பது இவற்றிலுள்ள செய் யுள்கள் ஒவ்வொன்றிலும் அவ்வரசன் பெயர் வருவதால் தெரிகிறது.

# 1. நயன ரோகத்திற்கு 'மை'

துத்தமுடனுப்பிலியின் கொடியோடொக்க
துருசுவகை சமனுக நிறுத்துக்கொண்டு
சுத்தபசு வெண்ணெய்சமன் கூட்டிமைபோல்
தோணவரைத் தேசிமிழி லடைத்துவைத்து
பத்தியுடன் சிறு பயறுபோல் கண்ணில் போட
பலமான கண்ணுணிப்பூவுந் தீரும்.
சத்திரபதி சரபோஜி மஹாராஜேந்திரர்
சாற்றினர் வைத்தியத்தைச் சார்ந்துபாரே. (க)

(இ-ள்)

துத்தம் துருசு
உப்பிலாங்கொடி

இம்மூன்றையுஞ் சமனுக எடுத்துக் கல்வத்திலிட்டரைதது, பசுவெண்ணெய் சமன்கூட்டி நன்ருக மறுபடியுமரைத்துச் சிமிழில் பத்திரப் படுத்தி வேண்டும்போது சிறு பயறளவெடுத்துக் கண்களிலிடப் 'பூ,' 'ஆணி' முதலிய ரோகங்கள் தீரும்.

---

# 2. நயன ரோகத்திற்கு 'உரை மருந்து'

கல்நண்டை முருங்கைப்பூவாவதில்
கான மாதுளம் பூரஸமாவதில்
நெல்லில்பாதி உரைத்துக் கண்பூவினில்
நேராகயிடக் காலையில் மாலையில்
வெல்லுமேயொரு மண்டலங் தன்னிலே
விளைந்த பூவுடன் வெகு நோய்களும் போமெண
வல்லவர் புகழ் மால் சரபேந்திரர்
வழுத்து நேத்திர சாஸ்திரமானதே. (உ)

(இ-ள்)

நண்டுக்கல்லைக் கொண்டுவந்து சுத்திசெய்து, முருங்கைப் பூச்சாற்றிலாவது அல்லது மாதுளம்பழ ரசத்திலாவது

உரைத்து, நெல்லளவு கண்களிலிடவும். தினமும் காலையிலும் மாலையிலுமாக ஒரு மண்டலம் போட்டு வரவும். 'பூ' முதலான நோய்கள் தீரும்.

குறிப்பு:—

சுத்த ஜலத்தில் கழுவச் சுத்தியாகும்.

---

## 3. நேத்திர வியாதிக்கு 'சரணாஞ்ஜனம்'

இந்துப்பு மிளகு நீலாஞ்சனக்கல்
எடுவெள்ளைச்சாறணைவேர் வெள்ளிலோத்திரம்
மந்தமறுந் திப்பிலியும் மரமஞ்சள் கடுக்காய்
மஹாவெள்ளை சங்கமுடி சீனம் ரக்த
சந்தனமு மதிமதுரம் வேப்ப மொட்டு தன்னுடனே
கடல்நுரையும் துத்தமனோசிலையு
மிந்த வகை சமனாக பொடித்து வடிக்கட்டி
இரும்புரலிலிட்டு செம்புலக்கையாலே. (ரு)

ஆட்டுவாய் தேன்விட்டு மைபோலாக
அத்னையெடுத் தேவெள்ளிச் சிமிழிலிட்டு
நீட்டிடவே விழியதினில் கொஞ்சமாக
நிலைவிட்டுப் போம்படலந் திமிரஞ்சுக்ரம்
நாட்டினால் நயனசர ணாஞ்சனத்தை
நல்பாவப் பிரகாசமுறை தமிழினாலே
பாட்டாகப் பாடிவைத்தார் சரபேந்திரபூபர்
பார்த்தறிந்து பண்டிதங்கள் பலிக்கவேண்டே. (சு)

(இ-ள்)

| | |
|---|---|
| இந்துப்பு | மிளகு |
| நீலாஞ்சனக்கல் | வெள்ளைச்சாறணை வேர் |
| வெள்ளிலோத்திரம் | திப்பிலி |
| மரமஞ்சள் | கடுக்காய் |
| ஸ்படிகக்கல் | சங்கு |
| சீனாக்காரம் | செஞ்சந்தனம் |
| அதிமதுரம் | வேப்பமொட்டு |
| கடல்நுரை | துத்தம் |
| மனோசிலை | |

இவைகளைச் சமனாக எடுத்து இரும்பு உரலிலிட்டுச் செப்பு உலக்கையினாலிடித்து, வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, தேன்விட்டு மைப்போலரைத்து ஒரு வெள்ளிச்சிமிழில் பத்திரப்படுத்தவும். 6 மாதஞ் சென்றபின் விழிகளில் சிறிதளவெடுத்துத் தீட்டிவரப் படலம், திமிரம், சுக்ரம், முதலியவை தீரும்.

குறிப்பு:—

வெள்ளி லோத்திரம்—விளாம்பட்டை

---

## 4. சந்திரப்ரபாவர்த்தி

சந்திரப்பிரபாவர்த்தி மையிதொன்று
சாற்றுகிறேன் மரமஞ்சள் மிளகு திப்பிலி
கந்தகோ ரைக்கிழங்கு வேப்பமொட்டு
கடுக்காயும் வாயுவிடங்கம் கணக்காயேலம்
இந்தவகைக் கொருவராக னெடையுமாக
இட்டரை வெள்ளாட்டு நீர் தன்னினாலே
அந்தமாய் மாத்திரைசெய் நிழலிலுலர்த்தி
அழகான டப்பாவி லடைத்துக்கொள்ளே. (௫)

குடத்துனுட தண்ணீ ரிலுரைத்துப்போடக்
குணமாகுந் திமிரமுடன் குந்தரோகம்
அடைதேனி லுரைத்திடவே படலம்போகும்
ஆயிழையின் முலைப்பாலில் சுக்கிரன் போம்
தடமான கோசலத்திலுரைத்துப் போட
தீங்கான பிஷ்டக முந்தீர்ந்துபோகும்
படையெல்லாம் பராக்கிரமர் சரபேந்திரபூபர்
பாவப்ரகாசமுறைப் பாடல் செய்தார். (௬)

(இ-ள்)

| | |
|---|---|
| மரமஞ்சள் | மிளகு |
| திப்பிலி | கோரைக்கிழங்கு |
| வேப்பமொட்டு | கடுக்காய் |
| வாயு விடங்கம் | ஏலக்காய் |

இவைகளை வகைக்கு ஒரு வராகனெடை யெடுத்துஇடித்து, இவைகளை வெள்ளாட்டு மூத்திரம்விட்டு நன்றாக அரைத்து, மாத்திரையாக உருட்டி நிழலிலுலர்த்திக்கொள்ளவும்

இதைத் தண்ணீரிலிழைத்துக் கடுகளவு கண்களில்போடத் திமிரமுந் குந்தமுந் தீரும். தேனிலிழைத்துப்போடத் திமிர ரோகந் தீரும். மூலைப்பாலிலிழைத்துக் கண்களிலிடப் பிஷ்டக ரோகந்தீரும்.

---

## 5. சந்திரோதய வடி

கடுக்காய் திப்பிலி மனோசிலை
 கனத்த சங்கு மூடி கோஷ்டம்
முடுக்காயுரைக்கும் மிளகுடனே
 முத்தல்வசம்பு சரிநிறையாய்
சடக்காயரைத்துத் தண்ணீரால்
 சாமம் நாலு வெள்ளாட்டுப் பாலில்
மடக்கியரைத்து மைப்போல
 மாத்திரை செய்து நிழலிலுலர்த்தே. (எ)

உலர்த்தும் சந்திரோதய வடியை
 யுரைத்துப்போட மிளகதுபோல்
பெலத்து வளர்ந்த சதைப்படலம்
 பித்தகாசம் மாலைக்கண்
வலுத்த கண்ணின் வலியுடனே
 வர்ஷ சுக்கிரன் வாங்கிவிடும்
தலத்தோர் போற்றுஞ் சரபேந்திர
 சாற்றும் பாவப்ரகாசமுறை. (அ)

(இ-ள்)

| | |
|---|---|
| கடுக்காய் | திப்பிலி |
| மனோசிலை | சங்கு |
| கோஷ்டம் | மிளகு |
| வசம்பு | |

இவைகளைச் சமமெடுத்துத் தண்ணீர் விட்டு, 4 ஜாமங்கள் அரைக்கவும். பின்பு வெள்ளாட்டுப் பாலில் 4 ஜாமங்களும் அரைத்தபின்னிதை மாத்திரை செய்து நிழலிலுலர்த்திக் கொள்ளவும் வேண்டும்போது தண்ணீரிலிழைத்துக் கண்களில் மிளகளவு போடச் சதைப்படலம், பித்தகாசம். மாலைக் கண், கண்வலி, வர்ஷசுக்ரன் முதலியவை நீங்கும்.

---

# 6. முக்தாதி மகாஞ்ஜனம்

முத்தாதி மஹாஞ் ஜனத்தை விழியினேய்க்கு
மொழிகிறேன் முத்து முசுமுசுக்கைவேரும்
சுத்ததாமிரபஸ்மம் வங்கபஸ்மம்
துய்யவெங் கலபஸ்மம் துளசிப்பூவும்
துத்தமுமப் பிரகபஸ்ம மகில்கட்டை துலங்கும்
நீலாஞ்சனமும் துளசிவிரை ராஜ
வர்த்திக்கல் மனேசிலையும் குங்குமப்பூ
மணக் கோரைக் கிழங்குடனே தானிக்காயே. (கூ)

சங்குமுடி முட்டைத்தோல் சாயப்பூவும்
தன்னுடனே மரமஞ்ச ளிந்துப்புகிராம்பு
பங்கமிலா மிளகுடனே கடுக்காய் சுக்கு
பண்பான திப்பிலியும் வசம்புங்கூட்டி
புங்கவிரை வேப்பவிரை அதிமதுரம் பச்சைப்
பூரமுட காசிடைதான் சமனாய்ச்சேர்த்து
கங்கையினலரைத்து மைபோலிதனலே
கணக்காக நாலுசாமமரைத்துக்கொள்ளே. (ய)

அரைத்தெடுத்த மையிதனை தாம்பிரத்தி
னழகான சிமிழிலடைத்துக் கொண்டு
பருத்தவாயு விடங்கம்போல் விழியில் போட்டு
பலமாக நேத்திரத்தில் வந்தென்னுளும்
வருத்தமுறும் நோய்பலவுந் தீர்ந்துபோகும்
வகைபாவப் பிரகாசமுறை வையகத்தில்
தருவென்னும் சரபோஜி ராஜபூபன்
தயவாகிச் சொன்னமுறை தப்பாதென்றே. (கக)

(இ-ள்)

| | |
|---|---|
| முத்து பஸ்மம் | முசுமுசுக்கைவேர் |
| தாமிரபஸ்மம் | வங்கபஸ்மம் |
| வெங்கலபஸ்மம் | துளசிப்பூ |
| அப்பிரக பஸ்மம் | அகில்கட்டை |
| நீலாஞ்ஜனம் | துளசிவிரை |
| ராஜவர்த்திக்கல் | மனேசிலை |
| குங்குமப்பூ | கோரைக்கிழங்கு |

தான்றிக்காய் — சுட்ட சங்கு
அடைகாத்து வெடித்த முட்டையோடு — இம்புருவேர்
மரமஞ்சள் — இந்துப்பு
கிராம்பு — மிளகு
கடுக்காய்த்தோல் — சுக்கு
திப்பிலி — வசம்பு
புங்கங்கொட்டை — வேப்பம் விரை
அதிமதுரம் — பச்சைக்கல்பூரம்
துத்தம்

இவைகளை வகைக்குக் காசெடை யெடுத்துக் கல்லுரலி லிட்டிடித்துத் தண்ணீர்விட்டு நாலுசாமமரைத்துக் கொள்ளவும். இதையொரு தாமிரச்சிமிழில் பத்திரப்படுத்திப் பெரிய அளவுள்ள வாயுவிடங்கத்திற்கு நிகர் கண்களிலிடவும். பற்பல நோய்களுந் தீரும்.

---

## 7. அதிதலக்கினி ரஸக்ரியா

வாயு விடங்கம் போலாலம்பாலெடுத்து
வளர்கடுகு போல் சேரு பச்சைப்பூரம்
நேயமுற மத்தித்து விழியிலேந்துநாள்
போடப்போமிரண்டு மாதப்பூவும்
ஆய்ந்திட நல் பாவப்ரகாசமுறை தன்னில்
அதிதலக்கினி ரஸக்ரியை மையிதாகும்
இந்துலகில் மிகுந்தபுகழ் மேவுகின்ற
என் கோமான் சரபேந்திரர் யியம்பினரே. (கஉ)

(இ-ள்)

ஆலம்பால் வாயுவிடங்கப் பிரமாணமெடுத்து பச்சைக் கற்பூரம் கடுகளவெடுத்து இவ்விரண்டையுமொன்று கலந்து இரு விழிகளிலும் போட்டுவர 2 மாதமான கண் 'பூ' தீரும்.

---

# 8. சூரணஞ்ஜனம்

நீலாஞ்சனக்கல்லேழுதரம்
நெருப்பில் காய்ச்சித்திரிபலையின்,
மேலாங்கஷாயந்தனில் தோய்த்து
மேலுமேழுதிரங்காய்ச்சி,
சேலாம் விழியின் மாதர் முலைத்
தீம்பால் தன்னில் தோய்ந்தந்த
பாலாலரைத்துப் பொடியாகப்
பண்பெறச் சூரணமஞ்ஜனமாம். (கரு)

அஞ்ஜனமான பொடிகண்ணில்
அடைவாய் சலாகை நாலுமிட
மிஞ்சிவாயு வால்வந்த
விழிநோயெல்லாம் விட்டோடும்
கொஞ்சந் தினமும் விழியிலிட
குளிர்ச்சியாகும் நோய்வாரா
தஞ்சைநகர் வாழ் சரபேந்திரன்
சாற்று பாவப்ரகாசமுறை. (கசு)

(இ-ள்)

நீலாஞ்சனக்கல்லை எழுதரம் நெருப்பில் காய்ச்சித் திரிபலா கஷாயத்தில் தோய்க்கவும் (திரிபலை = கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்) மறுபடியும் 7 தடவை நெருப்பில் காய்ச்சி முலைப்பாலில் தோய்க்கவும். பின்பு அதைப் பாலுடனே காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திர காயஞ் செய்துகொள்ளவும். இதையொரு சலாகையினை லெடுத்து இரு கண்களிலும் நாலுமுறையிடவும். வாயுவினை லேற்பட்ட பற்பல ரோகங்களும் தீரும்.

---

# 9. லேகனஞ்ஜனப்பொடி

அடைவைத்த முட்டையோடின் தோல்போக்கிய
துடனே மனச்சிலையும் சங்குமுடிகூட்டி
உடைப்பச்சைப் பீங்கான் தூள் இந்துப்போ
டுயர் ரத்த சந்தனமும் சமனதாக

யிடை பச்சைத் தண்ணீராலரைத்து மைப்போல்
யிளம் வெயிலில் காயவைத்து பொடித்துக்கொண்
டிடுரெண்டு சலாகையது கண்ணில் நோய்
யேகும் வகை நோயதனை யியம்புவோமே. (கரு)

கண்பூவும் படலமுடன் பித்தகாசம்
கபத்தாலே வந்தநோயனைத்தும் போகும்
பண்பான பாவப்ரகாசமுறை தன்னில் பண்ணும்
லேகஞ்சனமாம் பொடியதாகும்
திண்புவியில் மனிதர்க்காய் சொன்னதிந்த
தேசாதிபதி சிங்காசனத்தில் வாழும்
வண்புஜனும் சரபேந்திர பூபன் தானும்
வழுத்தினர் நேத்திரத்தின் வைத்தியத்தை. (கசு)

(இ-ள்)

அடைவைத்தெடுத்த முட்டைமேலுள்ள தோலை நீக்கிய பின்னுள்ள ஓடு

மனச்சிலை
சுட்டசங்கு
பச்சைப்பீங்கான்தூள்
இந்துப்பு
செஞ்சந்தனம்

இவைகளைச் சமமாகயெடுத்துப் பொடிசெய்து, கல்வத்திலிட்டுச் சுத்தமான தண்ணீரினலரைத்து மையாக்கிக்கொண்டு இளம் வெயிலில் காயவைத்துக்கொள்ளவும். இதைப் பொடித்து வஸ்திரகாயஞ்செய்துகொண்டு, ஒவ்வொரு கண்களிலும் இரண்டு சலாகைத்தூள் போட்டுவரவும். இதனல் கண்ணில் பூ, படலம், பித்தகாசம், கபத்தினலேற்பட்ட பல வியாதிகளும் போகும்.

## 10. ரோபணஞ்ஜனம்

பால் துத்தந் தண்ணீரா லரைத்து மைபோல்
பாத்திரத்தி லிட்டஜலத் தால்கரைத்து
தாலத்தில் வண்டலது அடியில் நிற்க
சத்துகுழம் பாயெடுத்துத் தண்ணீர் தன்னை

காலைவெயில் தன்னில்காய வைத்தெடுத்து
கணக்காகப் பத்திலொன்று பச்சைப் பூரம்
சீலமுடன் சேர்த்துத்திரி பலைக் கஷாயம்
திறமாக மூன்றுநா ளரைத்துலர்த்து. (கஎ)

உலர்த்தியபின் பொடிசெய்து வைத்துக்கொண்டு
உயர்பெருரோ பணாஞ்சனமாம் பொடியதாகும்
வெலத்தகண்ணில் பித்தத்தால் வருநோயெல்லாம்
போகுமே சலாகையது மூன்றுபோடு
நலத்தையருள் சிவபூஜை தினமும் செய்யும்
நராதிபதி சரபேந்திரராஜன் தாமும்
தலத்தினில் வாழ்ஜனங்களுக்காய் பாவப்ரகாசம்
தருமுறையைச் சாற்றினார் தயவுசெய்தே. (கஅ)

(இ-ள்)

பால் துத்தத்தைத் தண்ணீர்விட்டு மைபோலரைத்துத் தண்ணீரில் கரைத்து ஒரு வாயகன்ற பாத்திரத்தில் விட்டு விடவும். அது வண்டலாகத்தங்கும். நீரை இறுத்துவிட்டு சத்துள்ள அக்குழம்பையெடுத்து இளவெயிலில் காயவைக்கவும். அந்தசத்துக்கு பத்திலொன்றளவு பச்சைக்கற்பூரஞ் சேர்த்துத் திரிபலா (கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்) கஷாயத்தினால் மூன்று நாளரைத்து உலர்த்திவைக்கவும். பின்பு இதைப் பொடிசெய்துகொண்டு 3 சலாகைவீதம் கண்களில் போட்டுவரப் பித்தத்தினால் வரும் ரோகங்கள் தீரும்.

---

## 11. கல்ப்பூரக்கிண்ணம் செய்முறை

அகலவாயுள்ள தாம்பிரப் பாத்திரமதனுள்
கால வாயிடும் கர்ப்பூரம்
நிகல் வராகனெடை படிக்காரமும்
நீட்டு மற்றொரு பாத்திரம் செம்பினால்
தகவும் பீங்கானின் னிகராய் வரம்பினில்
சாரிரண்டு வாரமும் நேரிட்டு
புகழும் பாத்திரத் துள்ளிதை வைத்திடு
பொருந்திடையின் வெளிக்கு மண்பூசிடே. (க௯)

பூச்சுப்பின் தழல் தன்னிலிதை வைத்து
பொருந்தும் பாத்திரந்தனில் தண்ணீர்விட்டு
காய்ச்சிடு விரல் தோயப் பொருப்பதாய்
கண்டுநீரை கழித்து மறுத்தண்ணீர்
பாய்ச்சியிப்படி மூன்றுதிரமிட்டுப் பதமாய்க்
காயின்ற தண்ணீரைத் துணியினுல்
தோய்த்தெடுத்து பிறகுமண் ணீக்கியே
துவாரத்தில்கழி கோத்திதைத் தூக்கிடே. (உய)

தூக்கும் பாத்திரதுள்ளும் நெருப்பிட்டால்
தூக்கிநிற்கும் புரவாயில் கர்ப்பூரம்
ஆக்கு கிண்ணம் வெளிப்படுமிம்முறை
அருமைபோகர் எழுனூத்திரண்டினில்
போக்கிதை வெளியாக்கினர் தஞ்சையை
புரந்தருளும் பூபார விஷயமும்
ஆக்கினைசக்கிர மனு நீதியு
மாய்ந்திடும் சரபேந்திரனருளிதே. (உக)

(இ—ள்)

ஒரு செம்புப் பாத்திரத்தை யெடுத்துக்கொண்டு அதற்குள் புகும் மற்றொரு சிறிய பாத்திரத்தையுமெடுத்துக் கொள்ளவும். பெரிய பாத்திரத்திற்குள் கால்வாசி உருகும் கர்ப்பூரத்தைப் போட்டு அதனுடனே ஒரு வராகனெடை படிக்காரம் போட்டுக் கொள்ளவும். பின்பு சிறியபாத்திரத்தை அதற்கு மேல் வைத்து, பெரிய பாத்திரத்திற்கும் சிறியபாத்திரத்திற்குமுள்ள இடைவெளிக்குச் சீலைமண் செய்யவும். இப்போது பெரிய பாத்திரத்தைத் தணலின்மேல் வைத்து, சிறிய பாத்திரத்துள்ளே தண்ணீரையூற்றி வைக்கவும். அத்தண்ணீர் கைபொருக்கும் சூடானபின் அதை ஊற்றி மறுபடியும் குளிர்ந்த தண்ணீர் விடவும். இவ்வாறு மூன்று முறையிடவும். பிறகு அதிலிருக்கும் தண்ணீரை ஒரு துணியினுல்தோய்த்துத் தோய்த்து வெளிப்படுத்தவும். பின்பு சீலைமண்ணை நீக்கி பொருந்தும் விளும்பில் சிறு குச்சியைக் கொடுத்துத் தூக்கினுல் சிறிய பாத்திரம் வெளியே வந்துவிடும். பின்பு பெரிய பாத்திரத்திற்குள் அனலைப் பிடித்தால் கற்பூரக்கிண்ணி

வெளிப்படும். இதில் குளிர்ந்த ஜலத்தை வைத்துத் தினமும் கண்களில் விட்டுவரக்கண்கள் துலங்கும். கண்ரோகங்களும் தீரும்.

---

## 12. ஸ்நேதினி வடி

ஒரு கழஞ்சு நெல்லிவிரை பருப்போடொக்க
வோர் மூன்றுகழஞ்சுகடுக் காய்ப்பருப்பு
இருகழஞ்சு தான்றிக்காய்ப்பருப்புகூட்டி
இதுவெல்லாம் தண்ணீராலரைத்து மைபோல்
பெரிதாக மாத்திரைதான் செய்துலர்த்தி
பின்புநல் சிமிழ்தன்னிலடைத்துக்கொண்டே
இருமிளகுப் பிரமாணம் தண்ணீர் தன்னி
லியல்பாக வுரைத்திடவே தீருநோய்கேள். (உஉ)

வாதரக்த ரோகமுடன் கண்ணில் வந்த
வலுவான நீர்முட்டல் வாங்கிப்போகும்
தீதில்லா பாவப்ரகாச முறைதனிலே
திறமான ஸ்நேதிநியின் வடியிதாங்கு
ஆதியிலே முன்னோர்கள் சொன்னநூலை
ஆராய்ந்தே அறிந்தந்த வகைகளெல்லாம்
நீதியுளத் தஞ்சையில் வாழ் சரபேந்திரபூபன்
நிச்சயித்துச் சொன்னமுறை தப்பாதின்றே. (உரு)

(இ-ள்)

| | |
|---|---|
| நெல்லிக்கொட்டைக்குள்ளிருக்கும் பருப்பு | 1-கழஞ்சு |
| கடுக்காய்ப்பருப்பு | 3 ,, |
| தான்றிக்காய்ப்பருப்பு | 2 ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டுத் தண்ணீரினாலரைத்து பெரிய மாத்திரையாகத் திரட்டிக்கொண்டு மூங்கில் குழாய்க்குள் வைத்துக்கொண்டு 4 வாரங்கழித்துத் தண்ணீரிலிழைத்து இருமிளகுப் பிரமாணங் கண்களிலிட, வாதரத்தம், கண்களிலுண்டாகும் நீர்முட்டல் முதலியவை தீரும்.

---

# 13. ரோபணி ரஸக்ரியை

அஞ்ஜனக்கல் மரத்து வெள்ளை சாதிப்பூவும்
அலைகடலின் நுரையும்மனோ சிலையிந்துப்பும்
பஞ்சையில்லா மிளகுபொற் காவியொன்றை
பதமுடனே சுத்திசெய்தே யெடுத்துக்கொண்டு
கொஞ்சமெடை குறையாமல் சமனாய்ச் சேர்த்து
கொம்புத்தே னால்மைபோ லரைத்தெடுத்து
மிஞ்சியதோர் மாத்துவெள்ளி சிமிழில் வைத்து
மேலாவின் பாலிலிடத் தினவு போமே. (உச)

தேனலது நெய்யிலிட நீர்முட்டுப்போம்
திரமான நல்லெண்ணெய்தனி லிடப்பூதீரும்
கானவெள்ளைச் சாறணையின் சாற்றில்போட
கடினமாய் மாலைக்கண் கடுகத்தீரும்
ஊனமுறும் திமிரம்போம் காடிதன்னி
லுயர்ந்தரோ பணிரஸக்ரியை மைப்போகும்
மானிலத்தோர் கொண்டாடும் சரபோசேந்திரன்
மகிழ்ந்துரைத்த பாவப்ரகாச முறையிதாமே. (உரு)

(இ-ள்)

| | |
|---|---|
| அஞ்சனக்கல் | குங்கிலியம் |
| சாதிப்பூ | கடல்நுரை |
| மனோசிலை | இந்துப்பு |
| மிளகு | பூங்காவி |

இவைகளைச் சுத்தி செய்துகொண்டு, வகைக்கு சரியெடுத்துக் கல்வத்திலிட்டுக் கொம்புத் தேனினால் நன்றாகவரைத்து ஒரு வெள்ளிச்சிமிழில் பத்திரப்படுத்தவும்.

இதைப்பசுவின் பாலிலிடக் கண்களின் அரிப்புத் தீரும். தேன் அல்லது நெய்யிலிட நீர்முட்டல் தீரும். நல்லெண்ணெயிலிடக் கண்களிலுள்ள 'பூ' தீரும். வெள்ளைச்சாறணைச் சாற்றிலிட மாலைக்கண் தீரும். காடியிலிழைத்துப் போடத் 'திமிரங்' தீரும்.

# 14. ரஸக்ரியா ஸ்நேஹனி

தேத்தாங் கொட்டையை தேனிலுரைத்ததில்
சேர் கசகசாப்போல் பச்சைப் பூரமும்
போத்திக் கண்ணிலிடக் கண்கலங்கின
புண் சிவப்புடன் போகுமிதுண்மையாம்
யேத்து பாவப்ர காசமுறையதில்
யிசைரஸக்ரியா ஸ்னேஹனீ தன்னை
சாத்தினரெளியோருக்குதவி செய்
தஞ்சைவாழ்சர பேந்திர பூபனே. (உசு)

(இ-ள்)

தேத்தாங்கொட்டையைத் தோல் சீவித் தேனிலுரைத்துக் கொண்டு பச்சைக்கர்ப்பூரம் சிறு கசகசா யெடை யெடுத்துக் கலங்கின கண்களிலிடக் கண்சிவப்பு தீரும்.

---

# 15. உரோபண வடி

அஞ்சனக்கல் மரமஞ்சள் கஸ்தூரிமஞ்சள்
அழகான சாதிப்பூ வேப்பமொட்டு
இஞ்சுவகை சமனுக நோயில்லாத
ஆவின்சா ணிப்பாலி லரைத்துருட்ட
மிஞ்சினதாம் உரோபணியின் வடியிதாகும்
மிளகிடையொன் றரையிடவே போம்மாலைக்கண்
தஞ்சையில்வாழ் சரபேந்திர பூபர்தாமும்
சாற்றினர் பாவப்ரகாச முறை தனையே. (உஎ)

(இ-ள்)

| | |
|---|---|
| அஞ்சனக்கல் | மரமஞ்சள் |
| கஸ்தூரிமஞ்சள் | சாதிப்பூ |
| வேப்பமொட்டு | |

இவைகளைச் சமனுகயெடுத்துக், கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயம்செய்து, நோயில்லாப் பசுமாட்டின் புதுச் சாணியைப்பிழிந்து அதன்சாறெடுத்து நன்ருக வடிக்கட்டி

அதனால் மேற்சொல்லிய சூரணங்களை யரைத்து உருட்டிக் கொள்ளவும். இதைத் தண்ணீரிலுரைத்துக் கண்களில் ஒன்றரை மிளகுப் பிரமாணமிட மாலைக்கண் தீரும்.

---

## 16. புஷ்பஹாரிவர்த்தி

புங்கவிரையை புரசினுடபூவின் சாற்றிலிராமுழுதுந்
தங்கவைத்து மறுநாளில் சாறுசுவறக் காயவைத்துப்
பங்கிடாக இப்படியே பண்ணுயைந்து திரம்பிறகு
நுங்க முன்சாறு விட்டரைத்து நொய்யதாக வையெடுத்தே.

எடுத்த மருந்தை நிழலிலுலர்த்திடவே கண்ணில் போங்
[நோய்கேள்
கடுத்த கண்ணில் பூமுதலாய் கனத்தரோகம் விட்டோடும்
வடித்தபாவ ப்ரகாசமதில் வடியாம்புஷ்ப ஹாரிவர்த்தி
எடுத்தே சொன்னார் சரபேந்திரர் பிசைவாயிந்த
[முறைதானே. (உஅ)

(இ-ள்)

புங்கவிதையைப் புரசம்பூச்சாற்றில் ஒரு இரவு முழுதும் ஊறப்போடவும். சாறு சுவறுமட்டும் காயவைத்து, மறுநாள் மறுபடியும் புரசம்பூச்சாற்றைவிட்டு ஊறவைக்கவும். இம்மாதிரி 5–தடவை செய்யவும். பின்பு இதை முன் சாறுகூட்டி நன்ருக வரைத்து மாத்திரை செய்துகொள்ளவும். வேண்டும்போது இதைப்பொடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு கண்களிலிடவும். கண்கடுப்பு, பூ முதலியவை தீரும்.

---

# 17. சங்காதி மாத்திரை

சங்கு கடல்நுரை பன்றிசிங்கம் கலங்
கொம்பு தாம்பிரப்பொடி முத்துடன்
சரிகையின் வெள்ளிரேக்குப் பவழமிள
நீரில் சட்டமாய் வடித்தாமணக்கு
இங்கிதத்தெண்ணெயும் வகைக்கொரு வராக
னெடையெழில் சூரத்துக் கடுக்காய்
பண்ணிவை பதினைந்து பச்சைப் பாக்கள
வேற்க நந்தியா வட்டைபூ
துங்கநல்பசளை யிருசாற்றினில் போடு
மேல்தொண்ணூ றரைத்துண்டைசெய்
துதிகண்களில் போடுமேல் நந்தியாவட்டை
மலர் துய்ய சண்டாலொத்திடு
சங்கநோய் தீர்ந்திடும் படலம் மங்கைப்
பால் சயமோடிநல் பத்தியம்
சிவகிருபையேத்துவாழ் சரபேந்திரபூபதி
செய்யுமிது சித்தர் முறையே. (உக)

(இ-ள்)

| | |
|---|---|
| சங்கு சுட்டது | கடல்நுரை |
| பன்றிக்கொம்பு | மான்கொம்பு |
| தாமிரத்தூள் | முத்து |
| சரிகை வெள்ளி ரேக் | பவழம் |
| இளநீர் | ஆமணக்கெண்ணெய் |

இவைகள் வகைக்கு ஒரு வராகனெடை யெடுத்துக் கொண்டு, நன்ருக அரைத்துச் சூரத்துக்கடுக்காய்த்தூள் பதினைந்து பச்சைப்பாக்களவெடுத்துக் கலந்து கல்வத்திலிட்டு நந்தியாவட்டைப்பூச் சாற்றிலும் நல் பசளைச் சாற்றிலும் தனித் தனியே 96 நாழிகை யரைத்து, மாத்திரையாகத் திரட்டி, நந்தியாவட்டைப்பூச் சாற்றில் இழைத்துக் கண்களிலிடச் சங்கநோய் தீரும். தாய்ப்பாலிழைத்துக் கண்களிலிடப் படலந் தீரும். பத்தியமாக யிருக்கவும்.

# 18. நெல்லிக்காய் ரஸாயனம்

அந்த நெல்லிக்கனியிலோர் குறுணி சீரகமதுவுமொரு சேர்
[தேனுமே
அடவுடன் நாலுசேர் சீனிநற் சர்க்கரையைந்து சேர்
இந்த வகைநாலையும் பால்பானை தன்னிலே இட்டந்த
[வாயை மூடியே
சீலைமண் செய்தொரு மண்டலம் மண்டலத் தேபுடத்தினில்
[வைத்தெடு
சந்ததம் ஒருமைய்யா யிருபோதும் உண்டிடில் சகலசூ டுந்தணி
[யும் மேல்
சந்தனம் குங்குமம் கொங்கையில் இலங்குவரு ஸரஸஸத்குண
[மங்கைப்பால்
சிந்தைதனிலுறுதியாய் ஜபமே நகுண்டேந்து செய்வித்தே
[வெகுபத்தியம்
சிவகிருபையதுவாழ் சரபேந்திரபூபதி செப்புவது சித்தர்
[முறையே. (கூ௰)

(இ—ன்)

| | |
|---|---|
| முதிர்ந்த நெல்லிக்கனி | 1 மரக்கால் |
| சீரகம் | 1 சேர் |
| தேன் | 4 சேர் |
| சீனி | 5 சேர் |

இவைகளை யொன்றுகலந்து, பூணில்லா உலக்கையினுல் இடித்து ஒரு பால் பானையில் இட்டு, அதன் வாயைச் சீலைமண் செய்து ஒரு மண்டலம் (45 நாட்கள்) தானிய புடத்தில் வைத்திருக்கவும். பின்பு இதை எடுத்து தினம் 2 வேளை வீதம் இம்மருந்துகளைச் சாப்பிட்டுவரச் சகல சூடுந்தணியும்.

குறிப்பு:— பசுவின் பால் 5 சேர் சேர்த்துக்கொள்ளவும்.

---

# 19. தூதுவேளைச் சூரணம்

தூதுவேளையின் சமூலம் பசுவின் பாலில் தோய்த்திடவும்
[வேகவைத்துத்
தூயநிழலிலுலர்த்திக் கொண்டிடித்ததைத் தூளாய்
[வடிகட்டியே
மீதுத்த சூரணம் சேரொன்று சேரைந்து மேன்மைசீனிச்
[சர்க்கரை
மெய்சீர கஞ்சாதிக் காய்இசுப் போல்விரை
மேலேழரைக் காசிடை

ஆதுவ்கை யொன்றினுக்கு ஜாதிபத்திரியு குங்குமப்பூ
[வகைக்கோர்
காசினிடைப் படிபொடிசேர்த்து வெள்ளாட்டி
[ஞென்பாலி லிருவேளையுண்
வாதுத்த ஸகலகப ரோகம் விடும் வஞ்சிபால் வைத்து பிகு
[கன பத்தியம்
வன்மை சிறுபூஜைசெய் சரபேந்திர பூபதி வளமை
[யுரை சித்தர் முறையே. (ருக)

(இ-ள்)

தூதுவேளையைச் சமூலமாக எடுத்து நறுக்கி அது முழுகு மளவு பசுவின் பால் விட்டு, அடுப்பின் மேலேற்றி வேக வைத்துக்கொண்டு, பின்பு தூதுவேளைச் சமூலத்தையெடுத்து நிழலிலுலர்த்திக் கொள்ளவும். இதைக் கல்லுரலிலிட் டிடித்து வஸ்திரகாயஞ் செய்து எடுத்த தூள் 1 சேரெடுத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| சர்க்கரை | — 5 சேர் | |
| சீரகம் | — $7\frac{1}{2}$ காசெடை | |
| சாதிக்காய் | — $7\frac{1}{2}$ | ,, |
| இஸ்போல் விதை | — $7\frac{1}{2}$ | ,, |
| ஜாதிபத்திரி | — 1 | ,, |
| குங்குமப்பூ | — 1 | ,, |

இவைகளை யொன்றுகலந்து, இடித்து, வஸ்திரகாயஞ் செய்துகொண்டு தூதுவேளைச் சூரணத்துடன் கலந்து ஒரு வெருகடியளவு வீதம் வெள்ளாட்டுப் பாலில் காலையிலும் மாலையிலுஞ் சாப்பிட்டு வரவும்.

சகல விதமான கபரோகங்களுந் தீரும். ஸ்திரீ போகம் தள்ளவும்.

## 20. திரிபலாதி க்ருதம்

திரிபலையின் கஷாயமுடனுடாதோடை
சீந்தில் கொடி தண்ணீர் மிட்டானும்
கரிசாலை நெல்லிக்காயும் பசுவின்நெய்
கணக்கதா யாட்டின் பால் வகையொன்றினுக்

இருசேராமிளைச்சாறு அளந்திட்டே
கற்கவகை யிதிலிட்டிட
உருசையாம் சர்க்கரையும் திரிபலை
யுரைக்குந் திப்பிலி அதிமதுரங் கூட்டே. (௩௨)

கூட்டிடும் கொடிமுந்திரிகைப்பழம்
குளத்துரை செங்கழுநீர்க் கிழங்குடன்
காட்டி நெல்லிமுள்ளி கண்டங்கத்திரி
கனத்தமுக்கிருவேர் வகையொன்றுக்கு
போட்டியிரு வராகனெடையதாய்
புதிய வாவின் பாலாலரைத்திதை
நாட்டமாயொரு நாளும் வைத்தே
மறுநாளெடுத்தே யெரிகமலாக்கினி. (௩௩)

எரித்தன்னெய்யை நசியமிட்டுக்கொள்ள
ஏதுவாய் ஆசனத்திலுள் பீச்சிட
வருத்த முத்தவிழிநோய் பலவுமே
வாங்கிப்போம் நல் பாவப்பிரகாசத்தில்
கருத்துடன் திரிபலையின் கிருதத்தை
கண்டு சொல்சரபேந்திரன் தாளினை
உறித்துடன் கலையுற்றோர் பணிந்திட்டா
லுண்மையாகத் தரித்திரமோடுமே. (௩௪)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| திரிபலா (கடுக்காய், நெல்லிவற்றல், தான்றிக்காய்) கஷாயம் | — 2 | சேர் |
| ஆடாதோடைச்சாறு | — 2 | ,, |
| சீந்திற்கொடிச்சாறு | — 2 | ,, |
| தண்ணீர்விட்டான்கிழங்குச்சாறு | — 2 | ,, |
| கரிசாலங்கண்ணிச்சாறு | — 2 | ,, |
| நெல்லிக்காய்ச்சாறு | — 2 | ,, |
| பசுவின் நெய் | — 2 | ,, |
| வெள்ளாட்டுப்பால் | — 2 | ,, |

இவைகளை யொன்று கலந்து, அதனுடன்,

| | |
|---|---|
| சர்க்கரை | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | தான்றிக்காய்த்தோல் |

திப்பிலி | அதிமதுரம்
கொடிமுந்திரிப்பழம் | செங்கழுநீர்க்கிழங்கு
கண்டங்கத்திரி | அமுக்கிராக்கிழங்கு

இவைகள் வகைக்கு 2 வராகனெடை யெடுத்து, கல்லுரலி லிட்டிடித்து, பசுவின்பால் விட்டூறவைத்து, அம்மியிலிட் டரைத்து, அந்த விழுதைச் சாறுகூட்டிய நெய்யில் குழப்பி யொருநாள் வைத்திருந்து, மறுநாளடுப்பின்மேல் வைத்துக் கமலாக்னியினலெரித்துப் பதத்தில் வடிக்கவும்.

இந்நெய்யைத் தினம் 4 துளிகள் வீதம் இரு நாசிகளிலு மிட்டு நஸ்யஞ் செய்யவும். இந்நெய்யை ஆசனத்தினுள் ளும் பீச்சவும் (எனிமாவாகக்கொடுக்கவும்) பலவகை விழி நோய்களுந் தீரும்.

---

## 21. திரிபலாதி கஷாயம்

திரிபலைகள் விரைபோக்கியோர் வகைச்
சேர் முக்காலெட்டுசேர் தண்ணீர்விட்டதில்
லொரு நாள்வைத்ததை மறுநாளெரி தீப
மோய்ந்திடாமல் இறுத்திரு சேராதாய்
திரிபலையின் கஷாயம் விழியதைச் சிறுகவே
கழுவில் பல நோய்கள் போம்
பருகிலந்த கஷாயத்தைக் கொஞ்சமாம்
பறந்துபோகும் காமாலையின்நோய்களே. (௬௫)

நோயெனும் முகரோகங்கள் வந்துடில்
நுவலுவே னக்கஷாயத்தில் கொஞ்சமாய்
வாயிலிட்டுடன் கொப்பளித்தேயுமி
வாங்கிப்போம் வறுவான முன்னேயது
தீய நோயினைத்தீர்க்கும் ஸஞ்சீவியாம்
திவ்ய பாவ ப்ரகாசக்ரந்தத்தை
ஆய்ந்துலகிற்குதவி செய்தற் தஞ்சை
யரசர் கோன் சரபேந்திர பூபனே. (௬௬)

(இ—ள்)

| | | |
|---|---|---|
| கடுக்காய்த்தோல் | $\frac{3}{4}$ | சேர் |
| நெல்லி வற்றல் தோல் | $\frac{3}{4}$ | ,, |
| தான்றிக்காய்த்தோல் | $\frac{3}{4}$ | ,, |

இவைகளை யிடித்து 8 சேர் தண்ணீர் விட்டு, ஒரு நாளூற வைத்து மறு நாள் அடுப்பின் மேலேற்றித் தீபம் போலெரித்து 2 சேராகும்வரை வற்றவைக்கவும். பின்பு, இதைத்துணியில் வடிக்கட்டிக்கொண்டு ஷை கஷாயத்தினால் கண் விழிகளைக் கழுவவும் இதையே பருகிவரக் காமாலையுந் தீரும். வாயிலுண்டாகும் நோய்களுக்கு இக்கஷாயத்தினால் வாயைக் கொப்பளிக்கச்செய்யவும். மேலும் இது எல்லா ரோகங்களுக்கும் ஸஞ்சீவி போலாகும்.

---

## 22. வாஸாதி கஷாயம்

ஆடாதோடையிலை சுக்கு பேய்புடல்
ஆண்டு நூறதுவான வேம்பின்பட்டை
பாடாசீந்தில்கொடி தோலை நீக்கியே
வளர் மரமஞ்சள் கோரைக்கிழங்குடன்
காடாம் சித்திரமூலம் செஞ்சந்தனம்
கடுகுரோகிணிப் பூவேம்பு திரிபலை
தேடாய் வெட்பாலைப் பட்டையதின் விரை
திறமதாய்சம னாகவிடித்திடே. (௫௭)

இடித்ததூளோர் பலமா யெடுத்ததி
லிருசேர்தண்ணீ ரளந்திட்டு தீபம்போல்
அடுத்தெரித்ததை கால்சேரதாகவே
அளவுடனாடா தோடைக் கஷாயத்தை
குடித்திடு மைசாக்குக்கில் கொஞ்சம்சேர்
குணமதாகும் நேத்திரவாத ரோகங்கள்
கடுத்தவாதமும் காங்கை மிஞ்சியே
கைகள் பிடிப்பது வாகிலே. (௫௮)

ஏகவந்தக் கஷாயத்தி லேரண்டத்தெண்ணெ
யொன்று வராகனெடை சேர்த்துப்
பாகமைந்து பணவெடைத் தாளகபற்பம்
சேர்த்துக் குடித்திடத் தீர்ந்திடும்

வேகமிஞ்சில் கஷாயத்தில் கற்கண்டு
விருப்பமாய் நான்கு காசெடை தாளகம்
ஆகும் பற்பம் பணவெடை அஞ்சதா
யதிலிட்டே குளிராறப் பருகிடே. (ருசு)

பருகவே பித்தந் தீர்ந்திடுந் திண்ணமாய்
பாதகக் கபம் மிஞ்சிடில் கேளினி
அரைவராக னெடை யெடுத்துத் திப்பிலிக்
கஷாயந்தன்னி லரைத்திட்டபின்
அருமையாய்ச் சுண்டவைத்துக் குடித்திட
அகலும் பாவப்ரகாச முறைதனே
உரிமையாய்வெகு பேருக்குதவியாய்
உரைத்திட்டர்சர பேந்திரபூபனே. (சய)

(இ-ள்)

| | |
|---|---|
| ஆடாதோடையிலை | சுக்கு |
| பேய்ப்புடல் | மாமஞ்சள் |
| தோல் நீக்கிய சீந்தில்கொடி | நூறுவயதான வேப்ப மரத்தின்பட்டை |
| கோரைக்கிழங்கு | சித்திரமூலம் |
| செஞ்சந்தனம் | கடுகுரோகிணி |
| வேப்பம் பூ | திரிபலை |
| வெட்பாலைப்பட்டை | வெட்பாலையரிசி |

இவைகள் எல்லாம் வகைக்கு 1 பல மெடுத்துத் தண்ணீர் 2 சேர் விட்டு, அடுப்பின்மேலேற்றித் தீபம்போல எரித்துக் கால் சேராக்கி, வடிகட்டி, சுத்தி செய்த மைசாக்ஷி குக்குளு சிறிது கூட்டிச் சாப்பிடவும். நேத்திரவாத ரோகங்கள் தீரும்.

இக்கஷாயத்துடன், ஒரு வராகனெடை ஆமணக்கெண் ணெய் சேர்த்து, 5 பணவெடை தாளக பஸ்பம் சேர்த்துக் குடிக்கவும். தேக காங்கை, கைகால் பிடிப்பு முதலிவைகள் தீரும்.

இக்கஷாயத்துடன் கற்கண்டு 4 காசெடையும், தாளகபற் பம் 5 காசெடையும் போட்டு, நன்ருக ஆறியபின் குடித்திடப் பித்த ரோகங்கள் தீரும்.

இக்கஷாயத்துடன், திப்பிலி $\frac{1}{2}$ வராகனெடை கூட்டி நன்ருக அரைத்துக் குழப்பி மறுபடியும் அடுப்பின் மேலேற் றிச் சுண்டவைத்துக் குடிக்கவும். பலவித கொடூரமான கப ரோகங்களுந் தீரும்.

## 23. பில்வாதி நேத்திர பிந்து

பில்வம் முன்னை சிறுவாகை பாதிரி
விளங்குகின்ற முருங்கையும் வஜ்ஜிர
வல்லியும் குமிழ் கண்டங்கத் திரியின்வேர்
வகை கஷாயம் ஈராரு துளி கண்ணில்
சொல்லாச் சோதனம் செய்வாத பிஷ்யந்தம்
தொலையும் பாவப்ர காசத்திலிம்முறை
நல்லவர் புகழ் மால் சரபேந்திரன்
நாகரிகன் நலமாயுரைத்தடுத. (சக)

(இ–ள்)

| | |
|---|---|
| வில்வம் | முன்னை |
| சிறுவாகை | பாதிரி |
| முருங்கை | பிரண்டை |
| குமிழ் | கண்டங்கத்திரிவேர் |

இவைகளையிடித்து 4 பங்கு ஜலம் விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சவும். ஒவ்வொரு கண்களிலும் 12 துளிகள் வீதம் விட்டுவர, வாதாபிஷ்யந்தந்தீரும்.

---

## 24. கொட்டையிலைக் கஷாயம்

கொட்டையிலையதின் வேரின் பட்டையும்
கூட்டிடாய் சமனுயதற்குமே
எட்டுப் பங்கு வெள்ளாட்டுப்பாலுமே
யிதினிற்பாதி தண்ணீர் விட்டே

விட்ட நீருமே சுண்டெரித்தபின்
மிஞ்சுபால் வடிக்கட்டியே
திட்டமாயிளம் சூடதாகவே
திறமதாம் பீச் சாங் குழலிடே. (சஉ)

இட்டுமே சிறு தாரையாகவே
ஹிதமுடன் கண்மேல் பீச்சிட
துட்டவாத பிஷ்யந்தமானது
தொலைந்து போமிதில் தப்பிடா
கொட்டையிலையின் கஷாயமாமிது
கூறும் பாவப்ரகாசத்தில்
திட்டமாய் தமிழ் பாவினங்களாய்
செய்திட்டார் சரபேந்திரனே. (சங)

(இ-ள்)

ஆமணக்கிலை, ஆமணக்கின் வேர்த்தோல் இரண்டுஞ் சமனாக யெடுத்து வெள்ளாட்டுப்பால் 8 பங்கு விட்டுக்கொண்டு, தண்ணீர் 4 பங்கும் விட்டு, அடுப்பின் மேலேற்றி நீர் சுண்ட எரித்து, மிகுந்துள்ள பாலை வடிக்கட்டிக்கொள்ளவும். இதை இளஞ்சூடாக இருக்கும்போது ஒரு கண்ணாடி பீச்சாங்குழலில் விட்டு, சிறு தாரையாக, வேகமன்னியில் கண்களின்மேல் பீச்சவும். வாத அபிஷ்யந்தம் தீரும்.

---

## 25. ஆச்சோதன விதி

ஆச்சோதன விதிதனை மேன்மையா
யரைகிறேன் புவியோர்களறியவே
காய்ச்சும் பாலிலைச் சாறுகளெண்ணெயும்
கஷாயமும் கண்விரித்து நிறையவே
பாச்சில் மேலுமிரண்டு விரட்கடை பாவ
நூறு நொடி நேரம் வைத்திடே
ஆச்சரியமாம் பாவப்ரகாசத்தி லரைந்
திட்டார் சரபேந்திர பூபனே. (சச)

(இ-ள்)

ஆச்சோதனஞ் செய்யவேண்டிய முறை:—

காய்ச்சியபால், இலேச்சாறு, எண்ணெய் வகை, கஷாயம் இவைகளைத் தனித்தனியாக எடுத்து, கண்களை அகல விரித்து அண்ணார்ந்தபடி, இரண்டு விரற்கடை நிற்கும்படி ஊற்ற வும். இம்மாதிரி 100 விநாடியளவும் நிற்கச் செய்யவும்.

குறிப்பு- கண்களைச்சுற்றிலும் உளுத்தமாவினால் 2 விரற்கடை உயரம் புறவளையம் இட்டு, அதில் நிறப்பவும்.

---

## 26. நேத்திர சிகித்ஸை முறை

இயம்பு லேகனக்கண்ணில் விடுகிற
யேத்துவார் துளி எட்டுமா ரோபணம்
நயம்பெற துளிபத்தாம் ஸ்நேஹனி
நற்துளி பன்னிரண்டென நாட்டினர்
சுவயம்பெனும் கசப்பானதை விட்டிடத்
தொலையும் வாதத்திலாம் வெகு நோய்களும்
பயம் பெறும் பித்தரோக மதாகிடில்
பண்பு சீதள தித்திப்பு மாகுமே. (சரு)

ஆகு மெண்ணெய்ப்பசை யுள்ளதானதும்
அதிகமாய் கபரோக மதாகிடில்
போகவே கசப்பானதும் உட்டிணப்
பொடிகளானது போட்டிடத் தீருமே
வேகமானதுக் கேயிடு சீதளம்
விளையுஞ் சீதளமானதுக் குட்டிணம்
யேக பாவப்ரகாசத்தின் முறை
யியம்பினர் சரபேந்திர பூபனே. (சசு)

(இ-ள்)

கண்களுக்குள் மருந்தை 8 துளிவீதம் விட அது "லேக னம்" ஆகும். பத்துத்துளி விட்டால் அது 'ஆரோபண' மாகும். 12 துளிகள் விட்டால் "ஸ்நேஹனி" யாகும். கசப்

புப் பதார்த்தங்களை ஊற்றினல் வாத ரோகங்கள் பலவுந் தீரும். பித்த ரோகங்களானல் தித்திப்புச் சுவையும், குளுர்ச்சியுமுள்ள எண்ணெய் வகைகளைக் கண்களிலிடவும். கபரோகங்களானல், கசப்புச் சுவையும், உஷ்ணமானதுமான பொடி வகைகளைப் போடவும். மேலும், சீதள ரோகங்களுக்கு உஷ்ண சிகித்ஸையும், உஷ்ண ரோகங்களுக்கு சீதளச் சிகித்ஸையுஞ் செய்தல் வேண்டும்.

---

## 27. பிண்டகரண விதியும், அபிஷ்யந்த சிகித்ஸையும்

பிண்டகரண விதியினைப் பேசுவோம்
பெருமை யொத்திடு மாச்சோதனத்தினல்
கண்டிப்பாய்க் கண்ணின் நோயது தீர்ந்தபின்
கருத்துடன் செய்யுங் காரியம் கேள் நீ
பண்டுசெய்து சிகித்ஸைகள் விட்டுமே
பண்பாய் ஆமணக்கின் வேரும் பட்டையும்
கொண்டுவந்தே யதனின் கொழுந்துடன்
கூட்டிடாய் சமனய் ஆட்டின் பால் விடே. (சஎ)

வேகவைத்ததைப் பொட்டணம் கட்டியே
விழியதற்கு நீ யொத்திடக்கேள் வகை
பாகமா யிளம்சூடது வாகவே பண்பாய்
வேண்டிய போதெல்லாம் போட்டிடப்
போகும் வாதாபிஷ்யந்த நோயானது
புகலுவேன் மத்தோரொத்திடம் கேள்வன
தாகும் நெல்லிக்கொழுந்தந்தவேர் பட்டை
யதனை முன்விதமாகவே செய்திடே. (சஅ)

செய்து ஒத்தடம் போட்டிடத் தீருமே
தீங்காம் பித்தாபிஷ்யந்த நோயானது
கொய் முருங்கைக்கொழுந் தவ்வேர்ப் பட்டை
கூட்டியே முதலொத்தடம் போட்டிட

ஜயபிஷ்யந்தம் போகும் திரிபலையதனு
லொத்தடத்தால் வெகு நோய்கள் போம்
பொய்யில்லா நல்ல பாவப்ரகாசத்தில்
புகழ்ந்திட்டார் சரபேந்திர பூபனே. (சகூ)

(இ-ள்)

பிண்டகரணம் என்பதாவது:—

ஆச்சோதத்தினுல் கண்ணோய்கள் நீங்கியபின் சிகித்ஸைகளை நிறுத்தவும். ஆமணக்கின் வேரையும், பட்டையும், கொழுந்தும் சமனுகக் கொண்டுவந்து, ஆட்டுப்பால் விட்டு அடுப்பின் மேலேற்றி வேகவைத்து, ஒரு துணியில் பொட்டணமாகக்கட்டி விழியில் ஒத்திடவும். இளஞ் சூடாக யிருக்கையில் எவ்வளவு தடவை ஒத்தடமிடமுடியுமோ அவ்வளவு இடவும். வாதாபிஷ்யந்தந் தீரும்.

நெல்லிக் கொழுந்து, அதன் வேர், பட்டை, முதலியவைகளை முன்போல, ஆட்டுப்பால் விட்டு வேகவைத்துக் கண்களிலொத்தடமிடவும், பித்தாபிஷ்யந்தந் தீரும்.

முருங்கைக் கொழுந்து, அதன் வேர், பட்டை முதலியவைகளை முன்போல ஆட்டுப்பால் விட்டு வேகவைத்துக் கண்களிலொத்தடமிடவும். கபாபிஷ்யந்தந் தீரும்.

கடுக்காய், நெல்லிவற்றல், தான்றிக்காய் இவைகளின் தூளை, ஆட்டுப்பாலில் வேகவைத்து மூட்டையாகக் கட்டி ஒத்தடமிடவும். பலவித நோய்களுந் தீரும்.

---

## 28. திரிபலாதி ஒத்தடம்

திரிபலை சமனுக யிடித்துமே சேர்த்திடாய்
ஆட்டின் பாலினில் பின் கொஞ்சம்
பருவமாக அதைச் சுடவைத்து நீ பகரும்
முன் பொடி அதனிலே ஊறவைத்து
உரிமையாகவே பொட்டணங் கட்டியே
உபாயச்சூடதாய்ப் போடபிஷ்யந்தம் போம்
அருமை பாவப்ர காசத்திலிம் முறை
அறிந்துரைத்தார் சரபேந்திர பூபனே. (ரு௰)

(இ-ள்)

கடுக்காய்த் தோல், நெல்லிக்காய்த் தோல், தான்றிக் காய்த்தோல், இவைகளைச் சமமாக எடுத்து இடித்து ஆட்டுப் பால் விட்டுக் கலந்து, அடுப்பின் மேலேற்றிச் சுடவைத்து, மேலும் கொஞ்சம் தூளைப் போட்டு ஊறவைக்கவும் இதை யொரு வெள்ளைத் துணியில் பொட்டணமாகக் கட்டி சூடு உபாயமாக இருக்கையில் கண்களி லொத்தடமிடவும். அபிஷ் யந்த நோய்கள் போம்.

---

## 29. பத்துப் போடும் முறை

பத்துப் போடும் விதியைப் பகரக்
கேள்பண்பு காலங்குலம் கனிஷ்ட
பத்தே உத்தம பத்தகும் அரைவிரல்
உயரமாகும் என்றே நீயுரைத்திடு
மத்திமபத்து மூன்றதொன்றே விரல்
வண்மையாங் கனமாகவே யிட்டது
சுத்தமாக உலர்ந்த பின் பத்தினை
சுருக்குடன் கண்ணை விட்டுமே நீக்கிடே. (கூக)

(இ-ள்)

**பத்துப் போடும் முறையாவது:—**

¼ (விரற்கிடை) அங்குல உயரம் வரும்படியாகப் பத்தைப் போட்டால் அது உத்தமமான பத்தாகும். ½ விரற்கிடை உயரமுள்ள பத்தாகில் அது மத்தியமமான பத்தாகும், மூன்றுவதானது ஒருவிரல் கனமுள்ள பத்தாகும். இவைகளைப் போட்டு நன்ருக உலர்ந்தபின் இதைச் சீக்கிரமாக கண்களி லிருந்து நீக்கிவிடவும்.

நீக்காவிட்டால் தசை நொந்து கேடதாம்
நீர் வத்த அது காய்ந்திடா முன்னமே
போக்கிட்டாலும் விழி நோய்கள் தீர்ந்திடா
புத்தியாலிதைக் கண்டு வைத்தியம்
நோக்கி பாவப்ரகாசத்தி லிம்முறை
நுண்மையாயுரைத்தாரே உலகினில்
பாக்யமிகும் யோக்கியசாலியாம்
பார்த்திபன்சர பேந்திர பூபனே. (கூஉ)

(இ-ள்)

பத்தை நீக்காவிடில் தசை நார்கள் நொந்து கெட்டுவிடும், நீர் வற்றுவதற்கு முன்னமேயே எடுத்துவிட்டால் விழி நோய்கள் தீராது. ஆகவே வைத்தியன் தன் சுய புத்தியினுலிதைக் கண்டு வைத்தியஞ் செய்ய வேண்டும்.

---

## 30. நேத்திர ரோகத்திற்குப் 'பத்து வகைகள்'

அதிமதுரமிந்துப்பு மரமஞ்சளாகும்
காவிக்கல் அஞ்சனக் கல்லுடன்
இதுசமனுகத் தண்ணீர்தனில் அரைத்
தேதுவாய்க் கண்ணைச் சுத்திப் பத்திட
இதுவலால் வேறு பத்தையியம்புவேன்
எடு மரமஞ்சள் சுக்கு வசம்புடன்
புதியதாய்ஜலத் தாலேயரைத்திதைப்
பொடியாய் விழிதன்னில் வளையமே. (ருரு)

வில்வத்தின் கொழுந்தும் அஞ்சனக்கல்லுடன்
விரை நீக்கி கடுக்காய் சமன் தண்ணீரால்
கல்வத்திலரைத்திட்டே மிருதுவாய்
கண்ணைச் சுத்தியே பத்தது போட்டிட்க்
கல்லுக்காவியும் சுக்கும் சமன் தண்ணீர் கலந்
தரைத்துப் பத்திட விழி நோய்கள் போம்
வல்லவர் புகழ் மால்சரபேந்திரன்
வழுத்தும் பாவப்ரகாச முறையிதே. (ருசு)

(இ-ள்)

(i) அதிமதுரம் — இந்துப்பு
மரமஞ்சள் — காவிக்கல்
அஞ்சனக்கல்

இவைகளைச் சமமாக வெடுத்து நன்ருகத் தண்ணீர் விட்டரைத்துக் கண்களைச் சுற்றிலும் பத்துப் போடவும்.

(ii) மரமஞ்சள் — சுக்கு
வசம்பு

இவைகளையுஞ் சமமெடுத்துத் தூள் செய்து தண்ணீர் விட்டு நன்ருக வரைத்துக் கண்களைச் சுற்றிலும் பத்துப் போட வும்.

(iii) வில்வக் கொழுந்து அஞ்சனக்கல்.
கொட்டை நீக்கிய கடுக்காய்

இவைகளைச் சமபாகமெடுத்துத் தண்ணீர் விட்டு நன்ருக மிருதுவாகும்படி அரைத்து விழிகளைச் சுற்றிலும் பத்தாக இடவும்.

(iv) காவிக்கல் சுக்கு

இவ்விரண்டையும் சமமெடுத்து, பத்துப் போடப் பற்பல விழிநோய்களுந் தீரும். இந்நான்கு மருந்துகளில் எது கிடைக் கின்றதோ அதைப் பிரயோகிக்கவும்.

---

# 31. இரத்தினுதி மாத்திரை

சீலநிரை மாணிக்கம் முத்து நீலம் பச்சை செம்பவழம் [வைடூரியம்
சேர்ந்த் கோமேதகம் புஷ்பராகம் வைரம் சிறந்திடும் [தங்கம், வெள்ளி
செந்தாம்பிரமிவ்வகை மூன்றினரப்பொடி காந்தம் [சீருள துத்தநாகம்
சலித்திடும் கலங்கொம்பு யானைப் பல் மாட்டுப் பல் [சப்பெருமை மாட்டுப் பல்லும்

கோலமிகு நற்காட்டுப் பன்றிப்பல் லாட்டுப்பல் குளம்பு [சங்காமையோடு
கோதிலாப் பலகரை மடல் துத்தம் இந்துப்பு குண [முள்ளநீலாஞ்சனம்
கரிய மனேசிலை திப்பிலி படிக்காரம் கொங்கேலம் மிளகு [சுக்கு
குறித்திடும் புன்னைவிரை வகைக்கொரு வராகனெடை கூட்டியே கல்வமதினில்

சாலநல் லெல்லுமிச்சம் பழச்சாறு விட்டதை சட்டமுட
[னேயரைத்து
சந்தமுள ரத்னுதி மாத்திரைகள் சேர்த்தரை சரஸமுட
[னேயரைத்து
சாந்தமுட னேயதைக் கண்ணினில் போட்டிடில் சார்ந்தமுன்
[திமிரமமரம்
சஞ்சலம் செய்காசம் நீர்முட்டல் சுக்கிரன் சகல விழிநோய்
[தீருமே
வேலணீ உல்லாச விழிவாமி அபிராமிநல் வேதனுரை ஆதி
[கௌரி
வீணை யிசைவாணி பணிவாணி ஜராணி அளிவேணி சிவகாமி
[நிமலி
வீரி கௌமாரி மகிழ் ஈசர்பதமேதுதிசெய் வீசுபுகழ்
[போசலகுலன்
வேந்தர்கள் சிகாமணி சரபேந்திர பூபதி விர்ப்பனன் உரைத்த
[முறையே.

(இ—ள்)

| | |
|---|---|
| மாணிக்கம் | முத்து |
| நீலம் | பச்சை |
| பவழம் | வைடூரியம் |
| கோமேதகம் | புஷ்பராகம் |
| வைரம் | தங்கப்பொடி |
| வெள்ளிப்பொடி | தாமிரப்பொடி |
| காந்தம் | துத்தநாகத்தூள் |
| மான்கொம்பு | யானைப்பல் |
| மாட்டுப்பல் | எருமைமாட்டுப்பல் |
| காட்டுப்பன்றிப்பல் | ஆட்டுப்பல் |
| ஆட்டுக்குளம்பு | சங்கு |
| ஆமையோடு | சோழி |
| மடல்துத்தம் | இந்துப்பு |
| நீலாஞ்சனம் | மனோசிலை |
| திப்பிலி | படிக்காரம் |
| ஏலக்காய் | மிளகு |
| சுக்கு | பொன்னுவாரை விரை |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து நன்றாக இடித்து, வஸ்திரகாயஞ் செய்து கல்வத்திலிட்டு, எலுமிச்சம்பழச்சாறுவிட்டு நன்றாக அரைத்து (4 ஜாமங்கள்)

மாத்திரையாகத் திரட்டவும். இதை (12 வருடங்கள் சென்ற பின்) தாய்ப்பாலிலரைத்துக் கடுகளவு இரு விழிகளிலும் போட்டிடத்

| | |
|---|---|
| திமிரம் | அமரம் |
| காசவகை | நீர்முட்டல் |
| சுக்கிரன் | |

முதலிய பற்பல விழிநோய்களுந் தீரும்.

---

## 32. கனக தாம்ராதி மாத்திரை

தங்க அரப்பொடி இரண்டேயவ் விராகனெடைதான் வெள்ளி
[யரப் பொடியுமே,
தப்பாமல் ஈரிரு வராகனெடை பதினுறு தாம்பிரத்தினரப்
[பொடி
தங்கு திப்பிலி வராகனெடை இருமூன்ரேடும் தன்மையா
[மிந்துப்பதுத்
தரு வராகனெடை இருநான்கு மடத்துத்தமும் தனிவராக
[னெடை பத்தே
அங்கந்த கோட்டமும் வராகனெடை பன்னிரண்டு அதிமதுர
[மீரேழுமே
யாமவ் வராகனெடை இவ்வகைகளெட்டும் வெள்ளாட்டுப்
[பாலினில்
நயமதாயரைத்துத் தாம்பிரப் பாத்திரத்தினில்தடவி வைத்த
[கனக தாம்ராதி
யானதொரு மாத்திரை செய்து கண்ணில் போடில் அமரம் நீர்
[முட்டல் படலம்.

பொங்கியெழு சுக்கிரன் காசவெழு பில்லமும் பொல்லாத
[திமிரமேழும்
பொருந்தா தகன்றுபோம் பருதிமுன் பனியைநிகர் பூபதிகள்
[கொண்டாடவே
பூஸுரர்கள் சங்கமகிழ்ந் திண்டன்னதானமும் பூதான
[கோதானமும்
புகழ்ந்தின்றும் கன்னிகா தானமும் நிதானமும் போஜ
[மகாராஜ னெனவே

பங்கய மென்றதை நிறையிங்கிதநயங் குலவுபண்புள புயம்
[குலவுமால்
பந்துஜன சேகரன் ஸகலஜனரக்ஷகன் பாவலர்கள் சிந்
[தாமணி
பல கங்கை நதியாடி வருநல்ல புண்யவான் பரமசிவனருள்
[கிருபையால்
பாங்குபெரு தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி பார்த்திப
[னுரைத்த முறையே.

(இ-ள்)

| | | | |
|---|---|---|---|
| தங்க அரப்பொடி | — | 2 | வாரகனெடை |
| வெள்ளியரப்பொடி | — | 4 | ,, |
| தாம்பிரப்பொடி | — | 16 | ,, |
| திப்பிலி | — | 6 | ,, |
| இத்துப்பு | — | 8 | ,, |
| மடல் துத்தம் | — | 10 | ,, |
| உயர்ந்த கோட்டம் | — | 12 | ,, |
| அதிமதுரம் | — | 14 | ,, |

இவைகளைத் தூள்செய்து கல்வத்திலிட்டு, வெள்ளாட்டுப்பால்விட்டு, நன்ருக அரைத்துத் தாமிரப் பாத்திரத்தில் தடவிவைத்துப் பத்து நாட்கள் கழித்து, அதையெடுத்து மறுபடியும் நன்ருக 4 ஜாமங்களரைத்து மாத்திரையாகத் திரட்டிக் கொள்ளவும். இதை (6 வருடங்கள் சென்றபின்) தண்ணீரிலிழைத்துக் கண்களிலிட

| | |
|---|---|
| அமரம் | நீர்முட்டல் |
| படலம் | சுக்கிரன் |
| பில்லம் | ஏழுவகைத் திமிரம் |

இவை சூரியன் முன் நின்ற பனியைப்போல் தீரும்.

---

## 33. நாரிகேளாஞ்ஜனம்

அந்தமா மஞ்சள்தான் றிக்காய்க டுக்காய்நல் அதிமதுரம்
[நெல்லி முள்ளி
யவ்வகைகள் ஒன்றினுக் கோர்பலம் சேர்த்தெல்லாம் அரைத்
[திள நீரிலிருசேர்
இந்தவித மேகலந் தேநாளி ரண்டெரித் தேநான்கு பங்கி
[லொன்ருய்
யிறக்கிப் பிசைந்தபின் வடிக்கட்டி மறுநாளும் எரித்திடதை
[நாலிலொன்ருய்

கந்தந்த ரும்பச்சைக் கர்ப்பூர மோர்வராக னெடையிந் துப்பு
[நிறைகள்
கணக்கரை வராகனெடை பொடிசெய்தி ரண்டோடும் கால்
[பலம் தேன்விட் டெலாம்
சந்தநிறை நாரிகே ளாஞ்ஜனம் சேர்த்திடில் சார்ந்த விழி
[நோய் தீருமே
சங்கரர் பதம் துதிசெய் சரபேந்திர பூபதி சட்டமொடு
[சொன்ன முறையே.

(இ-ள்)

மரமஞ்சள் தான்றிக்காய்
கடுக்காய் அதிமதுரம்
நெல்லி முள்ளி

இவை வகைக்கு 1 பலம் எடுத்து, எல்லாவற்றையும் 2 சேர் இளநீர் (செவ்விளநீர்) விட்டு நன்ருக வரைத்துக் கலந்து அடுப்பின்மேலேற்றி 2 நாளேக்கு எரித்து நான்கிலொன்ருகச் சுண்டியபின், அதை நன்ருகக் கசக்கிப் பிழிந்து, வடிகட்டி, மறு நாளும் நாலிலொன்ருகக் காய்ச்சவும். இது குழம்பு பதமாகிய பின் பச்சைக்கல்பூரம் 1 வராகனெடை, இந்துப்பு ½ வராக னெடையு மெடுத்துப் பொடி செய்து, தேன் ¼ பலமும் விட்டு, எல்லாவற்றையும் கல்வத்திலிட்டு நன்ருக அரைத்துத் துணி யில் வடிக்கட்டிக் கொண்டு ஒரு கடுகளவெடுத்துக் கண்களி லிடப் பலவித கண்ணேய்களுந் தீரும்.

---

## 34. சுநேத்திர மாத்திரை.

அந்தமிகு பீதரோ கிணீ யொருவராக னெடை அத்துத்தம்
[முன்னிடைகளே
ஆனநீ லாஞ்ஜனம் லோத்திரம் மரமஞ்சள் அணிகாவி பொன்
[காவியும்
அக்கொம்ப ரக்குசெஞ் சந்தனம் சந்தனம் அதுவலா
[மல்வசம்பு
அவ்வகைகள் ஒன்றினுக்கோரிரு வராகனெடை அதிமதுரம்
[இந்துப்பு மேல்

வந்ததாம் பரப்பொடி சங்குசீ ணுக்காரம் வளமைபெறு
[தாமரைவிரை
வன்புங்கை விரையிவ்வ கையொன்றினுக் கோர்மூன்று
[வைத்திடு வராகனெடையே
வாலுளுவை யரிசிதிப் பிலிமிளகு சுக்கினெடு வாய் விடங்கம்
[கடுக்காய்
வரிசையுள நெல்லிப்ப ருப்புதான் றிக்காயிவ் வகையொன்
[றினுக்கு நிறைகேள்.

ஸந்ததம், நான்கது வராகனெடை சேர்புங்கஞ் சாற்றினி
[லரைத் தெடுத்தே
சட்டமாய் சுனேத்திரநல் மாத்திரைகள் செய்ததை சாந்த
[முடனே யுரைத்து
ஸரஸமுள நயனமதில் வயணமுட னேபோட சார்ந்தமுன்
[திமிரமமரம்
சகியாத சுக்கிரன் நீர்முட்டல் பூகாசம் சலித்திட வருத்து
[யரிவும்
பந்தமோ டெழுந்திடும் தழுப்புவீக் கம்தினவு படல
[நற்தசை வளர்த்தி
பகர்ந்திடும் மாலைக்கண் நோயெலாந் தீருமே பரமசிவனருள்
[கிருபையால்
பலகோடிபூஸுரர்க் கன்னசத் திரமிளகு பாக்ய நிறை சிந்
[தாமணி
பார்த்திபன் கீர்த்திபெறு சரபேந்திர பூபதி பண்பாயு ரைத்த
[முறையே.

(இ-ள்)

| | | | |
|---|---|---|---|
| பீதரோகிணி | — | 1 | வராகனெடை |
| துத்தம் | — | 1 | ,, |
| நீலாஞ்சனம் | — | 2 | ,, |
| வெள்ளிலோத்திரம் | — | 2 | ,, |
| மரமஞ்சள் | — | 2 | ,, |
| காவிக்கல் | — | 2 | ,, |
| பொன்காவி | — | 2 | ,, |
| கொம்பரக்கு | — | 2 | ,, |
| செஞ்சந்தனம் | — | 2 | ,, |
| சந்தனம் | — | 2 | ,, |
| வசம்பு | — | 2 | ,, |
| அதிமதுரம் | — | 3 | ,, |
| இந்துப்பு | — | 3 | ,, |

| | | | |
|---|---|---|---|
| தாமிரப்பொடி | — | 3 | வராகனெடை |
| சங்கு | — | 3 | ,, |
| சீனக்காரம் | — | 3 | ,, |
| தாமரை விரை | — | 3 | ,, |
| புங்கம் வித்து | — | 3 | ,, |
| வாலுளுவையரிசி | — | 4 | ,, |
| திப்பிலி | — | 4 | ,, |
| மிளகு | — | 4 | ,, |
| சுக்கு | — | 4 | ,, |
| வாயுவிடங்கம் | — | 4 | ,, |
| கடுக்காய் | — | 4 | ,, |
| நெல்லிப்பருப்பு | — | 4 | ,, |
| தான்றிக்காய் | — | 4 | ,, |

இவைகளை யொன்றுசேர்த்துக் கல்லுரலிலிட்டிடித்துத் தூள்செய்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, கல்வத்திலிட்டுப் புங்கம்பட்டைச் சாற்றினலரைத்து (3 நாள்) சுழியில்லாமல் மாத்திரை திரட்டிக்கொள்ளவும். இம்மருந்தை உள்ளங்கையில் கடுகளவு வைத்துத் தண்ணீரினல் குழைத்தாலதில் திப்பி இருக்கக்கூடாது. அதை 6 மாதஞ் சென்றபின் தண்ணீரிலிழைத்துக் கண்களிலிடத்

| | | |
|---|---|---|
| திமிரம் | அமரம் | சுக்கிரன் |
| நீர்முட்டல் | பூ | காசம் |
| தழும்பு | வீக்கம் | தினவு |
| படலம் | தசைவளர்ச்சி | மாலைக்கண் |

முதலிய பலவித நோய்கள் தீரும்.

---

## 35. தாம்பிராதி மாத்திரை

சட்டமுள தாம்பிரத் தரப்பொடி வராகனெடை சார்ந்திடும் [பன்னிரண்டாம்
சங்கது வராகனெடை ஓராரு சுக்குமே சரியொரு வராக [னெடையே
சாரமுயர் திப்பிலி வராகனெடை பத்துநற் சாந்தமிகும் [அதிமதுரமும்
சாலவும் பன்னிரு வராகனெடை மெத்தவும் சதிராங்கடுக [ரோகிணி

திட்டமாய் ஆரவ்வ ராகனெடை கோட்டமும் திகழவிந்
[துப்பும் தந்தமுந்
தேறியே வராகனெடை வகையொன்றி னுக்கைந்து சேர்த்தி
[டெலும்மிச் சம்பழத்தின்
சாறுவிட் டரைத்தெடுத் துத்தாம்பி ரத்தின்பாத் திரத்தினுள்
[தடவி வைத்து
திரும்பவும் யெடுத்தரைத் தெழுமூன்று நாளுமே தினந்தினந்
[தடவி வைத்து
மட்டுடன் தாம்பிராதி மாத்திரைகள் செய்திதை மலர்
[விழியி லேபோட்டிடில்.

மறுவுதசை வளர்த்திநீர் முட்டல்சுக் கிரனமரம் மதத்திமிர
[மொடு படலமும்
மார்த்தாண்டன் முன்வரும் பனியைநிகர் தீருமே மகிழ்ச்சி
[மிக வுண்டாகுமே
மகிமைபெறுந் தன்வந்திரி சாத்திரத் தின்வழிகள் மதிதனில்
[உணர்ந்து நன்ருய்
இட்டமுட னேதஞ்சை மேவுபெரு வுடையீசர் இருபாத
[பூஜையதனல்
இங்கிதம் இணங்குநல் சங்கமகிழ் சங்கமதிக் கிங்கிதக் குணங்க
[ளுயர் சொல்
லிலங்குபிர சங்கம்செய் மன்னவர் சிகாமணி யெழில்போசல
[குலதிலகன்
எங்கள் துளசேந்திரனருள் சரபேந்திர பூபதி இன்பமொடு
[சொன்ன முறையே.

(இ-ள்)

| | | |
|---|---|---|
| தாமிரத்தூள் | 12 | வராகனெடை |
| சங்கு (சுட்டது) | 6 | ,, |
| சுக்கு | 1 | ,, |
| திப்பிலி | 10 | ,, |
| அதிமதுரம் | 12 | ,, |
| கடுகரோகிணி | 6 | ,, |
| கோஷ்டம் | 5 | ,, |
| இந்துப்பு | 5 | ,, |

இவைகளை யொன்றுசேர்த்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ்செய்து, கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறுவிட்டு நன்ருக அரைத்து ஒரு தாம்பிரப் பாத்திரத்தினுள் தடவி வைத்து திரும்பவுமரைத்து, மறுபடியும் தாம்பிரப் பாத்திரத்தில் தடவி வைக்கவும், இம்மாதிரி 21 தடவை தினந் தினந் தடவி வைக்கவும், கடைசியில் இதை மாத்திரையாகத் திரட்டி நிழலிலுலர்த்தி வைக்கவும், தண்ணீரிலிழைத்துக் கடுகளவு கண்களிலிட

| | |
|---|---|
| தசைவளர்ச்சி | நீர்முட்டல் |
| சுக்கிரன் | அமரம் |
| திமிரம் | படலம் |

இவை தீரும்.

---

## 36. ரத்ஞதி மாத்திரை

பங்கமில மாணிக்க மும்பவள முத்துநற் பச்சையும்வை டூரியம்
[பெரு
மாட்டுப்பல் குதிரைப்பல் யானைப்பல் ஒட்டைப்பல் ஆட்டின்
[பல் பன்றியின்பல்
சிங்கமும் தங்கமும் சங்குடன் கடல்நுரை செம்மனே
[சிலைதுத்தமும்
செம்புடன் வெள்ளியிவை ஒவ்வொரு வராகனெடை தின்
[மிளகு இருகாசெடை
அங்கவெள் ளாட்டமுதம் விட்டரைத் துலர்த்தியே அப்பு
[விட் டேயரைத்தே
அதனைமாத் திரைசெய் சரபேந்திர பூபதி யருளிய ரத்தினதி
மங்கைபா லலதுபனை மட்டையின் சாற்றிலுரை வளமிளகு
[போற்கண்ணிடு
வளர்தசை படலமும் விரணசுக்கி ரன்காசம் வழுத்திமிரம்
[சூடுபோமே.

(இ-ள்)

| | |
|---|---|
| மாணிக்கம் | பவளம் |
| முத்து | பசசை |
| வைடூரியம் | மாட்டுப்பல் |

| | |
|---|---|
| குதிரைப்பல் | யானைப்பல் |
| ஒட்டைப்பல் | ஆட்டின்பல் |
| பன்றிப்பல் | தங்கப்பொடி |
| சுட்டசங்கு | கடல்நுரை |
| மனோசிலை | துத்தம் |
| செம்புத்தூள் | வெள்ளித்தூள் |

இவைகள் வகைக்கு ஒரு வராகனெடை மிளகு 2 காசெடை இவைகளைக் கல்வத்திலிட்டுத் தூள்செய்து வெள்ளாட்டுப்பால் விட்டு நன்றாக அரைத்து உலரவைக்கவும். மறுபடியும் இதைத் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்து மாத்திரையாகத் திரட்டி, நிழலிலுலர்த்தி முலைப்பாலிலோ அல்லது பனைமட்டைச்சாற்றிலோ இழைத்து மிளகளவெடுத்து இரு கண்களிலுமிடவும்.

| | |
|---|---|
| தசைவளர்ச்சி | படலம் |
| இரணசுக்கிரன் | காசம் |
| திமிரம் | சூடு |

இவைகள் தீரும்.

முற்றிற்று

# நயன ரோகங்களின் காரணங் களும், குறி குணங்களும்

(அகஸ்தியர் நயன விதி 500-ல் கண்டபடி கீழே செய்யுள் கள் கூறப்பட்டுப் பொருளும் கூறப்பட்டிருக்கிறது.)

## 1. அக்கரரோகம்

மெய்க்கரகரப்புக் கண்ணின் மேலிமை கனத்துப் புண்ணு
முக்கிரமாக நொந்து வூரிய நீரும் பாயுஞ்
சிக்கிருத்தினவும் பீளை சினந்திடு முகங்கடானு
மக்கர ரோகமென்று அறிவுள்ளோ ருரைத்த வாறே. (க)

(இ-ள்)

கண்களில் கரகரப்புடன், மேலிமைகளும் கனமாகிப் புண்களும் ஏற்படும். கண்களிலிருந்து நீர்வடியும். அரிப்பு, பீளை சேருதல், முகம் சிவந்து கோபக்குறியுடன் இருத்தல் முதலியவைகளேற்படும்.

## 2. அவிகாய விரணம்

செவிவாய் கண் மூக்குத்தினவுடன் சிவப்புண்டாகுங்
கவிதாக விழிக்கு மூடுங் கனத்திடும் பீளைகட்டுந்
தவிதாகவுறங்கவொட்டா நடுவிழி தன்னிற் குத்து
மவிகாய விரண மென்று அறிவுளோருரைத்தவாறே. (உ)

(இ-ள்)

காது, வாய், கண்கள், மூக்கு முதலிய இடங்களிலரிப் பேற்பட்டுச் சிவந்திருக்கும். கண்கள் தானக விழித்து மூடும். கெட்டியாகப் பீளை சாறும். இரவில் தூக்கம் வராது. விழி களில் குத்து வலியேற்படும். இக்குறிகளிலிருந்து ‘அவிகாய விரணம்’ என்று அறியவும்.

## 3. உக்கிர ரோகம்

சக்கரம்போலக் கண்ணிற்றடிப்புண்டாம் நீரும்பாயும்
வக்கரமாக மூட வலிதின வரிப்புண்டாகு
மிக்கரவொன்றை நோக்கில் மேதினி புகைந்து காட்டு
முக்கிர ரோகமென்று உரைத்தனர் தமிழ் வல்லோரே. (ங)

(இ-ள்)

கண்களைச் சுற்றிலும் சக்கரம்போல வட்டமான தடிப் புண்டாகும். கண்களிலிருந்து நீர் வடியும். கண்களை மூடினால், அவைகளில் வலி, தினவு, அரிப்பு இவைகளுண்டாகும். உருவங்கள் புகைந்தவாறு புலப்படும். இது 'உக்கிர ரோகம்' ஆகும்.

## 4. உடைந்தெழுகாசம்

அடைந்தெழும் பீளைகட்டு மதிகாமஞ் சிவப்புமீருங்
கடைதிடுங் கருவிபோலக் கடைக்கண்ணைக் குத்திவாங் [குங்
குடைந்திடும் நெற்றி காது குத்திடுமூசிதன்னி
லுடைந்தெழு காசமென்று வுரைத்தனர் தமிழ் [வல்லோரே. (௪)

(இ-ள்)

கண்களில் பீளை சேரும், சிவப்பும் ஏற்படும், கடைக்கண்களில் வலியேற்படும், (திருகிய வலி) நெற்றி, காது தலையுச்சி இவ்விடங்களில் குடைச்சலேற்படும்.

## 5. சாய்கண்குருடு

வாய்க்கண் மூக்கு நாக்கு வலமிட மிழுத்து நொந்து
காய் குணம் விழியும் நீருங் கடுகியே சிவந்து காட்டு
நோய்குண நீச்சியாக நொந்துதானழித் தீருஞ்
சாய் கண் குருடுவென்று சாற்றினர் தரணியோர்க்கே. (ரு)

(இ-ள்)

வாய், கண், மூக்கு, நாக்கு இவ்விடங்களை வலப்பக்கமாக இழுக்கும், அதிகமான நோக்காடு உண்டாகும், விழியிலிருந்து நீர்வடியும், கண்களும் சிவக்கும்.

## 6. இமைத் தடிப்பு

குமையவே குத்தி நொந்து கூர் விழி நீரும் பாயுஞ்
சமையவே புருவம் வீங்கிச் சதைபோலச் சிவந்து காட்டும்
அமையவே பீளைபாயு மருண்டுதான் புகைந்து நிற்கு
மிமையடி தடிப்புவென்று வெத்தினர் தமிழ் வல்லோரே. (௬)

(இ-ள்)

இமைகளில் குத்து வலி உண்டாகும், விழிகளிலிருந்து கண்ணீர் வடியும். புருவம் வீங்குவதுடன் அது சதையைப் போலச் சிவப்பாகவுமிருக்கும். கண்களில் பீளைசாறும், பார்வை புகைச்சலாகும்.

## 7. தினவு

ஊருஞ் சொரியுங் கரகரக்குமுள்ளே கண்ணுஞ் சிவந்து
[அறுக்கும்
நீரும் பொசியு மனலுண்டா கிறுத்தியுறக்கந் தனைவேண்டாங்
கூறும் விழியும் புகைந்திருக்குங் குருகும் விழியுங் கொடு
[நோவாஞ்
சேறுமிந்தக் குணங்களெல்லாந் தினவு கண்ணின்
[குணந்தானே. (எ)

(இ-ள்)

கண்களுக்குள்ளே கரகரப்பு உண்டாகும். சிவந்துமிருக்கும். நீர் வடியும். கண்களிலெரிச்சலுமேற்படும். தூக்கம் வராது. பார்வை புகைச்சலுமுண்டாகும். கண்களில் தாங்கமுடியாத வலியேற்படும்.

## 8. துய்யகண்குருடு

கருமணி தெளிந்து நன்றாய்க் காண்பவர் போலத்தோற்றம்
பெருமணி வெள்ளை தன்னிற் பெதிக்குஞ் சுழியிற்குத்து
மொரு மணிபோலக் கண்ணிலுறுத்தியே வுள்ளிருந்துந்
துருமணிப்பூணு மாதே துய்ய கண்குருடு தானே. (அ

(இ-ள்)

கருவிழிகள் பிரகாசமாயிருந்து நன்றாகப் பார்ப்பவர் போன்றிருக்கும், (ஆனால் கண்கள் தெரியாது.) வெள்ளை விழியில் குத்துவலியெடுக்கும். கண்களில் உறுத்தலுமேற்படும்.

## 9. சுக்கிர ரோகம்

வீங்கிடுங் கண்ணில் வெள்ளை விதமுடன் பலவாய்க் காணுந்
தாங்கியே கண்ணிற் சுற்றுஞ் சதைமூளை குத்தி நோகு
மேங்கியே சிரசிற் குத்து மிருபுறங் கடைக் கண்புண்ணாந்
தூங்கிட வொட்டாதீது தான்சுக்கிர ரோகமாமே. (கூ)

(இ-ள்)

கண்களில் வீக்கமேற்படும், வெள்ளைவிழி பலவகைப்பட்ட நிறங்களுடன் தெரியும். கண்களில் மயக்கம், சதை, மூளை, சிரஸ், இவ்விடங்களில் சகிக்கமுடியாத வலியேற்படும். இரு புறக் கடைக்கண்களும் புண்ணாகும். உறக்கம் ஏற்படாது.

## 10. மாலை காசம்

மருவியே கண்கள் நொந்து வத்தியே யெரிப்புண்டாகிக்
கருவிழி தன்னிற் சற்றே கலங்கியே ரூபம் வேரு
யுருவியேயுறுத்தி நொந்து அதிகமாய்ப் புகைச்சனீரு
முருவியே சாயுங்கால முதிக்குமே மாலைகாசம். (ம)

(இ-ள்)

கண்களில் வலியுண்டாகும். எரிச்சலுமேற்படும். கண்கள் கலங்கி நிற்கும். உருவங்கள் வேருகப் புலப்படும். கண்களில் உறுத்தலுண்டாகும். புகைச்சலும் நீர்வடிதலுமேற்படும். இவைகள் சாயங்கால வேளையிலேற்படும்.

## 11. சுழல்வண்டெரியல்

பறக்கும் கண்ணிற் பூச்சிபோற் பார்க்குமிடங்கள் தனில்
[தோன்று
முறக்கந்தனிலு மவ்வடமே யோடிதிரியும் போற்காணுந்
துறக்குங் கூசும் புகைந்திருக்குஞ் சுடரைப் பார்க்கிற் பல
[விதமாம்
பிறக்குஞ் சுழல்வண் டெரிதலென்று பேசியிருப்பார் பெரி
[யோரே. (கக)

(இ-ள்)

கண்களில் பூச்சி பறப்பது போன்று காணப்படும். தூங்கும்போதும் அவ்வாறு பறப்பது போன்றிருக்கும். கண்கள் கூசும், புகைச்சலுமேற்படும். விளக்கு வெளிச்சத்தைப் பார்க்கில் அதில் பலவிதமான வர்ணங்கள் தென்படும். இதற்குச் 'சுழல் வண்டெரிதல்' என்று பெயர்.

## 12. அன்ன கோபம்:

கனத்ததோர் நயனமுள்ளே கனலெழவெரித்து வெம்பி
யுனத்தமாம் விழிபுடைத்து உலையினின் மெழுகுபோலச்
சினத்தது கண்ணுநொந்து சிவந்துதானருவித்தாஞ
லனத்த மாமன்ன கோபமறிந்து நீ மருந்து செய்யே. (கஉ)

(இ-ள்)

கண்களில் எரிச்சலுண்டாகி, வேக்காள மேற்பட்டு விழிக ளும் புடைக்கும். அனலிலிட்டமெழுகுபோலக் கண்கள் நொந்து சிவந்து, கரகரப்புமேற்படும். இது 'அன்ன கோப மாகும்.' இது மிகக் கொடிய ரோகமாகும். ஜாக்கிரதையாக மருந்துகள் பிரயோகிக்கவும்.

## 13. மருவுகண் சிவப்பு:

சிறுகுங்கண்ணும் நீர்வடியுஞ் சினந்து கனக்குஞ் சிரசுவலி
முறுகுமனமும் வாந்திக்கு முகிலாச்சிவந்த பூவதுபோல்
குருகுஞ் சரீரந்தளர்ந்துவரு மெதுத்துவெப்பந் தானுண்டா
மருகுமிந்தக் குணங்களெல்லாமருவுகண் சிவப்பிதுதானே.
(கங)

(இ-ள்)

கண்கள் சிறுத்துக் கண்ணீர் வடியும். கண்கள் கோபித் துத் தலைவலியுண்டாகும். மனதும் உருகும். வாந்தியேற்படும். சிவந்த புஷ்பத்தைப்போலச் சரீரம் தளரும். சுரமும் ஏற்படும்.

## 14. ஊறுகாசம்

கடுக்குங் கண்ணுஞ் சிவந்திருக்குங் கட்டைப்பட்ட புண்
[போலாம்
படுக்குமிரவில் சதை வளர்ந்து பரந்து மூடும் விழியடங்க
விடுக்குமிமையுங் கனத்திருக்கு மிருண்டுதொத்தும் பலவிதமா
யொடுக்குஞ்சற்றே மணிதோத்து மூறுகாச மெனவாமே. (கச)

(இ-ள்)

கண்களில் சிவப்புடனே வலி யேற்படும். கட்டையினு லடிபட்ட புண்போல் ஏற்படும். இரவில் சதை வளர்ந்து விழி களை மூட ஆரம்பிக்கும். இமைகள் கனத்திருக்கும். பார்வை இருண்டிருக்கும். விழியும் சிறிதுதான் புலப்படும்.

## 15. எரிவிழி மழுங்கல்

கண்ணது கனத்து நொந்து கருநீர் மலங்கி வீழ்ந்து
நண்ணது புருவங்கன்னம் நாசிகள் மூல முத்து
விண்ணது வருக்கன்றன்னை மேவியே பார்க்கும்போது
வெண்ணிய குணங்கள் தானுமெரி விழிமழுங்கலாமே. (கரு)

(இ-ள்)

கண்களில் பாரமேற்பட்டு வலியுமேற்படும். கண்ணீர் வடியும். புருவம், கன்னம், மூக்கு இவைகளிலிருந்தும் நீர் வடியும். ஆகாயத்தைப் பார்க்கும்போதும் கண்ணீரும் வடியும்.

## 16. பற்ப ரோகம்

கருதியே மணிகடன்னைக் கனத்தது வெள்ளை மூடு
மருவியே விமைத்தடித்து வறுத்திடும் நீரும் பாயும்
விரவியே சுரந்து தோன்றில் விண்ணது நோக்கிற் கூசும்
பரவியே குணங்கள் கண்டாற் பற்ப ரோகமெனலாமே. (கசு)

(இ-ள்)

கருவிழியை வெள்ளை (சவ்வு) மூடும். இமைகளும் தடித்து, கண்ணீரும் வடியும். கண்களில் சுரப்பு மேற்படும். ஆகாயத்தைப் பார்த்தால் கூசும். இது பற்பரோகக் குறிகளாகும்.

## 17. அதிமந்தம்

கருகிய மணியினுங்கலந்த வெள் விழியிலும்
பெருகிய சிவப்போடு மிரண்டும் வலிக்குமு
னுருவிப் பரந்து வுறுத்திப் புகைந்திடு
மருவிய விதனமுமதி மந்த மென்றுமே. (கஎ)

(இ-ள்)

கருமணியும், வெள்ளை விழியும் சிவப்பாகக் காணப்படும். இரண்டு விழிகளிலும் வலியுண்டாகும். உருத்தலுமேற்படும், பார்வையும் புகைச்சலாகும். இக்குறிகள் காணப்படில் அது 'அதிமந்தம்' என்று தெரிந்துகொள்ளவும்.

## 18. குவளை யெரிதல்

கண்ணிற்றடிப்புண்டாகிக் கடுத்திடும் விழிக்கொணுது
திண்ணிய விமைகனத்துத் தினவுடன் சிவந்துகாட்டு
நண்ணிய மயிர்க்காற் புண்ணுய் நாற்றமாய் பீளைபாயில்
குண்ணிய மனமுமாகுங் குவளைதன் னெரிதல் தானே. (கஅ)

(இ-ள்)

கண்களில் தடிப்பு ஏற்படும். கடுப்புமேற்படும். விழிகளை விழிக்க முடியாது. இமைகள் கனமாகி, அரிப்பு ஏற்பட்டுச் சிவப்பாகும். இமையின்மயிர்க்கால்கள் புண்ணுகி, நாற்றமுடனே பீளைகட்டும். இக்குறிகளினுல் 'குவளை யெரிதல்' என்று தெரிந்து கொள்ளவும்.

## 19. அழிகண் பிரிதல்

சழியவேயிடித்து நொந்து சதையது விழிகள் மூடி
பழியவே சூழப்புண்ணுய் பலவிதம் பீளைபாயில்
விழியினேய் மாருதாகும் வேண்டிய மருந்து செய்தா
வழிவது திண்ணங்கண்டா யழிகண்ணின் பிரிதல் தானே. (கக)

(இ-ள்)

கண்களில் கடுப்புடனே வலியேற்பட்டுச் சதையும் விழிகளை மூடிவிடும். கண்ணிமைகளில் புண்களுமேற்படும். பீளை சாரும், இது அசாத்தியமான ரோகம். மருந்துகளைப் போட்டால் பார்வையே அழியும்.

## 20. சோதி விரணம்

கண்டிடும் பூவும் வெள்ளைக் கருவிழியெங்குந் தோற்றுங்
கண்டிடும் நீரும்பாயுங் கூசிடும் விழிக்கொண்ணுது
நண்டினின் கண்கள்போல நடுவிழிதன்னிற் காணும்
வெண்டிடுஞ் சோதிகா விரணமுமாகுமென்றே. (உ௰)

(இ-ள்)

வெள்ளைவிழி, கருப்பு விழி, இவ்விடங்களில் 'பூ' விழும். கண்களிலிருந்து நீர் வடியும். கண்களில் கூச்சமுமுண்டாகும். கண்களை விழிக்கமுடியாது. நண்டின் கண்கள் போன்று நடுவிழி புலப்படும். இவைகளினுல் 'சோதிவிரணம்' என்றறியவும்.

## 21. மணி நீலகாசம்

கூசிடுங்குணமூநீருங் கூர்விழி தன்னிற்குத்து
மீசிடும் புகைந்து காட்டும் விம்மியே வலிக்குமாயிற்
பேசிடுமணியினுள்ளே புள்ளிபோற் கறுத்துக்காணு
மாசிடுங் குணங்கடானு மணிநீல காசமாமே. (உக)

(இ-ள்)

கண்கள் கூசும், விழிகளிலிருந்து கண்ணீர் வடிந்து வலியுமேற்படும். பார்வைப் புகைச்சலாகும். கண்களின் கருமணியினுள்ளே கறுமையான புள்ளி தென்படும். இவைகளினல் 'மணி நீலகாசம்' என்றறியவும்.

## 22. படிகுந்தம்

உள்ளமே நொந்துகண்ணி லுறுத்தியே வலிக்குமாகில்
மெள்ளவே சந்திருதைய மேவியே சிறுத்து காணுங்
கள்ளமே யல்ல நோய்கள் கருவிழி கறுத்துக் காணில்
பள்ளமாம் பார்வை குண்ணில் படிகுந்த மென்று சொல்லே.
(உஉ)

(இ-ள்)

மனது புண்படும், கண்களிலுறுத்தலுடன், வலியேற்படும். சந்திரோயத்தில் அதாவது இரவு நேரங்களில் விழிகள் சிறியதாகும். கருவிழிகறுமை நிறமாக விருக்கும். கீழ் நோக்கிய பார்வை யேற்படும். பார்வையும் மங்கும்.

## 23. மதன மந்தாரம்

கூறிடும் விழியிற் குத்துங் குங்குவளையிற் பூளைகட்டுஞ்
சீறிடும் புகைந்து காட்டிச் சிறிதுநாள் வெளியதாகுந்
தேறிடுந் தினவுண்டாகுஞ் சிதறியே சிவப்புக் காணும்
மாறிடும் பச்சைபோல மதனமந் தாரமாமே. (உங)

(இ-ள்)

விழிகளில் குத்துவலியுண்டாகும், குவளை (கீழிமை) யில் பீளை சேரும். பார்வை புகைச்சலாகும். கண்களிலரிப்பு எற்படும். சிவப்பாகவுமிருக்கும். இக்குறிகளுள்ள ரோகம் 'மதன மந்தார' மாகும்.

## 24. நாகபடலம்

கடைக்கண் ணிருபுறத்திற் காணவே சிவந்து தோன்றி
துடைப்படி சதைபோல் வந்த நாளிலே சோதி தீண்டு
மடைத்திடும் விழிகடன்னை யதிகநீர் தினவுண்டாகு
நடைப்படிக் குணங்களெல்லா நாகமாம் படலமாமே. (உச)

(இ-ள்)

இருபுறக் கடைக்கண்களும் சிவப்பாக இருக்கும். இரு புரத்திலிருந்தும் சதை வளர்ந்துவந்து சோதியை மறைக்கும். விழிகளிலிருந்து நீர்வடியும். அரிப்புமேற்படும். இவைகளினால் 'நாகபடலம்' என்று அறியவும்.

## 25. நீர்ப்பாய்ச்சல்

சருவி நீருச்சிக் காட்டிச் சதைவருந் தினவுண்டாகுங்
கருவிழி உறுத்தி நொந்து கனத்துட னெரிப்புண்டாகு
மருவியே கண்கணைந்து மாருதே நீரும்பாயு
மருவையே யிவைகடானு மருவிநீர்ப் பாய்ச்சலாமே. (உரு)

(இ-ள்)

கண்களில் சதை வளரும். அரிப்புமேற்படும். கண்களிலுறுத்தலுடன் வலியுமேற்பட்டு கனமாகும். எரிச்சல் அதிகமாகும். கண்கள் நொந்து, நீர்வடியும். இக்குறிகளினால் 'நீர்ப்பாய்ச்சல்' என்றறியவும்.

## 26. அரூபம்

ஊறியே வெள்ளை தன்னி லுற்றதோர் சலமுங் கொள்ளும்
பாறியே நீரும்பாயும் பகல்விளக் கொளிபோலாகுஞ்
சாறியே பீளைதானுந் தடமைய வெரிப்புண்டாகு
* மாறியே நின்றெடுக்கு மரூபமாமென்று சொல்லே. (உசு)

(இ-ள்)

வெள்விழியில் கண்ணீர் தளும்பி நிற்கும். கண்ணீரும் வடியும். பகல் நேரம் விளக்கொளிபோலக் காணப்படும் பீளைகட்டும். கருவிழியில் எரிச்சலுமதிகமாகும், இக்குறிகள் 'அரூபம்' என்னும் நோயில் காணும்.

---

* மாறியே என்பதற்கு ஆதியே என்ற பாடபேதமும் உண்டு.

## 27. வெள்ளைப்படலம்

கண்ணினில் வெள்ளைதன்னிற் கலந்ததோர் பாலினுடை
யுண்ணியே விழிக்கும்போது உறுத்திடும் நுரைத்து வைத்து
நண்ணியே பளிங்குபோல நலம்பெறப் புகைந்து காட்டும்
வெண்ணிய மதிமுகத்தாய் வெள்ளையாம் படலமாமே. (உஎ)

(இ-ள்)

வெள்ளைவிழியில், பாலின் மேலுண்டாகும் ஆடைபோல ஆடைபடர்ந்து விழிக்கும்போது உருத்தலுமுண்டாகும். நுரையும் ஏற்படும். பார்வை புகைச்சலாகும். இது "வெள்ளைப் படலமாகும்."

## 28. கண் விரணம்

சுத்தெல்லாம் வரையும் புண்ணுஞ் சூழவே தினவுண்டாகி
வத்தியே யிமைகளெங்கும் வலித்திடும் விழி சிவக்கு
முத்தியே நோக்கிப்பார்க்கில் ஞனெந்தோன்றுஞ் செய்ய [வொட்டா
கத்தியே இருக்கும் தூங்காக் கண்ணினில் விரணந்தானே. (உஅ)

(இ-ள்)

கண்களைச் சுற்றிலும் புண்ணாகி அரிப்புமேற்படும். இமைகள் வற்றும். விழிகள் சிவந்து வலியுண்டாகும்; ஒரு பொருளை கூர்ந்து கவனிக்க வொட்டாது, தூக்கம் வராது இவைகளினால் 'கண் விரணம்' என்றறியவும்.

## 29. நீரெழுகாசம்

கருவிழி கீழுமேலுங் கலந்துதான் சிவப்பேயுற்று
வெருவிடு மின்னல்போல விசையுடன் நொந்து குத்தும்
பெருகிடுஞ் சலமுமோடும் பேசிடிற் கண்ணினோடு
மிருடியாயிவைகள் செய்யின் நீரெழு காசமாமே. (உக)

(இ-ள்)

கருவிழிக்குக் கீழேயும், மேலேயும், சிவப்பு உண்டாகும்: மின்னல்போல அதிகக் கடுமையான குத்துவலி யுண்டாகும். நீர் வடியும், பேசினாலும் கண்கள் வலிக்கும். இக்குறிகளால் 'நீரெழுகாசம்' என்று கண்டறியவும்.

## 30. நீலகாசம்

நல்லதோர் மணியுநொந்து நாளிலே புகைந்து காட்டுஞ்
செல்லவே புருவங்கண்ணிற்சிரசினிற் சேர நோகுஞ்
சொல்லவே சோதிநீலஞ் சூட்.சமாய் நீரும்பாயு
நில்லெமை நீக்கினீங்கா நீலமாங் காசந்தானே. (௩0)

(இ-ள்)

கருமணியில் நோக்காடு உண்டாகும். பார்வை புகைச்சலாகும். புருவம், கண்கள், தலை, இவைகளில் வலியேற்படும். (சோதி) பாவை நீலமாகும். நீர்வடியும். இமையை நீக்கிய (புறட்டிய) போதிலும் நீங்காது.

## 31. குமரிதன் காசம்

கடுவலிகண்கள் தன்னில் கலங்கியே பீளைசாறி
நடுவிழி தன்னிற் குத்தும் நன்மணிபுடைத்து வீங்கும்
வடுவெனத்திரண்டு காட்டி வாயுவுஞ் சலமுங் கோர்க்குங்
குடிதனைக் கெடுக்குமின்னோய் குமரிதன் காசந்தானே. (௩௧)

(இ-ள்)

கண்களில் கடுமையானவலியுண்டாகிப் பீளைசாறும். கலக்கமுமேற்படும். விழிகளில் குத்துவலியுண்டாகும். கண்ணின் மணி புடைத்து வீங்குவதுடன் சலமும், வாயுவுஞ் சேரும். இது அசாத்தியமான 'குமரிதன்காச' மாகும்.

## 32. வாதகாசம்

சுழிதனைக் கடுத்துக் கண்ணுஞ் சோரவே சுழித்து வாங்கு
நெழியவே யிமைகள் வீங்கி நின்றிடு முறக்கம் வாராச்
சழியவே யிடித்து நொந்துஞ் சலம் விழும் வாதையாகும்
வழிபட நோயுந் தீரா வாதமாங் காசந்தானே. (௩௨)

(இ-ள்)

கண்களில் கடுப்புவலி ஏற்பட்டுச் சுழித்து இழுத்துக் கொள்ளும். இமைகள் வீங்கும், தூக்கம் வராது, கண்களிலிருந்து கண்ணீர் பெருகும். அதிகமான வேதனையளிக்கும். இது தீராத நோயான 'வாதகாசமாகும்.'

## 33. அழற்சி

குறிபடச்சூழ நொந்து குத்திடுங் கடைக்கண் வீங்கும்
பறிபடப் பீளைபாயும் பசுமையாங் கண்சிவக்கு
நெறியுடன் நெற்றிக்கன்னம் நீண்டவே தனையுங் காட்டு
அறிவற அன்னம் வேண்டா மழற்சியா மென்றுகூறே. (௫௫)

(இ-ள்)

கண்களைச் சுற்றிலும் வலி ஏற்பட்டுக் கடைக்கண்கள் வீங்கும். பசுமையான பீளையும் சாறும், கண்களும் சிவப்பாகும். நெற்றி, கன்னம், இவ்விடங்களில் வேதனையதிகமாகும். ஆகாரமும் ஏற்காது. இவைகள் 'அழற்சியின்' குறிகளாகும்.

## 34. மயிர்க்குத்து

கனத்திமை தடித்துக் கண்ணுங் கவிழ்ந்திடும் பார்வையாகுஞ்
சினத்துடன் மயிருங் குத்தித் தினவுநீர் பீளைசேரு
மினத்துடன் பூவுங்காணு மிருண்டது நடையுமய்ய
முனத்திடு மாசந்தோறு முடமயி ரென்னலாமே. (௫௬)

(இ-ள்)

இமைகள் தடித்து, பார்வையும் கீழ்நோக்கும். இமை மயிர்கள் கண்களில் குத்தி, அரிப்பு, நீர், பீளை சேரல் இவைகளை யுண்டாக்கும். கண்களில் பூவும் ஏற்படும், கண்கள் இருளும். இது மாதந்தோறும் விழுந்து முளைக்கும்.

## 35. கண்குரு

மாசம் பக்கம் வலிகடுப்பு மறுப்போற்கண்ணி லேதோன்றும்
நாசமாகும் பின்வளரும் நசுங்கி முளைக்குந் தினந்தானும்
வாசம்நடக்கிற் றலைமுழுகில் வலுவாய் வாதை தானுண்டா
நேசந் தலைமுகம்பிடரிவலி நிச்சயங் கண்குரு
[வெனலாமே. (௫௭)

(இ-ள்)

கண்களின் பக்கங்களில் வலியும், கடுப்புமேற்படும். மறுப்போல் கண்விழிகளிலேற்பட்டு அது உடையும். மறு

படியும் வளர்ந்து நசுங்கும். மறுபடியும் மறுபடியும் தினந் தோரும் வளர்ந்து, வளர்ந்து அழுங்கும். நடந்தாலும், தலை முழுகினாலும் அதிகமான வலி யேற்படும். இதையன்றி தலை, முகம், பிடரி இவ்விடங்களில் வலி நிச்சயமாக ஏற்படும். இவைகள் 'கண்குரு' வின் குறிகளாகும்.

## 36. அடைந்தெழுந்திடுதல்

நீரும் பொசியும் விழிகடுக்கும் நித்தம்பலகுண மிமைவீங்குஞ்
சேரும்பீளை சிவந்தெரிப்புஞ் சினத்துப் புடைக்கு மினையடங்கு
ஊருஞ் சொரியு மூக்கால்நீ ரூத்தியன்னம் முண்ணவொட்டா
யாருமறிய வுரைத்தகுண மடைந்தெழுந்திடுத
[லெனலாமே. (ருசு)

(இ-ள்)

கண்ணீர் பொசியும், விழிகளில் கடுப்பு மேற்படும். இமைகள் வீங்கும். பீளை சாறும் கண்கள் சிவந்து, எரிச்சலு மேற்படும். கண்கள் கோபித்துப் புடைக்கும். மூக்கிலி ருந்தும் கண்களிலிருந்தும் நீர் சொரியும். சாதம் சாப்பிட முடியாது, இவைகள் "அடைந்தெழுந்திடுதல்" என்ற ரோகமாகும்.

## 37. பருமுளை

கடுத்து வலித்து நீர்ப்பாயும் கண்கள்சிவக்கு மிமைவீங்கு
மிடுக்கும் விழிக்கவொட்டாது யிருண்டு வெளுத்து முளைகாணு
நடுக்குந் தலையும் முகம்பிடரி நரம்பை யிழுத்து மிகநோகும்
படுக்கு மிருக்கு மெழுந்திருக்கும் பருமுளையென்று
[பகர்வாரே. (ருஎ)

(இ-ள்)

கண்களில் கடுப்புவலியேற்பட்டு, கண்ணீர் வடியும். கண்களுஞ் சிவந்து, இமைகள் வீங்கும். கண்களைவிழிக்க இய லாது. கண்கள் இருண்டு கண்களில் வெளுப்பான முளைகளேற் படும். தலை, முகம், பிடரி, நரம்பு இவைகளை இழுத்து, நடுக்க லுடன் வலியுமுண்டாகும். முளை சிற்சில சமயங்களில் படிந் திருக்கும் அல்லது எழுந்து காணும்.

## 38. எழுச்சி

காதுகண் புருவநெற்றி கதிக்கவே குத்திவாங்கித்
தீதுகள் முளைக்குங் கண்ணிற் றிரண்டுதான் வெளுப்புங்
[காட்டு
மீதுதா னீரும்பாரி மீன்விழிபோலத் தோற்று
மேதுதா னிதுகுணங்க ளெழுச்சியா மென்று சொல்லே. (௩௮)

(இ-ள்)

காது, கண்கள், புருவம், நெற்றி இவ்விடங்களில் குத்து வலியுண்டாகும். கண்கள் திரண்டு வெளுப்பாகும். நீர்ப் பாய்ச்சலுண்டாகும்.

## 39. வெள்ளெழுத்து

கூசும் விழிக்கும் புகைந்திருக்குங் கூறும்பார்வை தோற்றுது
மாசுங்கண்ணும் பசுந்திருக்கு மயங்கிக் குணங்கள் பலவாகும்
தேசுங் குறையு மருட்சியுண்டாந்திறமாய்க் கருமஞ்செய்யாது
பேசுங்குணங்கள் வெள்ளெழுத்து வென்றேசொல்லு மிது
[கண்டே. (௩௯)

(இ-ள்)

விழிக்கையில் கண்கள் கூசும், பார்வை புகைச்சலாகும். உருவங்கள் சரியாகப் புலப்படாது. கண்களில் மாசு (பீளை முதலியன) படியும். பார்வை பயந்தவையாகத் தோன்றும். காரியங்களை செய்யமாட்டாது. இக்குறிகளால் "வெள்ளெழுத்து" என அறியவும்.

## 40. துன்மாங்கிஷம்

வீங்கும் விதனஞ்சதைபோல வெளுத்து விழியிற் * றளிர்
[காணும்
வாங்கும் வளருஞ் சிலகாலம் வாதை மிகவாம் நீர் பீளைத்
தேங்கும்நடக்க வொட்டாது சினத்துமுகமுங் கடுக்குதென்
(றுந்
தூங்கும் விழிக்குங் கிடைகொள்ளாத் துன்மாங்கிஷ மென
[லாமே. (௪௰)

---

* விழியில் ருறங்காணும்—என்றும் பாடபேதம்

(இ-ள்)

கண்ணிரப்பைகளில் வீக்கமுண்டாகும், விழிகள் வெளுத்து விழிகளில் மாம்ச விருத்தி (தளிர்) ஏற்படும். நடக்கமுடியாது. முகம் கோபமடைந்து, கடுப்பு வலியுண்டாகும். தூங்கவும் முடியாது. விழிக்கவும் இயலாது.

## 41. உருவிப்புடைத்தெழுதல்

வளரும் வலிக்கு மிகப்புடைக்கும் வாங்கும் விழியும் மேனேக்
[கித்
தளரும் விழியுஞ் சிவந்தெரிக்குந் தண்ணீர் பீளை தானுண்டாங்
குளரும்வாயுந் தடுமாறிக் குடித்தவன்னஞ் சத்திக்குந்
உளருங் கிடையுங் கொள்ளாது உருவிப்புடைதெழுத
[லெனலாமே. (சக)

(இ-ள்)

கண்கள் புடைத்து, வலியுடனிருக்கும். விழிகள் மேனேக்கியிருக்கும். விழிகள் சிவந்து எரிச்சலுடனிருக்கும். கண்களிலிருந்து பீளைச்சாறும். பேச்சு தடுமாறும். சாப்பிட்ட ஆகாரம் வாந்தியாகும். இது 'உருவிப்புடைத்தெழுதல்' ரோகமாகும்.

## 42. பறவைப்பூ

சினக்கும் வலிக்கு மெரிப்புண்டாஞ் சிறுகப்படரும் வெளுத்
[திருக்குங்
கனக்குந் தலைநெற் றியிற்குத்துங் கண்ணுஞ் சிவந்து நீர்வடியு
மினக்குமுகமும் புகைந்திருக்கு * மெதுத்தார் பார்க்க வொட்
[டாது
தனக்குக்குணங்கள் பறவைப்பூ தக்க குணங்கள் வகைதானே.
(சஉ)

(இ-ள்)

கண்கள் சிவந்து எரிச்சலுடன் வலியேற்படும். தலை, நெற்றி முதலிய இடங்களில் குத்துவலியேற்படும். கண்கள் சிவப்பாகும். நீர்வடியும். முகம் சிறுத்துவிடும். பார்வை

* 'யேதும் பார்க்க' என்றும் பாடபேதம் உண்டு.

புகைச்சலாகும். எதிரிலுள்ளவர்களைப் பார்க்கமுடியாது. இவைகளிலிருந்து 'பறவைப்பூ என்று கண்டுகொள்ளவும்.

### 43. பஞ்சணிப்படலம்

ஏற்கப்படரும் விழியடங்கவியல்பாய் நோகும் வெளுப்பேறு
நீற்கப்படவே புகைந்துவருஞ் சிறுக நீரும் பீளையிடு
மூற்கப்படவே கடைக்கண்ணி லுருத்திவலிக்கு மொருபுறத்தே
பார்க்குங் குணங்களிவை கண்டாற் பஞ்சணிப் படலமென
[லாமே. (சரு)

(இ-ள்)

விழிமுழுவதிலும் வலி உண்டாகும். கண்களும் வெளுக்கும். பார்வைப் புகைச்சலாகும். நீர்பாய்ச்சலும், பீளையும் சாறும். கடைக்கண்களில் உருத்தலேற்பட்டு வலியுண்டாகும். பார்வையும், ஒரு புறப்பார்வையாகும். அவைகளினால் 'பஞ்சணிபடலம்' என்று தெரிந்துகொள்ளவும்.

### 44. அமரம்

கதிக்குமிமையிற் சதைவளர்ந்து கண்ணும்மூடித்திறவாது
பதிக்கு விழியிற் பரந்து குத்திப்பலவாய் நீரும் பீளையிடு
மதிக்குமெவரை நோக்கரிதாமலர்ந்த பூப்போல் சிவந்திருக்கு
மதிக்குங் குணங்க ளிவைதானுமமரமெனவேயருளினரே.
(சச)

(இ-ள்)

இமைகளில் சதை வளர்ந்து கண்களை மூடித்திறக்க முடியாமல் செய்யும். விழி முழுவதும் குத்துவலியேற்பட்டு, நீர்ப்பாய்ச்சலும், பீளையும் சாறும். எதிரிலுள்ளவரைப் பார்க்க முடியாது. விழி அன்று மலர்ந்த புஷ்பம்போலச் சிவந்திருக்கும். இவைகளினால் 'அமரம்' என்று கண்டுகொள்ளவும்.

### 45. புகைச்சல்

பகைக்கு முகமும் பல விதமாய்ப் பார்வை பலவராய்த்தோற்று
[விக்குந்
திகைக்கு மிருக்குங் கூச்சமுண்டாஞ் சிறுகஇமையுந் தின
[வெடுக்குந்

த்தைக்குங் கருமங் தனைசெய்தாற் சற்றே வெளியாயிருண்டு [விடும்
புகைச்சற் குணங்களிவையென்று புகன்றோர் பெரியோர் புவி தனிலே. (சரு)

(இ-ள்)

முகம் கோபிக்கும். பார்வை பலவிதமாகத் தோன்றும். கண்களில் கூச்சமேற்படும். இமையில் அரிப்பு ஏற்படும். பல வேலைகளையும் செய்யவொட்டாது கண்கள் இருண்டுவிடும். இக்குறிகளைக்கொண்டு 'புகைச்சல்' நோயை அறியவும்.

## 46. அதிமந்தாரம்

வலிக்குங் கடுக்கு நீர்வடியுமுவந்தே சோதி தனிற்குத்தும்
பலிக்கு மருந்து பலியாது பார்க்கவதிகம் படந்தேறுஞ்
சலிக்குந் துயராயிருண்டுவருஞ் சாந்தம்போல நடைகெடுக்கு
மலிக்குங் குணங்க ளிவைதானு மதிமந்தார மெனலாமே. (சசு)

(இ-ள்)

கண்களில் வலியும் கடுப்புமேற்படும். கண்ணீர் வடியும். சோதியிலும் குத்துவலியேற்படும். மருந்து இலகுவில் பலிக்காது. துன்பமேற்படும். கண்கள் இருண்டுவரும். நடக்கவொட்டாது. இக் குறிகள் 'அதிமந்தார' நோயிலுண்டாகும்.

## 47. திமிரம்

மறக்குங் கடுக்குங் காகரக்கு மாறுவாதை கண்பருக்கு
முறக்குந் தலைமுகந் திமிந்திருக்கு மூறுநீர்க்கண் பீளையிடும்
பறக்கும் விழியும் வெளுத்துவரும் பார்வை குணங்கள் பல [வாகுந்
திறக்கு நயன குணந்தானுந் திமிரவகையின் செயல் தானே. (சஎ)

(இ-ள்)

கண்களில் கடுப்பு வலியேற்படும். கரகரப்புமுண்டாகும். ஜீராதவலி யேற்படும். கண்கள் வீங்கும். தலை, முகம் இவைகள் திமிர்த்திருக்கும். கண்ணீர் சொறியும். பீளையும் சாறும். விழிகள் வெளுக்கும். பார்வையும் பலவாறுகும்.

## 48. சோதி நெரிதல்

முளைக்குங்கண்ணீர் பலவாக மூன்று நாளிற் போகும்வருங்
கிளைக்குமதன்பின் வெளுப்பாகுங் கீழேவிழியும் பார்வையுமாம்
வளைக்குஞ் சதையு மிமைசூழ வாதை தலைநோய் நீர்ப்பீளை
துளைக்கும் பிடரிசுழியிற்குத்துஞ் சோதிநெ ரியதுதா னென
[லாமே. (சஅ)

(இ-ள்)

கண்களில் முளையுண்டாகி அது மூன்று நாளையில் தீரும். மறுபடியுமுண்டாகும். கண்களும் வெளுப்பாகும். கீழ் நோக்கிய பார்வையுண்டாகும். இமையைச் சுற்றிலும் சதை வளர்ந்து வலியுமுண்டாகும். தலைநோயதிகமாகும், கண்ணீரும், பீளையும் சாறும். பிடரியிலுள்ள சுழியில் குத்து வலியேற்படும். இவைகளுண்டாகில் 'சோதி நெரிதல்' எனக் கண்டுகொள்ளவும்.

## 49. செவ்வேர்

சிறுகுங்கடுக்கும்வெளுத்தவிழி சிவந்த விழைபோற் பரந்துவரு
மருகுந் தலையிற்குடைந்து குத்தி மாறு நீருங்கூச்சமுமா
மிறுகு மிமையு மசைக்கவொட்டா விடுக்குங் கடைக்கண் டின
[வாகுங்
குறுகும் வகைகளிது தானே குறித்த செவ்வேர் குணந்தானே.
(சகூ)

(இ-ள்)

கண்கள் சிறுத்து, கடுப்புவலியேற்படும். விழிகள் வெண்மையாகும். சிவந்த கோடுகள் கண்களில் பரவியிருக்கும். தலைவலி, குடைச்சலுண்டாகும். விடாது கண்ணீர் சொரியும். கண்கள் கூசும். இமைகளையசைக்கமுடியாது. கடைக்கண்களிலரிப்பு ஏற்படும். இவைகள் 'செவ்வேரின்' குணங்களாகும்.

## 50. முடமயிர்

சூழமுளைக்குமிமையடங்கச் சுருண்டுகுத்தி நீர்வடியுந்
தாழ விழிக்குங் கருமணியிற் சற்றே வெளுப்புப் படர்ந்துவரு
மாழ்விழியு மடங்கிவரு மதிகந் தலைநோய் நாசிதனில்
மூளவிழிதா னரிதாகு முடமயி ரிதுதா னெனலாமே. (ருய)

7 OCT 1974

(இ-ள்)

இமை மயிர்கள் கீழ்நோக்கி வளேந்து கண்விழியில் குத்திக் கண்ணீரைப் பெருக்கும். கீழ்நோக்கிய பார்வையுண்டாகும். கருமணி சற்று வெளுக்கும். தலைநோய், நாசியில் வலி முதலி யவைகளுண்டாகும். விழிக்கவொட்டாமல் செய்யும். இவை கள் ' முடமயிரின் குறிகளாகும்.

குறிப்பு :—

34-வது ரோகமான ' மயிர்க்குத்து ' என்பதையும் கவனிக்க.

## 51. அந்திரகாசம்

சந்திர னுதையந்தன்னிற் புகைதான் விழிவெளியாகு
மிந்திர கோபம்போலச் சிவக்குமே யுற்றுப்பார்க்கிற்பயமாகு
மூந்திர கோபந்தானுண்டாம் திறந்தால் கண்ணுமிகவிருளு
மந்திரகாச மிதுவென்று மறயவுலகிலுரைத்தாரே. (ருக)

(இ-ள்)

சந்திரோதய காலத்தில் பார்வை புகைச்சலாகும். இந்திரகோபப் பூச்சியைப்போலக் கண்கள் சிவப்பாகும். உற்றுப்பார்க்கும்போது பயமேற்படும். கோபம் உண்டா கும். கண்களைத் திறக்கும்போது இருளும். இவைகள் ' அந்திரகாசத்தின் ' குறிகளாகும்.

## 52. கண்ணேவு

எந்நாளும்நோகாது காற்றுக்காலமெடுக்குமே தலைவலியுமிமை [கண் வீங்கும்
புண்ணாகும் நீர்பீளே யுறக்கம்வாரா புதுமையா மூன்றுநாள் [போத நோவு
திண்ணுற நோக்கவொட்டாப் பட்சமொன்றில் விதமாகத்திரு [மிது மெய்தானென்றே
கண்ணேவு குணங்களிவை வகைதானென்றுங் கருதினற்புவி மீதிற்கண்டதாமே. (ருஉ)

(இ-ள்)

எப்போதும் வலியிருக்காது. காற்றுக்காலத்தில் அதிகத் தலைவலியுண்டாகி, இமைகள் வீங்கும். கண்களும் புண்ணாகி

கண்ணீரும் பீளையுமதிகமாகச் சாறும். இரவில் தூக்கம் வராது. மூன்று நாட்கள் சென்றபின், கண்களை விழித்துப் பார்க்கவும் முடியாத நிலமையை யடைவர். இதற்கு மருந்து போடாவிட்டாலும் 15 நாட்களில் குணமாகும். இவைகள் 'கண்ணோவின் 'குறிகளாகும். இதற்குக் 'கண்வலி' என்றும் வேறுபெயர்.

## 53. சுந்திர ரோகம்

மூடுந்திறக்குங் கூச்சமுமாம் முன்னெற்றிதனிற் குத்துண்டா
மோடுங் கண்ணில் நீர்வடியு முருட்டி விழிக்க வொட்டாது
வாடுஞ் சோதி நேரமண்ணாந்து பார்த்தாலிமையில்வலி
சூடுஞ் சதைபோல் வளர்ந்து வருஞ் சுந்திரரோக மெனலாமே.
(ருரு)

(இ-ள்)

கண்களை யடிக்கடி மூடித்திறக்கச் செய்யும். கண்களில் கூச்சமு முண்டாகும். முன் நெற்றியிலும் குத்துவலி யேற்படும். கண்ணீர் அதிகமாகச் சாறும். உருட்டி விழிக்க இயலாது. பார்வை வாட்டமுறும். சிலமணி நேரங்கள் அண்ணாந்து பார்த்தால் இமையில் வலி உண்டாகும். கண் களில் சதை போல வளர்ச்சியுமுண்டாகும். இக்குறிகள் 'சுந்திர' ரோகத்தில் உண்டாகும்.

## 54. எழுநாயிறு

விழுவார் படுப்பா ரெழுதிருப்பார் விதனம் பொறுக்க வரிதாகு
மழுவார் விழியும் பருத்துவரு மமந்து பின்னையலறிவிக்கு
முழுதாய்க் கண்ணில் முளைபோல முதிர்ந்து பிறகு மொரு நாழி
பழுதாமிவைதானெழுநாயறு பகர்ந்தேயுரைத்தார் புவிதனிலே.
(ருச)

(இ-ள்)

நோயாளி அடிக்கடி விழுவார். படுத்துக்கொள்வார். பிறகு எழுந்திருப்பார். வலிதாளமுடியாது அழுவார். விழிகள் பருத்து வரும். கண்களில் முளையேற்பட்டு அவைகள் வளர்ச்சி யடையும். ஒருநாழிக்குள் பழுக்கவுமாரம்பிக்கும். இக்குறிகள் 'எழுநாயிறு' எனப்படும் ரோகத்திலுண்டாகும் குறி கள் என்று அறிந்து கொள்ளவும்.

## 55. கூசி விழித்தல்

மாசுபோல் விழியின் மேலே மறைக்குஞ் சூழ்தினவு முண்டா
பாசிபோ லிருகண்ணிற் பசுக்கும் பீளை நீர்வடியும்
வாசி போல்ச் சிறுக நாளும் வளரும் பிறையில் வந்தெடுக்கும்
கூசி விழித்தல் தானென்றுங் குணமாயுரைத்தார் புவிதனிலே.
(ருரு)

(இ-ள்)

இரு விழிகளிலும் தூசி படிந்தாப் போலுண்டாகி அவை பார்வையை மறைக்கும். கண்களில் அரிப்பு ஏற்படும். கண்களில் பாசி நிறம் போலப் பசுமை நிறம் ஏற்படும். பீளையும் கண்ணீரும் அதிகமாகச் சாறும். இந்நோய் வளர் பிறையில் அதிகமாகும்.

## 56. குவளைநெரிதல்

காட்டுங் கடைக்கண்டனிற்குத்திக் கனக்க வீங்கித் தின
[வுண்டா
மூட்டும் வீணைதெரித்தாப் போல் முடுகிவலிக்குந் தலைநோவு
தீட்டுங் கருவி தனைப்போலச் சிக்கிப் பருக்கு மிமை வீங்குங்
கூட்டுங் குணங்களிவைதாமுங் 'குவளை நெரிதலே'னலாமே.
(ருசு)

(இ-ள்)

கடைக் கண்களில் குத்து வலியுண்டாகும். வீக்கமும் அரிப்புமேற்படும், வீணை மீட்டுதல் போல 'பளிச், பளிச்' சென்று தலைவலியுண்டாகும். இமைகள் வீங்கும். இது 'குவளைநெரித'லாகும்.

## 57. காசமுறுக்கி

நல்ல கருப்பு விழியதனினரம்பு போலச் சிவந்து வருஞ்
சொல்ல வெளுத்த விழிமேலே தோணு மிரத்தமாங்கிஷத்தான்
வல்ல குவளை மனையுருத்தி வடியும் நீரும் வற்றுது
பல்லைவலிக்குந் தலையிடிக்கும் பகருங் காசமுறுக்கியென்றே.
(ருஎ)

(இ-ள்)

கருப்பு விழியில் நரம்புகள் பரவுவது போலச்சிவப்பு தோன்றும். வெளுத்த விழிதனில் சிவப்பாகப்புடைக்கும்.

---

* 'மிரத்த' என்பதற்கு பதில் 'நுரைத்த' என்ற பாடபேதமும் உண்டு.

அது குவளையை (கீழிமை) யுறுத்துவதால் கண்களிலிருந்து நீர் வடியும். பல்வலியுமுண்டாகும், தலைவலியுமேற்படும். இத ஞல் 'காசமுருக்கி' என்று தெரிந்துகொள்ளவும்.

## 58. மாலைக்கண்

காயம் வெளுத்து முகம் பசுத்துக் கண்ணும் வேரேவிகாரமு
மாயம் போலத் தலைகனக்கும் மயங்குங் கண்கள் மதிவேரும்
பாயும் பீளை மேனேக்கிப் பார்க்க விழியுங் கூசிவிடுஞ்
சாயங்காய மாலைக்கண்டெரித்த விளக்குந் தெரியாதே. (ருஅ)

(இ-ள்)

உடல் வெளுக்க வாரம்பிக்கும், முகம் பசுமை நிறமடையும், கண்கள் விகாரமடையும். தலைபார மேற்படும், கண்கள் மயங்கிச் சொருகும், சித்தம் கலங்கும். பீளைசாறும். கண்களை மேனேக்கிப் பார்த்தால் அதிகமான கூச்சமுண்டாகும். வியாதிஸ்தனுக்கு இரவு நேரங்களில் எரியும் விளக்குகளுந் தெரியாது இவைகள் ' மாலைக்கண்களின் ' குறிகளாகும்.

## 59. துன்னுகாசம்

வளர்ந்திடுஞ் சதைகண்சூழ வலித்திடு மிமைகனக்குந்
தளர்ந்திடு நீரும் பாயுஞ் சளியென விடித்துக் குத்து
முளந்தனி லெரிப்புக் கூச்ச முறுதியாய்ப் புகைத்து காட்டுந்
துள(ல)ங்கிய குணத்திஞலே துன்னிய காசமாமே. (ருகூ)

(இ-ள்)

கண்களைச் சுற்றிலும் சதைவளரும். இமைகள் கனத்து வலியதிகமாகும். கண்களிலிருந்து நீர் வடியும். சளிபோலும் பாயும். மனது கொதிப்படையும். கண்களில் கூச்சமு மேற்படும். பார்வையும் புகைச்சலாகும். இக்குறிகளிஞல் ' துன்னியகாசம்' என்று தெரிந்து கொள்ளவும்.

## 60. சூழல்விழி எரித்தல்

எரியுங் கண்ணும் பலவிதமா யெதுத்து விழிக்க வொட்டாது
சரியுமிமையுந் தினவுண்டாஞ் சாந்தமான வலியுண்டா
நெரிமுளைக்கும் பீளைகட்டும் நித்திரை தானும் வெறுப்பாகுஞ்
சொரியுங் கண்ணிினீர்வடியுஞ் சுழல் விழியெரித்தலிதுதானே.
(சுய)

(இ-ள்)

கண்களில் எரிச்சலுண்டாகும். கண்களினால் விழித்துப் பார்க்க இயலாது. இமையில் அரிப்புடன் சிறிது வலியுமேற் படும். இரவில் நித்திரை வராது. கண்ணீருமதிகமாக வடியும். இக்குறிகள் காணப்படில் அது 'சுழல் விழி எரித்தல்' என்று அறிந்துகொள்ளவும்.

## 61. பக்கப்படுவன்

விழியைக்கடுக்குஞ் சினத்திருக்கும் மீறி நொந்து வெள்ளை தனி
றழியும் புண்போற் குத்துண்டா மந்தட்சணத்தில் முளைப்போல
வெளியிற்றள்ளுஞ் சீழ்க்கொள்ளும் வெடிக்கு நீராய்த்தான் [வீழும்
பழியீற் படுவா யிவைபார்க்கில் பக்கப்படுவ னெனலாமே. (௬௧)

(இ-ள்)

கண்களில் கடுப்பு வலியேற்பட்டுக் கோபிக்கும். நோவு மேற்படும். வெள்ளைவிழியில் புண்கள் ஏற்பட்டாற்போல் குத்துவலியேற்படும். க்ஷணத்தில் முளையேற்பட்டு சீழ்க் கொண்டு உடையும். பிறகு அதிலிருந்து நீர் வடியும். இக் குறிகள் 'பக்கப்படுவனில்' உண்டாகும்.

## 62. அக்கரம்

சிறுகச்சிவக்கு நீர்வடியுந் தினவுஞ் சிறுநாளடங்கி விடு
மறுக்கக் கடுக்குங் கூச்சமுண்டா மலரவிழிக்க வொட்டாது
விருகண்ணிமையுங் கனத்திருக்கு மூறித்தலைநோய் கொட்டாவி
வருக்கடக்கண் பீளையிடுமக்கரமென்று சொலலாமே. (௬௨)

(இ-ள்)

கண்கள் சிவப்பாகும். கண்ணீர் வடியும். அரிப்பு ஏற் படும். சிறிதுநாள் சென்றபின் தானாகவே அடங்கும். மறு படியும் கடுப்புவலியுடனே கண்ணிற் கூச்சமும் ஏற்பட்டுக் கண் களை விழிக்கமுடியாது. கண்ணிமைகள் கனக்கும். தலைவலி

யேற்படும். கொட்டாவியும் வரும். கண்களில் பீளை சாறும். இவைகள் 'அக்கரரோகத்தின்' குறிகளாகும்.

குறிப்பு:—

கண்ரோகங்களில் முதலாவதாகச் சொல்லப்பட்ட அக்கர ரோகத்தையும் கவனிக்கவும்.

## 63. பில்லம்

கருதியே நிமையினுள்ளே கனித்த * மாங்கிஷம்போற்றேன்றி
யருவியே யுருத்தி நொந்து வதிகமாய்ச்சிவந்து கூசு
மருவியே பூவுந்தோன்று மாறாதே பீளைபாயும்
பெருகியே நீரும் பாயும் பில்லமாமென்று சொல்லே. (௬௩)

(இ-ள்)

கண்களிமையினடியில் மாம்ஸ வளர்ச்சி ஏற்படும். அது கண்விழியை உருத்தி, வலியையுமுண்டாக்கும். கண்கள் சிவப்பாகும். பார்க்கவொட்டாமல், அதிகமான கூச்சமும் உண்டாகும். பூவுமேற்படும். பீளையும், கண்ணீரும் சாறும். இவைகள் 'பில்லரோகத்தின்' இலட்சணங்களாம். (Trachoma)

## 64. அழித்திடு பிரிதல்

பிரித்திடுங் கண்ணுஞ்சூழப் புண்ணுமாம் பீளைபாயு
மெரிந்திடும் விழியிற்குத்து மெதுத்தது நீருங்காணுஞ்
சொரிந்திடுஞ் சீயும்போலச் சோர்ந்துகண் விழிக்கவொட்டா
தழிந்திடுங் கருவிபோலா மழித்திடும் பிரிதல் தானே. (௬௪)

(இ-ள்)

கண்களிலிருந்து பீளை பாயும். விழியில் புண்களுண்டாகி எரிச்சலும், குத்துவலியுமேற்படும். நீர்ப்பாய்ச்சலுண்டாகும். சீழ் போன்ற நிறத்துடன் கண்ணீர் சொரியும். கண்களை விழிக்க இயலாது. இக்குறிகளிலிருந்து 'அழித்திடுபிரிதல்' என்று தெரிந்துகொள்ளவும்.

* 'துர்மாங்கிஷம் போல' என்று மற்றொரு பாடபேதம்.

## 65. பித்தகாசம்

கண்ணினிற் காசம் வந்தாற் கலங்கியே புகைந்து காட்டும்
நண்ணிய வெள்ளை தன்னில் நரம்புகள் சலங்கள் கோர்த்து
விண்ணிலே நோக்கிப் பார்க்கில் விதனமு மிகவுண்டாக்கு
மண்ணிலே பித்தகாச மதின்வழி பிறக்கும் வாறே. (சுரு)

(இ-ள்)

பார்வைப் புகைச்சலாகும். வெள்ளை விழியிலுள்ள நரம்புகளில் கண்ணீர் கோர்த்து நிற்கும். மேல்நோக்கிப் பார்க்கையில் வலி அதிகமாகும். இவைகள் பித்தகாசத்தின் இலட்சணங்களாம்.

## 66. பிறவிக் குருடு

மாதாவின் கர்ப்பத்தில் வேகமான மருந்துதான் கொண்டதாலும்
போதான காலத்தில் விடங்கள் தீண்டிப் பொருந்தியே போகாதாலும்
வாகான வன்னந் தண்ணீர் வளமுடன் கொள்ளாதாலும்
பேதான மைந்தன் கண்ணும் பிறவிற்குருடதாமே. (சுசு)

(இ-ள்)

தாயார் கர்ப்பமாயிருக்கையில் அதிகவேகமான மருந்துகளை அதிகமாக உபயோகிப்பதாலும், கர்ப்பகாலங்களில் விஷங்கள் தீண்டி அவை தேகத்தைவிட்டுப் போகாததாலும் கர்ப்பிணியாயிருக்கையில் சாப்பாடு, தண்ணீர் முதலிய ஆகாரங்களைச் சரியாக உட்கொள்ளாததாலும் பிறக்கும் குழந்தையின் கண்கள் பிறவிக் குருடாகும்.

## 67. துத்திடு காசம்

குத்திடுங் கண்ணைச் சூழக் குவளையிலருவுருத்திப்
பத்திடும் வெள்ளைமூடிப் பரந்திடும் விழியடங்க
வுத்திடும் பார்வை குன்றியொளியதும் நைந்து காட்டுந்
துத்திடுங் காசமென்று சொல்லுவார் பெரியோர்தானே. (சுஎ)

(இ-ள்)

கண்களைச்சுற்றிக் கடுப்புவலியேற்படும். குவளையில் கண்ணிமைகளின் அடிப்புறத்தில்) உருத்தலுண்டாகும். வெள்ளையான சவ்வு விழிமுழுவதும் பரவிவிடும். பார்வை குன்றிவிடும். ஒளியும் மத்திமமாகும். இக்குறிகளினுல் 'துத்திடு காசம்' என்று அறியவும்.

## 68. துன்னுவெண் புகைச்சல்

கனத்து விழியுஞ்சதை வளர்ந்து கறுத்த சோதிவெளுப்பேறி
சினத்து முகமுங் கடுப்புவலிச் சிறுகத்தினவும் பீளையிடு
மினத்துப் பார்வைப் பலவிதமாயெங்கும் வெளுப்பாய்த்தான்
[ரேன்று
மனத்து மயக்கந்துன்னி வெண்புகைச்சல் மாருதிந்தக் குணங்
[தானே. (சூஅ)

(இ-ள்)

விழிகள் பாரமாகிச் சதையும் வளரும். கருவிழி மங்கி வெளுக்கவாரம்பிக்கும். முகம் கோபிக்கும். கண்களில் கடுப்புவலியுடன் அரிப்புமேற்படும். அடிக்கடி பீளை சாறும். நோயாளியின் பார்வை ஒரே வெளுப்பாகும். மயங்கி விழுவான். இவைகள் 'துன்னு வெண்புகைச்சலின்' குறிகளாகும்.

## 69. சோர் கண்டுடிப்பு

கூர்க்கண்சோதி தனைக்கடுத்து குத்திப்பதைக்க விமையடங்க
நீர்க்கண் பொசிந்து வுறக்கமற்று நிலையிற்கிடக்க வொட்டாது
சீர்க்கண் போலச் சிறுநாளாஞ் சினத்து வெடுக்குஞ் சடுதி
[யிலே
சோர்கண் டுடிப்பு விதுவென்று சொல்லியிருப்பர் பெரியோரே.
(சூகூ)

(இ-ள்)

விழியைக்கடுக்கும், இமையில் குத்துவலியேற்படும். கண்களில் கண்ணீர் பொசிந்து, தூக்கமும் வராது. ஒருநிலையிலிருக்கவொட்டாது. சீக்கிரத்திலே கோபிக்கக் கூடியது. இக் குறிகளினுல் 'சோர்கண்டுடிப்பு' எனத்தெரிந்துகொள்ளவும்.

## 70. வருஞ்சலரோகம்

பெருஞ்சலம் விழுந்து கண்ணும் பேதமாய்ச் சிறுகிக்காணுங்
கருஞ்சலம் போலும் பாயுங் காந்தியு மந்தமாகு
மருஞ்சல மருவிபோல வனலுட னழற்றிக் காட்டும்
வருஞ்சல ரோகமென்று வகுத்தனர் மறைவல்லோரே. (எ௰)

(இ-ள்)

அடிக்கடி கண்ணீர் பெருகுவதால் கண்கள் சிறியதாகும். கண்ணீரும் கலங்குவதுடனே பார்வையும் குறையும். அரிவியிலிருந்து நீர் விழுவதுபோலக் கண்ணீர் தாரை தாரையாக வெளிப்படும். இந்நோய்க்கு 'வருஞ்சலரோகம்' என்று பெயர்.

## 71. வெண்ணேக்காடு

கூசுங் கடுக்கு நீர் முட்டுங் குளிர்ந்து சரீரமெரிவுண்டா
மாசுங் கண்ணுஞ் சிறு சிவப்பு மதியக் தன்னில் விழிக்காது
தேசுங்குண்ணு நடக்கவொண்ணுத் தயங்கிக் குணங்கள் [பலவாகிப்
பேசுங் குணம்வெண் ணேக்காடு பேரிட்டழைப்பர் பெரியோரே. (எக)

(இ-ள்)

கண்கள் கூசும், கடுப்புவலியும், நீர்முட்டலுமுண்டாகும். தேகமெங்கும் எரிச்சலேற்படும். கண்களும் சிறு சிவப்பாகும். மத்தியான நேரங்களில் கண்களை விழிக்க இயலாது. தயங்கித் தயங்கி நடப்பான். இக்குறிகளினல் 'வெண்ணேக்காடு' என்று கண்டு கொள்ளவும்.

## 72. சுழற்றிடு பில்லம்

வழற்றிடுங் கீழுமேலும் வலுப்படுஞ் சதைசிவப்பு
வுழற்றிடுங் கண்ணைச்சுற்றி யுருத்தியே நீரும் பாயுங்
கழற்றிடு மணிபோலாகுங் கருமணி குவிந்து நிற்குஞ்
சுழற்றிடு பில்லமென்று சொல்லுவரிதனைக் கண்டே. (எஉ)

(இ-ள்)

விழிக்குக்கீழும், மேலும் அழற்சியேற்படும். சதைவளர்ச்சியுமேற்பட்டு கண்களை வருத்தும். நீர்ப்பாய்ச்சலுண்டாகும்.

கருவிழி குவிந்து காணப்படும் (சிறுக்கும்) இக்குறிகளால் ‘சுழற்றிடு பில்லம்’ என்று கண்டு கொள்ளவும்.

## 73. மயிற்புழு வெட்டு

நீட்டிய தினவுங்கூச்ச நீர்வரு மிமையும் வீக்கங்
கூட்டியே பீளைசேருங் குருமுளை போலத்தோன்று
நாட்டியே மயிருதிர்ந்து நற்சதை ரத்தம் வீழுங்
காட்டிது மயிற்புழுவெட்டுக் கண்டவ ருரைத்தவாறே. (எரு)

(இ-ள்)

கண்களில் அரிப்பு, கூச்சம், நீர்ப்பாய்ச்சல் முதலியவைகளுண்டாகும். இமைகள் வீங்கும். பீளையும் சாறும். கண்களில் சிறிய முளையும் தோன்றும். இமை மயிர்களுதிர்ந்து சதையும், இரத்தமும் வெளிப்படும். இதனால் ‘மயிர் புழு வெட்டு’ எனக் கண்டுகொள்ளவும்.

## 74. விதன மந்தாரம்

கடுக்கும் வலிக்குங் குத்துண்டாங் கண்ணைச்சூழச்சுருக் [கென்னு
மிடுக்குமிமையை மேனேக்கி யிழுத்துவலிக்குந்தலையடங்க
நடுக்குங்குளிருஞ் சுரமுண்டா நாவும்வரண்டு தாகமுமா
மிடுக்குநீரும் பீளைகட்டும் விதனமந்தாரக்குணமிதுவே. (எச)

(இ-ள்)

கடுப்புவலியுடன் கண்களைச் சுற்றிலும் குத்தலுமுண்டாகும், இமைகளை மேனேக்கி இழுத்துத் தலைவலியேற்படும் குளிர் சுரமுண்டாகும். நாக்கு வரண்டுபோய் அதிக தாகமுமேற்படும். கண்ணீரும், பீளையும் அதிகமாகச்சாறும். இவைகள் ‘விதனமந்தாரத்தின்’ குறிகளாகும்.

## 75. வளைந்தெழு ரோகம்

புருவங்குவளைக் கடைக்கண்ணிற் புண்போற் சதையும் [வளர்ந்து வரு
மருவுஞ்சிவப்பு நீர் முட்டு வண்ணுந்து விழிக்கவொட்டாது
உருவங்குலைக்குங் கண்முகமு மொளியுமழுங்கிப் புகைச்சலுண் [டாம்
வருவதிவைகள் குணந்தானும் வளைந்தெழுரோக மெனலாமே. (எரு)

(இ-ள்)

புருவம், குவளை (கீழிமை) இவ்விடங்களிலும், கடைக்கண்களிலும் புண்களைப்போலச் சதை வளர்ந்துவரும். கண்களுஞ் சிவந்து கண்ணீரும் மல்கும். அண்ணாந்து விழிக்க முடியாது. பார்வையும் மந்தப்படும். கண்கள், முகம், ஒளி முதலியவைகள் மழுங்கும். இவைகளைக்கொண்டு 'வளர்ந்தெழுரோக' மென்று தெரிந்து கொள்ளவும்.

## 76. சுடர்பல தோற்றல்

பார்க்க விளக்கைப் பலவிதமாய்ப் பரந்துகாணு நீலம் போல்
கூர்க்க விழிக்கில் வலியுண்டாங் குவளை தன்னை யுறுத்திவிக்குங்
கார்க்க வெள்ளை விழி சிவக்குங் கனக்க வலிக்குந் தலையடங்கத்
தூக்கமதிகம் வாராது சுடர் பல தோற்றலெனலாமே. (எசு)

(இ-ள்)

எரியும் விளக்கைப்பார்த்தாலது பலவிதமாகத் தோன்றும். நீல நிறமாகத்தோன்றும். கண்களை அகலவிழிக்கையில் வலி அதிகமாகும். குவளை (கீழிமை) யில் உறுத்தலுண்டாகும். வெள்ளை விழி சிவந்து காணும். தலை வலியேற்படும். இரவில் தூக்கம் வராது. இக்குறிகளினால் 'சுடர்பல தோற்றல்' எனக் கண்டுகொள்ளவும்.

## 77. வீங்கி விழித்தல்

தாங்கி யுருத்தி யிமைகனத்துச் சற்றே விழித்தற் குத்துண்டா
மூங்கில் முளைப்போற் கடைக்கண்ணில் முதிர்ந்த சதைதான்
[எனக் காணு
மெங்கு விதனங் கண் சிவக்கு மெரித்தே யிருக்குமென்னேரம்
வீங்கும் புடைக்கும் நீர் முட்டும் வீங்கி விழித்தல் குணந்
[தானே. (எஎ)

(இ-ள்)

இமைகளை யுருத்திக் கனக்கவாரம்பிக்கும், விழிக்கையில் குத்துவலியுண்டாகும். மூங்கிலின் முளையைப்போலக் கடைக் கண்களில் சதை வளரும், கண்கள் சிவப்பாகும், எப்போதும்

கண்களில் எரிச்சலுண்டாகும். வீக்கமும், நீர்ப்பாய்ச்சலு மதிகமாகும், இவைகள் "வீங்கிவிழித்த" லின் குணங்களாகும்.

## 78. மதன மந்தாரம்

இருண்டு கறுத்துப் புகை சூழ்ந்து இரவிலதிக விதனமுண்டா
மருண்டு நடையுந் தலை வலிக்குமமர்ந்து சிறுநாள் வந்தெடுக்கு
முருண்டு கண்ணும் பீளையுடனுதிரம் போலச் சிவந்திருக்கு
மருண்டு தனந்தானதிகமுமா மதனமந்தாரக்குணமிதுவே. (எஅ)

(இ-ள்)

இரவு நேரங்களில் கண்கள் இருண்டு, பார்வை புகைச்ச லாகிப் பலவிதமான வேதனைகளுண்டாகும். தலைவலியேற் படும், கண்களில் பீளை சார்ந்து, சிவக்கும். இக்குறிகளினால் "மதன மந்தாரம்" என்று தெரிந்து கொள்ளவும்.

23-வது ரோகமான "மதன மந்தாரத்தையும்" கவனிக்க.

## 79. சுடரதி மாங்கிஷம்

படருஞ் சோதி தன்னுள்ளே பச்சைவண்ணந் தான்காணு
மடரும் புகைச்சல் நாள்தோறு மடங்கு விழியுஞ் சதை வளரு
மிடரு மெரியு நீர்பொசியு மெதிர்த்துப் பார்க்கி லேகுகுதான்
துடருங் குணங்க ளிவைதானுஞ் சுடரதி மாங்கிஷ
[மெனலாமே. (எகூ)

(இ-ள்)

சோதி (பாபா) பச்சை நிறமாகும். புகைச்சல் நாள் தோறுமதிகமாகிக் கண்களில் சதையும் வளரும். எரிச்ச லுடனே நீர்ப்பாய்ச்சலுமுண்டாகும். இக்குறிகள் "சுடாதி மாங்கிஷ" மென்ற நோயிலுண்டாகும்.

## 80. ஊடை எழுச்சி

காதிற் கண்ணிற் குத்தி நொந்து கனக்கவீங்குஞ் செவியடங்க
மோதிச் சிவந்து விழிகூசி முதிர்ந்த சீயுங் காதில்வருஞ்
சோதித் தினவுங் கடைக்கண்ணைச் சுருக்கியிழுக்கு நீர்வடியு
மூதிக் கண்ணுந் தினவுண்டா மூடையெழுச்சி யெனலாமே.
(அ0)

(இ-ள்)

காதுகள், கண்கள் முதலியவிடங்களில் குத்துவலி யேற்பட்டுச் செவிவரையில் வீக்கமுண்டாகும். கண்கள் சிவப்பாகி பார்வையுங் கூசும். காதிலிருந்து சீழும் வடியும், கண்களிலரிப்புடனே சுருங்கி, நீர்ப்பாய்ச்சலுமுண்டாகும். கண்கள் வீங்கும். *'ஊடையெழுச்சி' என்ற நோயில் இக் குறிகள் காணப்படும்.

## 81. வாரெழுகாசம்

நீர்விழும் புகைச்சலுண்டாம் நித்தமுங் கடுக்குங் கண்ணே
யூர்வது சிவந்து கூசி யுள்ளங்கை காலுங் குத்துங்
கார்முகில் போல வெங்குங் கனத்ததுயிருண்டு தோற்றும்
வாரேழு காசமென்று வகையுடனுரைத்தவாறே. (அக)

(இ-ள்)

கண்களிலிருந்து கண்ணீர் வடியும், புகைச்சலுமுண்டாகும். தினமும் கண்களில் கடுப்பு வலியேற்படும். விழிகள் சிவந்து பார்வையும் கூசும். உள்ளங்கை, உள்ளங்கால் முதலிய விடங்களில் குத்துவலியேற்படும். கருமேகம் வந்தாப்போல எவ்விடமும் கனத்து இருண்டு தோன்றும். இக்குறிகளினுல் "வாரெழுகாசம்" என்று கண்டுகொள்ளவும்.

## 82. உயர்ந்து கண்புடைத்தல்

மெத்தவே கண்கணொந்து மேவியே புடைத்து வீங்கி
நித்தமும் வாதைகாட்டு நினைவற மூர்ச்சையாகுஞ்
சுத்தமாய்ச் சதை வளர்ந்து சுருக்கிட்டு நீரும்பாயு
முத்தவே குணங்கடானு முயர்ந்து கண் புடைத்தல்தானே.
(அஉ)

(இ-ள்)

கண்கள் அதிகம் புண்ணுகி, வீக்கமுண்டாகும். தினமும் அதிகமான வலியேற்படும். அடிக்கடி நினைவு தப்பி மூர்ச்சை போடும். சதையும் வளர்ந்து நீர்ப்பாய்ச்சலுமுண்டாகும். இக்குறிகள் கண்டிடில் அது "உயர்ந்து கண் புடைத்தல்" என்ற நோயாகும்.

---

* 10. நெ. சுவடியில் இந்நோய்க்கு 'உண்டையெழுச்சி' என்ற பெயரும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## 83. வாலகாசம்

காலமே புகைந்து ஜாமங்கண்டபின் விட்டுப்போகு
நீலம்போ லொருக்காற்ருேற்று நிறம் விழி வேரதாகுஞ்
சாலவே நீரும் பாயுஞ் சதை மூடும் வெள்ளை தன்னில்
வாலிப வயதிற் காணும் பாலகாச வகைதானே. (அ௩)

(இ-ள்)

காலை வேளையில் பார்வை புகைச்சலாகும். ஒரு ஜாமங் கழித்து அது விட்டுபோகும். சிற்சில சமயங்களில் நீலவர்ண மாக எல்லாம் புலப்படும். விழியில் நிறமும் மாறுபாடடையும். நீர்ப்பாய்ச்சலுண்டாகி வெள்ளை விழியில் சதையும் வளரவாரம்பிக்கும். இந்நோய் வாலிப வயதினருக்கே யதிக மாகக்காணும். இது "பாலகாசமாகும்".

## 84. நீர்பில்லம்

இமையைக் கனத்துக் கடுப்புண்டாயிடிக்கி நீரும் பீளையிடுங்
குமையச்சிவந்து வெளுப்புண்டாய்க் கூசிவிழியுங்கீழ் நோக்
[குஞ்
சமையத்திரண்டு புருவக்கீழ்ச்சதையும் வளர்ந்துவுருத்திவிக்கு
நிமையைத் திறக்கிற்சதைமூடும் நீர் பில்லமெனலாமே. (அச)

(இ-ள்)

இமைகள் கனமாகி, கடுப்புவலியுடன், கண்ணீரும் பீளையு மதிகமாகச்சாறும். விழிகள் சிவந்தும் வெளுத்துமிருக்கும். பார்வைகூசும். கீழ்நோக்கிய பார்வையுமுண்டாகும். இரண்டு இரப்பைகளின் கீழே சதைவளர்ந்து கண்களையுருத் தும். நிமையைத்திறந்தால் சதைமூடும். இக்குறிகள் 'நீர்ப் பில்லம்' என்ற ரோகத்தில் காணப்படும்.

## 85. மந்தாரகாசம்

சாயங்கால மழைமேகஞ் சண்டைக் கசப்புப் புளிவிரும்பல்
காயங் கனக்கில் மலங்கட்டிக் கன்னியுடனே பேசிடுகி
லாயமான சோதிதனிலருண்ட புகைச்சல்தானுண்டா
மாயம்போல வந்தெடுக்கு மந்தாரகாச மிதுதானே. (அரு)

(இ-ள்)

சாயங்காலத்தில் மழை, மேகம், இவைகளிருந்தாலும், சண்டை, கைப்பு, புளிப்பு முதலியவைகளிலதிக விருப்பமேற்பட்டாலும் தேகம் கனத்து, மலம் கட்டிபோம், ஸ்திரீகளுடன் பேசும்போதும், விழியில் புகைச்சலுண்டாகும். இது மந்தார காசத்தின் குறிகளாகும்.

## 86. குவளை விப்புருதி

நீர்விழுங் கடைக்கண்குத்து நிமைக்குள்ளே சீழும்பாயு
மூர்வது மிகவுண்டாகு முருத்தியே சிவந்தரிக்குஞ்
சீர்பெற விழிக்கவொட்டாச் சிறிதுநாள் குணமுங் காட்டுங்
கூர்குணமிவைகள் தானுங் குவளைவிப்புருதியாமே. (அசா)

(இ-ள்)

கண்களிலிருந்து நீர் வடியும். கடைக்கண்களில் குத்துவலியுண்டாகும். இமையினடியில் சீழுண்டாகும். உருத்தலுடன் சிவப்புமேற்படும். கண்களை விழிக்க இயலாது. சிறிதுநாள் சென்றபின் குணமாகும். இக்குறிகளினால் 'குவளை விப்புருதி' எனத் தெரிந்துகொள்ளவும்.

## 87. கும்பிமைத்தடித்தல்

பொங்கியே பீளையுண்டாம் போதவேயிமை கனக்கு
பங்கியே புகைந்து நீரும் மாருதே வெளுத்து வீழு
மங்கிபோல் முகமுமெய்யுமரோசிகம் வாந்தியாகுங்
மங்கிய குணங்கடானுங் கும்பிமைத்தடித்தாமே. (அஎ)

(இ-ள்)

கண்கள் பொங்கி பீளையுமதிகமாகச் சாறும். இமைகள் கனக்கும். பார்வை புகைந்து கண்ணீர் சார்ந்து கண்களும் வெளுப்பாகும். முகம் மங்கும். உடலும் தளரும். அரோசிகம், வாந்தி முதலியவைகளுமுண்டாகும்.

## 88. குவளைகாசம்

புருவத்தினைந்து குத்திப்புடைத்திடுங் கடைக்கண் கூடக்
கருவுற்ற கருப்பினுள்ளே கலந்திடு நீலம்போலத்
திருவுற்ற மேனியாளைச் சேர்த்திடி லதிகமாகுங்
குருவுற்றச்சூழ வெள்ளைக் குவளைதன் காசமாமே. (அஅ)

(இ-ள்)

புருவங்களில் குத்துவலியுடன் வீக்கமுண்டாகும். கடைக்கண்ணோரங்களிலும் வீக்கமுண்டாகும். கருவிழி நீல நிறமாகும். ஸ்திரீ சேர்க்கையிருந்தால் வியாதி அதிகப்படும். இக்குறிகளினால் 'குவளைகாசம்' என்று தெரிந்து கொள்ளவும்.

## 89. கொடும்புழுவெட்டு

போதவேயிமைகனத்துப் பொங்கியதினவுண்டாகு
மூதவே யெரிப்புண்டாகு முதிர்ந்திடு மயிர்க்காலெல்லாங்
கால்தலையுடம்பதெங்குங் கரகரவென்று தோற்றுங்
கோதியேயிமைகள் தானுங் கொடும்புழு வெட்டதாமே. (அசு)

(இ-ள்)

இமைகள் கனமாகிக்கோபித்து அரிப்புமுண்டாகும். எரிச்சலுமிருக்கும். மயிர்காலெல்லாங் கெட்டிப்படும். கால் தலை, உடம்பு முதலியவிடங்களில் கரகரப்பு உண்டாகும். இக்குறிகளினால் 'கொடும் புழுவெட்டு' எனக்கண்டுகொள்ளவும்.

## 90. வளைகீகாசம்

கறுக்கும் பசுக்குஞ் சோதிதனிற் கண்டார் முகமும்நீலம்போ
லறுக்கு முருத்துங் கடைக்கண்ணிலனலா முடம்புதலை [யடங்க
வெறுக்கும் வார்த்தை யனம்விரும்பார் வேருஞ் சரீர நாள் [தோறும்
வறுக்குந் தாகங் கண்புகையும் வளகீ காசமெனலாமே. (கூ0)

(இ-ள்)

சோதி (பாபா) சிற்சில சமயங்களில் பசுமை நிறமாகவும் கறு நிறமாகவுந் தோன்றும். யாரைப் பார்த்தாலும் நீல நிறமாகத்தோன்றும். கடைக்கண்களில் உருத்தலேற்படும். உடம்பு, தலை முதலிய இடங்களில் சூடு அதிகமாகும். பிறர் பேசுவதைச் சகிக்கமாட்டார், சாப்பாடு செல்லாது. சரீரம்

நாள்தோறுமிளக்கும். தாகமும், கண் புகைச்சலுமேற்படும். இக்குறிகள் 'வளகீகாச'த்திலுண்டாகும்.

## 91. அந்தரவிரணம்

இதன் செய்யுள் சுவடியில் காணப்படவில்லை.

## 92. இமையோடரதல்

கண்ணிற் புருவங் கீழ் தசையுங் கனத்துத் துடிக்குமென் [னேரம்
விண்ணைப் பார்க்கில் மிகக்கூசும் வீணைபோலத் தெறித் [திழுக்குங்
குண்ணிச் சரீரம் பயந்தோற்றுங் குவளை கடுக்கும் நீர்வடியு
தெண்ணித் தலையுந் தினவெடுக்கு மிமையோடரதலெனலாமே. (கூஉ)

(இ-ள்)

புருவமும், கீழிமையுங் கனத்து, எப்போதும் குத்து வலியு மேற்படும். ஆகாயத்தைப் பார்க்கில் கண்கள் அதிகமாகக் கூசும். அப்போது வீணை மீட்டுவதுபோன்று 'பளிச்' 'பளிச்' சென்று தெறிக்கும், சரீரம் குன்றும், அடிக்கடி பயப்படுவான். கடுப்பு வலியுடனே கண்ணீர் பாய்ச்சலுமுண்டாகும், தலையில் அரிப்பு மேற்படும். இக்குறிகளினல் 'இமையோடரதல்' என்று அறியவும்.

## 93. நத்தைப்படுவன்

குத்தியிழுக்குந் தலையடங்கக் கூடும் புருவஞ் சுழிநோகு
முத்தி வலித்து முளைப்போல முளைக்குஞ் சோதி கருப்பி [னுள்ளே
சுத்தி வலித்துப் புடைத்தெழுந்து துயரத்தியக்க முண்டாகும்
நத்தியுடைந்து சீழ்பெருகும் நத்தைப்படுவ னெனலாமே. (கூரு)

(இ-ள்)

தலைமுழுவதும் குத்துவலியுண்டாகும். புருவத்தில் சுழித்து சுழித்து வலியேற்படும். வலியதிமானபின் முளை யெழும்பும், சோதி சிறுக்கும் (பார்வை மந்தமாகும்) கருப்பு

விழியில் வலியேற்பட்டு, புடைத்து, மனவேதனையும், தயக்கமும் அதிகமாகும். பிறகு இவைகள் உடைந்து சீழ் பெருகும். இக்குறிகளைக்கொண்டு 'நத்தைப்படுவன்' என்று கண்டு கொள்ளவும்.

## 94. குவளைப்படுவன்

வதிக்க வீங்குங் கண்ணடங்கக் கடைக்கண்டன்னை மிகக்
[குத்தும்
பதித்தமணிபோ லசையாது பரந்து சிவக்கும் விழிமூடு
முதிக்கு முளைப்போற் சீழ்க்கட்டி உதிரநீரும் விழுந்துவிடுங்
கொதிக்குமனல்போல் முகமெல்லாங் குவளைப்படுவனென
[லாமே. (௯௪)

(இ-ள்)

கண் முழுவதும் வீங்கும். கடைக்கண்களில் குத்துவலி யேற்படும். விழியையசைக்கவொட்டாது. கண்கள் சிவப் பாகும். விழிகளைத் திறக்கமுடியாது. இமையில் முளை ஏற் பட்டு அது உடைந்து சீழும், உதிரமும் பெருகும். முகம் கொதிக்கும் அனல்போல உஷ்ணமாகும். இக்குறிகளிலிருந்து 'குவளைப்படுவன்' என்று அறிந்துகொள்ளவும்.

## 95. புத்தியழித்தல்

உருவம் பலவாம் தோற்றுமுக முதைய காலம் புகைந்திருக்கு
மருவும் நீரும் பீளைக்கட்டும் அசைந்துவறிவு பேதிக்கும்
வெருவுமனத்தில் மிகவுண்டாம் வேருங்கருமந் தனைச் செய்
[யில்
புருவந்தனையே மேலிழுக்கும் புத்தியழுத்தலெனலாமே. (௯௫)

(இ-ள்)

உருவங்கள் பலவாகத் தோன்றும். விடியற்காலத்தில் எல்லோர் முகமும் புகைந்து தோன்றும். தேகத்தில் அனத்த லேற்படும். கண்களிலிருந்து நீரும், பீளையும் அதிகமாகப்பாயும். அறிவும் பேதிக்கும். இதர வேலைகளைச் செய்யும்போது புருவங்களை மேலேயிழுக்கும். இக்குறிகள் 'புத்தியழித்தல்' என்ற நோயிலுண்டாகும்.

## 96. பொங்கிய விதனம்

மங்கியே கண்ணும் வீங்கு மாருத வீக்கம் பீளை
யங்கிபோலெரிந்து நொந்து வதிகமாய் நீரும்பாயுந்
தங்கியே கங்குல்நேரந் தன்வச மறவேநோகும்
பொங்கிய விதனமென்று புவிதனிலுரைத்தார் மேலோர். (கூசு)

(இ-ள்)

கண்கள் மங்கும். சீக்கிரமே வடியாமல் வீக்கமதிகமாகும். பீளையதிகமாகச் சாறும். கண்கள் நொந்து அதிகமான நீர்ப் பாய்ச்சலுண்டாகும். இரவில் சகிக்கமுடியாத வலியேற் படும். இக்குறிகளினல் 'பொங்கிய விதனம்' என்று கண்டு கொள்ளவும்.

# ஆயுர்வேத முறைப்படி நேத்திர ரோகங்களின் வகையும், குறிகுணங்களும்

| | |
|---|---|
| 1. க்ருச்சிரோன்மீலம் (சிரமப்பட்டு விழித்தல்) | இரப்பையிலுள்ள சிரைகளில் (இரத்தக் குழாய்களில்) வாயு சேர்ந்து தூங்கி யெழுந்திருந்தவுடன் கண்களை விழிக்கமுடியாமல் செய்கிறது. தூசுக்கள் நிறைந்திருப்பது போலவுமிருக்கும். கண்களை கசக்கிய பின்புதான் விழிக்க முடியும். |
| 2. நிமேஷா (அடிகடி கண்சிமிட்டல்) | இரப்பையில் அடிக்கடி வாயு பிரவேசிப்பதால் அடிக்கடி கண்களைச் சிமிட்டுதல். |
| 3. வாதஹதம் (வாயுவினல் கெடுதியடைதல்) | கண்களிலுள்ள இரைப்பைகளின் ஸந்திகள் (Canthus) வேலை செய்யாததால் கண்களைச் சிமிட்ட முடியாமலிருத்தல் அல்லது மிகக் கொஞ்சமாகச் சிமிட்டுதல். |
| 4. குப்பீகா (பித்தத்தினல் பின்னைக் கொட்டைபோன்ற கட்டி உண்டாதல்) | பித்தம் அதிகரிப்பதினல் கண்களின் இரைப்பையின் நடுவில் பின்னைக் கொட்டையளவு கட்டியுண்டாகும். இதற்குக் 'குப்பிகா' எனப் பெயர். |
| 5. பித்தோத்க்லிஷ்டம் (பித்தத்தினல் பாகமடைதல்) | இரைப்பைகளில் எரிச்சலுடனே அழற்சியேற்பட்டு சிவப்பாகும். தொடமுடியாத வலியுண்டாகும். இது பித்தாதிக்யத்தினலுண்டாகும். |
| 6. பக்ஷ்மசாதம் (இமைமயிருதிர்தல்) | பித்தம் இரைப்பையின் நுனியில், எரிச்சலையுண்டாக்கிப் பின்பு இமை மயிர்களை உதிரச்செய்கிறது. |

| | |
|---|---|
| 7. போதகீ (கபத்தினுலேற்படும் கடு களவு கட்டி) | கபத்தினுல் கடுகளவுள்ள சிறு சிறு கட்டிகளேற்படும். அவைகள் வெளுப்பாகவும், ஸ்திரமாகவுமிருக்கும். அதனுல் வீக்கம், வலி, அரிப்பு, பீளேயுடன் கண்ணீர் சாரல் முதலியவைகளுண்டாகும். |
| 8. கபோத்க்லிஷ்டம் (கபத்தினுல் தூஷிக்கப் படுதல்) | கபத்தினுல் கண்ணிரெப்பைகள் அழுற்சியுற்றும் பீளே சார்ந்தும் ஸ்தம்பித்துப்போகும். |
| 9. லகணன் (கபத்தினுலேற்படும் கட்டி) | கபத்தினுல் இரெப்பைகள் வெளுப்பாகி வலி, பக்குவம் முதலியவைகளில்லாமல் அரிப்புடன் கூடிய கடினமான கட்டி உண்டாகும். சிற்சில சமயங்களில் வலி யேற்படும். கட்டி எலந்தைக்கொட்டைப் பிரமாணமாக இருக்கும். |
| 10. உத்ஸங்கா (ரத்தம் தூஷிப்பதாலேற்படும் கட்டி) | ரத்ததோஷத்தால் இரெப்பைகள் சிவப்பாகி சிறு சிறு கொப்பளங்களுண்டாகும். |
| 11. ரக்தோத்க்லிஷ்டம் (ரத்தத்தினுல் தூஷிக்கப் படுதல்) | கோடுகளுடன் தொடமுடியாத வலியுண்டாகும். |
| 12. ரக்தார்சஸ் (ரத்தத்தினுல் மாம்ஸ வளர்ச்சி) | இரெப்பைக்கடியில் மாம்ஸம் வளர்ச்சியடைந்து ஸ்தம்பித்து, எண்ணெய் பசையுள்ளதாக ஆகி, வலியும் எரிச்சலுமேற்படும். செந்நிறமாகக் கண்ணீர் வடியும். வளர்ச்சியை அறுத்தால் மறுபடியும் அது கொஞ்சம் கொஞ்சமாக வளரும். |
| 13. அஞ்ஜனு (இரத்தத்தினுல் ஏற்படும் கட்டி) | இரெப்பையின் மத்தியிலோ, அல்லது கடைசியிலோ ஸ்திரமான அரிப்புடனும், வலியுடனும் கூடிய பயறளவுள்ள கட்டிகள் உண்டாகின்றன. இது தாம்ர நிறமுள்ளதாக இருக்கும். |

| | |
|---|---|
| **14.** பிஸவர்த்ம (தாமரைத் தண்டுகளின் நூல் பிரமாணமுள்ள துவாரங்களினல் சூழப் பட்டவை) | த்ரிதோஷ கோபத்தினல் இரெப்பையின் மேல் பாகம் வீங்கும், அதன் அடிபாகத்தில் சிறு சிறு துவாரங்கள் உண்டாகும். கண்ணீரும் வடியும். |
| **15.** உத்க்லிஷ்டவர்த்ம (தூஷிக்கப்பட்ட இரெப்பை) | ரத்ததோஷத்தினுலும் த்ரிதோஷத்தினுலும் தூஷிக்கப்பட்டுக் காரணமின்றி, கண்கள் வரண்டு போம். |
| **16.** ச்யாவவர்த்ம (கருமையான இரெப்பை) | த்ரிதோஷ கோபத்தாலும், ரத்தத்தினுலும், இரெப்பை கரு நிறமடைந்து வலி, அழற்சி, வீக்கம் முதலியவைகளுடனிருக்கும். |
| **17.** ச்லிஷ்டவர்த்ம (தோஷங்களினலொன்று சேர்ந்த இரெப்பை) | எல்லா தோஷங்களும் கோபிப்பதால் இரெப்பைகளில் அரிப்பு, வீக்கம் இவற்றுடன் நிறவேறுபாடுமுண்டாகும். |
| **18.** ஸிகதாவர்த்ம (மணல் போன்ற கட்டியுடன்கூடிய இரெப்பை) | இரெப்பைகளினடியில் சொர சொரப்புள்ளதும், வரண்டதும் மணல்போன்ற பல கட்டிகளுண்டாகும். (Trochoma) |
| **19.** கர்த்தமம் (சேறுபோன்று கருநிறமடைதல்) | இரெப்பை கருமை நிறமடைந்து சேறைப்போல் குழம்பியிருக்கும். |
| **20** பஹுல வர்த்ம (அதிமாம்ஸ வளர்ச்சி) | இரைப்பையிலுள்ள மாம்ஸம் வளர்ச்சியடைந்து நான்கு பக்கங்களிலும் சமமாகப் பரவியிருக்கும். |
| **21.** குகூணகம் (தாய்ப்பாலின் கெடுதலால் குழந்தையின் கண் வீங்குதல்) | கெடுதலான தாய்ப்பாலைச் சாப்பிடுவதால் குழந்தையின் கண்கள் அதிகமாக வீங்கிச் சிவந்து, எதையும் பார்க்கவொட்டாமல் செய்யும். பீளை சாறும். |

22. பக்ஷ்மோபரோதம் (இரெப்பைகள் சுருங்குதல்) — இரெப்பைகள் சுருங்குவதனுல் அதன் நுனியிலுள்ள இமைமயிர்கள் தடித்து உட்புறம் வளைந்து விழிகளைக் குத்தும். அல்லது அங்கிருந்து மயிரும் வளரும். அப்படிக் குத்துவதனுல் கண்கள் அழற்சியுற்று அதிகமாக வீங்கும். காற்று, அக்கினி இவைகளைச் சகிக்க முடியாது. அவைகளை நீக்கினுல் சில நாட்களுக்குத் தொந்தரவு நீங்கும்.

23. அலஜி (அடிக்கடி கட்டி உண்டாகும்) — இரெப்பையின் ஓரம் கடினமாகிப் பருக்கும். சிவப்பு நிறத்தையடைந்து பக்குவமானபின் அதிலிருந்து சீழும், இரத்தமும் வடியும். ஆனுல் இது மறுபடியும் மறுபடியும் கிளம்பும். (கிரிக்கட்டி)

24 அர்புதம் (பெரிய கட்டி) — இரெப்பைகளின் உட்பக்கத்திலுள்ள மாம்ஸம் அதிகமாக வளர்ச்சியடைந்து உருண்டையாகும், வீக்கம் பெரியதாக இருக்கும். வலி அதிகமாக இருக்காது. 3 தோஷங்களும் இரத்தமும் சேர்ந்து வெளியில் அசையும் இவ்விதக் கட்டியை யுண்டாக்குகிறது. ஆக நோய்கள் 24.

---

# 2. இரெப்பைகளின் சந்திப்பு, வெண்விழி, கருவிழி, இவைகளிலுண்டாகும் நோய்களும், குறிகுணங்களும்

1. ஜலாஸ்ராவம் (கண்ணீர் வடிதல்) — நேத்திரத்திலுள்ள வாயு ப்ரகோபமடைந்து கண்ணீர் சுரக்கும் நாடிகளில் பிரவேசித்து, இரெப்பைகளின் சந்திப்பிலிருந்தும், மூக்கின்

சமீபமான சந்திப்பிலிருந்தும் கண்ணீரை வடியச்செய்கிறது. அதனால் கண்களில் சிவப்பும், வலியுடனே வீக்கமும் உண்டாகும். தமிழில் இதற்கு நீர்ப்பாய்ச்சலென்று (Lachrymation) கூறுவர்.

**2. கபஸ்ராவம்** (பீளை சாரல்) — கபம் கண்களிலிருந்து வெளுப்பானதும், கொழ கொழப்பானதுமான பீளையை அதிகமாகத் தள்ளும்.

**3. உபநாகம்** (நீர்க்குமிழி போன்றது) — கபக்கோளாறினால் கண்கள் வீங்கி, முளையுடன் கூடியதாக ஆகி த்ருஷ்டி ஸ்தானத்தில் குமிழி போல் நீர் தளும்பிப் பெரிதும் வேரூன்றியிருக்கும். பிசு பிசுப்பாகவும், மிருதுவாகவும், ஸமான வர்ணமாகவும், பழுக்காததாகவும், அரிப்புடனும் இருக்கும். வலி இராது.

**4. ரக்தஸ்ராவம்** (ரத்தம் வடிதல்) — தாம்ர வர்ணத்துடனே அதிகச் சூடான கண்ணீரை வடியச் செய்கிறது. ரத்ததோஷமே இதற்குக் காரணம்.

**5. பர்வணி** (கட்டி) — இரெப்பைகள் சேருமிடத்திலுள்ள வெண்விழியில் எரிச்சலுடன் வலியைத்தரும், தாம்ர வர்ணமுள்ள பயறளவையொத்த சிறிய கட்டி உண்டாகிறது. அங்கிருந்து சிவப்பு நிறமான கண்ணீர் வடியும். (Episcleritis)

**6. பூயாஸ்ராவம்** (சீழ் வடிதல்) — த்ரிதோஷங்களும் இரத்தத்துடன் சேர்ந்து, இரெப்பைகளின் சந்திகளிலிருந்தும், கடைக்கண்களிலிருந்தும் அடிக்கடி இரத்தத்துடன் கூடிய சீழை வெளியேற்றுகிறது. அதிகமான மாம்ஸ அழற்சியும் உண்டாகும்.

**7. பூயாலஸம்** (சீழ் அடிக்கடி வடிவதனால் ரணம் உண்டாதல்)

விழியில் சிறு சிறு ரணங்களும் வீக்கமுமுண்டாகும். இரெப்பை ஸந்திப்பில் பலமான உறுத்தலுமேற்படும், சீழ் வடியும்.

**8. அலஜி** (கட்டி)

இரெப்பையும் வெள்விழியுஞ் சேருமிடத்தில் வீக்கமும் வலி, எரிச்சலும், ஏற்படும். அதற்கு 'அலஜி' எனப்பெயர்.

**9. க்ருமிகிரந்தி** (க்ருமிகளினால் ஏற்படும் கட்டி)

மூக்கின் பக்கத்திலுள்ள இரெப்பையின் சந்திப்பிலோ அல்லது பொட்டுப் பக்கத்திலுள்ள இரெப்பையின் சந்திப்பிலோ அரிப்புடன், அழற்சி, சூத்தல், நிமைமயிருதிர்தல் முதலியவைகளுண்டாகி, க்ருமியும் சீழும் அதிகமாக விழும்.

**10. சுக்லிகா** (வெள்ளை விழியில் புள்ளிகளுண்டாதல்)

பித்தம் அதிகரிப்பதால் கண்களிலுள்ள வெள்ளை விழியில் கருமை நிறமுள்ளதும், பசுமை நிறமுள்ளதும், வெள்ளையும், கருப்பும் கலந்ததுமான புள்ளிகள் ஏற்படும். அது அழற்சியையும் வலியையும் கொடுப்பதுடன் பேதியையும் தாகத்தையும், ஜ்வரத்தையுமுண்டாக்கும். பார்க்கப்படும் பொருள்கள் யாவும் அதிக வெளுப்பாகவும், அல்லது அழுக்கடைந்த கண்ணாடியைப்போலவாவது நோயாளிக்குத் தென்படும்.

**11. சுக்லார்மம்** (வெண்மையான சதை வளர்ச்சி)

கபம் விருத்தியாவதால் வெள்ளை விழிகளில் வெள்ளை நிறமுள்ள சதை கொஞ்சங் கொஞ்சமாக வளரும்.

**12. பலாசக்ரதிதம்** (கபத்தினால் சவ்வு ஏற்படுதல்)

கபத்தினால் வெள்ளை விழியில் வெளுப்பானதும், மிருதுவானதுமான சவ்வு ஏற்பட்டு வலியில்லாமலிருக்கும். அது ஸ்திரமானதும் வழவழப்பானதும், நீர்த்துளி போன்றும் இருக்கும்.

**13. பிஷ்டகம்** (மாவைப்போல் வெண்மையான வளர்ச்சி) — வெள்ளை விழியில் மாவைப்போன்று வெண்மையானதும், சிறிது உயர்ந்ததானதுமான புள்ளிகள் ஏற்படும்.

**14. ஸிரோத்பாதம்** (கண்களிலுள்ள நுண்ணிய இரத்தக் குழாய்கள் தென்படுதல் (பெருத்தல்)) — வெள்ளை விழியில் சிவப்பு நிறமுள்ள கோடுகளுடனே வலியும் உண்டாகும். வீக்கமோ, பீளையோ, கண்ணீரோ வடிவதில்லை. இந்நோய் இரத்த தோஷத்தாலுண்டாவது.

**15. ஸிராஹர்ஷம்** (கண்களிலுள்ள ஸிரைகளின் கூச்சம்) — ஸிரோத்பாதம் சிகித்ஸை செய்யப்படாமல் போனால் அந்நுண்ணிய சிவப்புக் கோடுகள் மேலும் மேலும் அதிகமாகிக் கண்ணீர்ப் பாய்ச்சலும், பார்க்கமுடியாதபடி கூச்சமும் ஏற்படும்.

**16. ஸிராஜாலம்** (ஸிரைகளின் வலை போன்ற தன்மை) — வெண்விழியில் இரத்தக் குழாய்கள் வலைபோல விருத்தியாகிக் கடினமாகவும், உயர்ந்தும் அதிக சிவப்பாகவும் தென்படும்.

**17. சோணிதார்மம்** (செந்தாமரையை யொத்த சதை வளர்ச்சி) — வெள்ளை விழியில் பரவலானதும் வழவழப்பானதும் செந்தாமரையை ஒத்த நிறமுடனுள்ள சவ்வு வளரும்.

**18. அர்ஜுனம்** (முயல்ரத்தம்போன்ற புள்ளி) — வலியில்லாததும், வழவழப்பானதும், முயல் ரத்தத்தை யொத்த நிறமுள்ள புள்ளிகள் வெள்ளை விழியில் ஏற்படும்.

**19. ப்ரஸ்தார்யர்மம்** (பரவலான சதை வளர்ச்சி) — கண்களின் த்ரிதோஷங்களும், இரத்தமும் கோளாறடைவதால், வெள்ளை விழியில் மிருதுவானதும், சீக்கிரமே வளருவதும் வலியில்லாததுமான சிவப்புங் கருப்புங் கலந்த மாம்ஸ வளர்ச்சியுண்டாகும்.

| | |
|---|---|
| 20. ஸ்நாவார்மம் (ஸ்நாயுவைப்போன்ற சதைவளர்ச்சி) | ஸ்நாயுவைப் (Tendons) போலக் கடினமான சதைவளரும். |
| 21. அதிமாம்ஸார்மம் (மாம்ஸவளர்ச்சி) | வெளுப்பான இரத்தக்கட்டி போன்ற கருநிறமுள்ளதுமானதும், அதிகமானதும், விஸ்தாரமானதுமான சதை வளர்ச்சியுண்டாகும். (Ptyrigium) |
| 22. ஸிராபிடகா (ஸிரையினுல் சூழப்பட்ட கொப்பளங்கள்) | அழற்சியும், அருவுதலும் உண்டாகும். கடுகுப்பிரமாணங்களான சிறு சிறு கொப்பளங்களேற்படும். ஸிரைகள் கருவிழியைச் சுற்றிலும் சூழ்ந்திருக்கும். |
| 23. க்ஷதசுக்ரன் | கருவிழியிலோ அல்லது திருஷ்டி மண்டலத்திலோ பித்தம் அதிகமாகிக் கண்களிலுள்ள சவ்வைத் துளைத்து (முதல் படலம்) அதிக வலியைக் கொடுப்பதுடன் சிவந்த கண்ணீரையும் பெருக்குகிறது. ஆகவே கருவிழி கனிந்த நாவல்பழம்போலாகிக் குழியாகிறது. இதற்கு 'க்ஷதசுக்ரம்' எனப் பெயர். கஷ்டஸாத்யமான வியாதி. |
| 24. சுத்த சுக்ரகம் (வெண்மை நிறமுள்ள பூ) | கபம் கோளாறடைவதால் வலியில்லாத வெண்மை நிறமான 'பூ' வை உண்டாக்குகிறது. |
| 25. அஜகா (ஆட்டுப் புழுக்கை போன்ற கட்டி) | இரத்தம் கோளாறடைந்தால் சிறிது சிவப்பானதும், பிசுபிசுப்புள்ளதுமான கண்ணீரைப் பெருக்கும். ஆட்டுப் புழுக்கையையொத்த பருமனுள்ளதாகவும் அதே நிறமுள்ளதாகவும் கட்டிகளேற்படும். அதிகமான வலியையும் கொடுக்கும். |

| | |
|---|---|
| 26. ஸிராசுக்ரம் (கருவிழியிலுள்ள ஸிரையினலான பூ) | மூன்று தோஷங்களும், இரத்தமும் கோளாறடைவதால் கருவிழியிலுள்ள ஸிரைகள் சிவந்து தடித்துப்போய் அதிகமான வலியையும், அழற்சியையுமுண்டாக்குகின்றன. காரணமில்லாமல் சில சமயம் உஷ்ணமாகவோ அல்லது குளிர்ச்சியாகவோ, தெளிவாகவோ, அல்லது கலங்கினதாகவோ கண்ணீர் வடியும். |
| 27. பாகாத்யயம் (கருவிழியின் நிறவேறுபாடு) | முன்போலவே 3 தோஷங்களும் இரத்தமும் கோளாறடைந்து திடீரெனக் கருவிழியானது வெண்மையாக மாறும். அங்கு கடலைப் பருப்பைப்போன்ற அளவில் ஒரு மறு உண்டாகி அது வெண்மையான மேகத்தினல் மறைக்கப்பட்டது போன்றிருக்கும். பொறுக்கமுடியாத கடுமையான வலியும், அழற்சியும். வீக்கமுமுண்டாகும். கண்களும் சிவப்பாகும். (Opacity of the Cornea) |

---

# 3. கண்களிலுள்ள த்ருஷ்டி மண்டல ரோகங்களின் வகையும், குறி குணங்களும்

| | |
|---|---|
| முதல் படலக் கோளாறு | தோஷங்கள் பார்வை நரம்பைப் பற்றுவதுடன் முதல் படலத்திலும் சம்மந்தப்பட்டால் நன்ருகப் புலப்படக்கூடிய வஸ்துக்கள் நன்ருகப் புலப்படாது. |
| இரண்டாம்படலக் கோளாறு (திமிரம்) | வஸ்துக்களில்லாவிடிலும் ஏதோ இருப்பதுபோலத் தோன்றும். சமீபத்திலுள்ள வஸ்துக்களை ரொம்பவும் சிரமத்துடனே பார்க்கவேண்டியதாகும். தூரத்தி |

லுள்ளதும், நுண்ணிய வஸ்துக்களையும் பார்க்கமுடியாது. தூரத்திலுள்ள வஸ்துக்கள் சமீபத்திலும், சமீபமாகவுள்ளது தூரத்திலுள்ளதாகவும் தென்படும். வட்டங்கள்போன்ற பிம்பங்கள் தென்படும். ஒரே வஸ்து இரண்டாகவும், தோஷம் பலவாருனல் பலவாகவும் தோன்றும். தோஷங்கள் திருஷ்டியைப் பலமாகத் தாக்குவதால் சிறிய வஸ்துக்கள் பெரியதாகவும், பெரிய வஸ்துக்கள் சிறிதாகவும் தோன்றும். எந்தப் பக்கத்தில் தோஷம் பற்றியிருக்கிறதோ அந்தப் பக்கத்திலுள்ள வஸ்துக்கள் புலப்படாது. இந் நோய்க்குத் "திமிரம்" எனப் பெயர்.

**மூன்றும் படலக் கோளாறு (காசம்)**

மூன்ருவது படலத்தைத் தோஷங்கள் பற்றினல் அவை "காசம்" என்ற ரோகத்தை உண்டாக்குகின்றன. கீழ்ப்பார்வை தெரியாமல் மேல்பார்வைதான் தெரியும். வஸ்துக்கள் வஸ்திரத்தினுல் மறைக்கப்பட்டதைப் போலவும், புலப்படும். பார்வை, தோஷத்திற்குத் தக்க நிறத்தை (கபமானல் வெளுப்பு, வாதமானல் கருப்பு, பித்தமானல் மஞ்சள்) அடைகிறது.

**நான்காம் படலக் கோளாறு (லிங்கநாசம்)**

த்ரிதோஷங்கள் கோளாறடைந்து நான்காம் படலத்தையும் கெடுக்கின்றன. கண்களை முற்றிலும் மறைக்கும்.

**வாததிமிரம்**

வக்ரமான பார்வையுண்டாகும், வஸ்துக்கள் சலிப்பதுபோலவும், அழுக்கடைந்ததுபோலவும், சில சமயம் தெளிவாகவும் காணப்படும். வலைகளைப்போலவும், மயி

ரிழைகளைப்போலவும், கொசுக் களைப்போலவும், கிரணங்களைப் போலவும் உருவங்கள் தென்படும். இதற்கு ஆரம்பத்திலேயே சிகித்ஸை செய்யாமல் போனுல், அது 'காசம்' என்ற நிலமையை அடைகிறது. எதிரில் வருபவரு டைய முகங்கள் மூக்கு இல்லா மல் தென்படும். சந்திரன், தீபம், இவற்றைப் பலவாருகப் பார்ப் பான். கோணலாக இருக்கும் வஸ்துக்கள் நேராகப் புலப்படும். காசமும் முற்றி நாள் சென்றபின் லிங்கநாசம் என்ற நிலமையை அடைகிறது. கண்களில் தூசி, புகை இவைகள் பறப்பதுபோன்று காணப்படும். அப்போது விழி கள் செந்நிறமாகும். திருஷ்டி பாகம் விரிவடைந்தாலும் அல்லது குறுகினுலும் "லிங்கநாசம்" என்ற நிலையை அடையும். வாயு, பார்வைக்கான நரம்புகளைச் சுருங் கச் செய்வதனுல் த்ருஷ்டி மண்ட லமே உள்ளே ஆழ்ந்து விடுகிறது. இதற்குக் 'கம்பீரத்ருஷ்டி' என் றும் பெயர்.

பித்ததிமிரம்

பித்ததிமிர ரோகத்தில் நோயாளி மின்னல், மின்மினிப்பூச்சி, இவை களின் பிரகாசத்தையும் மயில், தித்திரி (காடை) இவைகளின் இறகிலுள்ள மினுமினுப்பையும், நீலநிறத் தோற்றத்தையும் காணு வான்.

காசமென்ற ரோகத்திலோ த்ருஷ்டி மண்டலம் காசம் (பீங்கான்) போல நீல நிறத்தையடைகிறது. அவ்வாறே, பார்வையும் நீலநிற மாகும். சூரியன், சந்திரன், இவைகளைச் சுற்றிலும் மண்ட லங்களைக் காணுவான். இதைத்

தவிர, நெருப்பு, பிரகாசமான வஸ்துக்கள், வானவில் இவைகளையும் காண்பான். லிங்ககாசம் முற்றுவதால் த்ருஷ்டி மண்டலம் கருவண்டையொத்த நிறமாகும். பார்க்குந் தன்மையும் அற்றுப் போம்.

பித்தம் கோளாறடைவதனுல் திருஷ்டி மண்டலம் சிறிதாகி பார்வையும் மந்தமாகும். இதற்கு 'ஹ்ருஸ்வத்ருஷ்டி' எனப் பெயராகும். பித்தம் மேலும் மேலும் அதிகமாகிப் பார்வையும் மஞ்சட்கலந்த பசுமை நிறமாகும். இதற்குப் "பித்தவிதக்த த்ருஷ்டி" என்றும் பெயர்.

**கபதிமிரம்**

கப திமிரமானுல் அவன் பார்வை ஸ்நிக்தமாகவும், வெளுப்பாகவும் ஆகும். சங்கு, சந்திரன், குந்த மலர், குமுத மலர் இவைகளைப் போன்ற வெண்மை நிறங்களைக் காண்பான்.

**காசமானுல்**

சந்திரன், சூரியன், எரியும் வத்தி முதலியவைகள் சோபையற்றுத் தெரியும்.

**லிங்கநாசத்தில்**

திருஷ்டி மண்டலம் வெளுப்பாகும், கபமும் திருஷ்டி மண்டலத்தில் திரண்டு கட்டியாகிப் பார்வையை மறைக்கும். இது தாமரை இலையிலுள்ள தண்ணீர்போல் உருண்டையாகிச் சஞ்சலமுள்ளதாக இருக்கும். வெய்யில் வேளையிலோ, உஷ்ணம் தாக்கும் போதோ இது சுருங்கும். நிழலில்

இது பரவி விசாலமாகும். சங்கு, குந்தமலர், ஆம்பல், ஸ்படிகம் இவைகளைப் போன்ற வெண்மை நிறத்தையடையும். இதற்குச் "சுக்லிமா" என்றும் பெயர்.

**இரக்ததிமிரம்** — இந்நோயுள்ளவன் எப்போதும் வஸ்துக்களை சிவப்பாகவோ அல்லது இருண்டதாகவோ காண்பான்.

**காசமாகில்**

சிவப்பாகவோ, கருமை நிறமாகவோ த்ருஷ்டி மண்டலம் காணப்படும். அம்மாதிரியே சிவப்பாகவோ, கருமை நிறமாகவோ வஸ்துக்களைக் காண்பான். லிங்கநாசத்தில் த்ருஷ்டி மண்டலம் கருநிறமடைந்து, பார்வையும் அழியும்.

**ஸம்ஸர்க்க ஸந்நிபாத திமிராதிகள்** — இரண்டுவகை தோஷங்கள் சேர்ந்த அந்தந்த திமிராதிகள், அவ்விரு தோஷங்களின் சேர்க்கையினாலுண்டான லக்ஷணங்களை பெற்றிருக்கும். மேலும் திமிராதிகளில் காரணமில்லாமல் பார்வை நிர்மலமாகவும், சிலசமயம் களங்கமடைந்தும் காணப்படும். மீதியாகிய காசம், லிங்கநாசம் இவ்விரண்டு ரோகங்களிலும் நோயாளி பற்பல நிறங்களைக் காணுவான்.

**நகுலாந்த்யம்** — மூன்று தோஷங்கள் விருத்தியாவதால் கண்கள் கீரிப்பிள்ளையின் கண்களைப் போன்று (செந்நிறமாக) ஆகிப் பகல் வேளையில் வஸ்துக்களை பலவித நிறமாகக் காணுவான். இரவு நேரங்களில் பார்வையே தெரியாது. இது 'நகுலாந்த்யம்' என்ற நோயாகும்.

**தோஷாந்த்யம்** — சூரியன் அஸ்தமனமடைந்ததும் தோஷங்கள் அவன் கண்களில் சேர்ந்து பார்வையை ஸ்தம்பிக்கச் செய்கின்றன. ஆகையால் இரவில் கண்கள், பார்வையை இழக்கின்றன. காலையில் சூரியனின் கிரணங்களினால் கண்கள் தாக்கப் பட்டவுடன் தோஷங்கள் கலைந்து பகல் வேளையில் மீண்டும் அவனுக் குப் பார்வை உண்டாகிறது. ஆகவே வஸ்துக்கள் நிர்மலமாகப் புலப்படும்.

**உஷ்ணவிதக்தம்** — வெய்யிலில் போய்விட்டு வந்தவன் (உஷ்ணத்தினால் தாபமடைந்தவன்) உடனே குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்வதால் தேகத்தினுள்ள உஷ்ணமானது த்ரிதோஷங்கள், இரத்தம் இவற்றுடனே சம்பந்தப்பட்டுக் கண்களைச் சேர்ந்து கோளாறுகளை உண்டுபண்ணும். இதனால் வெள்ளை விழி கலக்கமுறும். பார்வையும் பகலில் தெளிவாக இராது. இரவில் கண்கள் குருடாகும். (மாலைக்கண்).

**அம்லவிதக்த திருஷ்டி** — இதற்கு "உஷ்ண விதக்த திருஷ்டி" என்றும் பெயர். அதிகமாக புளிப்புப் பதார்த்தங்களைச் சாப்பிடுவதால் த்ரிதோஷங்களும் இரத்தமும் பார்வையைக்கெடுத்து, அதிகமான பீளையையும், கலக்கத்தையும் உண்டாக்கும். இதற்கு 'விதக்தாம்லம்' என்றும் பெயர்.

**தூமர த்ருஷ்டி** — சோகம், ஜ்வரம், சிரஸ்நோய்கள், இவைகளால் தாக்கப்பட்ட ரோகியின் த்ரிதோஷங்கள், பார்வையை மறைத்துக் கண்களில் புகை படிந்தாப்போலக் கோளாறை உண்டாக்கும். இதற்குத் "தூமரம்" எனப் பெயர்.

**ஔபஸர்கிகலிங்க நாசம்** எற்கனவே பலக்குறைவுள்ள மனிதன் திடீரென அற்புதமான வஸ்துவைக் கண்டாலும், எரியும் வஸ்துக்களேயும், சூரியன் போன்ற உருவத்தையும் நோக்குவதனுலும் அவனுடைய த்ருஷ்டியானது வரண்டுபோய், பார்க்கும் சக்தி குறைந்து பார்வையை வைடூரிய மணியைப்போல அசைவற்றதாகச் செய்துவிடும். ஆனுலும் பார்வைக்குக் கண்கள் நல்ல நிலமையுள்ளதுபோலக் காணப்படும். வலியும் இருக்காது. இதற்கு 'ஔபஸர்கிகலிங்க நாசம்' எனப்பெயர்.

ஆக நோய்கள் 27.

---

# 4. கண் கோளத்தில் ஏற்படும் வியாதிகளும் அதன் குறிகளும்

**அபிஷ்யந்தம்** **வாதத்தால்**

மூக்கில் சிறிது வீக்கம் உண்டாகும். பொட்டு, கண்கள், புருவம், நெற்றி, முதலான இடங்களில் வலியும், துடிப்பும் உண்டாகும். கண்கள் வரட்சியாகும். பீளை சாராது. அது சிறிது ஏற்படில் குளிர்ச்சியாக இருக்கும். கண்களே விழிக்கையில் வலியுண்டாகும். கிருமிகள் சஞ்சரிப்பது போன்ற உணர்ச்சி உண்டாகும். கூர்மையான சல்யங்கள் (foreign bodies) உள்ளிருப்பது போன்ற உணர்ச்சியும் ஏற்படும்.

சிகித்ஸை செய்யப்படாவிடில்

அதிமந்தம் என்ற நோய்க்குக் காரணமாகும். காதுகளில் ஓசையும், மயக்கமும், நெற்றி, கண்கள், புருவங்கள், முதலிய இடங்களில் அரணிக்கட்டையைக் கடைவது போன்ற வலியுமுண்டாகும்.

இதுவும் சிகித்ஸை செய்யப்படாவிடில்

'ஹதாதிமந்தம்' என்ற ரோகமாகும். பலவிதமான வேதனைகளும் உண்டாகும். கண்விழிகளில் இரணங்கள் ஏற்பட்டுப் பார்வை நஷ்டமாகிறது. இதையும் சிகித்ஸை செய்யாவிடில்,

அந்யதோவாதம்

என்ற நோய் உண்டாகிறது. இதில் பிடரி, கண்கள், பொட்டு, முதலிய இடங்களில் வாயு பிரகோபித்து பொறுக்க முடியாத வேதனையை யளிக்கிறது. கண்களையும் சுருங்கச் செய்யும். கண்களில் பிளிச்சை, சிவப்பு, வீக்கம் முதலியவைகளேற்படாமல் கண்ணீர் வடியும். கண்கள் மிகச்சுருங்கிவிடில் 'வாதவிபர்ய' என்ற ரோகமாகும்.

பித்தாபிஷ்யந்தம்

அழற்சி, வீக்கம் இரெப்பையின் மேல்புறத்தில் கருநிறம், இவைகளுண்டாகும். இரெப்பையின் அடியில் பீளை பாயும், கண்ணீர் பசுமை நிறமாகும். உஷ்ணமாகவும் இருக்கும். கண்கள் சிவப்பாகவும், பசுமைநிறமுள்ள பார்வையை யுடையதாகவும் ஆகும். மிருதுவான சதையில் சுண்ணம்பு (க்ஷாரம்) தெளிக்கப்பட்டால்

எவ்வாறு சிறு விரணங்களுண்டாகுமோ அவ்வாறு கண்களில் ஏற்பட்டுக் கண்களும் கெடும். இதைச் சிகித்ஸை செய்யாவிடில் 'பித்தாதி மந்தம்' என்ற ரோகமாகும். ஜ்வலிக்கின்ற நெருப்பு பொரிகள்போல் கண்கள் ஆகிக் கல்லீரலின் தசையையொத்த நிறமாகவும் ஆகும்.

**கபாபிஷ்யந்தம்**

கண்களில் திமிர் அதிகமாகும். பெரிய வீக்கம் ஏற்படும். அதிகமான அரிப்பும், நித்திரையின்மையும், அன்னத்தில் வெறுப்பும் ஏற்படும். பிசுபிசுப்பானதும், எண்ணெய் பசையுள்ளதும் அதிகமாகவும், வெண்மையாகவும் பீளையுடன் கண்ணீர் வடியும்.

'கபாதிமந்தத்தில்

கருவிழி உள்ளே சென்றும், வெள்விழி மேலேயும் ஆகும். அதிக கண்ணீர்ப்பாய்ச்சலும், நாசி பெருத்தும் காணப்படும். தூசு தும்புகள் நிறைந்ததான பார்வையுண்டாகும்.

**ரக்தாபிஷ்யந்தம்**

கண்ணீர் சிவந்தும், சிவந்த கோடுகளுள்ளதாகவும் புலப்படும். வெளுப்பான வட்டங்களைக் காணுவான், பித்த அபிஷ்யந்தக் குறிகளும் ஏற்படும்.

ரக்தாதிமந்தமானல்

நயனங்களின் ஓரங்கள் தாமிர வர்ணமாகி, கண் வெளியே பிதுங்கிவிடுவது போன்றதுடன், வலியும் உண்டாகும். அதன் நிறம் செம்பரத்தைப் புஷ்பத்தின் நிறமாகும். தொடமுடியாதபடி வலியுண்டாகும். கருவிழியானது

இரத்தத்தில் அமுங்கியிருக்கும் வேப்பம்பழத்தைப் போலவும், இருக்கும். நோயாளிக்கு நெருப்பைப் பார்க்கப்படுவதுபோன்ற உணர்ச்சியும் ஏற்படும்.

சுஷ்காக்ஷிபாகம் — வாதம், பித்தம் இவைகளின் கோளாறுகளினல் கண்களில் வலியுடன் வெட்டுவதுபோன்ற உணர்ச்சியும் ஏதோ பூசியிருப்பது போன்ற உணர்ச்சியும் ஏற்படும். மேலிமைகள் சொரசொரப்பாகவும், கடுமையான வேதனையுள்ளதாகவும், ஆகும். கண்களைச் சிமிட்டுவது மிகச்சிரமமாக இருக்கும். அதாவது கண்கள் சுருங்கிவிடும். கண்களிலுள்ள எண்ணெய் பசை நீங்கி, குளிர்ச்சியில் விருப்பமும் உண்டாகும். கண் பக்குவமாகும்போது (பழுக்கும்) வலியும் உண்டாகும். இது 'சுஷ்காக்ஷிபாகம்' என்ற நோயாகும்.

ஸசோபம் — மூன்று தோஷங்களும், இரத்தமும் கோளாறடைந்து அதிகமான வீக்கமும், அதிகமான வலியும் கண்ணீர்ப் பாய்ச்சல் முதலியவைகளை யுண்டாக்கும். பருத்த அத்திப் பழத்தையொத்த நிறத்தை வெள்ளை விழியடையும். கண்ணீர் உஷ்ணமாகவும், சில சமயங் குளிர்ச்சியாகவும், பிசுபிசுப்பாகவும், சில சமயம் தெளுவாகவும் அடிக்கடியும் விழும்.

அக்ஷிபாகாத்யயம் — கண்களில் வீக்கமும், கண்ணீர் கலங்கியும் காணப்படும். கண்களில் கபம் மூடியிருப்பதால் (பீளை) கருவிழி புலப்படாது. வெள்ளை விழி சிவப்பாகவும் பீளை சேர்ந்தும் காணப்படும். அழற்சியும் பார்வைக் குறைவும் நிலையில்லாத வேதனையும் உண்டாகும்.

அம்லோஷிதம் — த்ரிதோஷங்களும் இரத்தமும் விகாரமடைவதால், சாப்பிடப் படும் ஆகாராதிகளின் சத்து, புளிப்பாக மாற்றப்பட்டு அது நேத்திரத்திலுள்ள ஸிரைகளேயடை கிறது. இதனுல் கண்கள் கருமை கலந்த சிவப்பாக ஆகிறது. வீக்க மும், அழற்சியும் அதிகமான கண்ணீர்ப்பாய்ச்சலும், மங்கலான பார்வையும் உண்டாகிறது. இது "அம்லோஷிதம்" என்ற ரோக மாகும்.

ஆக ரோகங்கள்—16

ஆக ஆயுர்வேத முறைப்படி கண்களிலேற்படும் ரோகங் கள் 94.

| | |
|---|---|
| இரெப்பையில் ஏற்படும் ரோகங்கள் | 24 |
| * ஸந்திகளில் உண்டாகும் ரோகங்கள் | 9 |
| வெள்விழியில் உண்டாகும் ரோகங்கள் | 13 |
| கருவிழியில் உண்டாகும் ரோகங்கள் | 5 |
| பார்வை மண்டலத்தில் உண்டாகும் ரோகங்கள் | 27 |
| நேத்ர கோளத்தில் உண்டாகும் ரோகங்கள் | 16 |
| ஆக நோய்கள் | 94 |

* ஸந்திகள் 6 வகைகள் இவைகளாவன :—

1. பக்ஷ்ம, வர்த்ம, ஸந்தி=இமை மயிர்களும் இரெப்பையும் சேருமிடம்.
2. வர்தம, சுக்ல, ஸந்தி=வெள்ளை விழியும் இரெப்பையும் சேருமிடம்.
3. சுக்ல, கிருஷ்ண ஸந்தி=கருவிழியும் வெள்விழியும் சேருமிடம்.
4. கிருஷ்ண த்ருஷ்டி ஸந்தி=வெள்விழியும் பாபாவும் சேருமிடம்,
5. கன்னீனகம்=மூக்கிற்கு சமீபமான ஸந்தி.
6. அபாங்கம்=பொட்டுக்கு ஸமீபமான ஸந்தி.

ஸுச்ருத ஸம்ஹிதையில் கீழே கண்டபடி 76 நேத்ர ரோகங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்நோய்களின் குறிகள் முன்னமேயே சொல்லப்பட்டுள்ளதால் இங்கு பெயர்களை மாத்திரம் குறிப்பிடுவோம். அவைகளாவன :—

## ஸந்திகளில்

1. பூயாலஸம்
2. உபநாகம்
3. ஜலஸ்ராவம்
4. கபஸ்ராவம்
5. இரக்தஸ்ராவம்
6. பூயஸ்ராவம்
7. பர்வணி
8. அலஜி
9. க்ருமிக்ரந்தி

## வெள்ளை விழியில்

1. ப்ரஸ்தார்யார்மம்
2. சுக்லார்மம்
3. க்ஷதஜார்மம்
4. அதிமாம்ஸார்மம்
5. ஸ்நாவர்மம்
6. சுக்லிகா
7. அர்ஜுனு
8. பிஷ்டகம்
9. ஸிராஜாலம்
10. ஸிராபிடகா
11. பலாஸக்ரதிதம்

## இரெப்பையில்

1. உத்ஸங்கி
2. கும்பிகா
3. போதகி
4. வர்த்மசர்க்கரா
5. வர்த்மார்சஸ்
6. சுஷ்கார்சஸ்
7. அஞ்சன நாமிகா
8. பஹுல வர்த்தம்
9. க்லிஷ்ட்ட வர்த்மம்
10. கர்தமம்
11. ச்யாவ வர்த்மம்
12. வாதஹுதம்
13. சோணிதார்சஸ்
14. லகணன்
15. பிஸவர்த்ம
16. பக்ஷ்மசோபம்
17. வர்த்மாவபந்தகம்
18. ப்ரக்லின்னவர்த்மம்
19. அபரிக்லின்னவர்த்மம்
20. அர்புதம்
21. நிமேஷா

## கருவிழியில்

1. வ்ரணசுக்ரம்
2. சுத்த (வ்ரண) சுக்ரம்
3. பாகாத்யயம்
4. அஜகா

### த்ருஷ்டி மண்டலத்தில்

| | |
|---|---|
| திமிரம்<br>காசம்<br>லிங்க நாசம் | இவை 4 படலங்களிலும் ஏற்படக்கூடியன இவைகள் 6 |
| 7. பித்தவிதக்த த்ருஷ்டி | 10. ஹ்ரஸ்வஜாட்யம் |
| 8. கபவிதக்த த்ருஷ்டி | 11. நகுலாந்த்யம் |
| 9. தூமதர்சீ | 12. கம்பீரா |

### நேத்ர கோளத்தில்

| | |
|---|---|
| 1. வாதாபிஷ்யந்தம் | 10. அசோபம் |
| 2. பித்தாபிஷ்யந்தம் | 11. ஹதாதிமந்தம் |
| 3. கபாபிஷ்யந்தம் | 12. வாதபர்யயம் |
| 4. ரக்தாபிஷ்யந்தம் | 13. சுஷ்காக்ஷிபாகம் |
| 5. வாதாதிமந்தம் | 14. அம்லாத்யுஷிதம் |
| 6. பித்தாதிமந்தம் | 15. அன்யதோவாதம் |
| 7. கபாதிமந்தம் | 16. ஸிரோத்பாதம் |
| 8. ரக்தாதிமந்தம் | 17. ஸிராஹர்ஷம் |
| 9. ஸசோபம் | |

### வெளிக்காரணங்களால் ஏற்படும் நோய்கள்

1. "நிமித்தம்"

1. சிரோரோகத்தினுல்
2. விஷம், புஷ்பம்

வாயு, இவைகளால் கண்களில் ஏற்படும் நோய்கள்

2. "அநிமித்தம்"

தேவர், ரிஷி, பாம்பு கந்தவர், இவைகளின் பார்வை, எரியும் நெருப்பு இவைகளினுல் கண்கள் கோளாறடைகிறது.

---

# கண்ணோய்களின் சிகித்ஸைக்கான சில விதிகள்

(அகஸ்தியர் நயனவிதி) என்ற புஸ்தகத்திலிருந்து கூறப்படுகிறது.

### கண்களினுடைய நாடியைக் குறிப்பாக அறியும் விதம்

"கண்ணினில் வியாதி வந்தால் கடியதோர் சுக்கிரனுகும்
மெண்ணியே யிமையில் மீதேயிருவிரல் மீதேபற்றி
திண்ணிய கழுத்திஞேடுஞ் சிலையை முறுக்கியிட்டு
வண்ணிய நரம்பைக் குத்தி யதின் விஷம் போக்குவாயே,"

"கண்களில் வியாதி ஏற்படில் அது சுக்கிர ரோக மாகும். அதற்கு நோயாளியின் இமையின்மீது இரு விரல் களை வைத்து நோயாளியின் கழுத்தில் துணியைச் சுற்றிக் கொஞ்சம் கொஞ்சமாக முறுக்கிவரவும். அதிகமாகவும் வேக மாகவும் முறுக்கக்கூடாது. அப்போது தலையிலுள்ள நரம்பு கள் தடிக்கும்: வேண்டிய நரம்பைக் குத்தி விஷத்தை வடி யச் செய்யவும். இவ்விடத்தில் நரம்பு என்பது Veins ஆகும்.

## 2 முதலில் மருந்து போடப்படவேண்டிய கண்

"முந்தவே நயனந்தன்னில் விதிகள் முன்னிடத்திலிட்டு
தேய்ந்திட வலத்தில் பின்னைத் தெளிவுறப் படவேயிட்டால்
வந்தநோய் கடுகமாறி மாசறத் தீருமென்று
கந்தலங் கண்ணிணுளே கனகமா முனியுரைத்தான்.

(பாடபேதச் செய்யுட்கள்)

"திருந்தவே நயனந்தன்னில் அதிகமுன் னிடத்தி லிட்டு
தெரிந்திட வலத்தில் பின்னும் தெளியவே வலத்திலிட்டால்
வருந்திநோய் கடுகமாறி மாசறத்தீருமென்று
கருத்திடங் கண்ணிணுளே கனகமாமுனியுரைத்தார்.

"முதலஞ்சன மருந்து முன்னிடக் கண்ணிலிட்டு
யிதமுரு வலத்தில் பின்பு யெழுதிடத் தியல்பிதென்று
விதமிட்ட மருந்து வினையறு கோபம் மாறும்
பதியுற மருந்தொளிக்கில் பன்னிருதுன்னியன்றே.

பிணியாளனுக்கு முதலில் இடது கண்ணில் மருந்தைத் தீட்டியபின் வலது கண்களுக்குத் தீட்டவும். அப்போது சீக்கிரமே கண்களின் நோய்கள் தீரும்.

## 3. "மருந்து தீட்டப்படவேண்டிய காலம்"

மருந்திடு நேரங்கண்ணில் மகிழ்ந்திரு நேரமிட்டால்
திருந்திரு மிருள்கள் நீங்கி தீய்ந்திடு நோய்களெல்லாம்
பரிந்தது நேரமொன்றில் பண்பிஞல் விடியலாகா
விரைந்திடு மந்திநேரம் வினையரும் வினைவிநீயே.

(இ-ள்)

மருந்தை இரு நேரங்களிலும் இட்டால் கண்களிலுண் டாகும் பிணிகளனைத்துந் தீரும். காலைவேளை உதவாது.

ஒருபொழுதிடு மருந்து உகந்தந்திக் காலமாகு
யிருபொழு திடுமருந்து யிருளத்து ரோகவாரு (மாறு)
மருளிரு காலத்திட்டு மறந்தந்திக்கிடாதே போனல் (யாகில்)
வரிபரித் திருண்டு கண்ணில் (வரும்மிடைவினை) தீருதென்றே.

(இ-ள்)

தினமும் ஒரு தடவை கண்களிலிடவேண்டிய மருந்துகளைச் சாயங்காலத்தில் தீட்டவும். இருபொழுதும் இடப்படவேண்டிய மருந்துகளை காலையிலும் மாலையிலுந் தீட்டவும். அப்போது காலையில் மாத்திரமிட்டு சாயங்காலத்தில் இடாமற் போனல் கண்களில்வரும் நோய்கள் தீராது.

## 4. பத்தியவிதி

"குடிப்பது வெந்நீராகும் கொள்வது சாறுமாகா
பொடிப்புறு மிளகு சுக்கும் பொருந்திய குளமுங்கூட்டி
தடிப்புறு தயிருஞ்சோறுந்தானது மிகவுமாகா
வெடிப்பது மீனிறைச்சி யிவை பத்திய மாகாதென்றே."

சுக்கது நீரிற்காய்ச்சிச் சுகம்பெற குடிக்க நன்று
மிக்கதோர் சிறுவழுதலை விரும்பிய தகரை மாத்தும்
புக்கது சிறியகீரை புனல் முருங்கை காணி
தக்கது பயறுபாலாகத் தானிது வகைகள் கொள்ளே.

(இ-ள்)

சுக்கு தட்டிப்போட்ட வெந்நீரையுபயோகிக்க வேண்டும். கள், சாராயம் போன்ற போதை வஸ்துக்களை விலக்கவும். மிளகு, சுக்கு இவைகளைச் சாப்பாட்டில் கூட்டிக்கொள்ளவும். கட்டித்தயிரும் சோறும் ஆகாது. மீன் இறைச்சியைத் தள்ளவும். கத்திரிக்காய், தகரை, இளங்கீரை, முருங்கைப் பிஞ்சு, பயறு, பால் இவைகளை வேண்டியமட்டும் கூட்டிக் கொள்ளவும்.

## 5. காரியக்கோல்

"வாரியில் துயின்ற மாயோன் மானிடர் நிபுணர்க்கெல்லாஞ்
சீரிய நயன ரோகங், தீர்ந்திட வேணுமென்று
கூரிய சடையோர் நாமங்கூறிட யுமையாள் கேட்கக்
காரியக் கோலின் வண்ணம் கருத்துடனுரைத்தார் மேலோர்."

" கருத்துடன் வகுப்புக் கேளாய் கடுகிய திப்பிலி, தேன் நெய்யு
மருப்புரு காணிக்கீரை மஞ்சளும் முத்தக்காசும்
வெறுப்புறும் வெள்ளாட்டின்பால் வெருவிகோ சலமுங் [கொண்டு
புருப்பது திரிப லையும் போதவே யரைத்துக் காய்ச்சே."

" காய்ச்சிய கஷாயந்தன்னில் கதித்தொரு பலங்காரீயம்
உச்சித மாகவிட்டு ஒன்பது சில உருக்கிட
சாய்த்துப் பின்னெடுத்துக்கொண்டு சமைத்தங்கு லமுமஞ்சாம்
காத்திரமாய்த் திரட்டக் காரீய கோல தாமே."

" காரீயக் கோல்கள் தன்னில் கருதுமஞ்சனத்தை வாங்கி
நேரிதாய் விழியிலிட்டால் நிலை நில்லா ரோகம் போகும்
அரியவெண் முருவலீசன் மொழிந்திட உமையாள் கேட்க
காரீயக்கோலின் வண்ணம் கனகமா யுரைத்தோங் கண்டீர்."

(இ-ள்)

திப்பிலி, காணிக்கீரை (பொன்னாங்காணி) மஞ்சள், கோரைக்கிழங்கு, திரிபலா (கடுக்காய், நெல்லிவற்றல், தான்றிக்காய்) இச்சரக்குகளை வெள்ளாட்டுப்பால் விட்டு நன்றாக அரைத்துத் தேன், நெய், இவற்றையுங் கூட்டிப் பசுவின் மூத்திரமும், விடவும். சரக்குகள் ½ பலமானால் திரவப்பொருள்களை வகைக்கு ஒரு சேர் எடுத்துக்கொள்ளவும். இப்போது ஒருபலம் காரீயத்தை ஒரு கரண்டியிலிட்டு உருக்கி அதைத் தயாராக வைக்கப்பட்டிருக்கும் ஷ கஷாயத்தில் விடவும். இம்மாதிரி 9 தடவை, உருக்கி உருக்கிச் சாய்க்கவும். இவ்வாறு சுத்தி செய்யப்பட்ட காரீயத்தை 5 அங்குல நீளத்தில் வேண்டிய கனத்தில் நயனக்கோல்களாகத் திரட்டி வைத்துக் கொள்ளவும். இக் கோல்களிலஞ்சனத்தை யெடுத்துக் கண் விழியில் தீட்டிவரப் பற்பல நயன ரோகங்களுந் தீரும்.

---

குறிப்பு:—சுர்மா போன்ற சூரண மருந்துகள் இக்கோலில் நன்றாக ஒட்டிக் கொள்ளுமாதலால் இதனை உபயோகிக்கவும்.

# சரபேந்திரர் நயன வைத்ய முறைகள் என்ற இந்நூலில் காணும் ரோகங்களையும் அவைகளுக்கான மருந்து முறைகளையும் காட்டும் அகராதி

அநுபந்தமாகக் கூறப்பட்டிருக்கும் பாவப்ரகாசிகை மருந்து முறைகளின் நெம்பர்களுக்குப் பிறைக்குறி (Brackets) இடப்பட்டிருக்கிறது.


| ரோகங்களின் பெயர் | மருந்து முறை நெம்பர் |
|---|---|
| அமரம் | 174, (31), (32), (34) |
| அபிஷ்யந்தம் (வாதம்) | (23) (24) (27) (28) |
| (பித்தம்) | (27) (28) |
| (கபம்) | (27) (28) |
| அரிப்பு | 59, 86, 88, 102, 113, 187 |
| அழற்சி | 14, 113 |
| ஆணி | 104, 113, 144, 165, (1) |
| இமை எரிச்சல் | 59 |
| இமைக்குத்து | 22 |
| இமைத்தடிப்பு | 47, 140 |
| இமைப்படலம் | 102 |
| இரண சுக்ரன் | 40, 41, 46, 83, 102, 112, 114, 143, 171 |
| இரணம் | 47, 55, 98, 122, 193, |
| இரத்தப்படலம் | 127 |
| இழிகண் | 46, 47, 63, 69, 71, 86, 126, 140, 141, 152, 153, 154, 158, 166 |
| இழிபடலம் | 40 |
| ஈளை | 124 |
| உஷ்ணத்திற்கு (கண்) | 16, 42, 47, 74, 108, (18), (22) |
| உஷ்ணத்திற்கு (விழி) | 7 |
| எரி சிவப்பு | 195 |
| எரிச்சல் (கண்) | 24, 14, 37 |
| எரிநீர்ப்பாய்ச்சல் | 55 |
| எனிமாவிற்கு | (20) |
| கண் அரிப்பு | அரிப்பைப் பார்க்க |
| கண் அழற்சி | அழற்சியைப் பார்க்க |

| | |
|---|---|
| கண் எரிச்சல் | எரிச்சலைப் பார்க்க |
| கண் உஷ்ணம் | உஷ்ணத்தை ,, |
| கண் கூச்சம் | 14, 98 |
| கண் குருடு | 64, 117, 126 |
| கண் குத்தல் | 31, 36, 113, 156, 178, 188 |
| கண் சொருகல் | 35 |
| கண் சிவப்பு | 22, 30, 58, 98, 113, 156, 172, 187, 188, 195, (14) |
| கண் சுழற்றல் | 11, |
| கண் தடிப்பு | 22, 123, |
| கண் புகைச்சல் | 16, 22, 23, 25, 36, 37, 40, 42, 71, 102, 113, 126, 127, 129, 137, 143, 144, 156, 165, 169, 194, 196, 208, |
| கண் பிரகாசிக்க | 53, 59, 63, 88, 129, 142, 145, 156, 207, (11) |
| கண்வலி | 58, 113, 144, 169, 172, 173, 174, 176, 188, 187, 200, 201, (5), (16) |
| கண் வீக்கம் | 58, 102, 46, (34) |
| கபாபிஷ்யந்தம் | அபிஷ்யந்தம் (கபம்) பார்க்க |
| கண் பூ | 38, 51, 52, 55, 56, 64, 65, 68, 72, 83, 85, 87, 88, 90. 91, 92, 93, 94, 95, 96, 97, 106, 107, 113, 114, 116, 122, 130, 138, 144, 154, 155, 157, 167, 170, 175, 189, (1) (2) (7) (9) (13) (16) (34) |
| கண் காசம் | 5, 9, 15, 23, 25, 27, 33, 40, 41, 42, 43, 46, 50, 52, 55, 65, 74, 76, 78, 89, 98, 102, 103, 113, 114, 124, 126, 129, 140, 144, 194, 199, (31) |
| காசம் (பித்த) | 19, 36, 46, 47, 61, 113, (5) (9) |
| காசம் (மந்தார) | 83 |
| காசம் (சந்திர) | 123 |
| காசம் (மாலே) | 113 |

| | |
|---|---|
| காசம் (நீல) | 46, 47, 52, 61, 67, 86, 102. |
| காசம் (வரள்) | 46, |
| கபம் | 17, (9), (19) |
| கபால ஜன்னி | 11, |
| கண்டுழம் | (21), 79 |
| காமாலை | 156, (21) |
| குந்தம் | 83, 104, 194 |
| குவளை நோய் | 80 |
| குவளை விப்ருதி | 209 |
| கைகாலெரிச்சல் | 37 |
| சங்கநோய் | (17) |
| சதைப்படலம் | (5) |
| சதை வளர்ச்சி | 40, 86, 98, 114, 124, 163, 195 (34) |
| சந்திரகாசம் | காசம் (சந்திர) பார்க்க |
| சன்னி | 77, |
| சுக்கிலம் | 124 |
| சுக்கிரன் | (3) (31) (32), |
| சுக்கிரன் (வாண) | (171) |
| ,, (வர்ஷ) | (5) |
| ,, (வல்லி) | (47) |
| சுற்று விழிப்பிரிசல் | 158, 179 |
| சுக்கிரப் படுவன் | 64, 142 |
| சுக்கிரப் படலம் | 55 |
| சூடுவளர்த்தி | 50 |
| சூலை | 64 |
| செவிடு | 3, 16 |
| செவிச்சூலை | 3, 17 |
| செவிநோய் | 3, 13, 15 |
| ஜ்வரம் | 77 |
| தலைச் சுற்றல் | 1. 11 |
| தலைவலி | 3, 12, 14, 31, 77, 172, 198, 205 |
| தலைமுழுக | 1, 29, 35, 37, 38 |
| தலைரோகங்கள் | 4, 11, 13, 17, 21, 26, 35, 36 |
| துவளை இட | 32, 33, 34 |

திமிரம் 13, 55, 58, 74, 88, 102, 103, 112, 114, 115, 120, 121, 134, 135, (3), (13), (31), (32), (34)

நத்தைப் படுவன் 40, 50, 76, 194

நஸ்யமிட 1, 19, 27, 28, 118, 20, 198, 199, 200, 201, 202, 203, 204

நயனப் புற்று 102

நயனப் படுவன் 89, 183

நீலகாசம் காசம் (நீலம்) பார்க்க

நீர்ப்பாய்ச்சல் 36, 57, 88, 135, 143, 145, 163, 169, 187, 192, 198,

நீர்த்தடிப்பு (முட்டல்) 30, 52, 58, 102, 108, 127, 195, 198, 200, 201, (12) (31) (32) (34)

நெரிசல் 170, 175

நேத்திரவாயு 1, 8, 22, 26, 29, 31, 35, 46, 47, 77, 112, 125, 127, 147, 163, 184, 185, 186, 198, (8), (22)

நேத்ர ரோகங்கள், பலவிதம் 1, 2, 4, 6, 10, 12, 17, 18, 20, 21, 22, 25, 28, 29, 34, 41 42, 44, 45, 48, 49, 53, 54, 64, 70, 73, 75, 79, 81, 82, 83, 84, 88, 99, 100, 101, 102, 105, 106, 109, 111, 112, 114, 119, 128, 130, 132, 134, 136, 142, 153, 159, 160, 161, 162, 171, 178, 181, 182, 191, 197, 202, 203, 204, (6), (8), (11), (21), (27), (33).

பதும ரோய் 43

படலம் 38, 43, 52, 55, 58, 65, 71, 74, 76, 78, 86, 90, 93, 94 103, 112, 113, 114, 115, 116, 120, 126, 129, 138, 140, 144, (3), (9), (17), (32), (34).

பல்லசைவு 7

பருதி 52

பற்ப ரோய் 89, 114, 117, 143, 145.

| | |
|---|---|
| படலம் (முனை) | 50 |
| படலம் (இழி) | 40 |
| ,, (இரத்த) | 127 |
| ,, (இமை) | 102 |
| ,, (சதை) | 5 |
| படுவன் (நயன) | 89, 183. |
| பருதி | 52 |
| பார்வை மந்தம் | 25, 30, 39, 57, 82, 85, 126, 144. 158. |
| பாலாடை | 40 |
| பித்தம் | 14, 17, 177, 205, (10). |
| பித்தாபிஷ்யந்தம் | அபிஷ்யந்தம் (பித்தம்) பார்க்க. |
| பித்தகாசம் | காசபித்தத்தைப் பார்க்க. |
| பிடரி வலி | 30, 31, 35. |
| பிரிசல் | 40, 60, 63, 85, 148, 149, 150. 151, 152, 154, 196, |
| பில்லம் | 27, 43, 46, 47, 55, 57, 74, 113. 157, (32) |
| பிஷ்டகம் | (4) |
| பிரகாசிக்க | கண்கள் பிரகாசிக்க என்பதைப் பார்க்கவும். |
| பிடிப்பு (கை, கால்) | (22) |
| பீளைசாறல் | 64, 123, 143, 187. |
| பீனஸம் | 28, 29, 32, 102. |
| பீனஸம் (வாதகப) | 3 |
| புழுவெட்டு | 46, 64, 66. 69, 113, 123, 158, 164, 190. |
| புகைச்சல் | கண் புகைச்சலைப் பார்க்க |
| புண் | 122, 193, |
| புற்று (நயன) | 102 |
| புருவக்குத்து | 22 |
| பூ | கண் பூவைப் பார்க்க |
| மந்தாரகாசம் | 83 |
| மண்டைக்குத்து | 11, 32. |
| மருந்தீடு | 118 |
| மாலைகாசம் | 113 |

| | |
|---|---|
| மாலைக்கண் | 50, 52, 86, 98, 110, 114, 127, 132, 133, 146, 189, 206, (5), (13), (15). |
| மின்மினியைப்போன்று தோன்றுதல் | 11 |
| முடமயிர் | 43, 46. 47, 102, 166. |
| முகநோய்கள் | 3, 20, (21). |
| மூளைப்படலம் | 50 |
| மூளைப்படுவன் | 143 |
| மேகவரி | 46 |
| மேகநோய்கள் | 37 |
| வரள் காசம் | 46 |
| வர்ஷசுக்ரன் | (5) |
| வல்லிசுக்ரன் | 47 |
| வலிப்பு | 17 |
| வரண சுக்ரன் | 171 |
| வாதக் கரப்பான் | 18 |
| வாதாபிஷ்யந்தம் | அபிஷ்யந்தத்தை (வாதம்) பார்க்க. |
| வாத ரோகம் 80 வகை | 27, 36 |
| வாத கப பீனஸம் | 3 |
| வாத ரக்தம் | (12) |
| விஷகடி | 118 |
| விஷங்கள் | 77 |
| விழிநோய்கள், | 3, 71, 180, (20) (30) |
| விழிநோய் (உஷ்ணம்) | 7 |
| வெள்ளெழுத்து | 23, 38, 40, 46, 47, 52, 62, 68, 90, 96, 102, 113, 137, 138, 139, 196. |
| வெண்கடுப்பு | 88 |

# சரபேந்திரர் வைத்திய முறைகளை உபயோகித்தவர்களிடமிருந்து நமக்குக் கிடைத்த அத்தாட்சிகளில் சில

(1)

ப. பூ. சின்னய்யா செட்டி,
வைத்தியர்.

கமுதி போஸ்டு,
ராமனுதபுரம் ஜில்லா,
விரோதி-ஹூ, கார்த்திகை 12.

இதற்குமுன் ஸ்ரீ S. கோபாலன் B. A., B. L., அவர்களால் வெளியிடப்பட்ட குன்மரோக சிகிச்சையைத் தருவித்து அதன் முறைகளைப் படித்து, சில செய்தும் ஆனந்த மடைந்தேன். குன்மரோக சிகிச்சை 114-வது பக்கம் சத்தி குன்மத்திற்கு "வில்வாதி லேகியம்?" என்ற முறை வெகு ஆச்சரியமாகக் குணம் செய்கிறது. எல்லோரும் சந்தோஷமடைகிருர்கள்.

ஒப்பம்: ப. பூ, சின்னய்யா செட்டி.

(2)

M. R. KRISHNAMOORTHY IYER,
Native Doctor,
பேராவூரணி.

Camp, Pattukkottai,
15—12—49.

குன்ம சிகிச்சை நூலில் அநேக மருந்துகள் செய்து அனுபவித்துப் பார்த்ததுடன் 'குன்மாதி செந்தூரம்' முறைப்படி அனுபவித்தேன், நன்ருயிருக்கிறது. இன்னமும் வைத்ய வெளியீடுகள் எனக்கு அனுமதியில்லாமலே V. P. யில் அனுப்பித்தரக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தங்கள்,
(Sd.) M. R. Krishnamoorthy.

K. கதிர்வேல்,
தமிழ் சித்த வைத்யசாலை,

மண்டப வீதி,
ஈரோடு,
17—12—49.

அன்புடையீர்!

தங்கள் குன்ம ரோக சிகிச்சை வெளியீடு நெ. 2-ல் சொல்லப்பட்ட '93 நெ. குன்ம வாயுவுக்கு எண்ணெய் (சந்தம் வேறு)' என்ற இம்மருந்தினல் வலிகுன்மம், செங்கிரந்தி, ஆகிய 2 நோய்களும் பூரண குணமளிக்கிறது என்பதை என் அனுபவத்தால் அறிந்து தங்களுக்குத் தெரிவித்து மகிழ்ச்சியுற்றேன். ஷை நோய் 3 வருடமாகக் கஷ்டப்பட்டுப் பலரக சிகிச்சை பெற்றும் குணமுற்ற பாடின்றி அவஸ்தைப்பட்டவன் ஒருவன் அத்தாக்ஷியின் மீதே தங்களுக்கு மிக்க மகிழ்ச்சியுடன் எழுதுகிறேன். இந்நூல்களில் இன்னும் சில மருந்துகள் தயாராகின்றது. அதை அனுபவித்து விவரம் தெரிந்து எழுதுகிறேன்.

இப்படிக்கு,
(Sd.) K. கதிர்வேல்.

(4)

**P. S. Raman,**
*Station Master,*
*S. I. R. Tanjore.*

I am much surprised to see the efficient curative powers of Sarabendra recipes. My wife had a serious trouble during menses. And many patent medicines have been tried in vain for the past 4 years. At last I had an opportunity to meet Dr. Venkatarajan, who prescribed a course of treatment in No. 4 of Garbini Balaroga Chikitsai and to our astonishment it has given complete relief from the illness. In turn I have tried in many other cases with success.

**P. S. Raman,**
*Station Master*, S. I. R., Tanjore.